சிவமயம்.

திருக்குறள் முதற்பாவின்

பரிமேலழகருரை விளக்கம்.

இதனை

ஆயுர்வேத பண்டிதர்

பாண்டேச்சுரம் - வேங்கடஸாமி தேவரவர்கள்

குமாரர்

பா. கங்காதரதேவரவர்கள்

தொகுத்து

மசனனை:

பிரஸிடேன்ஸி அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

1909.

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
மஹாமஹோபாத்தியாயருமாகிய
ப்ரஹ்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முப்பாலின் முதற்பாலிற் கிணையில்பரி மேலழகர்
மொழிந்த வின்ப
வைப்பாய வுரையதனுக் கொருவிளக்க மியற்றியன்பின்
வழங்கி னனால்
எப்பாலும் புகழ்பாண்டேச் சுரம்வருவேங் கடசாமி
யீன்ற மைந்தன்
ஒப்பார்வெம் பிணிப்பகைஞன் தூயகங்கா தரப்பெயர்கொள்
சுகுணன் தானே.

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
உ. வே. வை. மு. சடகோபராமானுஜாசாரியரவர்கள்
இய

நேரிசையாசிரியப்பா.

பாலிற் சிறந்த பசுவின் பால்போ
னூலிற் சிறந்த வள்ளுவர் நூலி
னுரையிற் சிறந்த பரிமே லழக
ருரையின் கருத்தி னுண்மை புலப்படச்
சித்தாந்த சைவச் சத்தாம் பொருள்தழீஇ
முதற்குறட் பாவின் முதிர்பொருள் விளக்கி
முதற்பா வலர்செய் முதற்பா நூலின்
முதற்பா விற்குள முதன்மை தெரித்தனன்
பண்டித னென்று பகரப் பெறும்பெய
ரிருவகை யாற்றனக் கேற்கும் வண்ண

மிலக்கிய விலக்கணக் கலைக்கட லுடனே
யாயுள்வே தப்பொரு ளாய்ந்துண ரறிஞன்
நூலா சிரியருந் தேவ ரந்நூ
லுரையா சிரியரி லுயர்ந்தவர் தாமுமோர்
பூதேவ ரவ்வுரைப் பொருள்விளக் குநரு
மோர்தேவ ராதலே யுரிய தென்னுந்
தகுதி தனக்கு மிகுதியா வாய்ப்ப
அப்பெயர் மரபினு லமையப் பெற்றோன்
தன்குடிக் குரிமையாற் றனக்கும் வழங்குமத்
தேவ னெனும்பெயர் மேவிநனி சிறப்பப்
பலவகை நூலுணர் புலவ னாகிச்
சாவா மருந்து வழங்கும் பெருந்தகை
வாயுறை வாழ்த்தி னுள்ளுறை யுரைத்தற்
கேற்புடை யவனிவ னேயென யாவரு
மதிக்கும் வண்ணம் வாயுறைத் தேர்ச்சி
தொன்றுதொட் டுடைய நன்றறி வள்ளல்
அன்பரு ளடக்கமொப் புரவுகண் ணோட்டம்
வாய்மை தூய்மை வகைபல வாய்ந்து
மங்காத சீர்த்தி மலிந்த
கங்கா தரனெனுங் கவிவல லோனே.

மஹாவித்வான் கா-இராமசாமிநாயுடு அவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உத்தரவே தத்தின்முதற் பாப்பரிமே லழகருரை
விளக்க வொண்ணூல்
இத்தரையோ ரையமற வினிதினியற் றித்தந்தா
னினிய பாவின்
அத்திவரு தந்வந்த்ரி யாதியர்நூன் முழுதுணர்வேங்
கடசாமிப்பேர்
வித்தகன்கான் முளையாங்கங் காதரப்பேர்ப் பிடுகர்பிரான்
விழைவி னுய்ந்தே.

சிவமயம்.

முகவுரை.

அநாதி முத்த சித்துருவாய் "எல்லாப்பதார்த்தமுமா யெங்குநிறை யொன்றை முன்னூல், சொல்லாப் பதார்த்தத்தைத் துப்புரவை - வல்லார்கள், கூடற் பதார்த்தத்தைக் கொண்டேத்தி" யான் இயற்றமிழ்ப்பாடங்கேட்டற்கெழுந்து, அஷ்டாவதானம் - வீராசாமி செட்டியாரவர்கள் மருகரும், சென்னை - தொண்டைமண்டலம் துளுவவேளாளர் இயற்றமிழ்ப் போதனாசாலைத் தமிழ்ப் பண்டிதருமாகிய அப்பன்செட்டியாரவர்களிடத்து, தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறள் பாடங்கேட்டுவருகையில், அந்நூலின் கடவுள்வாழ்த்துள் முதற்பாவுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரைவிசேடத்தில் "அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க" என்னும் வாக்கியத்தில் உள்ள வினையெச்சங்களாகிய 'அன்றி' என்னுஞ் சொற்களாற் போந்த பொருட்கண்ணதாகிய ஐயம், அக்காலங்களில் அத்திருக்குறளின் முதற்பாவைப்பற்றிச் சில மதஸ்தர்கள் செய்துவந்த உபந்நியாசங்களானும், ஒருவரோடொருவர் வாதிட்டுத் தமக்குள்ள கல்வியறிவுகளின் திறத்தைக் காட்டுவான் வரைந்த பத்திரிகைகளானும், சிலபண்டிதர்கள்முன் என்னால் விடுக்கப்பெற்ற தடைகளுக்கு அவர்கள்வாக்கினின்றெழுந்த விடைகளானும் விருத்தியடைந்தது.

இங்ஙனந் தோன்றி விருத்தியடைந்த ஐயம், ஸ்ரீலஸ்ரீ சொக்கபுரம் இராமலிங்கத்தம்பிரான்சுவாமியவர்களிடத்துப் பாடங்கேட்ட சைவசித்தாந்த நூலுணர்ச்சியால் ஸ்ரீ சிவஞானமுனிவர் செய்தருளிய சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானசித்தியார் சுபக்கவுரை, சிவஞானபோதபாடியம் இவைகளினும், மற்று முரையுள்ளனவு மில்லனவுமாகிய சைவ சித்தாந்த நூல்களினும், தமிழில் எழுதப்பட்டிருக்கும் பிறமத நூல்களினும் பல்காற் பயின்றுவந்ததனு

னும், 'வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திற னிங்குத் தெரிகக' வல்லுநராகிய சில பண்டிதர்கள் உபந்யசித்துக்கொண்டுவந்த சிவதத்துவவிவேக சகித சிகரிணிமாலையையும் ஸ்ரீகண்டய சகித வேதாந்த சூத்திரார்த்தத்தையும் சிரவணஞ்செய்து வந்ததனாலும் நீங்கி, எனது சிற்றறிவிற்குத் திருக்குறள் முதற்பாவின் உரையுண்மை ஒருவாறு விளங்கியதாகக் காணப்பட்டது.

இங்ஙனம் விளங்கியதாகக் காணப்பெற்ற யான் 'வாளாவிருந்தாலும் வாதித்துக் காதலென்சொற், கேளாது,' முறையினாலுணர்ந்தார் நம்மகத்திருக்குங் குற்றங்களை நீக்கி 'குளவி புழுவைக் கொணர்ந்துதன்போ லாக்கும், வளமாக நம்புலிய வார்த்தை—யுளபொருளை, நாவலர்தஞ் சொற்போற' செய்வாரேயன்றி முனியார் எனக் கூறியதைக்கேட்டு, அங்ஙனம் விளங்கப்பெற்றதை எனது இயற்றமிழாசிரியர் ஆசீர்வசனங்களைச் சிரமேற்கொண்டு ஸ்ரீ சிவபெருமானது திருவருளை முன்னிட்டு ஸ்ரீ சிவஞானமுனிவரது உரைபாடங்களைக் கொண்டே "திருக்குறள் முதற்பாவின் பரிமேலழகருரை விளக்கம்" என்னும் பெயரால் இச்சிறுநூல்வடிவமாக ஒருவாறு தொகுத்துப் பதிப்பித்தேன். ஆயினும் எனது சிற்றறிவிற்குப் புலப்படாது பிழைபட்ட விஷயங்களையும் மறப்பினால் விடுபட்ட விஷயங்களையும் திருக்குறளிலும் பரிமேலழகருரையிலும் சைவ சித்தாந்த நூல்களிலும் பல்காற் பயின்று பண்பட்ட பண்டிதர்கள் யாரேனும் அன்போடு அடியேனுக்கு அறிவிப்பாராயின் "நாண் பெரியோமல்லோ நாம் நன்றுந்தீதும் நமக்குரைப்பா ருளரென்று நாடுவோமே" என்னும் ஆன்றோர்வசனத்தை அவலம்பித்த அடியேன் அவர்மாட்டுப் பெருநன்றி பாராட்டி அவ்விஷயங்களை அவர்பெயருடன் இதற்கோர் அநுபந்தமாக அச்சிட்டுப் பிரசுரஞ்செய்யச் சித்தனாக இருக்கிறேன்.

இனி, "அந்தமோ ராறினிற் சைவசித்தாந்த மரிதரிது" என்னுந் திருவாக்கை வலியுறுத்துவனவும், லௌகிக வைதிக மார்க்கங்களாக விளங்குவனவுமாகிய வேதாகமங்களைத் தழீஇக் குருசிஷ்ய சமவாதமாக எழுதப்பெற்ற சைவசித்தாந்த் தீபிகையையும் விரைவில் பிரசுரஞ்செய்யும்படி ஸ்ரீ சிவபெருமான் திருவருள் பாலிப்பாராக.

இங்ஙனம்,
பா. கங்காதரன்.

உ

சிவமயம்.

திருக்குறள் முதற்பாவின்

பரிமேலழகருரை விளக்கம்.

விநாயகவணக்கம்.

தம்மா லறிந்தவெல்லாந் தாமல்ல வென்றுணர்ந்துரு
சும்மா விருக்குஞ் சுகமளிக்கு—மம்மவொரு
சூர்பபகரன் ஞாங்காவிடு சுப்ரமணி யற்குமுனுஞ்
சூர்ப்பகரன் பாதத் துணை.

சிவவணக்கம்.

'அகர வுயிர்போ லறிவாகி யெங்கு'
நிகரற நிற்கு நிமல—னுகளநிறச
செம்பதுமச் சேவடியே சிந்தித்தேத் தித்தொழுது
வெம்பவத்தி னீங்கிடுவா மே.

அவையடக்கம்.

தம்மை யறிந்தோர் தகைசாலு நூற்பொருள்கள்
தம்மை யறிந்தே தவறகற்றி—யெம்மை
பிரியாத வத்துவிதம் பேசுவா ரல்லார்
விரிவாகப் பேசுவரோ வீண்.

சிவமயம்.

திருக்குறள் முதற்பா.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பரிமேலழகருரை.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல, உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து.

I. இது, தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை.

II. அகரத்திற்குத்தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத்தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க.

III தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல்நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார்.

IV. 'ஆதிபகவன்' என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு.

V. 'உலகு' என்றது, ஈண்டு உயிர்கண்மேனின்றது.

VI. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என உலகின்மேல்வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்குமுதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க.

VII. ஏகாரம், தேற்றத்தின்கண் வந்தது.

VIII. இப்பாட்டான், முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது

பரிமேலழகருரைவிளக்கம்.

I. "இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை."

ஈண்டுத் தலைமை என்றது காரணமாதற்றன்மையை. எடுத்துக்காட்டுவமையாவது, பிம்பப் பிரதிபிம்பத் தன்மையால் இரண்டு வாக்கியங்களாய் வருமுவமையாம். இது, நிகரொடுத்துக்காட்டுவமை, முரணெடுத்துக்காட்டுவமை என இருவகைப்படும். அவற்றுள், இப்பாட்டு-அகரத்திற்கும் ஆதிபகவற்கும் உள்ள பிம்பப் பிரதிபிம்பத்தன்மையை உணர்த்தலால், நிகரொடுத்துக்காட்டுவமையென்க. ஈண்டுப் பிம்பப்பிரதிபிம்பத்தன்மையாவது: அகரம் ஏனைய எழுத்துக்களியங்குதற்குக் காரணமாகின்றதும், ஆதிபகவன் உலகமுணர்தற்குக் காரணமாகின்றதுமாகிய சாதிருசியதர்மமாம். அவ்வாறாதலின், அகரத்திற்கும் ஆதிபகவற்கும் உள்ள சுவாதந்திரியமும், ஏனைய எழுத்துக்கட்கும் உலகிற்கும் உள்ள பாரதந்திரியமும், சுதந்திர பரதந்திரப் பொருள்களுக்குள்ள வியாபக வியாப்பிய சம்பந்தமும் இனிது விளங்காநிற்கும்.

II. "அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க."

அகரத்திற்குத்தலைமை முயற்சிமுதலியவற்றான் விகாரமெய்தியவழியும் இயங்கப்பெறாத ஏனைய எழுத்துக்களோடு விரவிநின்று உபகரித்தன்மாத்திரத்தான் விகாரமெய்தாது நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலானும் என்பார் "அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலான்" என்றும், ஆதிபகவற்குத்தலைமை பொறிமுதலியவற்றோடு கூடியவழியும் உணரமாட்டாத உலகத்தோடு விரவிநின்று உபகரித்தன்மாத்திரத்தான் செயற்கையுணர்வெய்தாது இயற்கையுணர்வான் முழுதுமுணர்தலானும் என்பார் "ஆதிபகவற்குத்தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலான்" என்றுங் கூறினார். உம்மைகள்-எண்ணின்கண் வந்தன.

எழுத்துக்களெல்லாம் முயற்சிமுதலியவற்றான் விகாரமெய்தியவழியும் அகரமின்றி இயங்கப்பெறாமையை "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திரத்தானும், உலகம் பொறிமுதலி

யவற்றோடு கூடியவழியும் முதல்வனையின்றி யுணரமாட்டாமையை "மருவிய பொறியி லொன்று மாபூத மைந்தி லொன்றுங், கருவிக ளொன்று நீங்காக் கலாதிக ளேந்துங் கூடி, பொருபுல னுகரு மிந்த வொழுங்கொழிந் துயிரு மொன்றைத, தெரிவுறு தவனெ ழிந்தத் திரள்களுஞ்செயலி லாவே" என்னுந் திருவாக்கானும் அறிக. எழுத் துக்களோடு விரவிநிற்றலால் அகரத்திற்கு விகாரமின்மையை "மெய் யோடியையினு முயிரியறிரியா" என்னுஞ் சூத்திரத்தானும், உலகத் தோடு விரவி நிற்றலால் முதல்வற்கு விகாரமின்மையை "பரனுயி ருணாவொடுபாச பேதமும, விரவுறு தெங்கணு மேவு முண்மையே" என்னுந் திருவாக்கானும் அறிக.

விகாரத்தாற்பிறத்தலாவது,—விந்துவின் காரியமாகிய நாதம் பிராணவுதானங்களின் தொழிற்பாட்டால் உரங்கண்டமுச்சிமூக்கெ ன்னும் இடங்களை யுற்று இதழ்நாபல்அண்ணங்களிற் பட்டுச் சிதறுண்டு வெவ்வேறெழுத்தாகிய ஒலியாய்ப் பிறத்தலாம்.

இயல்பாற்பிறத்தலாவது, — விந்துவின்காரியமாகிய நாதம் பிராணவுதானங்களின் தொழிற்பாட்டால் அங்காந்தமாத்திரத்தில் தன்னியல்பின் மாறுபடாது பிறத்தலாம்.

நாதம் = சுத்தமாயாவிருத்தியாகிய பரசரீரத்தினின்றுந் தோன் றிய வியஞ்சகவொலி.

செயற்கையுணர்வாவது, — அநாதிபெத்தசித்துத்தன்மையால் வியஞ்சகமுள்வழி அதுவதுவாய் ஏகதேசமாத்திரையின் உணரு முணர்வாம்.

இயற்கையுணர்வாவது,—அநாதிமுத்தசித்துத்தன்மையால் எவ ற்றையும் ஒருங்கே ஓரியைபான் உணரு முணர்வாம்.

அகரம் கலப்பினு லெழுத்தெல்லாமாகவும், பொருண்மையால் வேறாகவும், ஏனையவெழுத்துக்கட்குயிராதற்றன்மையால் உடனாக வும் நிற்கும். இதனை "அகரவுயி ரொழுத்தனைத்து மாகி வேறா யமர் ந்ததென" என்னுந் திருவாக்கான் அறியலாம்.

முதல்வன் கலப்பினு லுலகெல்லாமாகவும், பொருண்மையால் வேறாகவும, உயிர்க்குயிராதற்றன்மையால் உடனாகவும் நிற்பன் இதனை, "ஸவ-ர்ம வஹிடம ஸ்ரஹ," "ஏகமெவா அதீயம ஸ்ரஹ"

என்னும் இதுதொடக்கத்தனவாகிய சுருதிகளானும், "அவையேதானேயாய்," "உலகெலாமாகி வேறாயுடனுமாய்," "உடலுயிர்கண்ணருக்கனறிவொளிபோல்" என்னும் இவைமுதலிய திருவாக்குக்களானும் அறியலாம்.

ஆசிரியர் பாரத்துவாசிநச்சினார்க்கினியர் "மெய்யினியக்க மகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திரவுரையில் 'இறைவன இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின்தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின்தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லா மொப்பமுடிந்தது' எனக் கூறியதூஉம் இக்கருத்தேபற்றியாம்.

இனி 'வாமதேவமுனிவன்முதலியோர் யானே யுலகெல்லாமாயினேன் எனக்கூறுதலானும், சர்வஞானோத்தரத்தில் யானேயெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய்நின்றேனென்று உயிர்கண்மேல் வைத்தோதுதலானும் உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போலுமெனின்,' பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய்நின்று சோகமபாவனைசெய்யும் உயிர்கள் தம்மகத்து முதல்வன் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் முத்திக்காலத்து யானே யுலகெல்லாமாயினேன் எனக் கூறவந்ததாகலின், அதுபற்றி யுயிர்களு மவ்வாறாவான் செல்லுமா றெங்ஙனமெனக.

'இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன், யானே யுலகெல்லா மாயினேனென்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனையுறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன்கூறிய கருத்துநோக்கிச் சாங்காறுஞ் சிவபூசைசெய்ததூஉம், கண்ணன்மேல் இட்ட போதுகள் முதல்வன்திருமுடிமேற் கண்டதூஉ மென்க.'

இங்ஙனம் கூறியவாற்றான் முதல்வனும் உலகும் பொன்னும் பணியும்போல் அபேதமெனவும், ஒளியும் இருளும்போல் பேதமெனவும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமெனவும் பிணங்கிக்கூறுவாரை மறுத்து, உடலுயிர் கண்ணருக்கனறிவொளிபோலும் அமைவுனறியலபுந் தனக்கேடோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை

இனிது விளங்காநிற்கும் என்பதனை "..............பொற்பணிபோலபேதப் பிறபபிலதா யிருளொளிபோற் பேதமுஞ் சொறபொருள்போற் பேதாபேதமு மின்றி ...., உடலுயிர்கண்ணருக்கனறிவொளிபோற் பிரிவருமத் துவித மாகும்" என்னுந் திருவாக்கு வலியுறுததியவாற்று னறியலாம்.

"அததுவிதமென்னுஞ் சொல்லில் நகரம் "ததபாவந் ததந்நியந் தத்விருத்த, மெனமூன் றுரு நஞ்ஞுதற புருடன்" என்னும் விதியால் இன்மை அன்மை மறுதலை எனனு மூன்றனு ளொன்று பயக்கும; அவற்றுள:—

"இன்மைபபொருள்கொண்ட மாயாவாதிகள் இரண்டின்மை யொருபொருண்மாததிரையினன்றி இரண்டுமுதலியவாயெண்ணப் படும் பொருளகளினிலலாமையால, அததுவிதமென்னுஞ் சொறகுப் பொருள ஒன்றென்பதேயா மெனவும; ஒருபொருளாயினுங் குணகுணிஎன வேறறுமைதோன்றநிற்பிற் கேவல மொன்றாதலின் மையின அததுவிதமென்ப துபசாரச்சொலலாய் முடியுமாகலான், தன்னின்வேறா யொருபொருளுமின்றித தானுங் குணமுடைய பொருளென விசேடிககபபடுதலின்றி நிர்விசேடமாய்நிறகும் பரப்பிரமப பொருள என்பது அததுவிதமென்னுஞ் சொற்குப் பொருள என வுங் கோடலின், அவா கேவலாததுவிதிகளென வழங்கபபடுவா."

"இராமாநுசர் சிவாத்துவிதசைவர் முதலியோரும் அவ்வாறே இன்மைபபொருள்பற்றி யொன்றேயெனப பொருள்கொண்டு, சத்தியசங்கற்ப முதலிய குணங்கள் பரப்பிரமபபொருட்குளவென்று உபநிடதஙகளிற் கூறுதலானும், அவை செயறகைக்குணம் என்ற ற்கு ஓரியையின்மையானும், பசுபாசங்களது உண்மையு முபநிடதங் களுள ஓதபபடுகலானும், அவறறொடு முரணிக கேவலாததுவிதமெனக் கோடல் பொருந்தாமையின், தன்னொடுயைபுடைய பசுபாசங்களானும் தன்குணங்களாய சத்தியசங்கற்பமுதலியவற்றானும் விசேடிககபபட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை; ஒன்றென்பதே அததுவிதமென்னுஞ்சொறகுப பொருளென விசிட்டாத்துவிதங் கோடலின், அவர் விசிட்டாத்துவிதிகளென வழங்கப் படுவர்."

"பேதவாதிகள் மறுதலைப் பொருள்பற்றி இரண்டன்மறுதலையாகிய ஒன்றெனப பொருள்கொண்டு, அங்ஙனங்கொள்ளவே அவ்

வொன்றன் மறுதலையாகிய இரண்டாவது மூண்டென்றற்கிழுக்கின்மையின், அத்துவிதமென்பதுந் துவிதமென்னும் பொருளைப் பயக்குமென்று போவர்."

"அவரெல்லாரும் அத்துவிதமென்ற சொற்குப் பொருள் ஒன்றென்பதேயாம் எனக்கொண்டு தத்தாமதங்களோடு முரணுமைப்பொருட்டுக் கேவலம விசிட்டம் மறுதலை என்னும் அடைகூட்டி இடர்ப்பட்டுப பொருள்கொள்வர். அவருண் மாயாவாதி கூறுங் கேவலமும், பேதவாதிகூறும் மறுதலையுஞ் சுருதியோடு முரணுதலின், ஈண்டைக் கேலாவாம். ஏனையோர்கூறும விசிட்டம் என்பது பொருந்துமாயினும், அத்துவிதமென்னுஞ்சொற்குப் பொருள் ஒன்றெனக் கோடல பொருந்தாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக்கூறலமையும்; அவ்வாறன்றி அத்துவிதமென வுய்த்துணரவைத்தோதவேண்டாமையானும், ஒன்றெனப பொருள்கொள்ளின் மாவாககியபபொருள பயபபதோர் விசேடமின்மையின் அததுவிதமென்றதுபறறி ஆண்டொரு பயன் படாமையானும; என்க."

"மறறென்னையோ அத்துவிதமென்னுஞ் சொறகுப பொருளெனின, சித்தாந்தசைவ ருரைக்குமாறுகாட்டுதும: அது நீயாகின்றாய் எனவும், அது நானகினறேன் எனவும், அதுவதுவாகினறது எனவு மூவிடமபறறி நிகழுந் "தததுவமசி" முதலிய மாவாககியங்களைக் கேட்டவழி, 'அதுவென்பதொருபொருள் நீயென்பதொருபொருளாகலின், ஒருபொருள் மறறொருபொருளாமாறு யாங்ஙனம்'என்னுமைய நீககுதறகெழுநததாகலின், அதுவதுவாதறகேதுவாய் அவ்விரண்டறகு முளதாகிய சமபந்தவிசேடமுணாத தததே அத்துவிதமென்னுஞ் சொறகுப பொருளென் றுணாந்துகொள்க"

"அறறேல், அத்துவிதமென்னுஞ் சொல்லாற பெறப்படுஞ் சமபந்தம ஐக்கியமோ, தாதான்மியமோ, சமவாயமோ, சையோகமோ, சொரூபமோ, வேறோ வெனக் கடாயினாககு, யாற்றுநீருங் கடனீருந் தம்மிற்சேர்ந்தாறபோலவும்,குடாகாயமு மகாகாயமுந் தம்மிறசேர்ந்தாறபோலவும ஐக்கியமெனின்; அங்ஙனஞ் சேர்ந்தவழி யொருபொருளேயாதலின், ஒன்றெனவேயமையும; அத்துவித மெனவுய்த்துணரவைத்தோதவேண்டா; அன்றியும்,ஒன்றாயவழி அதுவது வாய்நின்றறிதலாகிய ஆன்மவிலக்கணம் முததிக்காலத்திலலை யெண

ப்பட்டு வழுவாமாகலின், அது பொருந்தாமையானும்; குணகுணி கட்குத் தம்மினுளதாகிய சம்பந்தம்போலுந் தாதான்மியமெனின், ஆன்மா முதல்வனைப்போலக் குணகுணிபொருளாய் நிற்பதன்றி முதல்வனுக்குக் குணமாகாமையான், அவ்வாறியைதல் கூடாமையா னும்; தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறுஞ் சமவாயமென்ப தொன்றின்மையானும்; விரலும்விரலுஞ் சேர்ந்துநின்றாற் போலச் சையோக மெனின், அவ்வியாப்பியவிருத்தியாகிய சையோகம் வியா பகப்பொருள்கட்குக் கூடாமையானும்; யாதானுமோரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின், அது மாவாக்கியப்பொருளை வலி யுறுத்துதற் கெழுந்த அத்துவிதமென்னுஞ்சொற்குப் பொருளாகா மையானும்; சொரூபசம்பந்தமாத்திரையிற் சிவானந்தத்தை யனுப வித்தல்கூடாமையானும்; இவற்றின்வேறு யின்னதென்றறியவாராத அநிர்வசநமெனின், அங்ஙனங் கூறுதல் மாயாவாதி கூற்றாய் வழு வாமாகலானும்; அவையெல்லா மீண்டைக்கேலாமையின் வேறுவிடு க்குமா றென்னையெனிற் கூறுதும்: ஒருபொருளே அவயவாவயவிக ளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டிரண்டாய்நிற்றற் கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே யதுவது வாயொற்றுமைப்பட் டொன்றாய்நிற்றற்கேதுவாகிய தாதான்மியமு மெனத் தாதான்மியசம்பந்த மிருவகைப்படும்; அவற்றுள் முன்னை யது தாதான்மியமென்றும், பின்னையது அத்துவிதமென்றும் வழங் கப்படும்; அத்துவித மென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறியவாற் றான் வேறுபொருள் தருமாறின்றி (அபிராமணனென்றாற்போல) அன்மைபொருள்பற்றி இரண்டனறென வேற்றுமைப்படாமை யைவிளக்கிநிற்றலாமென்க.''

இதுவே சந்தாநகுரவர்களாகிய மெய்கண்ட சிவாசாரியர் உமா பதிசிவாசாரியர் இவர்களகருத்தாமென்பதனை முறையே ''அத்து விதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்து மாயிட்டு'' எனவோதியதனும், ''பிரிவருமத்துவிதமாகுஞ் சிறப்பினதாய்'' என வுடம்பொடுபுணர்த்தோதியதனானும் அறியலாம்.

''இவ்வத்துவிதம், அபேதசம்பந்தமாகிய ஐக்கியமுமன்றி, பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றி, பேதசம்பந்தமாகிய சையோகமுமன்றி, கலப்பும் உடனாதலும வேறாதலுமாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி, அம்மூன்றற்கும் பொதுவா

கக்கூறப்படுமாதலான்; இவ்வத்துவிதத்திற் கொவ்வோரிடங்களின் 'அலைகடலிற்சென்றடங்கு மாறுபோல்' எனவும் 'வானகத்தில்வாறு மணத்தில் மணமும்போல' எனவும் அபேதவுவமையும், 'பண்ணையு மோசையும்போலப பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போல்' என வும் 'நீருமிரதமும்போ, லாங்கா ணரனாருள்' எனவும் பேதாபேத வுவமையும், 'இரும்பைக்காந்தம்வலித்தாற்போ லியைந்து' எனப் பேதவுவமையும் ஒருபுடையொபபுமைபற்றி எடுத்துக்காட்டுபவாக லின், இங்ஙனம தமமுண்முரணுவனபோல வேறுவேறு எடுத்துக் காட்டுதல்பற்றி மலையற்க. இம்மூன்றினையுந் தன்கட்டோன்ற இவற்றிற்குவேறாய்நிறகும அத்துவிததிறகுச் சிறந்தெடுத்துக்காட் டப்படு முவமையாவது ஆன்மபோதமுங் கண்ணொளியுந் தம்முள் அத்துவிதமாய் நிற்றலா மென்க." "காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற், காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின்" என மெய் கண்ட சிவாசாரியரும், "காட்டக்கண்டிடுந் தன்மையுடையகண் ணுக், கேயுமுயிர் காட்டிக்கண்டிடுமாபோல விசனுயிர்கருக் காட் டிக்கண்டிடுவன்" என அருணந்திசிவாசாரியரும, "அறிவொளி போற் பிரிவருமத்துவிதமாகும்" என உமாபதிசிவாசாரியரும சித தாந்தமுடிபுணர்த்தும்வழி இதனையே எடுத்துககாட்டியவாற்று னும் அறியலாம்.

"இவ்வத்துவிதம் ஏனையோர்கூறும் அத்துவிதம்போலக் கேவ லம் என்றாதல், விசிட்டம் என்றாதல், மறுதலையென்றாதல் யாதா னும் ஒன்றான் விசேடிக்கபபட்டுநின்று பொருளுணாத்தாது சுத்த மாய்நின்றே பொருளுணர்ததுதலின் சுததாததுவிதமென வழங்கப் படும்."

"ஈண்டுச் சுததமென்றது யாதொன்றானும் விசேடிக்கப்படாது நிற்றலை; அது விசிஷ்டசத்தை சுத்தசத்தை யெனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டா னறிக."

"இங்ஙனம் ஒருபொருளிருதன்மையான் வியாபகமும் வியாப் பியமுமாய் வேற்றுமைப்பட்டுநிறகுந் தாதான்மியம்போல, வியாபக மும் வியாப்பியமுமான இருபொருளொருதன்மையாலொற்றுமைப் பட்டுநிறகுந் தாதான்மிய சம்பந்தமொன்றுண்டெனவும், அதுவே அன்மைபபொருள்பறறி அததுவிதமென்னுஞ் சொல்லானுணர்த் தப்பட்டதெனவும் அறியமாட்டாதார் அத்துவிதம் என்னுஞ்சொற் குத் ததமக்குவேண்டியவாறு பொருளுரைப்பர்."

III "தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கு முதலாதல்நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார்."

வடவெழுத்துத் தமிழெழுத்தினுஞ்சிறந்தமை தோன்ற உம்மை கொடுத்தார். தென்மொழி வடமொழிகளை மகேச்சுரரால் முறையே அகத்தியனாரும் பாணினியாரும் ஓதியுணர்ந்தமையானும், அவ்விருமொழிகளும் எல்லாப் பாஷைகளுக்கும் காரணமாக சிறத்தலானும் 'தமிழெழுத்து' 'வடவெழுத்து' என்றார். இக்காரணத்தால் தமிழெழுத்தும் வடவெழுத்தும் அநாதியாய் ஆரிஷமாயினவென்பது தானே விளங்கும்.

IV "ஆதிபகவன் என்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு."

வடநூன்முடிபாகலின இயல்பாயிற்று, தமிழ்நூன்முடிபாயின் "அவற்றுள், இகர்விறுபெயர் திரிபிடனுடைத்தே" எனனும விதியால நம்பிகொற்றன், நமபிசசாத்தன, நமபிபபிள்ளை என்பன போல ஆதிப்பகவன என வல்லொற்றுமிக்குவரும்.

V. "உலகு என்றது உண்டுயிர்கண்மேனின்றது."

உலகு எனனுஞ்சொல சேதநம் அசேதநம் என்னும் இருகூற்றுப பிரபஞ்சத்தையும குறிக்கத்தக்கது. ஆயினும சேதந பிரபஞ்சமொனறே ஆதிபகவன தமக்கருளவழங்கு சச்சிதானந்த பூழு முதலவனெனறறிந்து அவனுணைவழியொழுகிப போகமும வீடுபேறும பொருந்து முரிமையுடையதென்பார 'உலகென்றது உண்டுயிர் கண்மேனின்றது' எனறார. எனறாரேனும, சேதநபிரபஞ்சத்தை யொட்டினதே ஆதிபகவனுனையாறறானே தோறற நிலை யிறுதிகளைப பெறுதலால் அசேதந பிரபஞ்சமுங் கொள்ளத்தக்கதேயாம. அங்ஙனங்கொள்ளின உயிரும மெய்யும் ஆகிய எழுத்துக்களெல்லாம அகரமாகிய முதலையுடையனவாதல்போல, சேதநமும் அசேதநமும ஆகிய இருகூறறுப பிரபஞ்சமும ஆதிபகவனாகிய முதலையுடைத்தாதல் நன்குவிளங்கும இவவுணமையை "ஞானவானஞ்ஞானரூபஞ்ச ஶிவோ தேவோ ஹ்யாநந்தரூபகே । வைராக்யஞ்ச விநாஶஸ்ய சாக்ஷிணாநேகாரவஸ்" "ஶிவஸ்ய ஜஞாநாக்ஷராணாநேகாரவஸ்" என்னும வடநூன் மேறகோள்களான அறியலாம.

VI. "காணப்பட்டவுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மைகூறவேண்டுதலின் 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என வுலகின்மேல் வைத்துக்கூறினார்; கூறினாரேனும் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க."

காணப்பட்டவுலகம்=சுட்டுணர்வாலறியப்பட்டவுலகம். [சுட்டுணர்வு=பசுபாசங்களின்ஞானம்.] காணப்படாத கடவுள்=சுட்டுணர்வாலறியப்படாத கடவுள். உண்மை=உளதாந்தன்மை. முதல்=முதற்காரணம்.

சுட்டியறியப்படும்பொருள் அசித்தும் அசத்தாமெனச் சுருதிகள் முறையிடுதலால், அதுவே தோற்றநிலையிறுதியென்னும் முத்தொழிற்பட்டவழிச் சுட்டுணர்விற்கு விடயமாந்தன்மைத்தாமென்பார் 'காணப்பட்டவுலகம்' என்றார்.

சச்சிதானந்தரூபனாகிய இறைவன் சடமாயாசித்தும்பாதலின்மையால் சுட்டியறியப்படும் பொருளுமன்று, அநிர்வசனீயமெனப்படும் சூனியமன்மையால், ஒருவாற்றானும் அறியப்படாதபொருளுமன்று என்பார் 'காணப்படாத கடவுள்' என்றார்.

காரியமாகிய உலகிற்குக் காரணமாகிய கடவுள் உண்டெனனும் ஆகமப் பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப் பிரமாணத்தாலறிகவென்பார் 'காணப்பட்ட வுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின்' என்றார்.

உயிர்க்குயிராய்நின்று உணர்த்து முகத்தான் தனுகரணாதிகளைக் கொடுப்போனும் முதல்வனேயாவனென்பதை அறிவுறுத்தற்பொருட்டும், உலகிற்குமுதல் அணுவெனவும் காலமெனவும் கேவலமாயையெனவுங் கூறுவாரது மதங்களை மறுத்தற்பொருட்டும் 'உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க' என்றார்.

'ஆரியன்குலாலனாய்நின்றாக்குவனகிலமெல்லாம்' எனச் சுருதி கூறுகின்றமையானும்; குடத்திற்கு நிமித்தனாகிய குலாலன் முதற்காரணமாகிய மண்ணின் தன்மையைப் பெறாததுபோல, உலகிற்கு நிமித்தனாகிய முதல்வன் முதற்காரணமாகிய மாயையின் தன்மையைப் பெறாமையானும்; குலால குவிந்தர்கள் தாமே மண்ணாகவும் நூலாகவுமிருந்து கடபடாதிகளாகத் தோன்றாமைபோல, முதல்வன் தானே மாயையாக நின்று உலகாகத் தோன்றாமையானும்;

கடபடாதிகள் தாமே குலாலகுவிந்தர்களினின்றுந் தோன்றாமை போல, உலகம் தானே முதல்வனிடத்தினின்றுந் தோன்றாமையானும்; குடத்திற்கு நிமித்தம்வேறும் முதல்வேறும் வேண்டப்படுதல் போல, உலகிற்கு நிமித்தம்வேறும் முதல்வேறும் வேண்டப்படுமாகலான் உலகிற்கு ஆதிபகவன் நிமித்தமும் மாயை முதலுமாமேயன்றி ஆதிபகவன் முதலாகான் எனின், அற்றன்று: "யதைகேந ம்ருத்பிண்டேந ஜ்ஞாதேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்" என்னுஞ் சுருதி மண்ணொன்றையறிந்தமாத்திரத்தில (அதன் காரியமாகிய) கடாதிகளு மண்மயமாகவே அறியப்பட்டனவாகின்றன; அதுபோல முதல்வனை யறிந்தமாத்திரத்தில் இந்தப் பிரபஞ்சமெல்லாம அவனாகவே அறியப்பட்டதாகின்றது என உபதேசிப்பதனால், நிமித்தர்களாகிய குலாலகுவிந்தர்களை யறிந்துங் கடபடாதிகளை அவர்களாகக் காண்டற்காகாமையும், முதலாகிய மண்நூல்களை யறிந்தால் கடபடாதிகளை அவைகளாகக்காண்டற் காதலையும்போலாது, நிமித்தனுகிய முதல்வனையறிந்த மாத்திரத்தில் உலகெலாமவனாகவே காணப்பட்டதாகின்றமையால் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது இனிதுவிளங்காநிற்கும். அன்றியும, "ததைக்ஷத । பஹு ஸ்யாம் ப்ரஜாயேய இதி" என்னுஞ்சுருதிஅதுஎல்லாமாவோமெனச் சங்கற்பித்ததுஎனவும்,"விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:"என்னுஞ்சுருதி மஹர்ஷியாகிய உருத்திரன் உலகினையிறந்துநின்றவன் எனவும், "ஸர்வோ வை ருத்ர:" என்னுஞ்சுருதி உலகெலாமாய் நின்றவன் உருத்திரன் எனவும் உபதேசிக்கின்றமையானும், உலகிற்குமுதல ஆதிபகவனெனபது தெற்றென விளங்காநிற்கும். இஃதன்றியும், "மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் து மஹேஶ்வரம் । தஸ்யாவயவ பூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத்" என்னுஞ சுருதி மாயையே முதற்காரணமென்றறிக, மாயையையுடையோன் மகேச்சுரன், அவனது அவயவமாகிய அதனால் இந்த வுலகமெல்லாம் வியாபிக்கப பெற்றது என வுபதேசித்தமையானும; "உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்" என்னுந்திருவாக்கானும; கேவலங் கிழங்கினின்றாவது சேற்றினின்றாவது தாமரை யுண்டாகாததுபோல, கேவலம் மாயையினின்றாவது மகேச்சுரனினின்றாவது உலகமுண்டாவதில்லையாகலான்; சேற்றின்கண் கிழங்குள்ளதாக அதினின்றுந் தாமரை தோன்றுமாறுபோல, இறைவனது சத்தியின்கண் மாயையுள்ளதாக அதினின்றும் உலகந்தோன்றுதலின், ஆதிபகவற்கே முதற்காரணத்துவ

மும் உரித்தாதலறியலாம். இங்ஙனங் கூறியவாற்றால் நிமித்த காரணமாகிய முதல்வன் உலகிற்கு முதற்காரணனல்லனாயினும், முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின் 'உலகிற்கு முதல ஆதிபகவன்' ஆதல் நன்குவிளங்கும்.

[சேற்றின்கண் கிழங்குள்ளதாக அதினின்றுந் தாமரைதோன்றியதை 'பங்கஜம்' என்னுஞ் சொல்லியல்பானும், இறைவனது சத்தியின்கண் மாயையுள்ளதாக அதினின்றும் உலகந்தோன்றியதை 'விஶ்வகாரணன்' என்னுஞ் சுருதிவாக்கியத்தானு மறியலாம்.]

அற்றேல், சச்சிதாநந்த மங்களரூபனாகிய முதல்வன் அந்ருத சடதுக்க ரூபமாகிய உலகிற்குக் காரணமாயின் விகாரப்பட்டுநின்று அதனிற் பந்தமுறுவான்போலுமெனின், அம்முதல்வன் இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலும் செய்தும் தனக்குவிகாரமின்றிநிற்கும் காலம்போல விகாரப்படாது நின்று, பிரபஞ்சத்தைக் கரணங்களாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து, அவ்வாறே காவாதுகாத்து அழியாதழித்தலான், கற்றறாற சொல்லும் பொருளும் உள்ளத்திற்றோன்றுங்கால உள்ளம அவற்றிற்றொடக்குண்ணாதவாறுபோலவும், கனவின்கட் கண்டவற்றைப் புறத்து விடயங்களையறிந்துவந்த நனவுணர்வின் கண்ணே விளங்க அறிந்தவன அப்பொழுது அவற்றிற் றொடக்குண்ணாதவாறுபோலவும், பந்தமுமின்றி அமலனாகவே விளங்கிநிற்பன் எனவறிக.

எண்குண பகவனெனப்படுவோன் "யோ வை ருத்ரஸ்ஸ பகவாந் ஸர்வேஶ்வர:" என்னும சுருதிப்படி உருத்திரனேயாவன். எங்ஙனமெனின், "அத கஸ்மாதுச்யதே பகவாந் யஸ்ஸர்வாந் வாநீக்ஷத்யாத்மஜ்ஞாநம் நிரீக்ஷயதி யோகம் கமயதி ஸ வஏவ தஸ்மாதுச்யதே பகவாந்" என்னுஞ் சுருதிப்படி எல்லாவற்றையுமறிகின்றவனும, உயிர்கள் தன்னையறியவும் தனது ஞானத்தையும் யோகத்தையும அடையவும செய்கின்றவனும அவனேயாகலானும, "ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய: । ஜ்ஞாநவைராக்யயோஶ்சைவ ஷண்ணாம் பக இதீரணா" என்னும் புராணவசனப்படி ஐசுவரியம வீரியம புகழ திரு ஞானம் வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையுடையவனும் அவனேயாகலானு மெனக.

[ஈண்டு உருத்திரனென்றது மாசங்காரக்கடவுளாகிய பரம சிவனே; அவனுக்கும உருத்திரனென்னும பெயருண்மையின். உருத்திரன் என்னுஞ் சொற்கு வேதங்களாலும் வேதாந்தமுணர்ந்த பெரியோர்களாலுஞ் சொல்லப்படும் பொருளாவது: சம்சார துக்கத்தினின்றுந் தாண்டச்செய்கின்றவன் என்பதாம். இதனை "ருதுஸ்ஸம்ஸார து:கம் தத்ராவயதி யஸ்ஸ: । ருத்ர: இத்யுச்யதே வேதைர் வேதாந்தவேதிபி:" என்னுஞ் சுலோகத்தா னறிக. ஐசுவரியமுண்மைக்கு ஈஸ்வரபதச்சுருதியும், வீரியமுண்மைக்கு உக்கிரபதச்சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச்சுருதியும், திருவுண்மைக்குச் சமபுபதச்சுருதியும், ஞானமுண்மைக்குச் சர்வஜ்ஞபதச்சுருதியும், வைராக்கியமுண்மைக்குக் காமரிபுபதச்சுருதியும் பிரமாணங்களாம்.]

அதர்வணவேதம் சிவநாமங்களுள பகவந் என்னும் நாமந் தலைப்பெய்தெடுத்தோதியதனாலும, சுவேதாஸ்வதரம சிவபிரானைப் பகேசனென்றெடுத்தோதியதனாலும், பகவந்நாமப பொருளாயுள ளோன் ஸ்ரீ பரமசிவபிரபுவென்றே யறியலாம். இன்னும் இத னுண்மையை பௌஷ்கராகம விருத்தியினும, சதுர்வேத தாதபரிய சங்கிரகத்தினும், சிகரிணீமாலையினும விளங்கவறியலாம.

இனி மெய்யுணர்வெய்திய தேவர முனிவர முதலியோரைப பகவனெனனும பெயரால வழங்குவது அவரமாட்டு விளங்கும் பரமசிவவிபூதியினியைபுபற்றியாகலின அஃதுபசாரமேயாமெனப.

VII. "ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது."

தேற்றம்=தெளிவு.

VIII. "இப்பாட்டான் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது."

படைப்பு முதலிய தொழில்களைபபுரியும் நான்முகன் முதலி யோரையும உணணின்று பிரேரிக்கும் முதல்வன ஒருவனுளனுத லைக் குறிபபிபபான் 'முதற்கடவுளதுண்மை கூறபபட்டது' என்றுர.

ஈண்டு முதற்கடவுளாவார் -"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே। யேந ஜாதானி ஜீவந்தி। யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி। தத் விஜிஜ்ஞாஸஸ்வ। தத் ப்ரஹ்மேதி" என்னுஞ்சுருதி இந்தப்பூதங்கள் தோன்றி நின் றொடுங்கப்பெற்றதெதுவோ அதுவேபிரமமாமென வுபதேசிக்கின் றமையாலும்; "ஸர்வாநநசிரோக்ரீவ: ஸர்வபூதகுஹாசய:

ப்ரஹோ: | ஸர்வஜ்ஞோ யத: ஸம்ஹாரம் ஸ்ருஜத்யவதி ஹந்தி ச |" என்னும் மேற்கோள் அந்தபிரமனமுதலியபசுக்கள் பிரபுவுக்கு லீலா சாதனங்களாக இருக்கின்றமையால் இந்த ஸர்வஜ்ஞரான சம்புவானவர் தோற்றநிலையிறுதிகளைச் செய்கிறார் எனவும், ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே | ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹ பூதைர் ந காரணம் | காரணாநாம் த்யாதா | காரணம் து த்யேய: ஸர்வைச்வர்ய ஸம்பந்ந: ஸர்வேச்வர: சம்புராகாசமத்யே" என்னுஞ்சுருதி பூதங்களும் இந்திரியங்களும் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்திரர்களும் உண்டாக்கப்படுகிறார்கள்; (அவர்கள் முறையே) காரணங்களைத் தரித்தலானும் தியாதாவாதலானுங் காரணர்களாகார (ஆகலின்) சர்வைஸ்வரியங்களை யுடையவரும், சர்வேஸ்வரரும், சம்புவும், ஆகாசமத்தியில் தியேயராக நிற்பவரும் (எவரோ அவரே) காரணர் எனவும் உபதேசிக்கின்றமையானும் பரசிவம் பிரமமென்னப்பட்டு, ஒரு திரிவுமின்றி அநாதி முத்தசித்துருவாக நின்ற ஸ்ரீசிவபெருமானேயாவர்.

வேதத்துள் "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்" "ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே" "இந்த்ரஸ் ஸர்வகர்த்தார:" "அக்நிரக்ரே ப்ரதமோ தேவதாநாம்" "ஸூர்ய ஆத்மா ஜகதஸ்தஸ்துஷச்ச" என்பவை முதலிய காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அக்னி சூரியன் முதலியோரைக் காரணாகவென்றது குயவனைப்போல அவாந்தர காரணமாதல் பற்றியே. ஆகலின் அவையெல்லாம் ஆகுபெயரால் முதற்கடவுளையே யுணர்த்தி நிற்கும். ஆகலான் செய்தும் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்பவனே முதற்கடவுளாம்.

"அகரமுதலவெழுத்தெல்லாம்" என்னுமுபமானம் பலகலையாகம வேதங்களைப் பிரளயந்தோறும் முறைபிறழாது கூறுகின்றவனும், பலகலையாகம வேதார்த்தமாயுள்ளவனும், பலகலையாகம வேத பிரமாணங்களாலறியப்படுபவனும் எவனோ அவனே உலகிற்கு முதற்கடவுளாமெனவுய்த்துணர வோதியதூஉம், "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்னுமுபமேயம் முதல்வன் இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய உலகம் விளங்கித்தோன்றுவான் அதனோடு விரவிநிற்பன் என இறைவனது தடத்தவிலக்கணங் கூறியதூஉமாம்.

முதல்வன் பிரபஞ்சோற்பத்தியினிமித்தம் 'உலகெலாமாகி வேறாயுடனுமாய்' நிற்றல் தடத்தவிலக்கணமெனவும், தன்னுண்மையில் சிவசத்தாகிய சச்சிதானந்தமாய் நிற்றல் சொரூபவிலக்கணமெனவுஞ் சுருதிகூறுமாற்றா னறியலாம்.

இனி, "அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு" என்னுந் திருக்குறளின் முதற்பாவிற்குத் திரண்டபொருள்: "ஆன்மாவுக்கு அறிவுசெயல்கள் விளங்குதலும் விளங்கியபின் விடயத்திற்சென்று பற்றுதலும் இறைவன் திருவடியையின்றி யமையமாட்டா; அதுபற்றி இறைவனும், அக்கரங்களை இயக்குதற்பொருட்டு அவற்றுடன் கலந்துநிற்கும் அகரம்போல, அறிவுசெயல்கள் விளங்குதற்பொருட்டு உயிர்களோடுங் கலந்து நிற்பன். அங்ஙனம் விளங்கிய அறிவுசெயல்கள் பின்விடயத்திற்சென்று பற்றுதற்பொருட்டு அவ்வுயிர்களை அதிஷ்டித்துக்கொண்டு அவைசெல்லுமாறெல்லாம் அறிந்து செலுத்தி அவ்விடயங்களினுமுடனுகக் கலந்துநிற்பன். ஆகலான் ஆணவமலத்தினீங்கி வேறுநின்ற வுயிர்கள் அதுபோல இறைவனைவிட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்துமில்லை" என்றறிந்து அடங்குவார் மெய்யுணர்வினிலைபெறுமாந்தர் என்பதாம்.

இஃதிப்பொருட்டாதல் அடியில்வரும் அருணந்திசிவாசாரியருடைய அருமைத்திருவாக்கானும் அறியலாம்:—

"எவ்விடத்து மிறையடியை யின்றியமைந்தொன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்க ளிறைவனருளுஞ்
செவ்வியினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்க டோற்றும்போ தவனை யின்றித் தோற்றா
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிவ னுதலானு
மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே."

வள்ளுவர் நூலின் வருமுதற் பாவிற்குத்
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—விள்ளச்
சிவஞான பாடியத்தாற் சிற்றுரையாற் றந்தான்
அவஞானந் தீரவிளக் கம்.

"வணங்கி வாழ்த்தி மதிப்பரும் பொருளை
வணங்கி வாழ்த்தி மதித்துமன் பெரிதே."

திருக்குறள் முதற்பாவின் பரிமேலழகருரை விளக்கம்
ஒருவாறு முற்றுப்பெற்றது.

சூளாமணிக் குறிப்புரை.

சூளாமணியென்பது தேவமணி யிரண்டனு ளொன்று; மற்றையது சிந்தாமணியென்ப. சூளா-தலை; மணி-இரத்தினம். எனவே தலையின்கண் அணியப்படும் இரத்தினம் அல்லது தலையினது (சம்பந்தமான) இரத்தின மென்பது பொருள்; முதற்பொருளில் ஏழாம்வேற்றுமை யுருபும்பயனு முடன் றொக்க தொகையும், இரண்டாம் பொருளில் ஆறும் வேற்றுமைத் தொகையுமாம். இது 'சூடாமணி' யெனவும் வழங்கும். "டளயோர பேத:" என்ற வடநூல் விதிபற்றி டகரமும் ளகரமும் ஒத்து நடத்தலிற் போலியாம். 'சூளாமணி' என்ற வொருவகைத் தலையணியின் பெயர் 'சிந்தாமணி' யென்பது போல உவமவாகுபெயராகக் காரணக் குறியாய் நூலுக்காயிற்று. எனவே பலராலும் அத்தகைய சிறப்புடைத்தென மேற்கொள்ளப் பெற்றுப் பாராட்டத் தகுவதொரு நூலா மென்பது பெற்றாம். 'சூளாமணிப்படலம்' என்கம்பரும், 'சூடாமணி நிகண்டு', 'சந்திர சூளாமணி' யெனப்பிறருங் கூறுதல் காண்க. சூடா - தலை மயிர் முடியுமாம். சிகாமணி, சிரோமணி, சிரோரத்ந மென்பனவுங் காண்க. சிந்தாமணி, கௌத்துவ மணி, சியமந்தகமணி யென்பனபோலச் சூளாமணியு மொருவகைத் தேவமணி யென்பர் **பிங்கலந்தை யுடையா**ரும். வசன சூளாமணி: வசனமாகிய சூளாமணி யென விரிதலிற் பண்புத்தொகையாம்.

இந்நூலினைச் செய்யுணடையிற் செய்தவர் **தோலாமொழித்தேவர்** என்னும் பெயரிய வொரு சைன முனிவர். இவர் கார்வெட்டி நகரத்தரசரு ளொருவனாகிய விசயன் என்போனது காலத்திருந்தவ ரென்பதும் இவர் சைன ரென்பதும் பின்வரும் பாடலானுணரப்படும்.— "திக்கெட்டும் புகழ் படைத்த திறல்விசயன் புயலனைய கையன் றெவ்வைக், கைக்கொட்டி நகைக்குமிகற் கார்வெட்டி யரையனவன் நாடற் கேற்பப், போகங்கெட்டும் பத்து மிலான புகழ்த்தரும தீர்த்தன்மலரப் பதம்பூசிப்போன், சொற்கெட்டா வரன் றோலா மொழிசூளா மணியுணர்வோர் துறைகண் டோரே." இனி யிந்நூல் சீவகசிந்தாமணி போல விருத்தயாப்பி னியன்றதும் சொற்பொருட் செறிவுடையதுமாகிய வொரு செந்தமிழ்ப் பெருங்காப்பியமாம். சிந்தாமணி நூலகத்துச் சிறப்புடையரசனைச் 'சிந்தாமணி' யென்றல் போல இதனகத்தும் சிறப்புடையரசன் 'சூளாமணி' யெனப்படுகின்றனன். **யாப்பருங்கல விருத்தியுரையினும், யாப்பருங்கலக்காரிகையுரையினும், சிலப்பதிகார வடியார்க்குநல்லாருரை**யினும் இந்நூற்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள. இந்நூலின் விருத்தத்தொகை-௨௲௱௩௰௧. **மாபுராண** மெனனும் சைன முதனூலிற் சுருங்கிக் கிடந்ததை விரித்தல் நூலயாப்பினுற் செய்தன ரென்ப. இது கடவுள் வாழ்த்து, பாயிரம், நாட்டுச்சருக்கம், நகரச்சருக்கம் என்னு மிவை தவிரப் பத்துச்சருக்கங்களுள்ளது.

சுரமை நாட்டிற் போதன நகரின்கட் பயாபதி யென்னு மோரரசன் மிகாபதி சசி யென்ற இருமனைவியரிடத்தும் முறையே விசயன், திவிட்டன் என்ற மக்களிருவரைப் பெற்றன னென்பதும், இவர்தமுள் இளையோனாகிய

திவிட்டனுக்கு வித்தியாதரராச னொருவனது மகள் சயம்பவை யென்பாள் மணஞ்செய்விக்கப் பெற்றா னென்பதும், அதன் பின்னர் முன்னமே தன்னொடு முரணிய வித்தியாதரச சக்கிரவர்த்தியொடு திவிட்டன் பொருது அவனை வென்று வித்தியாதர வுலகினைக் கைப்பற்றி அதனைத் தனது மாமனார்க்கு அளித்தா னென்பதும், பயாபதி தன்மகன்களிடத்து இராசபாரத்தை நிறுவினா னென்பதும், திவிட்டன் கோடிக்குன்றம் பறித்தேந்தினா னென்பதும், திவிட்டன் சயம்பவையினிடத்து அமிர்தசேன னென்னு மகனையும் சோதிமாலை யென்னும் மகளையும் பெற்றா னென்பதும், இவர்கட்கு முறையே சடியரசன் மகளும் அருக்ககீர்த்தியின் மகளையும் மகனையும் மணஞ்செய்வித்தா னென்பதும், பயாபதி துறவுபூண்டு முத்தி யெய்தினா னென்பதுமாகிய சரிதம் இந்நூலின் கண்ணே மிகவுஞ் செவ்வனே விரித்துப் புனைந்து கூறப்பட்டுள்ளது. இதன்கண் ஆங்காங்குச் சில பண்டைக்கால வழக்கங்களும், சைனமதத்தின் ஒழுக்கங்களும், அரசாட்சி செய்யும் முறையும் காணப்படும். உதாரண முகத்தால் உலகியனெறியு மொருவாறு சுட்டப்பட்டுள்ளது.

இக்காப்பியத் தலைவனான திவிட்ட னென்போன் ஆருகத மகாபுராணத்திற்கூறிய நவவாசுதேவர்களுள் முதல்வனான திப்பிரஷ்ட வாசுதேவனெனவும், திவிட்டனுக்குப் பகைவனான அச்சுவகண்டன் நவபிரதி வாசுதேவர்களுள் முதல்வனான அயக்கிரீவப் பிரதிவாசுதேவ னெனவும் கூறப்படுகின்றனர். இந்நூலிற் சீயவதையும் வித்தியாதரவிவாகமும் சேடியர் சங்காரமும் முதலாயின வெல்லாங் கண்ணபிரானது சரித்திரத்திற் சேர்ந்தனவல்லவாயினும் திவிட்டராசன் நிறமுங் குணாதிசயங்களுந் திருமாலின் அவதாரமாகிய கண்ணனதும், திவிட்டற்குத் தமயனாகிய விசயனது நிறமுங் குணாதிசயங்களும் கண்ணன் மூத்தோனாயபலராமனதுமாகிய இலக்கணங்களோடு பெரும்பாலு மொத்திருக்கும். பலராமகிருஷ்ணரிற் கிருஷ்ணனுக்குச் சிறப்புமிகுமாறு போல ஈண்டுந் திவிட்டற்குச் சிறப்பு மிக்கவாறு கண்டுகொள்க. சிந்தாமணியிற் சீவகன் பலரும் எடுத்தற்கரியதோர் கல்லினைக் கையகத்தேந்தியாடினமையும் காந்தருவதத்தை யென்ற வித்தியாதரமகளை மணந்துகொண்டமையும் இந்நூலில் திவிட்டன் கோடிக்குன்ற மெடுத்தமையினையும் சயம்பவையினை மணந்துகொண்டமையினையு மொக்குமாறுணர்க.

புறவுரை—பக்கம்-1.

புறவுரை யென்பது நூலகத்துக் கூறப்படாத சிலபொருள்களை நூலுக்குவெளியே தனியேசொல்லுவதாம். "முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம், **புறவுரை** தந்துரை புனைந்துரை பாயிரம்" என்றார் **நன்னூலார்** ; ஆதலின் இவை யனைத்தும் ஒருபொருட் சொற்களென்றுணர்க.

இலக்கியம்—'லக்ஷியம்' என்னும் ஆரியச்சொற் றிரிவு. இலக்கணத்திற்கு இடமாவதென்பது பொருள். காப்பியம்-காவியம். மாணவர்-மாணாக்கர். கத்தியம்-வசனம். பகிரங்கஞ் செய்தல் - வெளிப்படுத்தினால். சாவகாசம் - Leisure

பக்கம்-2.

சென்னைச் சர்வகலாசங்கத்திற் பிரவேசபரீக்ஷை - The Matriculation Examination of the Madras University. நியமிப்பான-ஏற்படுத்தும் பொ

ருட்டு. திராவிட பாடசபையார்-The Dravidian Board of Studies. தற்கால வித்யாக்கிரமம் - இக்காலத்துக் கல்வியின் முறைமை. பூகோளசாஸ்திரம்- நிலவுலக வுருண்டையைப் பற்றிக்கூறும் நூல், Geography ககோளசாஸ்திரம் - வானத்தினகணுள்ள சூரியன் சந்திரன் முதலிய மண்டலங்களைப் பற்றிக்கூறும் நூல் Astronomy, கம் - வானம், கோளம் - உருண்டை. சத்த சப்த, வீபூ தீவகம் - தீவு, த்வீபம் 'சத்த' என்னும் அடைமொழியைத் தனித்தனி சமுத்திரத்தொடுந் தீவகத்தொடும் அசலத்தொடுங் கூட்டியுரைக்க. அசலம் - மலை, சலிப்பில்லாதது என்பது உறுப்புப்பொருள். விரவி - கலந்து மாசாந்தரம் மாசந்தோறும் சம்புடம் - Volume. மெச்சி - 'மெய்ச்சி' யெனவும் வழங்கும், கொண்டாடி பஞ்சதந்திரக் கதை - தாண்டவராய முதலியார் செய்தது திரிசொற்பிரயோகம் - திரிசொற்களை அங்காங்கு உபயோகித்தல், திரிசொல் இயற்சொல்லின் வேறுபட்டசொல், திரிதல் வேறுபடுதல், வேறுபடுதலென்றது இயற்சொற்போல இயல்பாலுணரப்படாது அரிதின் உணரப்படுதலை [நன் பெய 15.] அர்த்தம் - பொருள், meaning அருத்தி - அருமைப்படுத்தி, 'அருகி' என்பதன் பிறவினை ஒருபொருட் பன்மொழி ஒருபொருளைக்குறித்த பலசொற்கள் இவை சிறப்புப்பற்றி யுபயோகிக்கப்படுவன "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின்வழா" என்றார் நன்னூலாரும். வரைந்தால் - எழுதினால். பெருக்கி, அருக்கி, நெருக்கியென எதுகைத்தொடைக்குரிய சொற்கள் அடுக்கடுக்க வைத்தமை **விருத்தியநுப்பிராசம்** என்னுஞ் **சொல்லணி**யாகும், அஃதாவது எழுத்து ஒன்றேனும் பலவேறு மிடையிட்டுப் பலகால் வருவது. பிரதமவித்தியா பரீக்ஷை - First in Arts Examination. அருகம் - தகுதி, யோக்கியம். முதனூல் ஈங்குச்செய்யுட்சூளாமணி பல்லாற்றல் - பலவிதத்திறமை. திரித்து - திரிசொற்களுடைத்தாக்கி. பரியாயங்கள் - பொருளொருமையுள்ள வேறு சொற்கள் பிற - Synonyms தெரித்து-தெரிவித்து கமழ - மணக்க வரித்து - விரும்பி மேற்கொண்டு விரித்து, திரித்து, தெரித்து, வரித்து என்றமையும் அவ்வணியின்பாற்படும் இரண்டுபட்டு - வேறுபட்டு சான்று - சாட்சி ஆன்றோர் - அறிவு நிறைந்த பெரியோர் மன்னித்தல் - பொறுத்தருளல், இது உலகவழக்குச் சொல்லேயன்றிச் சான்றோர் செய்யுள்களிற் பயின்று வாராமை காண்க

சூளாமணி.—பாயிரம்-1

தற்சிறப்பு - தன்னைப்பற்றிய சிறப்பு அல்லது தன்னுடைய சிறப்பு; ஈண்டுச்சிறப்புப்பாயிரமாம் இது தானேயுஞ் செய்யலாம் இதன்கண் பெரும்பாலுங் கடவுள் வாழ்த்துஞ் செய்பொருளுங் கூறப்படுதல் வழக்காம் என்னை? "செய்வவணக்கமுஞ் செயப்படுபொருளும், மெய்த வுரைப்பது தற்சிறப்பாகும்" என்பதிலக்கணமாமாகலின். இச்செய்யுளின் கண்ணும் அவை காண்க இச்செய்யுள் வசனநூலாசிரியர் செய்து கொண்டதாம்

1 **உரை**:—சோல ஆனனத்தான் தொழ - யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளை யாம் வணங்குதலான், கள் அவிழும் வெள்ளமரை சாரிகை- தேன்றுளிக்கும் வெண்டாமரை மலரில் வாழுகின்ற அழகுடையவளாகிய சரசுவதி, மேவும் - விரும்பியுதவுவாள், கனிந்த தெள்ளுந்தமிழ் கொள்ளை யபசோர்த் இலங்கும் - மிகவுமினிய தெளிவான தமிழ்மொழியின் மிக

மேம்பட்ட செல்வங்கள் [சொற்செல்வம் பொருட்செல்வம்] கூடிவிளங்கும்; (ஆதலின்), தோலாமொழித்தேவர் சூளாமணிச்சரிதம் - தோலாமொழித்தேவர் பாடிய சூளாமணியென்ற காப்பியத்தின்கட் கூறப்பட்ட சரித்திரம், மெள்ளவரும் - மெதுவாக [ஒருவிதவிடையூறுமின்றி] (எழுத) வரும்.

குறிப்பு.—கள்ளவிழும் வெள்ளைமரை, தெள்ளுதமிழ்க் கொள்ளைவளம் இவை **சேகாநுப்பிராசம்** என்னுஞ் சொல்லணியின்பாற்படும். சேகாநுப்பிராசமாவது இரண்டிரண்டு மெய்கள் உயிரேறப்பெற்று இடைவிடாதுமறுத்துவருவது. மரை - 'தாமரை' யென்பதன் முதற்குறை. விநாயகக்கடவுளை வணங்கவே நாமகள் தானேவந்துதவுவாள், சொற்பொருட் செல்வங்களுந் தானே வந்தெய்துமென அக்கடவுளின் அருள் வல்லபத்தைச் சிறப்பித்துச் சொல்லியபடியாமென்பதுணர்க; இது நுதலிப்புகுதலென்னு முத்தி, ஆகவே, இது தற்புகழ்ச்சியாகாது. இவ்வாறே "நான்முகற்றொழுது நன்கியம்புவனெழுத்தே" யென்றார் **நன்னூ**லாரும். சரஸ்வதி, பெருமானது அருள்வழி நிற்பாளென்பதனை "ஞானவாணிவந் திறுத்தன ளன்பர்தநாவில்" என்ற **திருவிளையாடற்புராணச்** செய்யுளானு மறிக. மெள்ள-'மெல்ல' வென்பதனைப்போலி, 'அலமரு' என்பதை 'அளமரு' என்றாற் போலக்கொள்க. "அளமருபிறப்புக வமலற்குய்த்திடும், வளமலர்" என்றார் **தணிகைப்புராண**முடையாரும். 'மெள்ளவரும்' என்பதனானே அவையடக்கமு மொருவாறு கூறப்பட்டமை காண்க. இனி 'மேவும்', 'இலங்கும்' என்பனவற்றைப் பெயரெச்சமாக்கிப் பொருளுரைத்தலுமாம். பின்னீரடியினும் **அடிமுதன் மடக்கணி** யுண்மையுணர்க. இது நேரிசைவெண்பா.

காவியக்காப்பு :—சூளாமணிக் காப்பியத்தின்கணுள்ள காப்புச்செய்யுள். காப்பு - காத்தல், இது காக்கின்றகடவுள் விடயமான வணக்கத்திற்குத் தொழிலாகுபெயர். இச்செய்யுள் தோலாமொழித்தேவர் செய்தது.

2. **உரை** :—வினையின்றொகை வென்றான் ஆகி - கருமங்களின் றொகுதியைச் சயித்தவனாய், ஒன்று ஆய தன்கண் விரிந்து பரந்த - ஒப்பின்றித் தனிமைத்தாகித் தன்னிடத்தினின்றும் வியாபித்துப்பரவிய, உணர்வின் ஒழியாது முற்றும் சென்றான் - தனது பேரறிவின்ற குறைவற யாவற்றையுமறிந்து கொண்டவனும், திகழும் சுடர்சூழ் ஒளி மூர்த்தி ஆகி - விளங்குகின்ற பிரபாமண்டலத்தாற் சூழப்பெற்ற ஒளிமயமான வடிவுடையவனுமாகி, நின்றான் அடிக்கீழ் பணிந்தார் - அழியாதுநின்ற அருகக்கடவுளினது திருவடிகளிலே வணங்கினவர், வினைநீங்கினின்றார் - (இரு) வினையு மொழிந்து (முத்தியுலகினழியாது) நிலைபெற்றவராவர்.

குறிப்பு :—இஃது அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணமென்னும் நால்வகைச் சைனவணக்கங்களுள் **அருகசரண**மாம். வினையின் றொகையை வென்றானுகிச் சென்றானு நின்றானுமாகியவனது அடியெனக் கூட்டிக்கொள்க. 'வினையின் றொகையாய' வென்பதூஉம் பாடம்; அதற்கு வினையின் றொகையாயவற்றை வென்றானுஞ் சென்றானு நின்றானு மெனக்கொள்க. வென்றானாய பின்னரே மற்றவியல்புகள் நிகழ்தலின் 'ஆகி' யென்னும் பாடமே சிறப்புடைத்து. 'தொகையாய' என்று பாடங் கோடல் சந்தத்திற் கொவ்வாதெனறொழிக. விரிந்துபரந்த - ஒருபொருட் பன்மொழி.

தன்கண் - வேற்றுமையுருபு மயக்கம். ஒன்று-அத்விதீயம், ஏகம். 'அடைத்த பொருளவாகு சொற்கள் அடுத்த பொருளினவுமாம்' என்ற வடமொழி நியாயத்தின்ற 'சென்றான்' என்றதற்கு அடைந்தவன் என்றுரைத்தாம். இனி யானமகோடிகளின் அறிவிற்சென்று கலந்தவன் என்னலுமாம். உணர்வின் : இதன்கணுள்ள ஏதுப்பொருளினதாகிய 'இன்' னுருபை யொப்புப் பொருளினதாக்கித் தன்னிடத்து ஒன்றேயாய் விரிந்து பரவிய அறிவினைப் போலத்தான் உலக மெங்கு மிடைவிடாது பரவிச் சென்றவன் என்பது மொன்று. பிரபாமண்டலமாவது சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகல பாசநம் என்னும் மூன்று பிரகாரங்களையுடைய வொளிவட்டமாம். அருகக் கடவுளின் வடிவம் இவ்வாறு ஒளி வட்டத்தாற் சூழப்பட்டிருக்கு மென் பதனை யிந்நூல் துறவுச் சருக்கத்தினுங் காண்க. 'அடிக்கீழ்' என்பதற்கு 'அடிகளை' யென வேற்றுமையுருபு மயக்கமாகப் பொருளுரைத்தலுமாம். நின்றார்; தெளிவும் விரைவும் பற்றிய கால வழுவமைதியாம். 'உணர் வின னொழியாது' என்புழி னகர வொற்று விரித்தல் விகாரம். 'நீங்க நின்றார்' என்ப பாடமோதுவாரு முளர். அது சிறவாமை யுய்த்துணர்க. இது கலி நிலைத்துறை.

முதலாவது : குமாரகாலச் சருக்கம்.

குமாரரது காலத்தைப்பற்றிய சருக்கம் என்பது பொருள், அன்றிக் குமாரராயிருந்த காலத்தைப்பற்றிய சருக்க மென்பதூஉமாம். பின்னதே சிறப்புடைத்து; 'கௌமார காலச்சருக்கம்' என்றிருத்தல் மிகவும் நேரிது. இதன்கட் காப்பியத்தலைவனாகிய திவிட்டனது இளமைப் பருவத்துச் செய்தியும் அவன் றமையன் விசயனது இளமைப்பருவத்துச் செய்தியும் பிறந்து வளர்ந்தமை முதலாயினவுங் கூறப்படுகின்றன.

பரதகண்டம்: (இந்தியாதேசம்) நவகண்டங்களு ளொன்று. நாபிமகா ராசனது பேரனும் ருஷப மகாராஜனது மகனுமாய பரத மகாராசன் பூர்வம் ஆண்ட இடமாதலைப்பற்றி யிப்பெயர்த்தாயிற்றென்ப. இனி யிப்பரதன் சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் பிறந்தவ னென்றுங்கூறுப. கண்டம்-பாகம்.

முடி - கிரீடம். Crown மலிந்து - நிறைந்து. படிகின்ற - தங்குகின்ற. கோடிக்குன்றம்-ஒருமலை. இதன் வரலாற்றை அரசியற் சருக்கத்திற் காண்க. [வசன சூளாமணி 105, 106-ஆம் பக்கம் பார்க்க.] அகழ்ந்து - பறித்தெடுத்து. என்ப - என்று (பெரியோர்) சொல்வார்.

பக்கம்-2

சிரோரத்தினம்: சிகாமணி: தலைமேலணியும் இரத்தினாபரணம். போதனம் - Bhutan. மாடம்: உபரிகை. கூடம்: சிகரம். விநோதம்: புதுமை. செல்வ மிகுதியும் இன்ப மிகுதியும் பற்றி வித்தியாதரவுலகு உவமிக்கப்படும். நிகழ்வதை-நடப்பதை. நிதியெனப் படுவவெல்லாம்-நிதியென்று சொல்லப்படுவனயாவும். நிதி - பொருட்குவை; சங்கநிதி பதும நிதிமுதலாயின. இளைப்பாறி : இதுகாறும் அவையெல்லாம் ஒருவரினின்று மொருவராக மாறி

மாறி வந்து கொண்டிருந்ததனா லுண்டாகிய இளைப்பு கண்படை கொள்ளும்: கண்முடிக் கொண்டு தூங்கும், அஃதாவது உணர்வுகள் அவ்விடம் விட்டுப்பெயர்ந்து செல்லாமலென்பது. ஆயிரம் நாவுடையோர்: ஆதிசேஷர் பலர். விரித்துரைத்தற்கு விஸ்தரித்துச் சொல்லுந் தன்மையை யுடையது அரதனராசிகள்: இரத்தினம் முதலியன. அரதனம்=ரத்நம். அரசனராசி=தீரக்கசந்தி. வேற்றுமை - வித்தியாசம், பேதம் இந்தரபுரி: இந்திரன் நகர், அமராவதி அந்தரபுரி: ஆகாயத்துச் சஞ்சரிக்கும் நகரம். ஆண்டு: அங்கு, வதிந்தாற்போல-தங்கினாற்போல. மன்னுயிர்: இவ்வுலகின்கண் நிலைபெற்ற பிராணிகள் ஓம்பும். பாதுகாக்கும். பயாபதி அபிதானம்=பிரஜாபதி யென்னும் பெயரையுடைய பயாபதி=பிரஜாபதி யென்னும் வடசொற்றிரிவு சனங்களுக்கெல்லாந் தலைவனென்பது பொருள் மன்பதைகள் சனங்கள், மக்கள் தொகுதி (Mankind) மன்பதைகளாகிய வுடலுக்கு என ஏகதேசவுருவகத்தைப் பூர்த்திசெய்து கொள்க. மதனவேள் - மன்மதன். பூங்கணை: மலரம்பு. வயவேந்தர் வலிய்வரசர், வெற்றி மன்னருமாம். நலிபவர் வருந்துவோர். தத்தம. தங்கள் தங்களுக்குரிய தருமநெறி தருமமார்க்கம் ஆறிலொன்று கடமைகொடுத்தல் பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான், என்றுசொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமா மென்பது "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொனென்றாங், கைம்புலத்தா றோம்பறலை" என்னுந் தேவர்திருமொழியா லுய்த்துணரக் கிடத்தலின் மேற்கூறிய வைந்திடத்தும் செய்தற்கு கடமைகளைச் செய்தற்கு ஐந்துபங்கு வேண்டியது ஒருதலை யாதலின் குடிகளது வருவாயுள் ஆறிலொரு பாகமே (One-Sixth) அரையற்குரிய இறைப்பொருளாமா றுணர்க. தாமாகவே: ஏகாரம் பிரிநிலைப்பொருளது. கடமை கப்பம் (Duty). திறை வரி (Tax). 'கிடையாது' என்னும் பதத்தின் பின்னர் ஒரு முற்றுப் புள்ளியினைப் பெய்துகொள்க. காரணச்சிறப்புப்பெயர். ஒரு பொருளைக் குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானும் இட்ட குறியாகிய பெயர் இடுகுறிப் பெயர். காரணத்தான் வரும் பெயர் காரணப்பெயர். அங்ஙனமாய காரணப்பெயர், காரணப்பொதுப்பெயரென்றும், காரணச் சிறப்புப்பெயரென்றும் இருவகைத்தாம். உ-ம். அணி - காரணப் பொதுப்பெயர், முடி-காரணச் சிறப்புப்பெயர். ஈண்டு அப்பெயர் அம்மன்னனையே குறித்து நிற்றலின் காரணச்சிறப்புப் பெயராமாறுணர்க. அஃது. அப்பெயர். அவ்வாறொழுகும் நாளில்: அவ்விதமாக நடக்கும் நாளில்.

பக்கம்-3.

இணையாகிய. சமானமாகிய. மிகாபதி: ம்ருகாபதி என்னும் ஆரியச்சொற்சிதை வென்ப. சசி: "ஈயீ றிகரமும" என்றதனானே 'சசீ' யென்பது இங்ஙனம் வந்தது. வரைந்து: மணமுடித்து சுகுண சௌந்தரிய மாதர் நற்குணமும் நல்லழகும் வாய்ந்தமகளிர். மாதர்: அழகுடையவர்கள். காமக்கிழத்தியர்: கிழமை - உரிமை, காமவின்பந்தரும் உரிமைமகளிர். வசந்தகாலம்போன்றது இம்மன்னனது அரசாட்சிக் காலமென்று விரித்துரைத்துக்கொள்க. அணிபெற: அழகுதயங்க. இலகுவது விளங்குவது. பூங்குழைமகளிர்: அழகிய குண்டலமணிந்த மங்கையர். மகளிர். இர் ஈற்றுப்பலர்பாற்படர்க்கைச்சொற்களு ளொன்று cf பெண்டிர், புத்தேளிர். பொன்பலர் மணி

க்கொம்பு: பொன்னாலாய மலர்கள் நிறைந்த மாணிக்கத்தா லியன்ற பூங்கொம்பு, பொன்மலர், அவயவங்களுக்கும் ஆபரணங்களுக்கும், மணிக்கொம்பு, மாணிக்கவெயில் விரிக்கும் உடம்பிற்கும் உவமை. மானவும்: போலவும்; "போலப்புரைய" என்னுஞ் சூத்திரத்தானுணர்க. அன்னோர்: பூங்குழைமகளிர். திலதம் - திலகம், நெற்றிப்பொட்டு திகழ்ந்தனர்: விளங்கினர். திருமகள்: இலக்குமி. நவீனம் புதிது. (பிராசீனம்-பழையது) பொலியும்: திகழும். மழலைச்சொல். நிரம்பா மென்மொழியாங் குதலைச்சொல். ஆவி உயிர். மனத்திலுட் பிணிக்கப்பட்ட அரசன் மனமாகிய சிறையின்கண் ஆசையாகியபாசத்தாற் கட்டுண்டு கிடக்கும் மன்னன். கற்பகம்: இரப்போர்க்குவள்ளலெனக்கொடுக்கும் தெய்வத்தன்மை வாய்ந்த ஐந்தருவினுளொன்று இம்மரங்கள் பாற்கடற்கடைந்த அமுதுடன் பிறந்தவை "சந்தானந்தேவதாருங் கற்பகம்-மந்தாரம் பாரிசாத மைந்தருவருக்கம்." "இம்மரமைந்துந் தெய்வமரமென்ப" காமவல்லி = "கற்பகஞ்சேர் கொடிகாமவல்லி"யாம். கற்பகம் மன்னற்கும், கொழுந்து காமவல்லிகள் மன்னனிரு மனைவியர்க்கு முவமை. பயாபதி மன்னன் கற்பகம் போற் றன்னிலையிற் பிறழாது நின்று வள்ளன்மையுடையனாந் தன்மையையும், அவன் மனைவியர், கொழுந்தும் வல்லியுந் தாமணைந்த தருவையே சார்பாகப்பெற்று வளருமாபோல, அவனையே பற்றுக்கோடாக விழைந்து இன்னலின்றிச் சிறப்புற்றமையையுந் தெரிக்கும் உள்ளுறையுவமம் நயத்தைத் தெளிதினுணர்க. வாழ்க்கை: கை, தொழிற்பெயர் விகுதி. பேறு: பயன். தவப்பேறு: தவத்தின்பயன். கற்பலோகம்: சுவர்க்கலோகம். பலபத்திரன்: பலராமன்; வலிமையிற் சிறந்தோன் எனப்பொருள்படும்; இவன் வெண்ணிறமுடையனாதலை "வெண்பளிக்கு மேனியன்" என்பதனானுணர்க.

பக்கம்-4.

காயா: ஒருவகைமரம். கிருஷ்ணன் கருநிறமுடையோன். கிருஷ்ணம் என்றாற் கறுப்பு, இஃதிங்ஙனம் பொருள்படுதலைக் கருநாகத்தைக் கிருஷ்ணசர்ப்பமென்றும் கருந்துளசியைக் கிருஷ்ண துளசியென்றும் கூறுதலானுமுணர்க. கிருஷ்ணன் என்னும் மொழியின் சிதைவே கண்ணன் என்பதை யுணர்க. முகூர்த்தம் வேளை. நாமகரணம்: பெயரிடுஞ்சடங்கு. காளைப்பருவம் இளமைப்பருவம். "பாலைத்தலைவனுஞ் சிறுவனுங்காளை" என்பதனாலறிக. தாமொட்டுப்பிணிப் புணர்த்தக்க: தம்மிடத்துக் கட்டுப்படத்தக்க. வயங்கினர் விளங்கினார்கள். துயில் ஒரீஇ: தூக்கம் நீங்கி; சொல்லிசை யளபெடையாம், இதன் சாதாரண ரூபம் ஒருவி. வழிபாடு வணங்குதல், வழிபடு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். அரசவரிசை அரசர்க்குரிய வரிசை, குடை, கொடி, சாமரம், ஆலவட்டம், பரிவாரம் முதலியன. 'போய' என்னும் வினையெச்சம் பாட்டினிறுதியிலுள்ள புக்கார் என்பதைக் கொண்டுமுடியும்.

செய்யுள்

உரை:—பளிங்கு படிக்கற்களை, ஒளி கதுவ பிரகாசம் மிகும்படி, போழ்ந்த பிளந்தனவாகிய, பலகை பலகைகளை, கண்குலவ இடம் விளங்கும்படி, சேர்த்தி பொருத்தி, விளங்கு ஒளி விளிம்பின் செம்பொன்: விளங்குகின்ற ஒளியையுடைய விளிம்பிலே செம்பொன் பொருந்திய,

வேதிகை : மேடையினையும், வெள்ளிவேயுள் : வெள்ளித்தகடுகளாலமைந்த விதானத்தையும், துளங்கு ஒளி : அசைவதுபோல் விட்டுவிட்டு மிக்க காந்தியைப்பரப்பும், பவழத்திணைகால் : வலிய பவளக்கால்களையும், சுடர்மணித்தவழும் பூமி : கிரணங்களைப் பரப்புமணிகள் அழுத்திய அடியிடத்தையுமுடைய, வளம் கவின்று அனையது ஆய செல்வப்பொருள் அழகியவடிவுடன் திகழ்ந்தாற்போன்ற, மண்டபம் மலியப்புக்கான் : கொலுமண்டபம் விளங்கும்படி உட்புகுந்தான்.

குறிப்பு :—படிகம் முதலிய கற்களையறுத்துச் சாணைபிடித்த பின்னரே அவற்றின் ஒளி இனிது விளங்குமாதலின் 'பளிங்கொளி கதுவப்போழ்ந்த பலகை'யென்றார். பளிங்கு, ஸ்படிகம் என்னும் வடசொற்சிதைவு. வேயுள் : மேற்கட்டி; விதானம், தொழிலாகுபெயர். ஈண்டு, உள்-தொழிற்பெயர் விகுதி. பவழம், பரவாளம் என்னும் வடசொற்சிதைவு. கவின்று : இறந்தகால வினையெச்சம்; கவின், பகுதி - எல்லாவளங்களுஞ் செறிந்த கொலுமண்டபமேயாயினும் மன்னனின்றேற் கவினின்றாமென்பார் 'மண்டபமலியப் புக்கான்' என்றார். 'மண்டபம்விரயப்புக்கான்' என்று வேறுபாடங்காட்டுவாருமுளர். புக்கான் பகுதி இரட்டித்திறந்த காலங்காட்டியது; ககரத்தை இறந்தகால இடைநிலையென்று சொல்வார் **இலக்கணவிளக்க** நூலார். புரோகிதன் : யாவற்றிற்கும் முன்வைக்கப்படுபவன்; எனவே சுபாசுபங்களிரண்டனையும் முன்னிருந்து நடத்துபவன், இதங்களை (நன்மைகளை) முன்னறிந்து சொல்பவனென்பாருமுளர். அருகாசனத்தினராயினார் : சமீபித்த இருக்கையராயினார்.

பக்கம் - 5.

விடுக்குதி : அனுப்புவாய். திரிகாலஞானம் : இறப்பெதிர்வு நிகழ்வென்னும் முக்காலங்களையுமுணருமுணர்ச்சி. நிமித்திகன் : குறிசொல்வோன்; நிமித்தம் குறி. கடை வாயிற்கடை. கங்குல் : இரவு. விசும்பு: ஆகாயம். இழிதல் : இறங்குதல். விஞ்சை : வித்தை; விஞ்சையராஜன் : வித்தியாதரமன்னன். திருமுகம் ஓலை; சடிதம். புட்பமாகானனம் : பயாபதிமன்னனது நந்தவனம், மலர்களின் மிகுந்த கூட்டத்தையுடையதென்று பொருள்.

பக்கம் - 6.

வியப்பு : ஆச்சரியம். தகைமை தன்மை. நாழிகைப்பறை : நாழிகை கழிந்ததைத் தெரிவிக்கும் வாத்தியம். மந்திரசாலை : ஆலோசனை செய்யுமிடம். அமாத்தியர் அமைச்சர், மந்திரிகள்; அருகிலிருப்பவர் என்று பொருள்படும் வடசொல், அமா : அண்மை. சம்பவம் : நிகழத்தக்கது.
ஏகசக்கிரேசுவரன் : தனியே ஆஜ்ஞாசக்கிரஞ்செலுத்தி அரசாள்பவன். ரேகை : கோடு. சங்கபாணியன் : பாஞ்சசன்னியமெனனுஞ் சங்கத்தைக் கையிலுடைய திருமால். சங்கை: சந்தேகம். நிகர் : ஒப்பு. பொழில்: சோலை. துருமகாந்தன் : மரங்களுக்கு விருப்பமானவன் என்றுபொருள்; மரங்களைச்செழித்து வளரும்படி போற்றுபவன் என்பது கருத்து.

பக்கம் - 7.

நல்கி : கொடுத்து. கோயில் : அரண்மனை; இலக்கணப்போலி. உத்தியானம் : நந்தவனம்.

பாகம் - 8.

இரதநூபுரச்சருக்கம் :—இரதநூபுரமென்னும் விஞ்சையர்புரியில் நிகழ்ந்தசெய்தியினைத் தெரிவிக்கும் பாகம்.

செய்யுள்.

உரை.—மஞ்சுதோய்வரை : மேகங்கள்வந்து படிகின்ற (உயர்ந்த) அம்மலையில், மைந்தரோடுஆடிய காளையருடன் விளையாடிய, அஞ்சில்லோதியர் : அழகிய பொன்வட்டத்தகட்டணிபொருந்திய கூந்தலையுடையமங்கையரது, ஆர் அகம் நிறைந்த முன்னெற்றிமயிரின்மேல் (பொருந்திய), பொடி : வாசனைப்பொடி, பஞ்சராகம் ஐவகை நிறமுடைத்த இரத்தினங்களை, பதித்த : (பலவேறுவிதமாய்) பதித்த, பளிங்கு அறை : படிகத்தாலாகிய அறையிலே, துஞ்சு : பொருந்திக்கிடக்கும், பாறைகள் மேல் : கற்பாறைகளின்மேல், துதைவுற்று : சிந்திமிக அடர்ந்து கிடந்தது.

குறிப்பு.—மஞ்சுதோய்வரை **தொடர்புயர்வு நவிற்சியணி**; இதனை வடநூலார் 'சம்பந்தாதிசயோக்தி யலங்காரம்' என்பர். அஞ்சிலோதி அழகிய சில்வானமயிரினையுடையாள் என்பர் **நச்சினார்க்கினியர்**. இனி அழகிய குளிர்ந்த கூந்தலையுடையாள் என்றுரைத்தலு மொன்று. ராகம் நிறம். ஐந்து நிறத்தையுடைய அரதனத்திற்கு ஆகுபெயர். பளிங்கு + அறை : பளிக்கறை; "மென்றொடர்மொழியுள்" என்னுஞ் சூத்திரத்தானமைக. 'விளிப்பறை போகாது மெய்ப்புறத்திட்டும், பளிக்கறை மண்டபம்' என்னும் **மணிமேகலை** யடிகளாற் பளிக்கறையியல்பை யீண்டறிக.

நாககன்னியர் தேவமகளிர். நாகம் விண்ணுலகம். "நாகம்விண் குரங்கு புன்னை நற்றூசுமலைபாம்பியானை." இனிப்பாதலத்துறையும் நாகச்சாதி மகளிரென்று கூறலுமொன்று. நறுநாற்றம் நல்லவாசனை. கோடு சிகரம். பொற்பிற்று அழகுடையது. விலங்கல் மலை, காரணப்பெயர், ஒரு பக்கல்விலங்கி நிற்பதென்று பொருள்படும். பெயரியது பெயருடையது. ஈடு : உவமை.

பாகம் - 9.

பெண்அணங்கு தெய்வத்தன்மை வாய்ந்தபெண். ஏற்றம் உயர்வு. பேதைப்பருவம் ஐந்துமுதல் ஏழாண்டுவரையில், எட்டுமுதல் பதினொன்றளவும் பெதும்பைப்பருவம். சொயம்பிரபை இயல்பில் ஒளியுடையாள். செவிலித்தாய் வளர்க்குந்தாய். தாதி 'தாசி' என்னும் வடசொற்றிரிபு; வேலைசெய்பவள் என்று பொருள்படும். இவர்ந்து : ஏறி. மனோவனம் : கண்டோர்மனத்தைக் கவர்வதென்று பொருள். மடவார் இளமகளிர். மானும் போலும். முருக்கிதழ் பலாசம்பூவினிதழ். உறழும் : ஒக்கும்.

பாகம் - 10.

ஏய்க்கும் போலும். இங்ஙனம் ஒக்கும் என்னும் பொருள்படும் பல சொற்கள் போந்தமையின் **பொருட் பின்வரு நிலையணி**யாம். வர்ணியத்தை அவர்ணியமாகவும், அவர்ணியத்தை வர்ணியமாகவும் உபசரித்தமையிற் புகழ்பொருளுவமையணியாம். வனப்பு : அழகு. கண்ணி : மாலை. சினகரம் கோயில், ஜிநாலயம்; ஜிநக்ருஹம் என்னும் வட

சொற்றிரிபு. பூப்பலி : பூவாகியபலி ; கடவுட் பூசைக்குரியபொருள்: பிரதக்கணம : வலமாகச்சுற்றிவருதல் இசைத்து சொல்லி. நிருமாலியம: உபயோகித்தமிகுதி. கபாடபந்தனம் கதவுசாத்தல. திகம்பரர் : திக்கை யேவஸ்திரமாகவுடையோர் சாரணர் : சமணமுனிவர், தேவதூதரெனவு மாம். ஆகாயமார்க்கத்தில் சஞ்சரிப்பவரென்று பொருள்படும் இவர் எண் வகைப்படுவரென்பர் **அடியார்க்கு நல்லார்**; இவர்கள் இவ்விருவராகச் சென்று இவ்வுலகினர்க்குத் தருமோபதேசஞ்செய்வதியல்பு. சிலாதலம : இந்து காந்தக்கற்பதித்த மேடை. சாரணர் வரவு கருதி ஜினாலயங்களில் அவர் தாமிருந்து கடவுட்பூசை செய்ய அமைத்தது என்பர. "ஐவகை நின்ற வருகத்தானத்துச், சந்தியைந்தும் தம்முடன் கூடி,வந்து தலைமயங்கிய வான் பெருமன்றத்துப், பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழு நிழல், நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினும், சாரணர் வரூஉந் தகுதி யுண்டாமென, உலக நோன்பிக ளொருங்குடனிட்ட, இலகொளிச்சிலாதலம்" என்பது **சிலப்பதிகாரம்** நாடுகாண்காதை. ஆசி வாழ்த்து. இருத்தி - உட்காருவாய.

பக்கம். 11.

வேண்டுகோள் - Request. திறம் - தன்மை. வாயில் - மார்க்கம காட்சி ஞானம. கிளர்ந்தது பிரகாசித்தது. அநந்தரம பின்பு நேராக இப்புறம். சங்கற்பித்தாள் : நிச்சயித்தாள். ஜகதபிநந்தனர் உலகத்தை மகிழ்விப்பவர். ஜகநந்தனர் அபிநந்தனர் என்பவைதா மவர்கள் பெயர்கள். சரிய : ஒழுக. பாஷ்பம கண்ணீர்.

பக்கம். 12.

செய்யுள்.

1. **உரை** :—ஆதி அம்கடவுளை - யாவற்றிற்கும் முதன்மையாகிய அழகிய கடவுளாக வுள்ளாய ; அருமறை பயந்தனை : அருமையாய வேதங்களை யீந்தருளினாய்; போதி அமகிழவனே . ஞானத்துக்கு உரிய இருப்பிடமாவாய்; பூமிசை யொதுங்கினை தாமரைப்பூவின்மேரிற் சென்றருளினாய; போதி அமகிழவனே—, பூமிசை ஒதுங்கிய—, சேதி . செய்கையையுடைய, அம்செலவ : அழகிய செலவனே, நின திரு அடி வணங்கினம : உனது அழகிய பாதங்களை வணங்கினம்.

குறிப்பு :—அம் - சாரியை. போதி மரமெனின் புத்தனுக்குரித்தாதலின் ஈண்டுத தகாமைகாண்க. அருகன தாமரையின்மேல் ஊர்ந்து செலபவன் என்பர் சைனர். சேதி : செய்தி யென்பதன் மரூஉ.

2. **உரை** :—காமனை கடிந்தனை - மதனை வென்றாய் ; காலனை காய்ந்தனை : யமனைசசயித்தாய் ; தேமலாமாரியை : தேன்மிகுத்த பூமழையைச் சொரியப்பெறுவாய் , திருமறு மார்பனை : அழகிய வடுககளை யுடையமார் பையுடையாய் ; தேமலா மாரியை—, திருமறு மார்பனை—, மாமலர் வண்ணம் நின்மலர் அடிவணங்கினம் : சிறந்த தாமரைபோன்ற நினது பதமலர் வணங்கினும். ஞ

குறிப்பு :—இதனானே அருகக் கடவுள் இவ்வுலக வின்பத்தை வெறுத்த வனென்றும் அழிவில்லாதவனென்றும் புலப்படும். இவன மறுப்புனைந்திருத்

தலைச் "செம்பொன்வரைமேற் பசும்பொன் னெழுத் திட்டதேபோ, லம்பொற் பிதிர்வின் மறுவாயிரந் தெட்டணிந்து, வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி" என்ற சிந்தாமணியின்கண் தேவருரையானு முணர்க.

3. உரை :—ஆர் அருள பயந்தனை · மிகுந்த கருணையைச் செய்தலுடையாய், ஆழ்துயர் அவித்தனை · மிகுந்த துன்பத்தை நீக்கினாய்; ஓர் அருள் ஆழியை ஒப்பற்ற கருணைக்குக் கடல்போன்றனை; உலகு உடை ஒருவனை உலகமுழுதும் தனதென்றுடைய ஒப்பற்றவனாயிருக்கின்றனை; ஓர் அருள் ஆழியை,—உலகு உடை ஒருவனை—, சீர் அருள் மொழிய : சிறந்த (நினது) கருணைமொழிகளை (எமக்கு) அனுக்கிரகிக்கும் பொருட்டு, நின் திருவடி தொழுதனம் உனது அழகிய பாதங்களை வணங்கினோம்.

குறிப்பு .—'ஓரருளாழியை' யென்பதற்கு ஒப்பற்ற தரும சக்கிரத்தையுடையவன் என்று பொருள் கூறலுமொன்று. இந்தக் கந்தருவ மார்க்கத்தால் இடைமடக்கின் தேவபாணிகொச்சக வொரு போகின்கண் வந்த மடக்குகள் அன்பின் மிகுதி பற்றியாதலிற் கூறியது கூறலன்று.

பிரதாபம் = உயர்வு, மேன்மை. அருங்கலம் . அரிய ஆபரணம்.

ஏந்தல் . காளை. பேரவா பெரியவிருப்பம். விடலை : ஆண்மகன்.

பக்கம் - 13.

செய்யுள்.

இவ்விரண்டடியும் சூளாமணிச்செய்யுளடிகளே.

உரை ·—அந்தணர் ஒழுக்கமும் மறையோரது ஆசாரமும், அரசர் வாழ்க்கையும் மன்னர் தம செலவவாழ்வும், மந்திரம் இல்லை எல் : மந்திரம் இல்லையாயின், மலரும் மாண்பு இல . நன்கு பரந்து விளங்கும் மாட்சிமையுடையபா.

குறிப்பு —மறையோர் ஆசாரத்திற்கு வேத மந்திரமும் அரச வாழ்க்கைக்கு ஆலோசனையும் இன்றியமையாப் பொருள்களாம். 'மந்திரம்' ரண்டிச் செம்மொழிச்சிலேடை.

சொல்லேருழவர் : மந்திரிகள். இப்பெயர் இப்பொருளின்கண் திருக்குறளிலும் வந்துள்ளது. (திருக்குறள் 872) சொற்கலப்பையா லுழுதற்றொழில் செய்பவர். உழவு ரண்டு அரசாட்சி.

பக்கம் - 14.

மூன்றுவது மந்திரசாலைச்சருக்கம்.

மந்திரசாலைச்சருக்கம் · ஆலோசனை சபையில் நடந்த செய்தியைப்பற்றிக்கூறும் பாகம். அவர்கள் : ஏவலாளர். அங்ஙனே : அங்ஙனமே என்பதன் விகாரம், அப்படியே. தேர்ச்சித்துணைவர் மந்திரிமார், தேர்ச்சி. ஆலோசனை. உழையர் : மந்திரிமார், உழை - பக்கம்; அருகிலிருப்பவர் என்று பொருள்படும் அமாத்தியர் என்பதற் கொத்தபதம் முதுவர் : முதுமையுடையவர்; அறிவில் மூத்தவர். நுணணிய : நுட்பமான. நூலறிவினர் . சாஸ்திரஞானமுடையவர். அறிவினரன்று : இதைச்சிலர் வழுவென்பர், சிலர் வழுவமைதி யென்பர். ஆயினும் அல்லர் என்பது வழாநிலை. புலவர் : அறிவுடையோர், புலம் : அறிவு. பிரபை : ஒளி. கோல்; செங்கோல்.

ஏனுறியர் மந்திரிகள்; ஏனுதி காவிதி முதலிய பட்டப்பெயர்கள் மன்னனுல் தனது மந்திரி சேனுபதியார்க்கு அளிப்பது. நகம் : நகத்தடி. விதியா . மந்திரிமார்; செயவன தவிரவன விதிப்பவர். நுணணியர் நுட்பவறிவினேர். உசாவி : ஆலோசித்து. வாயில் வழி. சூழ்ச்சி . ஆலோசனை.

பக்கம்-15.

மணவாளன் : கணவன். இதன் பெண்பால் மணவாட்டி. நீடூழி . நீண்ட ஊழிககாலமளவும. நிலவுக : விளங்குக. நாமம . பெயர். சூரவன . பெரியோன. சூரியகாந்தம "சூரியனெளியாற் றீபபொறி கால்வது சூரியகாந்த மெனபபெயர் பெறுமே." சந்திரகாந்தம "சந்திரனெளியாற்றண்ணீர் கால்வது சந்திரகாந்த மெனபபெயர் பெறுமே." உறுதிச சுற்றம . நன்மையைச செய்யும பந்துககள கதுப்பு கனனம. மூர்த்தி திருமேனிகொண்டவன.

பக்கம் 16.

விழலர் புலவர் , விழலெனனும புலலைனபார். உழலும் சுழலும. காக்கசமொழி பயனிலமொழி. உத்தரசேடி விஞ்சையர் நாட்டின வடபாகம.

செய்யுள்.

உரை —மண்இயல வாழநர்க்கு பூமியிற் பொருந்தி வாழபவர்க்கு, வான் உலகு ஒபபது விண்ணுலகை நிகாபபது, புணணியம இலலார் : நலவினையறறேர், புகுதறகு அரியது . சோதற கருமையயானது, கணணிய மேலான, கறபககானம கலநதது கறபகசசோலை விரவியது, விண் இயல இனபம இனிது விரவிறறு . விண்ணுலக வினபம இனிமையாகப பொருந்தியது. (அநநகரம)

குறிப்பு —இஃது அடிமறி மாறறின்பாற் படும. கணணிய · 'கணய' எனனும வடசொல ; இனிக 'கண' 'இட' மெனககொண்டு இடமகனற என்றும, 'நினை' யெனககொண்டு யாவராலும் உயாவாக நனகு மதிக்கப்பட்ட என்றும பொருள் கூறலாம.

மயூரகணடன மயிலினது கழுத்துப்போன்ற கழுத்தை யுடையான். தானை . சேனை, ஆணை . ஆஜ்ஞை. திரிகாலசம்பவம : முககாலததும நிகழ்பவை.

பக்கம்-17.

சீராய் · ஒழுங்காய். சகசம ஸஹஜம் , இயறகை. ஓச்சுவான் : செலுததுவான.

பக்கம். 18.

ஏந்தல் : அரசன். மேலைச்சார் : மேற்றிசைப்பக்கம் புரவி விஞ்ஞை: குதிரை செலுததும வித்தை, இதனை அசவஹ்ருதயம் எனபர். செமமல: அரசன் ; புதல்வனுமாம். செமமல் - ஆண்பாற் சிறப்புப்பெயர். செம்மையுடையான எனபது பொருள். அமிழ்தமாபதி : ஓர் நகர். வேகமாரதன் : வேகமாகச்செலலும பெரிய தேரையுடையான் என்பது பொருள். இளங்

களியுழவை : களிப்பினையுடைய இளமயில். மேகமாபுரம் : ஓர் நகர்; மேக மண்டலத்தைத் தளாவிய பெரிய பட்டணம். பதுமரதன் : தாமரை போலும் வடிவமுடைய தேரையுடையான், தேரின் கொடிச்சியும் தாமரை வடிவமாயிருத்தலுங் காண்க. இனித் தாமரை மலரை வாகனமாகக்கொண்டமையான் வந்த பதுமரதன் என்னும் அருகக்கடவுளின் பெயர் இவனுக்கிடப்பட்ட தெனினுமாம். ஊழித்தீ : ஊழி காலத்திற்றோன்றி யுலகையழிப்பதொரு நெருப்பு. இரத்தினபுரம் : ஒரு நகரம். இடியேறு : பேரிடி. சுவர்ணரதன் : பொற்றேருடையோன். செங்கண்மால் : சிவந்த கண்களையுடைய விஷ்ணு. செயித்தற்கரிய : வெல்லுதற்கு அருமையான. அரிகண்டன் : ஒளி பொருந்திய கழுத்தையுடையான். சேய் : குமாரன். இராசசிங்கம் : அரசசிங்கம், அரசர்களுட் சிறந்தவன், எல்லாப் பகையரசர்களையு மழிப்பவன். நந்தனன் : பிள்ளை. சயந்தன் : இந்திரன் மகன். மதலை : குமாரன். ஏமாங்கதன் : பொன்னாற் செய்த அங்கத்தை யுடையான். மாறுக : எதிராக; காதலன் : மகன். திலதம் : நெற்றிப்பொட்டு. காளை : காளை போல்பவன்; உவமையாகு பெயர். திருநிலயம் : ஒரு நகரம், திருமகள் வாழுமிடம் என்றும் செல்வ நிலைக்கப்பெற்ற தென்றும் பொருள்படும், ஸ்ரீநிலயம் என்றும் பெயர் பெறும். சித்திரரதன் : அழகிய தேருடையோன். செற்றவர்ச் செகுக்குஞ் செருவல்லான் : பகைத்தவரை யழிக்கும் போரில் வல்லவன். கான்முளை : மகன், சந்ததியிற் றோன்றியவன் என்பது பொருள். விஞ்சையருலகு : வித்தியாதர லோகம். மணவாளன் : கலியாணஞ் செய்து கொள்வோன். மன்றல் புரிக : கலியாணஞ்செய்க. பவசுதன் : சடியரசன் மந்திரி. பகர்ந்தான் : சொன்னான்.

பக்கம் - 19

எஞ்சியோர் மீதமுள்ளோர், மற்றையோர், எஞ்சுதல் - குறைதல். அஞ்சலியஸ்தர் : கூப்பியகையர். இரங்கை இப்பெயர் புரக்கும் : ஆளும். உய்யும் பிழைக்கும், இங்கு கடைத்தேறும். வையகம் பூமி : இஞ்ஞான்று : இக்காலத்தில். ஆற்றா துன்பம். காம்பின் மென்றோளி மூங்கிலை யொத்த மெல்லிய தோளையுடையாள் ஆரமேன் மருமம் மருவுமாயின். அத்தன்மையோன் மாலை யணிவாளாகில். ஆம்பல் : அல்லி. அவிர்கதிர்த் திங்கள் பிரகாசிக்கின்ற கிரணங்களை யுடைய சந்திரன். சற்குணாலயம் : நற்குணங்களுக்கு இருப்பிடம்

செய்யுள்.

உரை :—நம்பிதங்கை-அரசனாகிய அவ்விச்சுவனதங்கை [சோதிமாலை], நகை - ஒளிபொருந்திய, மலர் - மலர்களையுடைய, கற்பகக் கொம்பின் அன்னவள் - கற்பக விருக்ஷத்தின் கொம்பினைப் போல்வாள், கொங்கு அணி கூந்தலாள் - (இயற்கை) வாசனையைக்கொண்ட கூந்தலையுடையவள், அம்பின் நீண்டு - அம்பைப்போல நீட்சிமைபெற்று, அரி சிந்திய-செவ்வரி பரவப்பெற்ற, மாகயல் - பெரிய கெண்டைமீன் பிறழுமாறு போலே, வம்பின் நீண்ட - புதுமையால் மிகுந்த, மை-மை எழுதிய, வாள் நெடுங்கண்ணினாள் - வாளாயுதம் போல நீண்ட கண்களை யுடையவள்.

குறிப்பு :—வாடாமைக்கும், மலர்ச்சிக்கும், இன்பந்தருதற்கும், இயற்கைவாசனை யுடைமைக்கும் மலர் கற்பகக்கொம்பு உவமை, இனி, நகைமலர்

கற்பகக்கொம்பி னன்னவள் என்பதற்கு - ஒளியோடு பரவுகின்ற கற்பினை மனத்தே யுடைய பூங்கொம்பினை யொத்தவள் என்று கூறினுமாம். வம்பின் நீண்டமை - கூட்டுவாசனையா லதிசரித்தமை யெனினுமொக்கும். செவ்வரிபடர்ந் திருத்தல் உத்தமப் பெண்களின் இக்கணம். வரி-இரேகை. வாளாயுதத்தை கண்களுக் கொப்பிடுதலின் ஆடவரை வருத்துந்தன்மை குறிக்கும்.

பக்கம் - 20.

செய்யுள்.

செய்யுளுரை :—*கோதுஇல் மாலைகள்மேல - குற்றமில்லாத பூமாலைகளின்மீது, குதிகொண்டெழு - குதித்தலைக்கொண்டு கிளம்புகின்ற, கீதம் மாலைய - சங்கீத ஒழுங்கினையுடைய, கின்னரம்-கின்னரம் என்னும் இசைக் கருவியின் இசையை, வண்டினம் - வண்டுக்கூட்டங்கள், ஊதி - (வாய் விட்) டொலித்து, மாலையவாய் - வரிசையாய், உறையும் - தங்கப்பெற்ற, குழல் - கூந்தலையுடைய, சோதிமாலைஎன்பாள் - சோதிமாலை யென்னும் பெயரினையுடையாள், சுடர்பூணினாள் - பிரகாசிக்கின்ற ஆபரணங்களையுடைய அப்பெண்.*

குறிப்பு :—*இச்செய்யுட்கு வருந்திப் பொருள்கூறுவாரு முளர்.*

அங்கனாரத்தினம் பெண்களுக்குள் இரத்தினம்போலச் சிறந்தவள். வயோதிகன் . வயதில் அதிகமானவன், விருத்தகாப்பியன் என்றபடி. வயஸ் × அதிகன். நினைசகுந்தகையன் அன்று : எண்ணுந் தகுதியுடையோனும் அல்லன். பெண்ணலங் கனிந் தொழுகாநின்ற . பெண்தன்மையின் அழகு கனிந்தொழுகாநின்ற, இனி நலம் நற்குணமாம். அண்ணலங்களிற்றரசன் : பெருமையுடைய அழகிய யானைபோன்ற அரசன். வதுவை : கல்யாணம். புரியாதிருப்பதும் . செய்யாதிருப்பதும். சுரேந்திரகாந்தம் : ஒருநகரம். கடவுளர்தன்மையன் : தேவர்களின் தன்மையுடையோன். சித்திரகூடம் . ஒருமலை, அதிசயிக்கத்தக்க சித்திரங்களையுடையதென்று பொருள். அணி விழவு அயாநது : அழகிய திருவிழாவைச் செய்வித்து. ஆண்டு : அவ்விடத்து. முன் : முற்பிறப்பில். பங்கயப்பழனவேலி : தாமரை மலர்களையுடைய வயல்கள் வேலியாகவுடைய. பவகிரிபுரவலன் : பவகிரியென்னு நகரத்தரசன். பயந்த . பெற்ற. மதம்பாயும் : மதஜலம்பாயும். சயசேனன் : வெற்றியுள்ள சேனையுடையோன். பிரிதிமதி : அன்புடையாள் என்பதுபொருள். சாசாரம் : ஸஹஸ்ராம என்னும் வடமொழிச் சிதைவு.

பக்கம் - 21.

கடல்தொகை : காலத்தின் வரையறை. இது உலகத்தைக் கடல்கொள்ளுவதைக் காலமாகக்கொண்டு 17 - கடற்றொகையென்று அளவிட்டதாகக் கொள்ளவேண்டும். அமரர் : தேவர்; மரணமில்லாதவர் என்பது பொருள் போகம் . இன்பம். நுகர்ந்தவன் : அநுபவித்தவன். வேண்டற்பாலன் : விரும்பும் பகுதியுடையோன். வார்பூட்டிய : தோற்கயிற்றாற் கட்டிய. வயிர் : ஊதுகொம்பு. வளை : சங்கு. குழாங்கள் : கூட்டங்கள். ஈண்டி : நெருங்கி. நிமித்திகன் : சோதிடன் ; வருங்கால மறிந்துரைப்போன்.

செய்யுளுரை.—இந்திரன் அனைய - தேவேந்திரனை யொத்த, நீரோய் - தன்மையையுடையோனே! இனி பிறிது எண்ணல் வேண்டாம் - இனிவேறு ஆலோசித்தல் வேண்டுவதில்லை, மந்திரம் நீளுமாயின் - ஆலோசனை அதிகரிக்குமானால், வருவன - வருந்தீங்குகள், அறியல் ஆகா - (இன்னதென்று) அறிய முடியா, (ஆதலின்) சந்திரன் தவழ நீண்ட - (ஆகாயத்திற் செல்லும்) சந்திரன் தன்னிடத்தே தவழ்ந்து செல்லும்படி உயர்ந்த, தமனியம் சூலம் நெற்றி - பொன்னினாற் செய்த சூலங்களை நெற்றியிலே யுடைய [உச்சியிலுடைய], அந்தரம் திவளும் - ஆகாயத்தில் விட்டு விட்டுப் பிரகாசிக்கின்ற, ஞாயில் - மதில் சூழ்ந்த, கோயில் புக்கு அருளுக என்றார் - அந்தப்புரத்துக்குச் சென்றருளுவீராக வென்று சொன்னார் மந்திரிகள்.

குறிப்பு.—'அந்தரமயங்கும்' என்பதற்குத் தெய்வலோகத்தார். இத்தன்மையானதில்லையே யென்று மயங்கப்பெற்ற என்றும் பொருள் கூறுவர். ஞாயில் - சினையாகுபெயர். தமனியம் - தபனீயம் என்னும் வடமொழிச் சிதைவு, எரியில் தபிக்கப்பட்டுப் பொலிவது என்பது பொருள். அந்தரம் - ஆகாயம், பிறபொருளுக்கு இடவாகுபெயர்.

தேன் வண்டின் பேதம். விண்டு இசைபாட : வாய்விட்டுப் பண்ணிசைபாட. ஆரவாரித்தல் ஒலித்தல். அரமகளிர் : தேவமாதர்; அமரமகளிர் என்பதன் விகாரம்.

பக்கம். 22.

கவரி வெண்சாமரை. உச்சிக்காலம் : நடுப்பகல். கன்னலங்கருவி: நாழிகையை யறிவிக்கும் யந்திரம், கன்னல் - நாழிகை; கடிகாயந்திரம் என்றும் கூறுவர். கொள்ளை கொள்ளையாய : மிகுதி மிகுதியாய்; தூவுதல்: இறைத்தல். பாதசாரியாய. கால் நடையாய. போதலாயினன : செல்வானாயினான். வில்உமிழ் மணிக்கழல் : ஒளி வீசுகின்ற மணிகள் பதித்த வீரக்கழல். ஒல்லெனல் : ஒலிக்குறிப்பு. சரம: மலர்மாலை. இரைந்தெழுந்தன: ஒலித்தெழுந்தன. மகரகுண்டலம : சுறா மீன் வடிவமாகச் செய்த காதணி. எஃகம : வேல். வாளம. கத்தி; வடமொழி. ஈட்டி : எறிவேல். இருமருங்கு : இருபக்கம். கரும்பினும் இன்மொழி காரிகையார். கரும்பு ரசத்தினு மினிய வார்த்தையையுடைய பெண்கள்; காரிகை - அழகு; அதனையுடையார் காரிகையார். மருமலர் : வாசனையுள்ள மலர். சுண்ணம் : வாசனைப்பொடி; கந்தப்பொடி. சாந்து : சந்தனம். பெரும்புயல்மாரி : பெரிய மேகம் பொழிகின்ற மழை. மாடநீள் மந்திர மலியப்புக்கனன. உபரிகைகள் உயர்ந்த கிருகம விளங்கப் புகுந்தனன். அருளி : அருள் செய்து. கொங்கலந் தெரியலாய் : தேன் நிறைந்துள்ள அழகிய மாலையுடையானே! கொங்கு-வாசனையுமாம்; அல் சாரியை; அம்-அழகு; "கொங்கலர், தெரியலாய" என்பது செய்யுள். கொற்றம் : வெற்றி. கொள்க என : பெறுக என்று; இதில் ஈறு தொகுத்தல் விகாரம். உழையர் : பக்கத்துள்ளார்; உழையர் என்பது; பரிசனங்கள். வல்லபம். வல்லமை; நுவல்கின்றான் ; சொல்கின்றான்.

பக்கம் - 23.

பெண்கொடி - கொடிபோன்ற பெண். வலங்கொண்டு - வலமிட்டு, ப்ரதக்ஷணமாக. இலக்குமி - திருமகள். சுபகாரியம் - நற்காரியம். சம்புத்தீவு - நாவலந்தீவு, இத்தீவு நாவல் மரத்தால் இப்பெயர் பெற்றது. கண்டம் - பகுதி, பிரிவு. வகுத்து - வகைப்படுத்தி. பரத கண்டம் - பரதர் என்பவன் அரசாண்டமையின் இப்பெயர் பெற்றது; நவகண்டங்களில் ஒன்று; இந்தியாவிற்கு இப்பெயர் வழங்கும். நவகண்டங்களாவன: கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்விரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம் என்பன. போக பூமி - இன்பநுகரும்பூமி. பிரபஞ்சம் - உலகம். ஊழி - முடிவுகாலம். மன்னுயிர்கள் துயர் பல்வுங்கெட - நிலைபெற்ற உயிர்களுடைய பல துன்பங்களுங்கெட. பிற்காலம் நிகழ்வன வுறைத்த - தனக்குப்பின்வரும் காலத்தில் நடக்கும் சங்கதிகளை. மாற்றலர் - சத்துருக்கள்.

பக்கம் - 24.

அவதரிப்பான் : உதிப்பான். பசுயிர் : பசியஉயிர் நுகர்ந்து குடித்து. ஆழி : ஆஜ்ஞா சக்கரம். சாற்றப்படுதல் : சொல்லப்படுதல். சிரக்கண்டிதம் - சிரத்தைக்கண்டித்தல். உத்தரசகிணசேடிகள் - வடக்குத்தெற்குப் பக்கங்கள். சீயம் - சிங்கம். அறிகுறி - அறிவாய. அகம் : வீடு.

பக்கம் - 25.

செய்யுள்.

I. **உரை** :—*இளமலர் - இளமைபொருந்திய புஷ்பங்கள் [அன்றலர்ந்த மலர்கள் என்றபடி], தொகுத்தலைவுஇலாத - சோர்ந்து நெருங்கியிராத, சோலையும்-மரச்சோலைகளும், இளமைத்தாமரை - இளமைபொருந்திய தாமரைகள், புக்கு - பொருந்தி, நகாத - மலராத, பொய்கையும் -தடாகமும், மிக்கு - ஒளிமிகுந்து, இளம்பிறை - இளமையான பிறைச்சந்திரன், விசும்புஇலாதஅந்தியும - ஆகாயத்தில் உடையதாகாத அந்திப்பொழுதும், மக்களைஇலாத - குழந்தைகளையுடையதாகாத, ஓர்மனையும் - ஒருவீடும், ஒக்கும் - தம்முள் ஒத்திருக்கும்.*

குறிப்பு :—*சோலைக்கு மலரும், பொய்கைக்குத் தாமரையும், அந்திப்பொழுதுக்குப் பிறையும் பொலிவுண்டாக்குதல்போல, மக்கள் மனைக்குப் பொலிவுண்டாக்குவரென்பது கருத்து.*

II. **உரை** :—*தலைமகன் - கணவன், தனக்குத்தாள் ஆக-தனக்கு அடிமரமாகவும், நிலைமைகொள் மனைவி - உறுதியைக் கொண்ட மனைவியானவள், சாகையாக - கிளைகளாகவும், நலம் மிகுமக்கள் - நன்மை மிகுந்த மக்கள், நிமிர்ந்த பூந்துணர் ஆக - சிறந்து மலர்ந்து பொலிகின்ற பூங்கொத்துக்களாகவும், முதியர்-பெரியோர்கள், தேன்களா-தேன்களாகவும், குலம்மிகு கற்பகம் - (ஒப்பற்ற) குலமாகிய சிறப்பினையுடைய கற்பக மரமானது, குளிர்ந்து தோன்றும் - இன்புற்று விளங்கும்.*

குறிப்பு:—தாள் - அடிமரம், கற்பகம் - கற்பினை யகத்தேயுடையதோர் மரம் என்று இல்வாழ்க்கையைச் சிலேடை வகையாற் கூறினார். குளிர்ச்சியாவது வெப்ப மின்றித் தட்பமாயிருத்தல். இச்செய்யுள் **உருவகவணி.**

III. **உரை**:—துகள் இலா - குற்றமில்லாத, சுடர்மணி - பிரகாசிக்கின்ற இரத்தினங்கள், துளும்பும் - அசையும், பூணினாய் - ஆபரணங்களுடையாளே! தகளிவாய் - அகலில் (உள்ள), கொழுஞ்சுடர் - கொழுவிய சுடரானது, தனித்தும் - தனியாயிருந்தும், கோழ் இருள் நிகளம் - கொழுத்த இருளாகிய விலங்கினை, வாய்பிளந்து - வாயினைப் பிளந்து, அகம் - (தானிருக்கும்) இடத்தை, சுடர நிறைக்கும் - பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கும்; (அதுபோல) மகள்-நின்மகள், எல்லாத்திசைகளும் - எல்லாத்திக்குக்களிலும், மலிர - விளங்க, மன்னினாள் - நின்றாள்.

குறிப்பு:—விளக்கினொளிபோலும் விளக்கத்தை யுடையாளாய் நின்மகள் என்பது கருத்து. இச்செய்யுள் **எடுத்துக்காட்டுவமை.** தனித்தும் - பல சுடரினோடின்றித் தனியாயிருந்தாலு மென்றபடி. நிகளம்-வடமொழி, செல விறகுத் தடையுண்டாதலின் இருள் நிகளமாயிற்று.

IV. நாமநீர் - அச்சத்தை உண்டாக்குகிற நீராகியகடலிலே (சஞ்சரிக்கின்ற), வலம்புரிவயிற்றிடை - வலம்புரி யென்னும் சங்கத்தின் வயிற்றில் பிறந்த - உதித்த, மாமணி-பெரிய முத்தானது, நலம்புரி பவித்திரம் ஆகும்-நன்மையைச்செய்கின்ற பரிசுத்தகுண முடையதாகும்; (அதுபோல), பொலம்புரி - அழகைச் செய்கின்ற, மயில் அனாய் - மயில் போலுஞ் சாயலுடையாளே! பயந்த - நீபெற்ற, பூங்கொடி - பெண்ணும், குலம்புரிந்தவாக்கு எலாம் - குலத்திற் பொருந்தியவாக்கு எல்லாம், கோலம் ஆகும்-அழகினைத் தருவதாகும்.

குறிப்பு:—பொலம்புரி யென்பதற்குப் பொன்னாற்செய்த எனினுமாம். இச்செய்யுள் **எடுத்துக்காட்டுவமை**யணி. பவித்திரம்-வடமொழி.

V. மாவினை மருட்டிய - (ஒத்த பிளவினையுடைய) மாவடுவை (த்தனக் குவமையாகாதபடி) அஞ்சும்படி செய்த, நோக்கி - பார்வையை யுடையாளே! நின்மகள் - நின்புதல்வி, பூவினுள் - தாமரைப்பூவி லிருக்கின்ற, மடந்தை - திருமகளும், பொன் - அழகிய, பூவை - காயாமலரின், நாள் ஒளி - புதிய நீல வொளிபோலுந் திருமேனியுடைய, தேவனுக்கு - திருமாலுக்கு, அமிர்தமாம் - (அநுபவிக்கத்தகும்) அமிர்தமும் ஆகிய, தெய்வம் ஆம் என - தெய்வம் ஆவாளென்று, ஓவில - நீங்குதலில்லாத, நூல் - சாஸ்திர ஆராய்ச்சியையுடைய, புரோகிதன்-நிமித்திகனாகிய புரோகிதன், உணர ஓதினான் - தெரியக்கூறினான்.

குறிப்பு:—மாவடுவையும், அதன் பிளப்பையும் பெண்கள் கண்களுக்கு உவமையாகக் கூறுதலின் இங்கு மாவினை என்றதற்கு அதன் பிளப்பினைக் கூறினும்; வடுவென்றே பொருள் கூறினுமாம்; ' மாவியன்றன்ன மென்னோக்கி" என்றும், " வடிக்கண்ணிவை" என்றுந் **திருக்கோவையாரி**லுங் காண்க; வடி - மாம்பிஞ்சு. நோக்கியாகிய நின் மகள் என்று மகளுக்கு அடை மொழியாக்கியுங் கூறுவர். பூ - ஈண்டு மடந்தை யென்னுங் குறிப

பால் தாமரையைப் புணர்த்திறன், அன்றிப் "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்றும் கூறியவாற்றாலும் தாமரையையே புணர்த்திறனாகப் பூவை யென்பது காயா, அதன் மலருக்கு முதலாகுபெயர், அது நீல நிறமாதலின் திருமேனிக்கு உவமமாயிற்று, "செங்கை - யங்கதிராழியான் போல லார்ந்தன விரிந்தகாயா" என்றார் **திருவிளையாடற்புராணத்துப்** புரோகிதன் - வடமொழி

வாயுவேகை-சடிபரசன்மனைவி உவகை-மகிழ்ச்சி

ஒளி முகிழ் முகத்தொசத்து பிரகாசத்தைக் குவிக்கின்ற முகத்தை யொசத்து, நகை சிரிப்பு

பக்கம் 26.

புட்பசயனம் பூக்களாற்செய்த படுக்கை. பாயல் கொண்டு படுத்து-துயின்று திரு மேன்மை மாட்டு இடத்தில். வரலாறு: வரன்முறை. தேற்றினார் தெளிவித்தார். திருமுகம் கடிதம் வரைந்து எழுதி, ஆவனவற்றையும் ஆகவேண்டிய காரியங்களையும் அடியிணை இரண்டு பாதங்கள் விசும்பாறாக ஆகாயமார்க்கமாக

பக்கம்-27

தூதுவிடு சருக்கம்

பரிசி என்பவனை பயாபதி யரசனிடம் சடிபரசன் றூதனுப்பிய பாகத்தைக் கூறுகிறது. மருசமழ வாசனை வீச தேன்மாரி தேன் மழை. அங் காவினகத்து அச்சோலையி னுள்ளிடத்து மலர் மலிந்து மல நிறைந்து வகுளம் மகிழ மரம் தேமா தித்திப்பாகிய மாமரம், தேன்மா மரம் எனவுங் கூறுவர், அதற்குத் தேன்போலு மினிமையையுடைய மாமரம் என்று பொருள் கொள்க நாகம் சுரபுன்னை மரம் புன்கு புன்க மரம். குரா குரா என்னு மோர்மரம் குரமை, குரவு, குர என்பெயர் பெறும் மரா கடம்ப மரம் வெண்கடம்பு மரம், "பராரை மரா" என்பது **திருமுருகாற்றுப்படை**, பாசவம் மரம் அடியால் நீரைக்குடிப்பது என்பது பொருள், இது வடமொழி மேக்கவு மேம்பாடு ஆனிச்சம் மோப்பினுந் தொடினுங் குழையுந் தன்மையுடைய பூச்செடி, இதனை மரமென்று மயங்கு வர் மாதவி குருக்கத்தி கொசுடி ஓடை இவை பூங்கொடிகள், தடம் குளிர்ச்சி. வட்டம் ஒளி. பொய்கை தடாகம் மனோஞக்கியம் மனத்தை மகிழ் வித்தல், இது மனோஞ்ஞம் எனும் வடமொழிச்சிதைவு பொருகின்ற மோதுகின்ற. திவலை நீர்த்துளி, சீகரம் என்றும் பெயர் பனிநீர் குளிர்ந்த வாசனை நீர் திவலைப்பனிநீர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, திவலையாகிய பனிநீர் என விரியும் திரைக்கரம் அலைகளாகிய கைகள் வியல் பெரிய சுரும்பு வண்டு அரும்பண் அரியராகம் பிண்டி, அசோகமரம் அன்னோன் அவன் இயற்றப்பட்ட செய்யப்பட்ட தூய தூவி மேடை சிலாசனம் வடிவாள் செய்வம் வீற்றிருத்தற்கு எழுந்தருளியிருத்தற்கு

பக்கம் - 28

பொழில் சோலை அங்கசபுரோகிதன் அங்கசனென்னும் பெயருடைய புரோகிதன், நிமித்திகன் இவர்களிருந்தனன் எதிர் வீற்றிருந்தான்,

வழியிளைப்பு வழிவந்த வருத்தம். நடனம் நாட்டியம் கீதம் பாடல் கள். ஆறுமின் நீக்குமின் கணிகையர் வேசையர், நடியப்பெண் கள். பவனி உலாசமாய்வருதல் வருதலின் சிறப்பு அமரருலகு தேவ ருலகு அமரமாதர் தேவஸ்திரீகள் மடவார் பெண்கள் ஒருகம் ஆடங் கம் நுகர்வித்தார்கள் உண்பித்தார்கள்

பாகம் 29.

கொண்மூ மேகம் கருங்கொண்மூப் போலும் நிறமுடையன் திவிட்டன் என்க. தரோசணித்தல் என்ற எப்பொழுதும் இடப்பக்கம். பல்லாண் டு மங்கல வாழ்த்து அசரீரத்து இவர் போல் பல வருஷங்களாக வாழ்ந் திருத்தல் வேண்டுமென்ல் சொற்ற வினங்கு கூடவர, அணமிஞர் சபி பித்தார்

செய்யுள்.

உரை —பல இயம் குழாட் - பலவாத்தியங்களின் தொகுதிகள், ஆர்த்த - சப்தித்தன, குஞ்சரக்குழாம் - யானைக்கூட்டங்கள், அதிர்த்த - சப் தித்தன, வீரர் தேர்க்குழாம் - வீரர்கள் ஏறியிருந்த தேர்க்கூட்டங்கள், தேர்த்த - (தம் வரவை ஒலியால்) தெரிவித்தன பல சனக்குழாம் - பல ஜனங்களின் கூட்டங்கள் திசைத்த - திசைகளில் நிறைந்தன சாமரம் குழாம் வெண்சாமரைத் தொகுதிகள், போர்த்த எங்கும் நிறைந்தன, வெண்கொடிக் குழாம் - வெண்ணிறம் பொருந்திய கொடிக்கூட்டங்கள், புதைத்த - நெருங்கி நிறைந்தன, வேந்தர் பல்குழாம் - பல அரசர்களின் கூட்டம், வேர்த்த - (நெருக்கத்தினால்) வேர்த்துப்போயின, கூந்தல்மாக் குழாம் - புறமயிர்களையுடைய குதிரைக்கூட்டங்கள் விரைந்த - விரைவாக வந்தன

அசைவில் சைகப்புதல் குரவர் ஆசிரியர் ஓர்இ விட்டு. மரீஇய - பொருந்திய.

பாகம் - 30.

புருவஞ்சனைய முறைபிறப்பு கைடாநு கவலல் இவாமின எறுங் கள் தூரியம் வாத்தியம் கோஷிக்க சப்திக்க. சுண்ணம் பொடி நாற்றி தொங்கவிட்டு ஒப்பனை செய்த நீர்மையான அலங்காரம் செய் தன்மையால் அருவி தூங்குங் குளிர்மணிக் குன்றம் அருவிகள் விழு கின்ற குளிர்ந்த மணிகளையுடைய மலை அநுமதி உத்தரவு கலந்தில தோளினன் மலையென நும்மை சொல்லப்படும் தோளையுடையவன், மலை யொடு பயின்றதோளுமாம் அம்பரசரன் ஆகாயத்தில் சஞ்சரிப்பவன், அம்பரம்-ஆகாயம், சரன் - சரிப்பவன் மேற்கண் எழுதுவோன் திருமு கப்பாசுரம் ஓலையில் எழுதப்பட்ட சொற்றொடர்

பாகம் 31.

மனப்பதை ஜனங்கள் பிரமித்து மயங்கி நிருபதி அரசன் - மணிதாசனுக்குத் தலைவன் நிகா ஒப்பு தவை ருசி

பக்கம் - 32.

பொள்ளலியாக்கை குறமுளர் ம, ஒன்பான்றொளையுடைய உடலுமாம், யாக்கை - சொழிற்பெயர், பங்கண பப்பட்டு, ஒழுகிய

நடந்த; அழுங்கிய : அமிழ்ந்த ; வருந்திய. பாலதோ : பாகுபாடுடையதோ. மேம்பாடு : மேன்மை. நித்தியமறவி : தினந்தோறும் மறதியையே அதிகமாகக்கொண்டிருத்தல். உழந்து : அலைந்து. ஆற்றல் : வல்லமை. அஃது அட : அவ்வியானை யழித்ததனால். குழை ; தழை. கயந்தலை : யானைக்கன்று ; கயம் - இளமை. எம்மவர் மகத்துவம் எங்கள் ஜாதியாரது மகிமை. வரங்கிடத்தல் : தாம் வேண்டிய வரத்தைப்பெறத் தவம் செய்தல், இரசதம். வெள்ளி. கிரி. மலை. கழறினன் : சொன்னான். வாளாவிருத்தல் . ஒன்றும் பேசாதிருத்தல். சினவற்க கோபியா திருப்பாயாக.

பக்கம் - 33.

பூபன் . அரசன், பூமிக்குத்தலைவன். குரூரவார்த்தைகள் . கொடிய வார்த்தைகள். விஞ்சை . வித்தை. உதித்தவன் . பிறந்தவன். கலைமகள் பொருவும் . சரஸ்வதியை ஒக்கும் பெருமகள் தாய். வயிரதிலதம் : வயிரத்துள் திலதம் போற் சிரேஷ்டமான வயிரம். நம்பெருமான் : நமது கடவுள். திருவடியொழுகி : சீர் பாதங்களிற் பத்திசெய்து நடந்து.

பக்கம் - 34.

உதாசீனன் : லட்சியமில்லாதவன், பராமுகன். அறக்கடவுள் : தருமமூர்த்தியாகிய தேவன் ; ஈண்டு அருகக்கடவுள் ; தியானச்சோதி : தியானஞ்செய்வதிற் காணப்படும் தெய்வவொளி.

செய்யுள்.

I. **உரை** :—அறம் - தரும சொரூபியாகிய, வேந்தே - தலைவனே ! அலகு இலா - அளவில்லாத, ஞானத்து - அறிவால், உலகு எலாம் - எல்லா உலகங்களையும், அகத்து அடங்க - உள்ளே அடங்கும்படி, நுங்கி - விழுங்கி, நின்னுள் - உன்னிடத்தில், ஒளித்தாயும் - ஒளித்தவனும், நீயே, ஒளித்தாயும் நீயே—; உயிர்க்கு எலாம் - எல்லா வுயிர்களுக்கும், கண்ணாய - கண்போன்று, அளித்தாயும் - படைத்தவனும், காத்தாயும் - காப்பாற்றினவனும், நீயே - நீதான், (ஆதலின்) வாழி - வாழ்ந்திருப்பாயாக.

குறிப்பு :—ஞானத்தால் என்னு மூன்றனுருபு நுங்கி என்னும் எச்சவினையையும் அவ்வெச்சம் ஒளித்தாயு மென்னும் வினையாலணையும் பெயரையுங் கொள்ளும். அநந்தஞானம் என்றற்கு அலகிலா ஞானம் என்றார். திரிமூர்த்திகளுக்கும் தலைமையானவர் அருகக்கடவுள் என்பது அம்மதத்தார் கொள்கை. வாழிய என்னும் வியங்கோள் வாழி எனக் கடைகுறைந்து நின்றது. "வாழியவென்பத னீற்றி னுயிர்மெய் யேகலு முரித்தஃதேகினு மியல்பே" என்பது சூத்திரம்.

II. **உரை** :—திருமாலே - திருமாலென்னும்பெயரை யுடையவனே ! அழல் நாறும் - வெப்பத்தை வீசுகின்ற, வெங்கதிரோன் - சூரியன், நாண - வெட்கங் கொள்ளும்படி, அலராது - (அச்சூரியனைப் போல உஷ்ணத்தோடு ஒளி) பரவாமல், நிழல்நாறும் - குளிர்ச்சியாகிய ஒளியை வீசும், மூர்த்தியாய் நின்றாயும் நீயே - வடிவுடையவனுமாய நின்றவனும் நீதான் ; நின்றாயு நீயே—, நிறைபொருள்—(குறைவின்றி) நிறைந்த பொருள்களையுடைய, எல்லைகண் - முத்தியுலகில், சென்றாயும் சென்றவனும் வென்றாயும் - வெற்றி கொண்டவனும், நீயே - நீதான், (ஆதலின்) வாழி - வாழ்ந்திருப்பாயாக.

குறிப்பு —எல்லை - உலகு, நிறைபொருளெல்லை யென்றமையின் முத்தியுலகாயிற்று. நிழல் - குளிர்ந்த ஒளி.

III. **உரை** —நிறைதரு கேவலத்தோய் - நிறைந்த கேவலமென்னும் ஒப்பற்ற ஞான உணர்ச்சியுடையோனே! வென்ற பெருமானே - (யாவற்றை யும்) வெற்றிகொண்ட பெருமை யுடையோனே! நின் அடியார்க்கு எல்லாம் - நின்னடியவர் யாவர்க்கும், குறைதலில் இன்பம் கொடுப்பாயும் நீயே- குறைவில்லாத இன்பத்தைக் கொடுப்பவனும் நீதான், கொடுப்பாயும் நீயே—, குற்றேவல் வேண்டாய் - (யான்செய்யும்) சிறியதிருவடித் தொண்டையும் வேண்டாமல், விடுத்தாயும் - விடுத்தவனும், நீத்தாயும் - (பற்றுக்களெல்லாவற்றையும்) ஒழித்தவனும், நீயே—.

குறிப்பு —திருவடித்தொண்டை நோக்கி அது காரணமாக அருள் செய்தலின்றித் தனது வரம்பி லருளாலேயே அருளுகின்றமையின், 'குற்றேவல் வேண்டாய்' என்றான்.

இம்மூன்று செய்யுளும் இடைமடக்கி வந்த கந்தாவமாக்கம். இடைமடக்காவது ஒளித்தாய் முதலியன மீண்டு மடக்கி வந்தன காண்க.

குறிஞ்சி ஓர்பண் வணங்குதல் நாணத்தால் தலைசாய்த்தல் அல்லது குறிஞ்சியும் இறைஞ்சின் என்பதற்குக் கீதங்கேட்ட மலைகளும் இளகிவணங்கின எனினுமாம், பிறிதுபொருளுங் கூறுவர் வாக்காய் அழகாய். அம்பர் ஆகாயம், அம்பரம் வடமொழி தம்பித்தல் அசையாது நிற்றல். கின்னரர் ஒரு தேவவகுப்பைச் சேர்ந்தவர் போனகம் உணவு கானமிழ்தம். இசையாகிய அமிழ்தம். பன்னகலோகம் நாகலோகம் பணமுடி படங்களோடு கூடிய தலை.

பக்கம் - 35.

வேண்டினர் வேண்டியாங்கு விரும்பினோர் விரும்பியபடி எய்தினன்: சென்றான். நமிகுலம் - நமி என்பவன் வம்சம் நிகர்ப்பீர் ஒத்திருப்பீர். தொடர்பு தொடர்ச்சி. கூறுவல் சொல்வேன். பொறி அடையாளம், இதனால் திருமகட்குப் பொறி என்றொரு பெயருண்டு, மேவுவான்: பொருந்த; இது வான்வாய்பாட்டு வினையெச்சம். புவன "என்று சுட்டியது" கடவுளை. மரகதம் பச்சை. இலங்குதல் விளங்குதல். வாகுவலி: தோள்வலி யுடையோன்.

பக்கம் - 36.

ஓம்பி காத்து. இறைத்தொழில். அரசாட்சி செய்யுந் தொழில். தியானுக்கினி. தியானவொளி. பயில்! வசிக்க வல்லிகள் கொடிகள். பொழில் மரக்கண். சோலையின் கண்ணுள்ள மரத்தில். கோழரை. வழுவழுப்பான அரை, அரை - அடிமரம் வழுவழுப்பாகிய அரையை யுடைய மரங்களைக் கோழரை யென்றும், பொருக்கான அரைகளையுடைய மரங்களைப் பொரியரை மரமென்றும் சொல்லப்படும். குஞ்சி சிகை, ஆண்மயிர். இருகுடித்தொடர் இரண்டு குலங்களின் சம்பந்தம், வம்சபரம்பரை. கேசரர். வித்தியதரர், கே - ஆகாயம், சரர் - சஞ்சரிப்பவர் நின்னி கர்வார். நின்னை யொப்பவர்.

பக்கம் - 37.

சூழ்ச்சி : ஆராய்ச்சி என்னென்று யாதென்று. அறிவுகொளுத்தல் : அறிவுபுகட்டல். தரிக்கச்செய்து தங்கச்செய்து.

பக்கம் - 38.

சீயவதைச் சருக்கம்.

திவிட்டனென்பவன் பகைவர் தன்னிடத்தனுப்பிய மாயச் சிங்கத்தை வதைத்த சங்கதியைக் குறிக்கும் பாகம். சீயம்-ஸிம்ஹம் என்னும் வடசொல் விகாரம். கைச்சமிக்ஞை : கைக்குறிப்பு, ஸம்ஜ்ஞா என்னும் வடமொழிச் சிதைவு. பொலிவினால் : விளக்கத்தினால். அநுமித்தல். ஊகித்தறிதல்; அநுமானித்தல், அநுமானமாவது புகையைக் கண்டவிடத்து நெருப்புண்டென்று ஊகித்தல், இஃது அளவைப் பிரமாணங்களிலொன்று. இரைத்து க· சப்தித்து மேல்விழ. வண்சிறை பெரிய இறகு, வளப்பம் பொருந்திய சிறகுகள். வளப்பம் - அழகு. நித்திலம். முத்து. வெள்ளி வேய்ந்த பத்திகள் : வெள்ளியால் வேயப்பட்ட வரிசைகள், வேய்தல் - மேல்மூடுதல். வேதிகை மேடை. பிண்டி. அசோகமரம். நிழல் : ஒளி. வீற்றுவைகுக : மிக்கசிறப்பொடு தங்குக, புகன்று. சொல்லி; துதித்துமாம். அணங்கு அனையார் தெய்வப் பெண்களையொத்த பெண்கள், அணங்கு-திருமகளுமாம். அஷ்டமங்கலம் எட்டுமங்கலப் பொருள்கள், அவையாவன· சாமரம், தீபம், நிறைகுடம், இணைக்கயல், கண்ணாடி, அங்குசம், கொடி, முரசம் என்பன. சோடசோபசாரம் பதினாறுவகை யுபசாரம், அவை:—தவிசளித்தல், கைகழுவ நீர்தரல், கால்கழுவ நீர்தரல், முக்குடி நீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூல்தரல். தேய்வை பூசல், மலர் சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும் புகைகாட்டல், விளக்கிடல், கற்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைக்காய்தரல், மந்திர மலரான அருச்சித்தல் என்பன; இவற்றை முறையே ஆசனம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம் ஸ்நானம், வஸ்திரம், எஜ்ஞோபவீதம், கந்தம், புஷ்பம், சோபணாக்ஷதை, தூபம், தீபம், கர்ப்பூரதீபம், அன்னம், தாம்பூலம், மந்திரபுஷ்பம் என்பர் வடநூலார். ஷட்+தச-சோடச என்பது வடமொழிச்சந்தி. இளங்கருங்கைம்மா. இளமை பொருந்திய கரிய துதிக்கையையுடைய யானை, தளம் தரும்மொய்வெரிந் பருமை அமைந்த வலியுள்ள முதுகு.

பக்கம் - 39.

இறை : அரசன். பொன்னிறப்பொறி : பொன்னின் நிறத்தாலமைந்த முத்திரை, இலச்சினையெனவும் படும் திருமுகம். ஓலை. விம்மிதம். பிரமித்தல்; நினையாதிருக்கையில் வருவதோராநந்தம்; விஸ்மிதம் என்னும் வடசொற்சிதைவு. மோனி : மௌனி. பேசாதிருத்தல். மெய்ந்நிலை : உண்மைநிலை. பொற்குவால் : பொன்குவியல்; சுவர்ணத்திரள். அருங்கலம் : விலையுயர்ந்த ஆபரணம். புண்ணியம் புணர்த்தவா : புண்ணியங்கூடியவிதம்.

பக்கம் - 39.

இறப்ப. மிக. உசாவ. வினவ, விசாரிக்க அவதி. காலம்.

பக்கம் - 40.

வதுவை : கலியாணம். நிலமடந்தை : பூதேவி. ஊடி : கோபித்து அறம் : சமயம். உட்பகை : காமம் முதலியன ; அவை-காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன, இவற்றை யறுவகையுட் பகையென்பர்.

பக்கம்-41.

புன்சொல் நிமித்தம் : அற்பச் சொல்லாகிய குறி நிமித்தம் ; பின் நிகழ்வதை முன்னறிவிப்பது. சச்சரை யரசன் : போர்த் தொழிலுள்ள அரசன். ஆலவட்டம் : விசிறி. துளங்குதல் அசைதல். பிரசண்ட மாருதம் : மிகுதியுங் கொடுமையான காற்று. தானவர் : அசுரர். தானை : சேனை. அடுதல் : கொல்லுதல். பொச்சல் பொய் எற்றுக்கு எதற்கு. பற்றுக்கோடு : ஆதாரம்.

பக்கம் 42.

வாய்த்துழி : நேரிட்ட விடத்து. நச்சுமரம் : விஷமரம். களைதல் : பறித்தல். காழ்ப்பு : வைரம். குடாரம் கோடரி இயலுதல் . முடிதல். சேறிய ஆறு சேர்ந்த விதம் இழுக்கு குற்றம், (Drawback)

செய்யுள்.

உரை.—நட்பு பிரித்தல் - (தனது) சிநேகிதரைப் பகையாக்கிக் கொள்ளுதலும், பகை நட்டல் - பகைவரோடு சிநேகம் செய்தலும், ஒற்று இகழ்தல் - வேவு காரரை அவமதித்தலும், பக்கத்தாரயாரையும் ஐயுறுதல் - தன் அருகேயிருக்குநர் யாவர் மாட்டினும் சந்தேகப்படுதலும், தக்கார் நெடுமொழி கோறல் - மேன்மையுடைய பெரியோரது உறுதி மொழிகளைக் கடந்து நடத்தலும், குணம் பிறிது ஆதல் - (முன்னிருந்த) தனது தன்மை வேறுபடுதலும், (ஆகிய இவை யனைத்தும்) கெடுவது காட்டுங்குறி-(ஓரரசன்) இனிக்கெட்டழியப் போகு மாற்றினை முன்னரே காட்டுகின்ற உற்பாதங்களாம்.

குறிப்பு :—நட்பு, பகை இவ்விரண்டும் பண்பாகு பெயர்கள். ஒற்று - முதனிலைத் தொழிலாகு பெயர். குறி - அறிகுறி.

பக்கம்-43.

திறை : வரி வம்பினை : வார்களை அநுமதி செய்து . கட்டளையிட்டு. திருமுகம் : ஓலை, இது தகுதி வழக்கு பரித்த : தாங்கிய நாட்டியம் : கூத்து விச்சியாதரர் . ஓர் வகை தேவ ஜாதியார் சேறல் : செல்லுதல். பீதாம்பரம் : பொற்பட்டாடை ;

பக்கம்-44.

முத்தம் : முத்து ; மருப்பு : தந்தம். நூதனமான : புதிதான. புகையும் : கோபிக்கும். அன்னோன பணி . அவன் கட்டளையிட்ட வேலைகள். மூர்ச்சனம் : மூர்ப்பிறப்பு. .

சீயவதைச் சருக்கம்.

பகசம்-45.

புதல்வர் : பிள்ளைகள், கோடி : தந்தம் சாதிப்பவளங்கள் : சிறந்த பவளங்கள். அனந்தரம் : பிறகு, அந்தரவழி : ஆகாசவழி. கவழிகை : திரைச்சீலை.

பககம்-46.

மூண்டது : உண்டாயிற்று முடித்தலையிருந்து : கிரீடத்தின் நுனியி னின்று, அரதனசதனம் : இரத்தினமுள்ள இடம் புயம் : தோள். வதனம் : முகம்; உறுக்குதல் : அதட்டுதல்; ஆழி : சக்கிரம் வறிதாக : பய னில்லாமல்.

பககம்-47.

பாணேபசாரம் பாணத்தைப் பிரயோகித்தலாகிய உபசாரம். 'விண் ணுலகையும் அரசாளக் கொடுப்பேன்' என்றது மங்கல வழக்கு பாகுடம் : திறைப்பொருள்; 'இது ப்ராப்ருதம்' என்னும் வடமொழிச் சிதைவு, கை யுறை : காணிக்கை இருதார்க்கு செலுத்தாதவர்களுக்கு பார்த்திவன் : அரசன். இயம்புமின் சொல்லுங்கள். நாணி : வெட்கமடைந்து.

பக்சம்-48.

வர்த்தமானம் வரலாறு சுவாலை : கொழுந்து, உளை : பிடரிமயிர். உகிர் : நகம். ஒளி வீசுகின்ற எயிறு : பல். தெரிமா : சிங்கம். பிரசித்த மான விலங்காதலின் இப்பேர் பெற்றது போலும். அடைகற்கள் : மலை யைச் சார்ந்துள்ள கல்லுகள். புடைபதா : புடைக்கப்பட்ட பதர். உரும் ஏறுண்ட : இடி மேல்வீழப்பெற்ற. கட்செவி : பாம்பு கண்களையே கா தாக உடையது என்னும் காரணக்குறி; இது சக்ஷுச்ரவா : என்னும் வட மொழியின் மொழிபெயர்ப்பு. உட்கி : பயந்து.

பக்கம் - 49.

பவனிவரல் : ஊர்கோலம் வருதல் நுந்தை : நும் தகப்பன் விண்டு-அகல. பிரிந்து - நீங்க. மறிசத : தடுக்கத வயப்புலி ; சிங்கம். இயக்குதும் - செலுத்துவோம். நலீஇ : வருத்தி; பொலிமதி : விளங்கு இதிலமதி - முன்னிலை யசை; " மியாயிக மோமதி " என்பது நன்னூல். பொருமுப்பு எழ : பூரிகதுததோளற; நகாயுதம் : நகத்தையே ஆயுதமாக வுடையது என்று சிங்கத்திற்குக் காரணக்குறி, செயிர்ப்பு. கோபித்து. முழை-குகை.

பக்கம் - 50.

வித்தகா : இங்கு, தூதர். வீய கெட. முழைஞ்சு : மலைக்குகை. உறழும : ஒக்கும். வலித்துப்போக : வலியச்செல்ல. கவான் : தொடை. இது 'கவீநீ' என்னும் வடசொற்சிதை வென்பர். கம்பலம் : இரத்தின கம் பளம். குவால் : கூட்டம். உவா - அரசயானை. எருக்கி : பதிந்து. பஞ் சாநநம். பரந்த முகமுடையது என்று சிங்கத்திற்குக் காரணக்குறி. சாரல் : மலைச்சாரல். அணியன : கிட்டியவன. வயப்போத்து : வலிய ஆண்சிங்கம், துறுகல் : நெருங்கிய கல், பிதிர் : பொடி. அத்தகடகம் :

அஸ்தகடகம் எனும் கையில் அணியும் வளை. குஞ்சி - ஆண்தலைமயிர். தொடர் கொண்டு திரித்து. கயிற்றினுற சடை, சேயதாய மேய - தூரத்திலுள்ள தாய்ப் பொருந்தின. காளி கொடியது என்பது பொருள்; சிங்கம். காயம் பனிக்க-உடல்நடுங்க. ஓட்டெடுத்தல் - ஓடிப்போதல் இளையகாளை: இங்கு, திவிட்டன; காளை - உவமையாகு பெயர்.

பக்கம் 51.

1. **உரை** —அங்கு-அப்பொழுது, கழல் - (அநத்த திவிட்டனுடைய) வீரக்கழல்கள், ஆர்த்தில - சபதிக்கவில்லை; கால்களும்—, நிலம் உற-பூமியிற் படவில்லை; முடங்க - மடங்கவுமில்லை, அழலும் - சொலிக்கின்ற, செம்சுடர் கடகம்-சிவந்த ஒளியையுடைய கடகமென்னும் அணியை (அணிந்த), கை அவை-கைகள், புடை-பெயரா—பக்கங்களில், அசையவில்லை; குழலும் குஞ்சியும்-நுனிசுரிந்தமயிர்முடியும், மாலையும்-பூமாலையும், கொளுவிய தொடரும் - (அக்குஞ்சியைக்) கட்டியகயிறும், எழுந்து - மேலெழுந்து, எழிலும் - அழகிய, தோளிலும்—, எருத்திலும் - பிடரியிலும், கிடந்தில - விழுந்து படிந்தனவில்லை.

குறிப்பு.—அவை - பகுதிப்பொருள் விகுதி. உம் சாரியை.

2. மரங்கள்—, வேரொடும் வீழ்ந்தென - வேரோடு கீழே விழுந்தனவாக, வளிதொடர்ந்து எழுந்த - காற்றுகளும் வரிசையாய் மேலே எழுந்தன; நிரந்த - கூட்டமான, மான்களும் பறவையும்—, நிலம் கொண்டு - தரையில் நின்றுகொண்டு, பதைத்த - துடித்தன, அரம்கொள் - அரம்என்னும் ஆயுதத்தையொத்த [மிகவும் கூர்மையான], வெம்பரல் - கொடிய பருக்கைக் கற்களையுடைய, அணிவரை - அழகிய மலையின், கொடுமுடி அவைதாம் - சிகரங்களதாம், உரம்கொள் - வல்லமையுடைய, தோளவன விரல் நுங்கிஉற - தோளையுடைய திவிட்டனுடைய விரல்பட்டுச் செல்லுதலால், உடைந்து ஒழிந்த - உடைபட்டு ஒழிந்தன.

குறிப்பு.—'வீழ்ந்தென' என்பது 'செய்தென' எனும் வாய்பாட்டு வினையெச்சம்.

வனதேவதை. காட்டிலுள்ள தெய்வம் கண்டீரம்: இது கண்டீரவம் என்றதன் திரிபு; கழுத்தில் ஓசையையுடையது எனச் சிங்கத்திற்குக் காரணக்குறி. அணடிய: நெருங்கிய. கேசரி. பிடரிமயிரை யுடையது எனச் சிங்கத்திற்குக் காரணக்குறி, எனவே, ஆண்சிங்கம். ஆரவாரம்: பேரிரைச்சல். நிலகம்பம் பூமிநடுங்கல். அரியரசு சிறந்தசிங்கம். கொடும்புலி: சிங்கம். மாபுலி என்பதுமிது. கெழும நிறைந்த மடங்கல்: ஆண்சிங்கம். பிலம் குகை. உதிரம் இரத்தம்

பக்கம் - 52.

விசும்பினர்: ஆகாயத்திலுள்ளவர் உடல் பனித்தனர்: தேகம் நடுங்கப்பெற்றனர் அறுகு - சிங்கம்; பேழ்கள் - பிளப்புக்கள்; அடிகாள் - பெரியோய், ஆளி: சிங்கம். மாள - இறக்க சேறும்: செல்வோம்; றும் - தன்மைப்பன்மை விகுதி.

உரை —1. கற்றவர் - படித்தவர்களும், கடவுள் தானம் சேர்ந்தவர் - கோயில் முதலிய இடத்தை அடைந்தவர்களும், களைகண் இலார் - திக்கற்றவர்களும், அறறவா - பொருளற்றவர்களும், அந்தணாளர் - பிராமணர்களும்,

அன்றியும் - கீழ்க்கூறியவர்களல்லாமலும், அனைய நீரார்க்கு - அத்தன்மையுடையவர்களுமாகிய இவர்களுக்கு, உற்ற ஓர் இடுக்கண் வந்தால் - பெரியதொரு துன்பம் வந்தால் உதவுதற்கு - (அதனைப் போக்கி) உதவுவதற்கு, உரித்து அன்று ஆயின் - உரியது அன்றாகும் ஆயின், பெற்ற இ உடம்பு தன்னால்—, பெறும்பயன் இல்லை.

உரை.—மன்னுயிர் வருத்தங் கண்டும்—, வாழ்வதே வலிக்கும் ஆயின் - (ஒருவன் அதைப் போக்காமல் தான்) வாழ்வதையே வலிமையாகக் கொள்வானாயின், அன்னவன் ஆண்மை ஆவது—, அலிபெற்ற அழகுபோலாம்—; 'யான்—, என்னை கொடுத்தும் - எனதுயிரைக் கொடுத்தாயினும், வையத்து இடுக்கண்நோய் கெடுப்பன் - உலகத்தவரது துன்பமாகிய வியாதியைப் போக்குவேன்', என்னும்—, நினைவே—, போலும் - ஓங்கும், நீரார் - தன்மையுடையவர், நிலமிசை—, நிலவி நின்றார் - (கீர்த்தியினால்) விளங்கி நின்றார்கள்.

பக்கம் - 53.

மகிழ்ந்தனர் : சந்தோஷம் மிகப்பெற்றனர். அச்சம் : பயம். இறுகப்புல்லி : கெட்டியாய்த் தழுவி. வனத்துகள் : காட்டுப்புழுதி. போற்றி : வாழ்க, இது வியங்கோள். வட்பலி : புலியினும் வன்மையுடையது என்ச்சிங்கத்திற்குக் காரணக்குறி.

பக்கம்-54.

கலியாணச் சருக்கம்.

திவிட்டனது கலியாணத்தைக் கூறுவது.

உரை.—செங்கண்மால் - சிவந்த கண்களையுடைய திருமாலின் அம்சமான திவிட்டன், சிங்கம் வென்று—, செழுமலர் திலதம் கண்ணி - அழகிய மலர்களாலாகிய சிறந்த முடிமாலையுடைய, திங்கள்மா வண்ணனோடும் - சந்திரன்போன்ற சிறந்த நிறமுடைய விசயனுடனே, திருநகர் பெயர்ந்தபின்னை - சிறந்த (தனது) பட்டணத்திற்குத் திரும்பிய பின்னர், அம் கண்மாற்கு உரிய - அழகிய கண்களையுடைய அத்திவிட்டனுக்குத் தக்க, நங்கை - மகளும், அரும்பெறல் அவட்கு - பெறுதற்கு அருமையானவளுமான அச்சுயம்பிரபை என்பாளுக்கு, தந்தை - தந்தையாகிய, வெம் கண்மால் களிறு அன்னான் தன் - கொடிய கண்களையுடைய பெரிய மதயானையை யொத்த சடியரசனது, திறம் - செய்தியை, இனி விளம்பல் உற்றேன்—.

தமராயினார் : பந்துக்கள். வாதகமானம் : ஒரு வித்தியாதர நகரம். சக்கிரி : அரசன். வச்சிரதாடன் : வச்சிராயுதம் போன்ற அடித்தலையுடையான். புரவலன் : தராபதி, அரசன். வேயினோர் : ஒற்றர். பண் உறுத்தல் : அலங்கரித்தல். இளவல் : தம்பி, இதில், அல் - பெயர்விகுதி.

பக்கம். 55.

அரிபுரம் : ஒரு வித்தியாதர நகரம். பொருநன் : அரசன், போர்செய்பவன், வீரன். வியாக்கிரரதன் : புலியை வாகனமாக வுடையவன். கன்னிமாடம் : கலியாணமாகாப்பெண்கள் வசிக்குமிடம். சேடியர் : தோழியர். பூஷணம் : அணி. மிளிரும் : விளங்கும். லகு : லேசு.

பக்கம் - 56.

மஞ்சிகை : பெட்டி. குப்பி : ஒருவகைப்பாத்திரம். எஞ்சல் இல் : குறைவில்லாத. கொம்பு : ஊதுகொம்பு. காகளம் : ஒருவகைவாத்தியம். 'பாராட்டுத்தாய்' என்பது முதல் 'செவிலித்தாய்' என்பது ஈறாக : கீழ்க் கூறிய ஐவகைத்தாயர். ஊர்தி : வாகனம். இரசிதகிரி : வெள்ளிமலை. இரணியவரை : பொன்மலை. காவுகள் : சோலைகள். காண்மதி : பார்ப்பாய்; இதில் மதி : முன்னிலையசை. ஆகாசஅயனம் : ஆகாசவழி. ஆங்கணார் : அவ்விடத்திருப்பவர். மங்குல் : மேகம். வங்கமலை : வெள்ளிமலை.

பக்கம் 57.

உரை.—1. இரைக்கும் - சப்திக்கின்ற, அம்சிறை பறவைகள் என - அழகிய இறகுகளையுடைய பறவைகள் போல, பெயர் - திரிகிற, இனம் வண்டுடை சூழ - கூட்டமாகிய வண்டுகள் பக்கத்திற் சூழ, நுரைகள் என்னும் அக்குழம்பு - நுரைகளாகிய அந்தச் சந்தனக்குழம்பை, கொண்டு - (தான்) கொண்டு எதிர்ந்து—, எழ நுடங்கிய - (அலைகள்) மேலே எழுந்து மடங்கும் தன்மையால், (கங்காநதியானது), திரைகரங்களின் அலைகளாகிய கைகளால், செழுமலை - செழுமையான மலைகளிலிருந்து கொண்டு வருகிற, சந்தனம் திரள்களை - சந்தனக்கட்டைகளின் கூட்டங்களை, கரைமேல் வைத்து—, அரைக்கும் - அரைக்கிறதுபோலும். மற்றும் - பின்னும், இது - இந்த ஆறானது, குணகடல் திரையொடும் பொருது அலலது - கிழக்கடலின் அலைகளோடு தாக்கி அல்லாமல், அவியாது-அடங்காது.

சவ்வியம் : இடதுபக்கம் பெயர்வது செல்லுவது. கலங்கள் : ஆபரணங்கள். அறிமின் : அறியுங்கள். பொன் உறழ் : பொன்னையொப்ப. மின் பிறழும் : ஒளிவீசும். கரதலம் : கையினிடம். நடம் மேற்குத்திக்கிற் செல்லும் ஆறு விளையாட்டு இழைப்பது - விளையாட்டைச் செய்வது.

உரை :—2. உயரும் சந்தனம் பொழில் - உயர்ந்துள்ள சந்தனச் சோலையை, அலைத்து—, ஒளிர் மணிகலங்களை - விளங்குகின்ற இரத்தினாபரணங்களை, உமிழ்ந்திட்டு வெளிப்படுத்தி, பெயரும் - பெயர்ந்து செல்லுகிற, தெள்திரை பிறங்கத்துள் - தெளிவான அலைகளாகிய மலையினிடத்து, பிணங்கிய - நெருங்கியுள்ள, பெருவரை அகில்தேக்கி - பெரிய மலையிலுள்ள அகிற்கட்டைகளைக் கொண்டுவந்து நிறைத்து, வயிரம் வேதிகம் மலைவது - (கரைகளிலுள்ள) வச்சிரமிழைத்த மேடைகளில் மோதுவது அன்றியும் (அச்சிந்து நதியானது) கோபுர வாய்தலின் - (சிவாலயத்துக்) கோபுர வாயிலின், படிதீண்டி - படியைச்சேர்ந்து, அயிரைவார் கரைகுடகடல் - மீன்களையும் நீண்டகரையையுமுடைய மேல்கடலின், திரையொடும்பொருது அலது அவியாது - அலைகளோடும் மோதியல்லாமல் அடங்காது.

'செல்வம்' என்றது இங்குச் சயம்பிரபையை. முகிற்படலம் - மேகக் கூட்டம். கருவரை - கரியமலை.

பக்கம் - 58.

கனன்று : கோபித்து. அளகம் : கூந்தல். அரிவை : பெண். இடந்து : கீண்டு. பகடு : ஆண்யானை. பிடிக்கணம் : பெண்யானைகளின் கூட்டம். இலங்குறும் : விளங்கும். அலங்கிருதி : அலங்காரம். திவளுதல் : அசைந்து விளங்குதல். விற்பனமயிலே : அறிவுள்ள மயில்போன்ற பெண்ணே ; இ

து இங்கே சுயம்பிரபையைக்குறித்தது. உழையவள் . சமீபத்திலிருப்ப வள். பந்தி : குதிரைச்சாலை. கொட்டில் . கொட்டகை.

பக்கம் - 59.

அனவரதம் . எப்பொழுதும். நும்பாடி . உமமுடையஇடம். வரையாது- அளவிடாமல்.

பக்கம்-60.

எய்தினமை அடைந்தமை. தந்தி தந்தத்தையுடையது என யானைக குககாரணக்குறி கந்து யானைகட்டுந்தறி. சால்நிகளம காறசங்கிலி. வரிபுரிபொருந்திய நீட்சியும் முறுக்குமபொருந்தின. கசசைகளவீக்கி : யா னைகக்ழுத்திடு கயிறறைககட்டி. கிடுகு : தேரின் ஓர உறுப்பு. புளகமபொரு ந்தி . கண்ணாடிகட்டி. பரவைத்தட்டு . அலைமானதததட்டு. புடைமிடைதல. பக்கங்களில் நெருங்குதல. மணிகசோவை மணிமாலை. கவரிஇணைந்து. மரைமயிரினால் செயயபபட்ட ஒரு தலைபாபரணததைப பொருந்தி. நாற றுக தொங்கவிடுக இதுபிரவினை. பூரணகும்பம : நீர் நிறைந்துள்ளகுடம். இருநிதி பெருஞ்செலவம். கணணுகம - குதிரை. மட்டு - வாசனை, தேன. பூங்கா - பூஞ்சோலை. பவனகவனம் . வாயு வேகம.

பக்கம் - 61.

செய்யுளுரை

திஙகளை இரணடு கூறுசெய்து - சநதிரனை இரண்டு பிளபபா க்கி, முன செறித்த போல - முன அமைத்தன போல, மஙகள வடிவின வந்த - மஙகள கரமான வடிவததுடன வந்த, வலன உயா வயிரம கோடு - வலலமை மிகுந்த உறுதியான தந்தஙகளையும, செமகளி விதித்த போலும - சிவந்த சந்தனக் குழமபினால் அமைத்தன போனற, செம்பொறி - சிவந்த முகபா புளளிகளையும, சிறு கண - சிறிய கணகளையு முடையதும், வெம களி - கொடிய களிப்பையுடைய, வியாழம வல்ல விறலது - புலியுடைத் தான வலிமையைத் தான உடையதுமாகிய, வேழம் வருக - பட்ட யானை யானையானது இங்குவராககடவது, என்றான்-என்று கட்டளையிட்டான.

தவளம - வெண்மை, கஞசக்கருவி - வெணகல வாத்தியம, நரம்புக்கரு வி-வீணைமுதலியன. மிடற்றுக் கருவி யென்றது பாடும் தொண்டையை.

பக்கம் - 62.

பற்றுத ஈடாகாத. வரமுண ' வராமுன.

பக்கம் - 63.

வினையம . வணககம. ஐக்கியம : ஒற்றுமை. மலையரசன் : வித்தியா தரராஜன.

செய்யுளுரை.

பொலம கலம புலம்ப - பொன்னாபரணங்கள சப்திக்கவும, ஆயம் புடை நின்று - தோழியார்களின கூட்டம் பககத்திற சூழ்ந்து நின்று, போ ற்று கூவ - வாழ்த்துக்களைச் சொலலவும், அலங்கலும குழலும் தாழ - மாலை களும கூந்தலும் தொங்கவும், அணிஞிமிறு அரவம் செயய-(அவறறில்) மொ

ப்கின்ற வண்டுகள் சபதம் செய்யவும், இலங்கல் - விளங்குகின்ற, அம்-அழகிய, ககனம் மாடத்து - ஆகாய மளாவிய உப்பரிகையின், எழுநிலை ஏறல் உற்றுன - ஏழாவது நிலைமையு அடைந்தவள், விலங்கலின் குவடு சேரும் - மலையினது சிகரத்தை அடைகின்ற, மெல் இயல் - மெல்லிய தன்மையையுடைய, தோகை போல்வாள் மயிலை யொத்தவளாயினள்.

காப்பு : கதவு சுட்டி . குறித்து. மீட்சல் ஆற்றுமை : திருப்பக்கூடாமல்.

பக்கம் . 64.

செய்யுளுரை.

தூமரு - பரிசுத்தம்பொருந்தின, நீலம் என்னுமமணி - நீலரத்தினம துணைாந்து அனைய - திரண்டாற்போன்ற, குஞ்சி - மயிர்முடியுடைய, காமரு காளை - அழகிய காளைபோலப்பவனுகிய திவிட்டன, தாமரை அனைய— கண்ணும் - கண்களையும், தடகையும் - விசாலமான கைகளையும், பவளவாயும் - பவளம்போன்றவாயையும், பூமருகண்ணி - அழகுபொருந்திய மாலையாகத் தொடுக்கத்தக்க, புதுபூவைமலர் - அப்பொழுதுமலர்ந்த காயாமபூ போன்ற, ஒளியும் - (தன்னுடைய) தேக காந்தியையும், காட்டி-காண்பித்து, கன்னிகண்களை - அபபெண்ணினது கண்களை, சிறைகொண்டிட்டான் தன வசமாக்கினன்.

பணிகள்திருத்துதல் - ஆபரணங்களை ஒழுங்குபடுத்தல். குறங்கு - தொடை, அந்தாபுரம் - அந்தபபுரம, காண்டற்கு அமைந்த - தரிசிபபதற்குத் தக்க, காடபுமங்கலங்கள் : இரகைஷகருத்தக்க மங்கலப்பொருளகள்.

பக்கம் - 65.

தாபதமகளிர . முனிவாமகளிர் கைத்தாயா-செவிலித்தாயார். இதன்வி சேடங் கீழ்கூறினும். சிவிகை : பல்லக்கு. பூவணை : புஷ்பசயனம இரட்டல்; வீசுதல். உழைகசலமகளிர : பரிசாரகபெண்கள்.

பக்கம - 66.

குறுமுறுவல் - புனசிரிபபு திருமொழிப்பணணிகாரம - அழகியவார்த்தையாகிய சிறறுண்டிவகை, துகிலிகைத்தொழில் - சித்திரமெழுதும்வேலை, சமைத்தல் - அமைத்தல், பணணல்.

பக்கம - 67.

வழிப்படல : பூசித்தல இளையநம்பி . இங்குத்திவிட்டன. அடிகள் : சுவாமி. அறறம் : சமயம.

செய்யுளுரை.

வெயயோன - சூரியன, விண்இயல - ஆகாயத்திற் பொருந்தின, உருவம் வீதிமேல் நின்று - அழகிய மேலிடத்தினின்றும், இழிந்து - இறங்கி, தண் இயல் - விசாலம பொருந்திய, விலங்கல் நெற்றி - (அஸ்த) மலையின சிகரத்தை, கதிர்என்னும் கையின் ஊன்றி - கிரணங்களாகிய கை

களால் ஊன்றிக்கொண்டு, மண் இயல் - பூமியிற் பொருந்திய, மரத்தின் சாகை நுதிபிடித்து - மரங்களின்கிளை நுனிகளைப் பிடித்துககொண்டு, அவையுமவிட்டு - (பிறகு) அவற்றையும விட்டுவிட்டு, பண் இயல - (தனனுடைய) இயறகையான குணமானது, பிறிது ஒனறாகி - மாறுபட்டு, பையவே மறைந்து போனான் - மெல்லமறைநது சென்றான..

பக்கம - 68.

மதனாஸ்த்திரம. மனமகபாணம்; மதன + அஸத்திரம எனபபிரிக்க. இது வடமொழித்தீர்க்க சநதி. வசமஅழிநது - சவாதீனம கெட்டு. சநதிரகிரணம : சநதிரன ஒளி (நிலா.) சாமம : ஏழரைநாழிகை கொண்டகாலம இதுயாமம என்றிருத்தலு முண்டு. பொருகாமம : மிகக ஆசையெனபது கருத்து. ஒருவாது தணியாமல, ருசித்த வாாத்தைகள் சநதோஷம் உறுவிக்கும் வாாத்தைகள. நியமம . செயகடன. நைமித்திகம : விசேடச் சடங்கு. ஒருத்தல : ஆண்யானை.

பககம் - 69.

இளையபெருமாள எனபது திவிட்டனை, அகனிகாரியம . விவாகத்திற செய்யும ஓமஙகள.

பாகம 70.

கோட்டம கோடு, வெள்ளையிடுதல அரிசி இடுதல குணக்கு - கிழதிசை. வாலவளையினறு · சுத்தனமான மண்டலம அமைதது. பரிதிசமிதைகள் பரிதிகளும மற்றுமவேண்டிம சமிதைகளும் ; பரிதிகள், கிழதிசை யொழிநததிசைகளில வைககபபடும சமிதைகள் சமிதை பலாசங்கொம்பு, அரசங்கொம்பு மாகலாம். கிரியை . சடஙகுகள். எரிவலம் வருதல : அக்கினியைச் சுற்றிவருதல். கன்னிதமர் : பெண்ணின உறவின முறையார். தியாகம : வரமபில்லாத கொடை. மணாட்டி . கல்லியாணப்பெண்.

செய்யுளுரை.

உலம பாராட்டும தோளான—திரண்டுள்ள கறறூணின தன்மையைத் (தன்னிடத்திற) கொண்ட தோள்களை யுடைய திவிட்டனானவன, ஒள் பூ குழலாளை : ஒளிபொருநதிய மலர்களைத் தரிதத கூநதலையுடைய சுயமபிரபையை, நலம் பாராட்டி — இனபத்தாற கொண்டாடி, நாகுஇளமுல்லை நகுவிக்கும-மிகவும இளைமயான முல்லைக் கொடியை மலரச் செய்கின்ற, வலம் பாராட்டி வந்தது—(பூமியைப) பிரதக்ஷிண யாகச்சுற்றி வருவதாகிய, ஓர்மாரிபுயல் ஒத்தான்—ஒரு கார்காலமேகத்தை யொத்தான்: குலம் பாராட்டும் கொம்பும—பிறந்த குலமும், புக்ககுலமுமாகிய இரண்டுகுலமும் கொண்டாடப் பெறற கொடிபோன்ற அப்பெண்ணும் , ஓா முல்லைக் கொடி யொத்தாள்—ஒருமுல்லைக் கொடியைப் போன்றாள்.

வசன சூளாமணிப் பகுதியுரை முற்றுப் பெற்றது.

சுபமஸ்து.

உ

முகவுரை.

இக்கதைச்சுருக்கம், பழைய தமிழ்க்காப்பியமைந்தனுள் மூன்றாவதும், பௌத்தமத பிக்ஷுணியாகிய மணிமேகலை யென்பவளின சரித்திரத்தை விரித்துக்கூறுவதுமாகிய மணிமேகலையென்னும் நூலிற் கூறப்பட்டுள்ள சரித்திரத்தின் சுருக்கமாதலால், மணிமேகலைக்கதைச்சுருக்கமென்று பெயர்பெற்றது.

[ஐந்துகாப்பியங்களாவன: சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியென்பன.]

இதனால், பௌத்தமத ஸம்பிரதாயங்களும், பல நூற்றாண்டுகளுக்குமுன் இத்தமிழ்த்தேயம் பலவகைக் கல்வி, பாஷாபிமானம், சிற்பம், ஸங்கீதம், வாணிகம், அந்நியதேசயாத்திரை, சமயகொள்கை, தேவாலயபரிபாலனம், தெய்வவழிபாடு, தவவொழுக்கம், கற்பு, பலவகையான நீதிகள், அரசாட்சி, துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம், இராசவிசுவாஸம், நாட்டுவளம், ஆற்றுவளம், நகரவளம் முதலியவற்றில் இன்ன இன்னவண்ணமாகச் சிறப்புற்றிருந்ததென்பதும் நன்கு அறியலாகும்.

மாணாக்கர்களுடைய ஸௌகரியங்களைக்கருதி, அரும்பதவுரையும் அபிதானவிளக்கமும் நூதனமாக எழுதி இக்கதைச்சுருக்கத்தின் பின்னர்ச் சேர்க்கப்பெற்றுள்ளன.

அன்புவைத்து இக்கதைச்சுருக்கத்தை 1907 - ஆம் வருஷத்து எப் - ஏ பரீக்ஷைக்குப் பாடமாக நியமித்த தமிழ்ப்பாஷாபிமானிகளாகிய சென்னை யூனிவர்ஸிடியார்பால் மிக்க நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன்.

இங்ஙனம்

சென்னை,
5—2—06.

வே. சாமிநாதையன்.

MARAIMA[...] LI[...] MAD[...]

இப்புத்தகத்திலடங்கியவை.

பக்கம்.

1. மணிமேகலைக்கதைச்சுருக்கம். ௧
௧. விழாவறைகாதை. ௧
௨. ஊரலருரைத்தகாதை. ௨
௩. மலர்வனம்புக்ககாதை. ௩
௪. பளிக்கறைபுக்ககாதை. ௪
௫. மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை. ... ௮
௬. சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை. ௧0
௭. துயிலெழுப்பியகாதை. ௧௫
௮. மணிபல்லவத்துத் துயருற்றகாதை. ௧௬
௯. பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை. ௧௭
௧0. மந்திரங்கொடுத்தகாதை. ௧௯
௧௧. பாத்திரம்பெற்றகாதை. ௨௧
௧௨. அறவணர்த்தொழுதகாதை. ௨௪
௧௩. ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை. ௨௬
௧௪. பாத்திரமரபுகூறியகாதை. ௨௯
௧௫. பாத்திரங்கொண்டு பிச்சைபுக்ககாதை.... ... ௩௧
௧௬. ஆதிரைபிச்சையிட்டகாதை. ௩௩
௧௭. உலகவறவிபுக்ககாதை. ௩௫
௧௮. உதயகுமரன் அம்பலம்புக்ககாதை. ௩௭
௧௯. சிறைக்கோட்ட மறக்கோட்டமாக்கியகாதை. ... ௩௯
௨0. உதயகுமரனை வாளாலெறிந்தகாதை. ௪0
௨௧. கந்திற்பாவை வருவதுரைத்தகாதை. ௪௩
௨௨. சிறைசெய்காதை. ௪௬
௨௩. சிறைவிடுகாதை. ௫௧
௨௪. ஆபுத்திரனுடனடைந்தகாதை. ௫௪
௨௫. ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்தகாதை. . . ௫௭
௨௬. வஞ்சிமாநகர்புக்ககாதை. ௬0
௨௭. சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.... ... ௬௨
௨௮. கச்சிமாநகர்புக்ககாதை. ௬௨
௨௯. தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை. ... ௬௬
௩0. பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை. ௬௭
2. அரும்பதவுரை. ௬௮
3. அபிதானவிளக்கம். ௮0

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫.	௧௦.	என்.	என்று.
௧௨.	௫.	செத்தோரை.	சாவோரை.
௬௨.	௧௦.	கொடுத்த.	கேட்ட.

உ

பரமபதி துணை.

மணிமேகலைக்கதைச்சுருக்கம்.

வெண்பா.

"படிக நிறமும் பவளம்போல் வாயுங்
கடிகமழ்செந் தாமரைபோற் கண்ணும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்நினைந்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி."

க.—விழாவறைகாதை.

பண்டைக்காலத்திற் காவிரிப்பூம்பட்டினத்தை வளமுறச்செய்வித்தற்கு நினைந்த அகத்தியமுனிவருடைய கட்டளையின்படி, தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியனென்னுஞ்சோழன், இந்திரனைவணங்கிக் குறையிரந்து அவனனுமதிபெற்று இருபத்தெட்டுநாள் அந்நகரில் நடத்தியதும், அச்சோழன்காலத்திற்போலவே பிற்காலங்களில் அவன்பரம்பரையோரால் வருடங்கள்தோறும் நடத்தப்பெற்றுவந்ததுமாகிய இந்திரவிழாவை நடத்தக்கருதிய அந்நகரத்துள்ள பல சமயவாதிகளும் பிறரும் ஒருங்குகூடி, "இந்திரவிழாவை நாம் மறந்தால் முசுகுந்தனது துயரைப் போக்கியதான நாளங்காடிப்பூதம் துன்பஞ்செய்யும்; பாவிகளைப் புடைத்துண்பதாகிய சதுக்கப்பூதம் இந்நகரை விட்டுநீங்கும்; ஆதலால், இவ்விழாவை நடத்துவேமாக" என்று தம்முள் நிச்சயித்துக்கொண்டு, அவ்விழா நடக்கப்போதலை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குச்சொல்ல, அவன், வச்சிரக்கோட்டத்துள்ள முரசை யானையின் பிடரிலேற்றி, முதலில் ஊரைவாழ்த்தி, "மேகம் மாதந்தோறும் மும்மழைபொழிக; அரசன் செங்கோலினனாகுக; அறிஞர்களே, இந்திரவிழா நடக்குங் காலத்திற் சுவர்க்கலோகம் வறிதாகும்படி எல்லாத்தேவரும் அதனைநீங்கி இங்கே எழுந்தருளுவாரென்பது பெரியோர்க

ளுடைய துணிபாதலால், வீதிமுதலியவற்றிற் பூரணகும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவைவிளக்குகளும் ஆகிய இவற்றைப் பரவ வைத்திடுமின்; குலைக்கமுகும் குலைவாழையும் கரும்பும் வஞ்சிக்கொடியும் பூங்கொடியும் ஆகிய இவற்றைக் கட்டவேண்டிய இடங்களிற் கட்டுமின்; தூண்களில் முத்துமாலைகளை நாற்றுமின்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புமின்; துகிற்கொடி வகைகளை மாடங்களிலும் வாயில்களிலும் கட்டுமின்; சிவபெருமான்முதல் சதுக்கப்பூதமிறுதியாகிய தெய்வங்களுறையுங் கோயில்களிற் செய்யவேண்டிய காரியங்களை ஏற்பச்செய்யுமின்; தருமோபதேசஞ்செய்ய அறிந்தவர்களே, பந்தரிலும் அம்பலங்களிலுஞ்சென்று பிரசங்கம்புரிமின்; சமயவாதிகளே, வித்தியாமண்டபத்தையடைந்து இருத்தற்குரிய இடத்திலிருந்து வாதம்புரிமின்; யாரிடத்தும் பகைமையும் கோபமுங்கொள்ளன்மின்" என்றுகூறி முரசறைந்து இந்திரவிழாவைத் தெரிவித்தான்.

உ.—ஊரலருரைத்தகாதை.

பின்பு, காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்றது; அவ்விழாக்காலத்திற் பண்டைவழக்கப்படியே ஆடுதற்பொருட்டு மணிமேகலையும் மாதவியும் வாராமையால் மனம் புழுங்கிய சித்திராபதி, வயந்தமாலையையழைத்து, "நீ மாதவிபாற்சென்று விழாவிற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார் கூறும் பழிமொழியை அவளுக்குச்சொல்லிவா" என்று அனுப்ப, அவள்சென்று மணிமேகலையோடு மாதவியிருந்த மலர்மண்டபத்தையடைந்து, அங்கே தவத்தால்வாடிய மாதவியினுடம்பைக்கண்டு வருத்தமுற்று அவளைநோக்கி, "நீ உன் மகளுடன் இந்திரவிழாவிற்குவாராமலும், உன்மரபிற்கு ஒவ்வாத தவவொழுக்கம்பூண்டிருத்தல்பற்றி ஊரார்கூறும் பழிமொழிகள் இன்னவை" என்றுகூற, மாதவி, "கணவன் கொலையுண்டதற்குப்பொறாளாய் மிகச்சினந்து மதுரையை யெரித்த பத்தினிக்கடவுளாகிய கண்ணகியினுடைய மகள் மணிமேகலை, தவவழியிற்செல்லுதற்கு உரியளேயன்றி, மிகவும் இழிந்த பரத்தைமைத்தொழிலுக்கு உரியளல்லள்; ஆதலின்,

அவள் அங்கேவாராள்; நான் இங்கேவந்து பௌத்தாசாரிய ராகிய அறவணவடிகளைவணங்கி, என்காதலன் மதுரையிற் கொலையுண்டதுமுதலிய பெருந்துன்பத்தை வருந்திச்சொல்லி முறையிட்டேன்; முறையிட்ட எனக்கு, அவர்

“பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிக” (சுசு - சுஎ.)

என்று நால்வகைவாய்மைகளையும அருளிச்செய்து, பஞ்ச சீலத்தையும் உபதேசித்து, “இவற்றைக்கடைப்பிடி” என் சொல்லி என்னைத் தவவழியிற்புகுத்தினராகலின, நானும் அங்கே வருதற்கு உரியேனல்லேன்; இச்செய்தியை என் தோழிமார்களுக்கும எனநற்றாய் சித்திராபதிக்கும சொல” என்றுகூற, அதுகேட்ட வயந்தமாலை, பெறுதற்கரிய மாணிக கத்தைக் கடலில்வீழ்த்தியவர்போலச செயலற்றுமீண்டு சித்திராபதியிடமசென்றாள

௩.—மலர்வனம்புக்ககாதை.

இங்கே மாதவி வயந்தமாலைக்குச்சொல்லிய வருத்தச் சொல்லைக்கேட்ட மணிமேகலைக்கு அகக்கேள்விவழியாகப பற் றறுதற்குரிய நற்காலம (ஏதுநிகழ்ச்சி) வந்துற்றமையால, அவள, தன்னுடைய தாய்தந்தைகளான கண்ணகிக்கும் கோ வலனுக்கும மதுரையிலநேர்ந்த துயரசசெய்தி தன்காதுகளைச் சுட மனங்கலங்கி அழுது சிந்துகின்றகண்ணீரால் தான் தொடுக்கின்றமாலையை நனைத்துககொண்டிருப்ப, மாதவி, அதனைக்கண்டு கண்ணீரைத் துடைத்து அவளுடைய துக்கத்தை ஒருவகையாக மாற்றநினைந்து, “இப்பூமாலை உன்கண்ணீர்க் கலப்பால் தூய்மையொழிந்ததாதலின், வேறுமாலைதொடுத் தற்கு நீ சோலைசென்று புதுமலர்பறித்துவா” என்றாள்.

அதனைக்கேட்ட சுதமதி, மாதவியைநோக்கி, “தாய்தந்தை யர்க்கு நேர்ந்த பெருந்துன்பத்தைக்கேட்டு மிகக துக்கத்தை யடைந்த மணிமேகலையின கண்ணீரைககாணிற் காமன் தனது படைக்கலங்களை எறிந்துவிட்டு நடுங்குவான்; இப்பாவையை ஆடவர் புறத்தே காண்பாராயின், விட்டுநீங்குவரோ? நீங் கார்; இயற்கைத்தன்மைகுன்றுவர்; குன்றமல திற்பாராயின்,

அவர்கள் பேடியரன்றோ? ஆதலால், இவளை இப்பொழுது புறத்தே பூப்பறித்தற்குத் தனியே அனுப்பலாகாது; இந்நகரத்தில் நான்வந்ததற்குரிய காரணங்கூறுவேன்; கேட்பாயாக: சண்பைநகரத்துள்ளானாகிய கௌசிகனென்னும் அந்தணனுடைய மகளாகிய யான், தனியேசெல்லுதற்கு அஞ்சாமல் ஆராய்ச்சியின்றி ஒரு சோலையிற்சென்று பூப்பறித்தேன்; அப்பொழுது இந்திரவிழாவைக்காண்டற்கு இந்நகரைநோக்கி ஆகாயவழியே வரும் மாருதவேகனென்னும் வித்தியாதரனொருவன் என்னைக் கண்டு உடனே எடுத்துக்கொண்டு மேலேசென்று, தன்வயமாக்கிச் சிலநாள்கழித்தபின் இந்நகரத்தே என்னைவிட்டுவிட்டு நீங்கித் தன் நகரம்போயினன்; மகளிர் தனியேசெல்லுதலாலுண்டாகுந்தீங்கு இத்தன்மையது; ஆதலால், மணிமேகலை தனியேபோய்ச் சோலையிற் பூப்பறித்தல் தவறாகும். இவளுடன் யாரேனும்செல்லவேண்டும்; இலவந்திகைச்சோலைக்குச்சென்றால் அரசனுடைய பக்கத்திலுள்ளார் அங்கிருப்பர்; உய்யானத்திற்குச் செல்லலாமோவெனின், அதில் தேவர்களாலன்றி மனிதர்களால் விரும்பப்படாதனவும் வண்டுகள் மொய்க்கப் பெறாதனவுமான மலர்களையுடைய மரங்களெல்லாம் வாடாத பூமாலைகளைத்தூக்குதலால், "இவ்வனம் பாசக்கையையுடைய பூதங்களாற் காக்கப்படும்" என்றுநினைந்து அவ்வனத்தை அறிவுடையோர் அடையார்; சூரியகிரணத்தாற் சிறையிழந்த சம்பாதியிருந்த சம்பாதிவனமும், காவிரியின் தந்தையாகிய கவேரனிருந்த கவேரவனமும் மிக்க முதுமையையுடையனவும் தீண்டிவருத்துவனவுமாகிய தெய்வங்களாற் காக்கப்படுதலின், அவற்றினிடத்தும் அறிவுடையோர் செல்லார்;

அருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவ னாணையிற் பன்மரம் பூக்கும் (டுக - சுக)

உவவனமென்று ஒருவனமுண்டு; அவ்வனத்தில் தன்னகத்துள்ளோருடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்களுருவங்களைமட்டும் வெளிப்படுத்துவதாகிய பளிக்குமண்டபம் ஒன்றுண்டு; அம்மண்டபத்தினுள்ளே மாணிக்கச்சோதிபரந்த பதுமபீடம் ஒன்றுண்டு; அப்பீடத்திலிட்டால் அரும்புகள் மலரும்; பலவருடஞ்சென்றாலும் அதில் இட்ட மலர்கள்

வாடா; அம்மலாகளில் வண்டுகள் மொய்யா; இதுகாறும் அதன் பெருமையை உனக்குச்சொல்ல மறந்தேன்; கேட்பாயாக: ஒருதெய்வத்தை நினைந்தோர் அததெய்வத்தின் அடிகளைத்தியானிதது மலர்களை அப்பீடத்திற்சேர்ததால் அம்மலர்கள் அபபீடததை நீங்கி அததெய்வததின் அடிகளிடததே செல்லாநிற்கும்; யாதொரு நினைப்புமின்றி அவறறை அப்பீடததே சேர்பபின், அவைகள அதனைவிட்டு நீங்கா; இதற்குக்காரணம் யாதென்று வினவுவாயாயின், சொல்லுவேன்: "செய்யும கருமங்கள் மனததோடு கூடாதவிடத்தும் அவை காபலிக்கும" என்னும விரதிகள் துன்பமடையவும், "மனத்தோடு கூடாதவழிக கருமங்கள் பலியா" என்போர்க்குத திருஷ்டாந்தமாகவும் மலரை இட்டுக் காட்டுதறகு மயனென்னும தெய்வததச்சனால் அப்பீடம் நிருமிக்கபபட்டதாகும்; அவ்வனததிலன்றி உனமகள வேறுவனங்களிற் செல்லுதறகு உரியளலலள. அவளோடு பூபபறிததறகு நானும துணையாகச் செலவேன்" என்று சொலலிவிட்டு மணிமேகலையோடு சோந்து சுதமதி போகும்பொழுது, உண்ணுநோன்பியொருவனைத தொடர்ந்துநின்று, "ஐய, இதனை உண்ணும்; உண்டால, காற்றுபபுகாத அறையிற புகுந்தவரைபபோலே அழுக்குடைய உடமபிற் புகுந்து வருந்திககொண்டிருக்கும் உம்முடைய உயிா அவ்வருத்தமொழிந்து மிக்க இன்பததைத அடையாநிற்கும்; ஆதலால, இதனையுண்டு தெளிக" என்று கள்ளையுண்ணும்படி வற்புறுத்திககூறும் களிமகன்பின்னே வியபபுற்றுச்செல்லும் சனங்களும, ஒரு பிததனுடைய பல வகைபபட்ட விகாரசசெயல்களைககண்டு வருந்தி நிற்கும் சனங்களும், பேடென்னுங் கூததைக்கண்டுநிற்கும் சனங்களும், தெருவின் இருபுறத்துமுள்ள மாளிகைகளில் எழுதப்பட்டுள்ள சிததிரங்களைக்கண்டு வியந்துநிற்கும சனஙகளும, சிறுதேரின் மீது செய்துவைக்கபபட்டுள்ள யானையின்மேற் சிறுவாகளையேற்றி மகளிர் பாராட்டுதலைக கண்டுநிறகும் சனங்களும் ஆகிய எல்லோரும, முன்னம் விராடநகரததிற் பேடிவடிவங்கொண்டு சென்ற அருச்சுனனைக்கண்டு வியந்து சூழ்ந்துகொண்டவர்களைப போல மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டு, "மிக்க அழகையுடைய இவளைத தவவழியிறபுகுத்திய

தாய் மிகக்கொடியவள்; இவள் பூப்பறித்தற்குச் சோலையிற் புகுவாளாயின், ஆங்குள்ள அன்னப்பறவைகள் முதலியன இவள் நடைமுதலியவற்றைக் கண்டு என்னபாடுபடா" என்று இவைபோல்வனவற்றைச் சொல்லி அவளுடைய அழகைப் பாராட்டிக்கொண்டு மிகவும் வருந்தி நின்றனர்; மணிமேகலை, சுதமதியோடு மெல்லச்சென்று உவவனத்தில் மலர்கொய்தற்குப் புகுந்தாள்.

௪.—பளிக்கறைபுக்ககாதை.

புகுந்தவள், அச்சோலையின்வளங்களையும் ஆங்குள்ள பொய்கையினழகையும் சுதமதிகாட்டக் காண்பாளாயினள்.

அவள் அங்கே அப்படியிருக்க, மதவெறிகொண்டு தெருத்தோறும் சனங்களை வருத்தித் திரிந்ததான காலவேகமென்னும் யானையின் மதத்தையடக்கித் தேரேறிச் சேனையுடன் வரும் உதயகுமரன், நாடகக்கணிகையர்வீதியில் ஒரு மாடத்தே மலரணைமேற் காதற்பரத்தையொருத்தியோடு, யாழின் கோட்டைத்தழுவிக்கொண்டு மயங்கிப் பாவைபோலிருந்த எட்டிகுமரனைத் தெருப்பக்கத்திலுள்ள சாளரவழியாற் கண்டு, "நீ அடைந்த துன்பம் யாது" என்றான். உடனே அவன் துணுக்குற்றெழுந்து விரைந்து அருகேசென்று உதயகுமரனைவணங்கித் துதித்து, "இயற்கையழகுகெட்டு மலர்வனத்திற்கு இவ்வீதிவழியே நடந்துசெல்லும் மணிமேகலையைக் கண்டேன்; கண்டவுடன் அவளது தந்தையாகிய கோவலன் மதுரையிலடைந்த கொடுந்துன்பம் நினைவிற்கு வந்து என்மனத்திண்மையைமாற்றி இந்த யாழிலுள்ள பகைநரம்பில் என்கையைச் செலுத்தியது; இதுவே நான் அடைந்தவருத்தம்" என்று சொல்ல, பலநாளாக மணிமேகலையை விரும்பிக் கொண்டேயிருந்த உதயகுமரன், அவன்சொல்லால், அவள் சோலைசென்றுளென்பது தெரிந்து மகிழ்ந்து, "அங்கேபோய் மணிமேகலையை என் தேரிலேற்றிக்கொண்டு வருவேன்" என்று அவனுக்குச் சொல்லிவிட்டுத் தேரைச் செலுத்திக் கொண்டுசென்று உவவனத்தின் மதிலவாயிலையடைந்தான்.

மணிமேகலை, அத்தேரொலியைக்கேட்டுச் சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்மேல் மிக்கவிருப்பமுடையவனெ

ன்று மாதவிக்கு வயந்தமாலை சொல்லியதை முன்னங்கேட்டுளேன்; இஃது அவனுடைய தேரொலிபோலும்; இத்துன்பத்திற்கு யாதுசெய்வேன்" என்றாள்; அதைக்கேட்ட சுதமதி, அவளை ஆங்குள்ள பளிக்கறையிற் புகுத்தித் தாழக்கோலிட்டுக்கொண்டு உள்ளேயிருக்கச்செய்துவிட்டு, தான் அப்பளிக்கறைக்கு ஐந்துவிற்கிடைத்தூரத்தே நின்றாள்; அங்ஙனம்நின்ற சுதமதியைச் சோலையினுள்ளேவந்த உதயகுமரன் கண்டு, "யாருமில்லாத இவ்விடத்தே நின்றாய்; நீ மணிமேகலையுடன் வந்தாயென்று அறிந்துகொண்டேன்; அவள் முதுக்குறைவுற்றனளோ? அவளுடைய செவ்வாய் நகைத்தலைப்பெற்றதோ? கண்கள் பிறழ்ந்து உலாவி வேட்கையைப் புலப்படுத்துமோ? அவள் பௌத்தசங்கத்தாரிருப்பிடத்தை நீங்கி இவ்விடம்வந்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்" என்று தனது வேட்கைதோன்ற வினவினன்.

அப்பொழுது சுதமதி, வாயிலில்லாத அறையில் அகப்பட்டோர் போல மனமவருந்தி, "இளமைப்பருவத்திலேயே முதுமைவேடம் பூண்டு வழக்கைக்கேட்டு உண்மையை வெளிப்படுத்திய சோழன்கரிகாற்பெருவளத்தானுடைய வழித்தோன்றலே, நீ ஆண்டில் இளையையாயினும் அறிவில் முதியையன்றோ? உனக்கு மகளிர் தெரிவித்தற்குரியனவும் உளவோ? ஆயினும் ஒன்று தெரிவிப்பேன்; கேட்டருளுக:—

வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (கக௩ - கஉக).

என்று உடம்பினியல்பைக்கூறினள்; அவள் இங்ஙனங்கூறிய இனியவார்த்தை உதயகுமரனதுகாதை அடையுமுன்னே பளிக்கறையுள்ளேயிருந்த மணிமேகலையினுருவம் அவன் கண்ணுக்குத் தோற்றியது.

ரு.—மணிமேகலாதெய்வம் வந்துதோன்றியகாதை.

தோற்றியவுடன் அவ்வடிவத்தை மணிமேகலையின் வடிவமென்று நிச்சயித்து அப்பளிக்கறையினுள்ளே சென்றடைதற்கு நினைந்த உதயகுமரன், அதன்வாயில் காணப்படாமையால் அலைந்து இன்னவிடத்திலுள்ளதென்பதை அறிந்துகொள்ளுதற்குப் பளிக்குச்சுவரைக் கையால் தடவிக்கொண்டு சூழ்ந்துவந்தான்; வந்தவன், சுதமதியைப்பார்த்து, "மணிமேகலை எத்திறத்தினள்? சொல்" என்றான்; என்றவனுக்குச் சுதமதி, "அவள் தவவொழுக்கமுடையள்; குற்றஞ்செய்தாரைச் சபிக்கும்வன்மையையுமுடையள்; சிறிதும் காமவிகாரமில்லாதவள்; ஆதலின், நீ அவளை விரும்புதல் தக்கதன்று" என்று கூறினள்; கூறவே "அவள் எத்தன்மையளாயினும் ஆகுக; எப்படியும் எனக்கு உரியளாகக்கடவள்" என்று சொல்லிக்கொண்டுசெல்பவன், மீட்டும் சுதமதியைப்பார்த்து, "அறவொழுக்கம்பூண்ட சமணமாதர்களின் நடுவே ஒரு வித்தியாதரனால் இடப்பட்டாய்" என்று எல்லாராலுங்கூறப்படும் நீ அவரை நீங்கிப் பௌத்தசங்கத்தைச்சார்ந்த மாதவியின் மகளுடன் வந்ததற்குக் காரணம் யாது? சொல்லுவாய்" என்றான்.

அதுகேட்ட சுதமதி, "அரச, யான் சண்பைநகரத்துள்ள கௌசிகனென்னும் அந்தணனுடையமகள்; என் இளமைப் பருவத்தில் அன்னையிறந்தாள்; அவளிறந்தபின்பு தந்தையால் ஆதரிக்கப்பட்டுவந்த நான் ஒருசோலையிற்சென்று தனியே நின்று பூக்கொய்கையில் என்னை விரும்பி ஆகாயத்தே எடுத்துச்சென்று தன்வயமாக்கிக்கொண்ட வித்தியாதரனொருவனால் இடப்பட்டு இந்நகரத்திருந்தேன்; இதையறியாத என் தந்தை என்னைக்காணாமல் வருந்தித் தேடிக்கொண்டே கன்னியாகுமரியாற்றிற்கு நீராடச்செல்பவர்களோடு சென்றார்; செல்லுகையில் இடையிலுள்ளதான இந்நகரச் சங்கமுகத்துறையில் நீராடுதற்கு அந்தணர்களோடுவந்து என்னை இந்நகரிற்கண்டு, 'நீ இங்கே எப்படிவந்தனை' என்றுசொல்லி வருந்தி, அந்தணர்களோடிருத்தற்கு நான் தகுதியில்லேனாயினும் என்னிடத்து மிக்க அன்புடையவராதலின், அவர் என்னைக் கைவிடாத

வராகி மனைகடோறும் பிச்சையெடுத்து உண்பித்துத் தாமுமுண்டு பொழுதுகழிப்பாராயினர்; அப்படியிருக்கையில், ஒருநாள், அவர் பிச்சையெடுத்தற்குச் செல்லும்பொழுது இளங்கன்றையுடைய ஒருபசு அவரைமுட்டி வயிற்றைக்கிழித்துவிட்டது; அதனாற் சரிந்தகுடரைக் கையிலேந்திக்கொண்டு, நானிருந்தவிடமென்று முன்பு அறிந்தவராதலால் சமணப்பள்ளியிற்புகுந்து, "முனிவர்களே, யான் உங்களடைக்கலம்; என்னைப் பாதுகாக்கவேண்டும்" என்று முறையிட்டார்; அதைக்கேட்ட அவர்கள் சினந்து அவரை என்னோடும் புறத்தே தள்ளிவிட்டனர்; நாங்களிருவரும் மிகத்துக்கமுடையவர்களாய்ப் புறவீதியிற்சென்று, "கதியற்ற எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாரேனுமுண்டோ?" என்று புலம்பி முறையிட்டேம்; அப்பொழுது, மனைகடோறுஞ்சென்று ஐயமெடுக்கும் பாத்திரத்தையேந்திய கையையுடையவனும் முழுமதிபோன்ற முகத்தினனும் பொன்னிறமுள்ள சீவரவாடையனுமாகிய சங்கதருமனென்னுமுனிவன் விரைந்துவந்து, "என்ன துன்பமடைந்தீர்கள்" என்று எம்மை அருளுடன்பார்த்து இனியமொழிகளைக் காதுகளில் நிறைத்து எம்மனத்தைக்குளிர்வித்து உடனே தன்கையிலுள்ள பிச்சைப்பாத்திரத்தை என் கையிற்கொடுத்துவிட்டு என்தந்தையின் துன்பம் முற்றுமநீங்கும்படி அவரைத் தழுவியெடுத்துக்கொண்டுசென்று பௌத்தசங்கத்தாரிருப்பிடத்தைக்காட்டி என்தந்தையின் மரணத்துன்பத்தையும் நீக்கினன்; அம்முனிவன் எனக்குச் செவியறிவுறுத்திய,

எங்கோ னியல்குண னேதமில் குணப்பொரு
ளுலக நோன்பிற் பலகதி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதி ராழி திறப்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன் (௭௧ - ௭௭.)

பாதங்களையே என்னுடைய நாவானது இடைவிடாமற் பாராட்டுமேயல்லாமல் வேறொன்றையும் சொல்லவறியாது; அது முதல், பௌத்தசங்கத்தைச்சார்ந்திருந்த மாதவியிடத்தில்

உறைவேனாயினேன்; அதனால இவளுடன்வந்தேன்” என்று கூறினள்; அதுகேட்ட உதயகுமரன், “உனதியல்பை அறிந்துகொண்டேன்; மணிமேகலையைச் சித்திராபதியால் இனிச் சேர்தலுங்கூடும்” என்று சொல்லிவிட்டுக் காமபரவசனாய் அச்சோலையினின்றும் போயினன்; போனவுடன் மணிமேகலை பளிக்கறையினின்றும் வெளியேவந்து சுதமதியைநோக்கி, “உதயகுமரன், அனபிலனென்றும் தவவுணர்ச்சியிலலாதவனென்றும வருணக்காப்பிலனென்றும விலைமாதென்றும என்னைஇகழ்ந்தானென்று நினையாமல், அவன்பின்னே எனனுடைய நெஞ்சமானது செல்லுதலுற்றது; இதற்குக் காரணம் யாது? காமத்தினியல்பு இதுவோ” என்று சொலலிககொண்டுநின்றாள்; நின்றபொழுது, இந்திரவிழாவைக காணுதலுற்ற மணிமேகலாதெய்வம், அவாகளுககுத்தெரிந்தவளும் மாயவித்தைசெய்பவளுமாகிய ஒரு மடந்தை வேடம்பூண்டு அச்சோலையையடைந்து பளிக்கறையிலுள்ள ஸ்ரீபாதபீடிகையை வலங்கொண்டு உயர எழும்பிநின்று,

“புலவன் தீர்த்தன் புண்ணியன் புராண
னுலக நோன்பி னுயர்ந்தோ னென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோ யேம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
வாயிர வாரத் தாழியன் திருந்தடி
நாவா யிரமிலே னேத்துவ தெவன்” (௯௮ - ௧௦௫)

என்று துதிக்கததொடங்கியது. இங்ஙனம துதித்துக்கொண்டிருக்கையிற் பகற்காலம்நீங்க அந்திமாலை வந்தது.

௯.—சக்கரவாளக்கோட்டமுரைத்தகாதை.

வந்த அந்திமாலைபபொழுது நீங்க, சந்திரன் உதயமாயினன; மணிமேகலாதெய்வம, மீட்டும்,

ஆதி முதல்வ னறவாழி யாளவோன்
பாத பீடிகை பணிந்தன ளேத்தி, (௧௧ - ௧௨)

அங்கே வாடிநினற சுதமதியைபபார்த்து, “நீங்கள இங்கேநின்றதற்குக் காரணம் யாது? என்னதுன்பமடைந்தீாகள?” என்று கேட்க, சுதமதி உதயகுமரன் மணிமேகலையைவிரும்பிச சொ

ல்லிய சொல்லையும், பின்பு சித்திராபதியால் அவளைப் பெறலாமென்று அவன் எண்ணிச்சென்றதையும் கூறினள்; கூறலும், அத்தெய்வம், அவளைப்பார்த்து, “உதயகுமரனுக்கு மணிமேகலைபாலுள்ள ஆசை சிறிதும் தணிவுற்றிலது; ‘இது முனிவர்களுடைய தவவனம்; இதில் யாம் தீங்குசெய்யலாகாது’ என்றெண்ணியே அவன் இச்சோலையைநீங்கினன்; இவள் இதனைக்கடந்துசெல்வளாயின், புறவீதியில் அவன் இவளை அகப்படுத்திக்கொள்ளுவான்; இஃது உண்மையே; நீங்கள் இச்சோலையைச்சூழ்ந்த மதிலின் மேற்றிசைக்கண்ணதாகிய சிறியவாயில்வழியேபோய் முனிவர்களுக்கிருப்பிடமாகிய சக்கரவாளக் கோட்டத்திற் செல்லுக; சென்றால், ஒருபொழுதும் யாதொருதுன்பமும் அணுகாது” என்றுசொல்லியது; சொல்லலும், சுதமதி, “மாருதவேகனும் நீயுமே அதனைச் சக்கரவாளக்கோட்டமென்று சொல்லுவீர்; மற்றையோரியாவரும் சுடுகாட்டுக்கோட்டமென்றே சொல்லாநிற்பர்; சக்கரவாளக்கோட்டமென்றதற்குக் காரணமியாது? அதனைச் சொல்லுக” என்றாள்.

என்றலும், அத்தெய்வம், “காவிரிப்பூம்பட்டினமதோன்றியகாலத்தே உடனதோன்றியதான நன்காடு இச்சோலையின் பக்கத்தேயுள்ளது. அது, நாற்புறத்தும் வாயில்களையுடைய மதிலாற்சூழப்பட்டது; காளிகோட்டத்தையும், அருந்தவர் அரசர் கணவனிறக்க உடனேயிறந்தமடவார் ஆகிய இவர்களுள் இன்னாரின்னார் இன்னஇன்னவிடத்தே புதைக்கப்பட்டாரென்பதற்கு அறிகுறியாக அவரவர்களுடைய வருணம் ஆச்சிரம முதலியவற்றிற்கும் அவரவர்களுடைய தகுதிக்கும் ஏற்பச் சிறிதும் பெரிதுமாகக் கட்டப்பட்டுள்ள பற்பலகோட்டங்களையும், மயானதெய்வங்களுக்குப் பலியிடுதற்குரிய தூண்களையும், கற்களைநிறுத்திச் செய்யப்பட்டுள்ள திண்ணைகளையும், காவற்காரர் உண்பதற்கும் உறங்குவதற்கும் அமைந்துள்ள குடிசைகளையும், தோரணங்களையும், பந்தர்களையுமுடையது; பிணங்களைச் சுடுதற்கும் சும்மாபோடுதற்கும் குழியிற்புதைத்தற்கும் உள்ளேவைத்து வாயிலையடைத்தற்கும் தாழியாற்கவித்தற்குமாக இரவும்பகலும் வருபவர்களுடைய ஓசையும், அங்ஙனம் வந்துசெல்பவர்களுடைய ஓசையும், சாப்பறைகளி

ஞோசையும், இறந்த துறவிகளைத் தொழுபவரோசையும், மற்றையோர்பொருட்டு அழுபவரோசையும், நரியின் கூக்குரலோசையும், செத்தோரையழைக்கும் பேராந்தைகளினோசையும், கோட்டானுடையகுரலும், ஆண்டலைப்பறவைகளின் குரலும் அம்மயானத்தில் மிகுதியாகவுண்டு; தான்றி, ஒடுவை, உழிஞ்சில், கான்றை, சூரை, கள்ளிமுதலிய பற்பல மரவிசேடங்களும் அங்கே அடர்ந்துள்ளன; பேய்கள்நெருங்கியுள்ள வாகைமரம் நிற்கும் மன்றங்களையும் நிணத்தோடு இறைச்சிகளைத்தின்று மகிழ்ந்து பறவைகள் தங்கியுள்ள விளாமரம்நிற்கும் மன்றங்களையும், காபாலிகசமயத்தோர் வாழும் வன்னிமரம்நிற்கும் மன்றங்களையும், விரதத்தாலிளைத்த உடம்பையுடையசிலர் உடைந்ததலைகளை மாலையாகக்கட்டும் இலந்தைமரம்நிற்கும் மன்றங்களையும், பிணங்களைத்தின்போர் களித்துவாழும் வெளியான இடங்களையுடைய மன்றங்களையும் அம்மயானம் உடையது; நெருப்பிருந்தபாண்டங்களும் மண்டைகளும் பாடைகளும் அறுத்தெறிந்த மாலைகளும் உடைந்த குடங்களும் நெற்களும் பொரிகளும் சிறுபலியாக இடப்பட்ட அரிசிகளும் எங்கும் பரவப்பெற்றது;

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
முதியோ ரென்னு னிளையோ ரென்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டு
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ (கூஎ - கoச).

இத்தன்மையதான அச்சுடுகாட்டை, பார்ப்பனச்சிறுவனாகிய சார்ங்கலனென்னும் ஒருவன், ஒருநகரமாக நினைந்து அதில் தனியேசென்று அங்கே களித்தாடிய பேயொன்றைக் கண்டு அஞ்சி அதனால் தாக்கப்பட்டுக் கதறிக்கொண்டு ஓடித் தனது தாயாகிய கோதமையையடைந்து, "சுடலையிலுள்ளபேய்க்கு என்னுயிரைக்கொடுத்தேன்" என்று சொல்லி அவள்முன் வீழ்ந்து இறந்தான்; உடனே கோதமை, "முதுமைப்பருவமடைந்துதளர்ந்த பார்ப்பானும் யானும் கண்ணிழந்துள்ளோமென்பதையும் வேறுபுகலில்லையென்பதையும் நினையாமல்

எங்கள் மைந்தனுடைய உயிரையுண்டது, அணங்கோ! பேயோ! அறிகிலேனே" என்று புலம்பிக்கொண்டு தன் அருமைப்புதல்வனுடைய உடம்பையெடுத்து மார்போடு தழுவிச்சென்று சுடுகாட்டைச் சூழ்ந்த மதில்வாயிலை யடைந்துநின்று, "சம்பாபதி, நீர்த்துறைகளிலும் மன்றங்களிலும் பழைய மரஅடிகளிலும் கோட்டங்களிலும் வேறிடங்களிலுமிருந்து யாருக்கும் எந்தச் சமயத்தும் யாதொருதீங்கும் அணுகாவண்ணம் பாதுகாத்தருளும் நீ என்மகனைக் காவாதொழிந்ததற்குக் காரணம் யாது? நின்பால் நடுவுநிலைமையில்லையோ; இனி யான் என்செய்வேன்" என்று வருந்தி முறையிட்டாள்.

முறையிடவே சம்பாபதிவந்து, "இவ்விரவில் இம்மயானத்திற பேய்கள் போக்குவரவுசெய்யும் வாயிலில் நின்று மிக்க வருத்தமடைந்து நீ என்னை அழைத்ததற்குக் காரணம் யாது? சொல்வாய்" என்ன, கோதமை நிகழ்ந்ததைக் கூறினள்; சம்பாபதி, "உன் மகனுயிரை அணங்கும் பேயும் கவர்ந்தில; அவனுடைய அறியாமையையே பற்றுக்கோடாகக்கொண்டு இழுவூழே அவனுயிரைக் கவர்ந்து சென்றது" என்று கூறினள்; கூறலும், கோதமை, "என்னுயிரை வாங்கிக்கொண்டு இவனுயிரை நீ தந்தருள்வாயாயின், இவன் கண்ணற்ற தந்தையைக் காத்தளிப்பான்; ஆதலால், அங்ஙனம் செய்தருள்வாயாக" என்று வேண்டினள்; சம்பாபதி மனமிரங்கி, "உயிர் உடம்பைவிட்டுநீங்கின் அது வினைவழியேசென்று வேறு பிறப்பையடையாநிற்கும்; இதில் ஏதேனும் ஐயமுண்டோ? போனவுயிரை மீட்டளித்தல் என்னால் இயலுங்காரியமன்று; ஆதலால், மகன் இறந்ததுபற்றி நீ இரங்காதே;

> உலக மன்னவர்க் குயிர்க்குயி ரீவோ
> ரிலரோ விந்த வீமப் புறங்காட்
> டரசர்க் கமைந்தன வாயிரங் கோட்டம்
> நிரயக் கொடுமொழி நீயொழி" (௧௬௪ - ௧௬௭)

என்றலும், கோதமை, "கேட்ட வரங்களையெல்லாம் தேவர் தருவாரென்று நூல்கள் கூறுகிற்கும்; ஆதலால், யான் கேட்ட இவ்வரத்தை நீ தந்தருள்க; தாராயாயின், இவ்விடத்தில் இப்பொழுதே என்னுயிரைத் துறப்பேன்" என்று சொன்னாள்; சொல்லவே சம்பாபதி, "நீ சொல்லியபடியே இச்சக்கர

வாளத்துள்ள தேவர்களில் யாரேனும் நீ கேட்ட வரத்தைக் கொடுப்பாருளராயின் யானும் அதனைக் கொடுக்கும் உரிமையுடையேனாவேன்; என் ஆற்றலைக் காண்பாயாக" என்று சொல்லிவிட்டு, நான்குவகை அருவப்பிரமகணங்களையும் பதினாறுவகை உருவப்பிரமகணங்களையும் இருசுடர்களையும் அறுவகைத் தெய்வகணங்களையும் பலவகை அசுரகணங்களையும் எண்வகை நரகர்களையும் பல விண்மீன்கூட்டங்களையும் இருபத்தேழு நாட்களையும் கோட்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கும் சக்கரவாளத்தில் வரங்கொடுக்கும் வன்மையையுடைய தேவர்களையெல்லாம் வருவித்துக் கோதமைக்கு முன்னே நிறுத்தி, "இவளுடையவருத்தத்தைக் கெடுத்திடுவீராக; இவளடைந்த வருத்தம் இதுவாகும்" என்று நிகழ்ந்தவற்றைச்சொல்ல, அத்தேவர்கள் சம்பாபதி கூறியவாறே கூறிமுடித்தார்கள்; அதனைக்கேட்டு உண்மையறிந்து ஒருவாறு வருத்தமொழிந்தகோதமை தன்மகனைச் சுடுகாட்டிற் சேர்த்துவிட்டு இறந்துபோயினாள்.

அப்பால், சம்பாபதியின் வன்மையை யாவருக்கும் புலப்படுத்த வேண்டி, எல்லாத்தேவர்களும் கூடியவிடத்து அவர்கள் கூடியதற்கு அறிகுறியாக, இவ்வுலகின் நடுவேயுள்ள மேருமலையும் அதனைச் சூழ்ந்த ஏழுமலைகளும் நான்கு பெருந்தீவுகளும் இரண்டாயிரம் சிறுதீவுகளும் மற்ற இடவிசேடங்களுமாகிய இவற்றைப்புலப்படுத்தி ஆங்காங்கு வாழ்பவர்களுடைய உருவங்களையும்வகுத்து மயனால் நிருமிக்கப்பட்டதாதலின், இது சக்கரவாளக்கோட்டமெனப் பெயர்பெற்றது; இது சுடுகாட்டைச் சூழ்ந்த மதிலின்புறத்தேயுள்ளதாதலாற் சுடுகாட்டுக்கோட்டமென்று எல்லாராலும் கூறப்படும்; இதன் வரலாறு இதுவாகும்" என்றுசொல்லக் கேட்டுக்கொண்டிருந்த மணிமேகலை, "மனிதர் வாழ்க்கை இத்தன்மைத்து" என்றுசொன்னாள். அவள் அங்கே அப்படி யிருக்கையில், சுதமதி தூங்குதலுற்றனள்; அப்பொழுது அத்தெய்வம் தன் வித்தையால் மயக்கி மணிமேகலையைத் தழுவியெடுத்துக் கொண்டு ஆகாயவழியே முப்பதுயோசனையளவு தெற்கே சென்று கடல்சூழ்ந்த மணிபல்லவமென்னும் சிறுதீவையடைந்து அதில் அவளைவைத்துவிட்டுச் சென்றது.

எ.—துயிலெழுப்பியகாதை.

சென்ற மணிமேகலாதெய்வம், "விடிந்தால் மணிமேகலையை எப்படியும் நான் அகப்படுத்திக்கொள்வேன்" என்று எண்ணிக்கொண்டு காமபரவசனாய்த் துன்புற்றுத் தூங்காமலேயிருந்த உதயகுமரன் முன்னேசென்று, அவன்காண நின்று,

" . ... மன்னவன் மகனே
கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்
தவத்திறம் பூண்டோ டன்மேல் வைத்த
வவத்திற மொழிக." (எ - கச)

என்று அவனுக்குச் சொல்லிவிட்டுப் பின்பு உவவனஞ்சென்று அங்கே தூங்குகின்ற சுதமதியையெழுப்பி, "யான் மணிமேகலாதெய்வம்; இந்நகரில் நடக்கும் இந்திரவிழாவைக்காணுதற்கு வந்தேன்; நீ அஞ்சாதே; பௌத்தசமயவழியே செல்லுதற்குரிய நற்காலம் மணிமேகலைக்கு உண்டாயிற்று; ஆதலால், அவளை எடுத்துக்கொண்டுசென்று மணிபல்லவத்தில் வைத்தேன்; தன்னுடைய முற்பிறப்பில்நிகழ்ந்த செய்தியையும் அறிந்துகொண்டு அவள் இற்றைக்கு ஏழாவதுநாளில இங்கே வந்துசேருவாள். இந்நகரில வேறுவடிவங்கொளவளாயினும் அவள் உனக்கு ஒளிப்பாளல்லள்; அவள் இங்கே புகும்நாளில் இந்நகரின்கண்ணே பல அற்புதங்கள் நிகழும்; நான்வந்ததையும் மணிமேகலை நல்வழியிற்சென்றதையும் மாதவிக்குச் சொல்வாயாக; மாதவி முன்னமே என்னையறிவாள்: கோவலன், 'நமது குலதெய்வத்தின்பெயரை இக்குழந்தைக்கு இடுக' என்றுசொல்லி, என்பெயரை இவளுக்கு (மணிமேகலைக்கு) வைத்தநாளின் இரவில் மாதவியின் கனவிற்சென்று, "காமன் செயலற்று ஏங்கும்வண்ணம் ஆசையை முற்றக்கெடுக்கும் தவமாதைப்பெறுவாய்" என்று கனவிற்கூறுவதுபோல யான் கூறியதுண்டு. இதனையும் அவளுக்கு நினைப்பூட்டுவாயாக" என்று கூறிப்போயிற்று.

அப்பாற் சுதமதியெழுந்து மணிமேகலையின்பிரிவால்வருந்தி அச்சோலையைச்சூழ்ந்த மதிலின்மேற்கேயுள்ள சிறியவாயில்வழியேசென்று சக்கரவாளக்கோட்டத்தையடைந்து ஆங்குள்ள உலகவறவியின் ஒரு பக்கத்தேயிருந்தாள்; அவள் அப்படியிருக்கும்பொழுது அவ்விடத்தே தூணிலுள்ள பாவையொன்றை அதிஷ்டித்திருக்குந் தெய்வமொன்று, சுதமதி மயங்கி அஞ்சும்படி,

"இரவி வன்ம னொருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் றேவி
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயி ரீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே
மாருத வேகனோ டிந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரை யாகிய சுதமதி கேளாய்; (கூஅ - கஒரு)

உன் தங்கையாகிய இலக்குமி தன்னுடையமுற்பிறப்பையும் உன்னுடையமுற்பிறப்பையும் அறிந்துகொண்டு இற்றைக்கு ஏழாநாளிரவில் இந்நகரத்தேவருவள்; அவள் பிரிந்ததுபற்றி நீ அஞ்சற்க" என்று தனது தெய்வவாக்கால் கூறிற்று; அதனைக்கேட்டு மனநடுங்கிய சுதமதி, பொழுதுபுலருமளவும் அவ்விடத்தேயிருந்து சூரியனுதித்தவுடன் எழுந்து புறப்பட்டு வீதிவழியேசென்று மாதவியையடைந்து முதனாளில் நிகழ்ந்தவற்றைச் சொன்னவுடனே அவள் மாணிக்கத்தையிழந்த நாகம்போன்று மிக்க துயரத்தோடிருந்தாள்; சுதமதி, மணிமேகலையின்பிரிவாற்றாமையால் உயிரிழந்த உடம்புபோலச் செயலற்றிருந்தாள்.

அ.—மணிபல்லவத்துத்துயருற்றகாதை.

சுதமதி இங்கே இப்படியிருக்க, மணிபல்லவத்திற் கடலருகே மணலிற்றுயின்ற மணிமேகலை, துயிலுணர்ந்து தனக்குத்தெரிந்தபொருள் யாதொன்றும் அங்கே காணப்படாமையால், தான் முனபிருந்த இடத்தைத்துறந்து வேற்றிடத்துச் சென்றுபிறந்த உயிர்போனறவளாகித் திகைத்துக்கொண்டிருக்கையிற் சூரியனுதித்தான்; உதித்தவுடன் அவள், இவ

விடம், உவவனத்தில் முன்னம் கண்டறியப்படாத ஒருபகுதியோ!

சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்
மெல்வினை வாராய் விட்டகன் றனையோ? (௨0 - ௨௪)

இது, மாயவித்தையோடுதோன்றிய அம்மடந்தைசெய்த வஞ்சமோ! ஒன்றும் தெரியவில்லையே! தனியேயிருத்தற்கு மிகவும் அஞ்சுகின்றேன்; நீ விரைந்துவருவாயாக'' என்று சொல்லிக்கொண்டு, பல நீர்த்துறைகளிலும் பல மணற்குன்றுகளிலும் சென்று தேடித் தனக்குத்தெரிந்த ஒருவரையுங்காணாதவளாகிக் கூக்குரலிட்டு அழுதுவருந்துபவள், தன் தந்தையை நினைந்து,

கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோ'' என் றழுவோண் முன்னர், (௪௧ - ௪௩)

இந்திரனாலிடப்பட்டதும் தரிசித்தோர்க்குப் பழம்பிறப்பைத் தெரிவிப்பதுமாகிய புத்தபீடிகை தோன்றியது.

௯.—பீடிகைகண்டு பிறப்புணர்ந்தகாதை.

தோன்றலும், அதனைக்கண்ட மணிமேகலை, விம்மிதத்தால் தன்னை அறியாளாயினாள்; அவளுடையகைகள் தலைமேற் குவிந்தன; பின்பு ஆனந்தக்கண்ணீரையுகுத்து அப்பீடத்தை மூன்றுமுறை வலம்வந்து பணிந்து எழுபவள், அப்பீடிகைக் காட்சியால் தன் பழம்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து, ''மாதவ, உறுதிப்பொருளையுணர்ந்தோய், காயங்கரையென்னும் நதிக்கரையில் நீ சொல்லியவெல்லாம் உண்மையாதலை விளங்க வறிந்தேன்.—காந்தாரமென்னும் பெரியதொருநாட்டிலுள்ள பூருவதேசத்தில் இடவயமென்னும் நகரை இராசதானியாகக்கொண்டு அரசுபுரிந்துவாழும் அத்திபதியென்னும் அரசனுடைய மைத்துனனாகிய பிரமதருமா, நீ அவ்வரசனிடத்திற் சென்று தருமோபதேசம்புரிகையில், 'இச்சம்புத்தீவில் இற்றைக்கு ஏழாவதுநாளில் பூகம்பமுண்டாகும்; உண்டான

பொழுது இந்நகரும் நாகநாட்டில் நானூறுயோசனைப்பரப்பும் பாதலத்திலழுந்து கெட்டொழியும்; ஆதலால், நீ இந்நகரத்தைவிட்டு விரைவில் வேறுநகரம் புகுவாய்' என்றுசொல்ல, அந்ந நகரத்தாராயாவருக்கும் அச்செய்தியைப் பறையறைவித்துச்சாற்றி எல்லாருடனும் அந்நகரைநீங்கி அதற்கு வடக்கேயுள்ள அவந்திநகரம் செல்லுதற்குப் புறப்பட்டு வழிக்கொண்டு இடையேயுள்ள காயங்கரையென்னும் நதிக்கரையையடைந்து அங்கே பாடிவீடு செய்துகொண்டிருந்தபொழுது, ஐய! நீ உரைத்தபடியே குறித்தநாளிற் பூகம்பமுண்டாக இடவயநகரம் அழிந்துபோயிற்று; அதுதெரிந்த அரசனும் மற்றையோரும் உன்பால் அன்புமிக்கு உன்னைச் சரணமடைந்து சூழ்ந்திருந்தகாலத்தில், அவர்களுக்கு முத்திவழியை உபதேசித்துக்கொண்டிருந்தாய்; இருந்தபொழுது, அசோதரநகரத்தரசனாகிய இரவிவன்மனென்பவனுடைய தேவியான அமுதபதியென்பவள்வயிற்றிற்பிறந்து இலக்குமியென்று பெயர்பெற்று, அத்திபதியென்னுமரசனுக்கு நீலபதியென்பவள்பாற்பிறந்த இராகுலனுக்கு மனைவியாய்ப்புக்கயான் என்கணவனோடுவந்து தருமங்கேட்டற்பொருட்டு வணங்கியவுடன், நீ என்னை நோக்கி, 'இவ்விராகுலன் இற்றைக்குப் பதினாறாவது நாளில் திட்டிவிடமென்னும் பாம்பாலிறப்பான்; நீ இவனோடு தீயிற் புகுவாய்; புகுந்து, பின்பு காவிரிப்பூம்பட்டினத்திற் சென்றுபிறப்பாய்; அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம்வரும்; அப்பொழுது மணிமேகலாதெய்வம் வந்துதோன்றி நள்ளிரவில் உன்னையெடுத்துக்கொண்டுசென்று காவிரிப்பூம்பட்டினத்திற்குத்தெற்கே கடலிலுள்ள சிறுதீவொன்றில் வைத்துவிட்டுச்செல்லும்; சென்றபின் ஆங்குள்ள புத்தபீடிகையைத் தரிசித்துத் தொழுவாய்; தொழுதவுடன் உனது முற்பிறப்பில் நிகழ்ந்தசெய்திகளையறிந்து இன்று நான்சொன்னமொழிகளையும் தெரிந்துகொள்வாய்' என்று நீ சொல்ல, 'என் கேள்வன் இன்னவாறு பிறப்பானென்பதையும் தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டேன்; கேட்டவெனக்கு 'உன்னைக்கொண்டுசென்ற தெய்வம் மீண்டுந்தோன்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும்' என்று அருளிச்செய்தாய்; அத்தெய்வம் வரவில்லையே' என்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள்.

௧௦.—மந்திரங்கொடுத்தகாதை.

மணிமேகலை இப்படியிருக்கையில்,—புத்தபீடிகைக்காட்சியால் இவள் பழம்பிறப்பையறிந்தாள்; இவளுடைய இயற்கையும் அழகிது—என்றெண்ணிக்கொண்டு ஆகாயத்தினின்று மிறங்கிவந்த மணிமேகலாதெய்வம், அவள்கேட்குமபடி,

> "உயிரகெ ளெல்லா முணர்வுபா ழாகிப்
> பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
> வறந்தலை யுலகத் தறம்பா டிறக்கச்
> சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ
> ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன
> நீயோ தோன்றினை நின்னடி பணிந்தே
> னீயே யாகிநிற் கமைந்தவிவ் வாசனம்
> நாமிசை வைத்தேன் றலைமிசைக் கொண்டேன்
> பூமிசை யேற்றினேன் புலம்பறுக" (எ - கஙு).

என்று புத்ததேவனுடைய பீடிகையை அவனாகவேபாவித்துத் துதித்து வலமாக்ஷ் பூசித்து வணங்கியது; வணங்கியதெய்வத்தை மணிமேகலை வணங்கி, "உன் திருவருளால் என்னுடைய முற்பிறப்பையறிந்தேன்; அப்பிறப்பில் கணவனாயிருந்த இராகுலன் எங்கேபிறந்துள்ளான்?" என்று கேட்டாள்.

கேட்டவளுக்கு அத்தெய்வம், "இலக்குமி! கேட்பாயாக; நீ ஒருநாள் சோலையொன்றில் இராகுலனோடு விளையாடியிருந்தாய்; இருந்தபொழுது அவன் ஊடலைத்தீர்த்தற்கு உனதடியைவணங்கினான்; வணங்குகையில், இரத்தினத்தீவத்துச் சென்று அங்கே தருமசக்கரத்தைப் பிரவிருத்திக்கச்செய்து விட்டு வருபவனாகிய சாதுசக்கரனென்னும் பெயர்கொண்ட முனிவனொருவன் உச்சிப்பொழுதில் ஆகாயத்தினின்றும் இறங்கிவர, நீ அவனைக்கண்டு மெய்ந்நடுங்கி மயங்கிக் கலங்கி ஒல்கிப் பணிந்தாய்; அதுகண்ட இராகுலன், "இங்கே வந்தவன் யார்?" என்று கோபித்துச்சொல்லலும், நீ அஞ்சி நடுநடுங்கி அவன்வாயைப் பொத்தி, "ஆகாயத்தினின்றுமிறங்கிய இப்பெரியோனுடைய மலரடியைவணங்காமலும் இவனைத் துதியாமலும் இருந்தது எவ்வளவுபெரும்பிழை?" என்று அவனுக்குச்சொல்லி அவனோடுகூட அம்முனிவனுடைய பாதங்களை வணங்கி, "யாங்கள் தேவரீருடைய அடியேமல்லேமாயினும்,

“ அந்தீந் தனையீ ரமுதொடு கொணர்கேம் (௩-௭)

அமுதுசெய்தருளக; தேவரீருடைய திருவுளப்பாங்கின்படியே நடத்தற்கு உரிமையுடையேம்” என்று தெரிவித்தலும், அம்முனிவன், “ தாயே! உண்பேன்; இங்கே கொண்டுவருக” என்றுசொல்ல, நீ உடனே அவற்றைக்கொணர்ந்து அவனை யுண்பித்தாய்;

அந்நா ளவனுண் டருளிய வவ்வறம்
நின்றுங் கொழியாது நினபிறப் பறுத்திடும்; (௪0-௪௧).

அவ்விராகுலனே உவவனத்தில் உன்பால்வந்த உதயகுமரன்; அதனாலேதான் அவனுடையமனம் உன்னை விரும்பியதன்றி உன்மனமும் அவனை மிகப்பற்றியது. அந்தப்பற்றைமாற்றி நல்வழிப்படுத்தற்கு நினைந்து உன்னை இத்தீவிற்கொணர்ந்து வைத்து இப்பீடிகையைக் காட்டினேன்; இலக்குமீ! இன்னுங்கேட்பாயாக; முற்பிறப்பில் உன்னுடைய தமக்கைமாரா யிருந்த தாரையையும் வீரையையும் அங்கநாட்டிலுள்ள கச்சய நகரத்தரசனாகிய துச்சயனென்பவன் மணஞ்செய்துகொண்டு ஒருநாள் அவர்களோடுசென்று மலைவளங்களைக்கண்டுவந்து கங்கைக்கரையை அடைந்திருந்தபொழுது, அறவணவடிகள் அங்கேவரக்கண்டு உடனே எழுந்து வணங்கிய அவன், “ தேவரீர் யாவிர்? எங்கே எழுந்தருளியது? ” என்று கேட்க, அவர், “ பாதபங்கயமலையைத் தரிசித்தற்குவந்தேன்; ஆதிகாலத்தே புத்ததேவன் எல்லாவுயிர்களுந் துக்கத்தினின்றும் நீங்கி இன்புற்றிருக்கவேண்டுமென்று நினைந்து அவைகள் யாவும் கேட்டு மகிழும்படி அம்மலையின் உச்சியில் நின்றுகொண்டு தருமோபதேசஞ் செய்தபொழுது அவருடைய பாதச்சுவடுகள் தங்கப்பெற்றமையால் அஃது அப்பெயரையுடைத்தாயிற்று; குற்றமற்ற அறிவுடையீர்! நீங்களும் அதைத்தரிசித்து வழிபடுமின்” என்று கூறினர். அவர்கூறியவாறு உடனேசென்று அம்மலையையடைந்து தரிசித்த புண்ணியவிசேடத்தால் தாரையும் வீரையும் முறையே மாதவியாகியும் சுதமதியாகியும்வந்து உன்னோடுகூடினர்; மணிமேகலை! நீ பழம்பிறப்பையறிந்தாய்; தருமத்தின் தோற்றத்தையும் தெரிந்துகொண்டாய்; மற்றைச்சமயவாதிகளுடைய கொள்கைகளையும் இனி ஒருகாலத்திற்கேட்பாய்; அங்ஙனங்கேட்கும்பொழுது, உன்னை, “ இளமைப்பரு

வத்தினள்" என்றுநினைந்து அவர்கள் தத்தம் சமயவுண்மைகளைச் சொல்லார்கள்; ஆதலால், அக்காலத்து நீ வேற்றுவடிவங்கொள்ளவேண்டுவது இன்றியமையாதது" என்றுகூறி, வேற்றுவடிவைக்கொடுப்பதும் ஆகாயவழியே சஞ்சரிக்கச்செய்வதுமாகிய மந்திரங்களிரண்டை அவளுக்கு உபதேசித்து, "நீ புத்ததேவனருளிச்செய்த நல்லறவழியை நணுகுதல் ஒருதலையென்று உணர்வாயாக; இப்பீடிகையை வணங்கித்துதித்து ஊர்செல்வாயாக" என்று சொல்லிவிட்டு மேலேசெல்லுதற்கு எழுந்து, "இன்னும் ஒன்றைச்சொல்ல மறந்துவிட்டேன்" என்று அந்தெய்வம் மீட்டும் இறங்கிவந்து, "சிறந்த விரதவொழுக்கமுடையாய், கேட்பாயாக; மக்கள்யாக்கை உணவாலாகியதொகுதி; இம்மந்திரமோ பசியைத்தொலைக்கும்; இதனைக்கொள்வாயாக" என்றுசொல்லி அம்மந்திரத்தை அவளுக்கு உபதேசித்துவிட்டு எழுந்து ஆகாயவழியே சென்றது.

கக.—பாத்திரம்பெற்றகாதை.

அப்பால், மணிமேகலை, அத்தீவிலுள்ள மணற்குன்றுகளையும் பூஞ்சோலைகளையும் குளிர்ந்த பொய்கைகளையும் பார்த்துக்கொண்டு மெல்ல உலாவிவருகையில், ஒருத்திவந்துநின்று, "கப்பல்கவிழப்பெற்ற மகளிர்போல இங்குத் தனியேவந்தநீ யார்?" என்றுகேட்டாள்.

மணிமேகலை, "பொற்கொடிபோல்வாய்! 'நீ யார்' என்றது, என்னுடைய எந்தப் பிறப்பின் செய்தியைத் தெரிந்துகொள்ளுதற்கு? கேட்பாயாக; சென்றபிறப்பில் இலக்குமியென்னும் பெயரையுடையேன்; இராகுலனென்னும் அரசிளங்குமரனுக்கு மனைவியாகவிருந்தேன்; இப்பிறப்பில் நாடக்கணிகையாகிய மாதவியின்வயிற்றிற்பிறந்தேன்; என்பெயர் மணிமேகலையென்பது; மணிமேகலாதெய்வம் காவிரிப்பூம்பட்டினத்துள்ள உவவனத்திலிருந்து இத்தீவிற்கொண்டுவந்து வைத்தமையால், இந்தப் பீடிகையைத் தரிசித்து முற்பிறப்பை யறிந்துகொண்டேன்; இங்கே வந்தமையால் நான் அடைந்தபயன் இது; என்னுடைய வரலாறு இதுவாகும்; பூங்கொடிபோல்வாய்! உன் வரலாறு யாது?" என்று கேட்டவுடன், தீவதிலகை, "இத்தீவிற்கு அயலிலுள்ளதான இரத

தினதீவத்திலே மிகவுயர்ந்துவிளங்காநின்ற சமந்தகூடமலையின் உச்சியிலேயுள்ள புத்ததேவனது அடியிணைப்படிமைகளைத் தரிசித்துவிட்டு இத்தீவிற்கு முன்னொருகாலத்தில் வந்தேன்; வந்ததுமுதல் இந்திரன்கட்டளையால் இத்தத்தருமபீடிகையைக் காத்துக்கொண்டு இவ்விடத்திலேயேயிருக்கிறேன்; என்பெயர் தீவதிலகையென்பது. புத்ததேவனருளிச்செய்த நல்லறவழியேநடப்போர் யாரேனும் இதனைத் தரிசிப்பாராயின், அவர்கள் அந்தத்தரிசனவிசேடத்தால் உடனே தம்முடைய பழம்பிறப்புணர்ச்சியை அடைவது திண்ணம்; அத்தன்மையினையுடையோர் உலகத்தில் மிக அரியர்; அவர்களுக்கே தருமபதம் உரியது; இஃது உண்மை; பழம்பிறப்புணர்ச்சியை யடைந்தமையால், நீ மிகவும் பெரியை; இந்தப்பீடிகைக்குமுன்னே மாமலர்க்குவளையும் நெய்தலும் மயங்கிய கோமுகியென்னும் கொழுநீரிலஞ்சியொன்று உள்ளது; அப்பொய்கையினுள்ளேயிருந்து அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரமானது, ஒவ்வொருவருடத்தும், புத்ததேவன் அவதரித்த காலமாகிய வைசாகசுத்தபூரணிமைதோறும் மேலே வந்து தோன்றாநிற்கும்; இந்தினம் அப்பூரணிமையே; அது தோன்றும்வேளையும் இதுவே; இப்பொழுது அந்தப்பாத்திரம் உன்கையில் வருமென்று எண்ணுகிறேன்; அதிலிடப்பட்ட அன்னம் எடுக்கஎடுக்க மேன்மேலும் வளர்ந்துகொண்டேயிருக்கும்; அதன்வரலாற்றை உன்னூரிலுள்ள அறவணவடிகளிடத்தே இனிக்கேட்பாய்" என்று சொல்லலும், மணிமேகலை அதைப்பெறுதற்குவிரும்பிப் புத்தபீடிகையைவந்தித்து அவளோடுகூடிச்சென்று கோமுகிப்பொய்கையை வலஞ்செய்துவந்து நின்றவுடன், அப்பாத்திரம் அப்பொய்கையினுள்ளிருந்து மணிமேகலையின் கையை அடைந்தது; உடனே அவள் அளவுகடந்தமகிழ்ச்சியுற்று நின்று,

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி

தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்காது" (கக - எ௨).

என்று புத்ததேவனைத் துதித்தாள்; இங்ஙனந் துதித்தமணிமேகலைக்கு உயிர்களுடைய பசித்துன்பத்தையும் அதனைத் தீர்ப்போருடைய பெருமையையும் தீவதிலகைசொல்லப்புகுந்து,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது, (எகூ - அக)

முன்னொருகாலத்தில், மழையே இல்லாது போனமையால், பசியால் வருந்திய கௌசிகமுனிவர், அதனைத் தீர்த்துக்கொள்ளுதற்கு எங்குந்திரிந்து சிறிதும் உணவுகிடையாததுபற்றி மெலிந்து பின் நாயிறைச்சியைப்பெற்றுத் தின்னப்புகுந்து, முதலில் அவ்விறைச்சியின் ஒருபகுதியைத் தெய்வங்கட்குப் பலியிடுவாராயினர்; அதுதெரிந்த இந்திரன் உடனே எங்கும் மழைபெய்யச்செய்தமையால், உயிர்கள் களித்துவாழும்படி விளைவுபெருகியதென்பர்; அதை நீ கேட்டிருப்பையே

ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே; (கூ௨ - கூகூ).

ஆதலால், பசியைப்போக்கி உயிரைக்கொடுத்தலாகிய தருமத்தைச்செய்வாய்" என்று கூறினாள்; அதுகேட்டமணிமேகலை, "போனபிறப்பில் என் கணவனாகிய இராகுலன் திட்டிவிடமென்னும் பாம்பால் இறந்தது பொறாமல் யான் தீப்பாய்ந்து உயிரொடுவேவாநிற்கையில் முன்னம் சாதுசக்கரமுனிவனை உண்பித்த நினைவையுடையேனானேன்; இறக்குங்காலத்தில் எனக்கு அந்நினைப்பிருந்த புண்ணியவிசேடத்தாலேயே இந்தப்பாத்தி

ரம் என்கையிற்புகுந்ததென்று எண்ணுகிறேன்; இதுநிற்க. பசியால்வாடிய குழந்தையின்முகத்தைக் கண்டு மனமிரங்கிப் பால்சுரக்கும் தாய்போலவே வயிறுகாய்பெரும்பசி அலைத்தற்கு இரங்கி வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எங்கும் வாடியலைந்துதிரியும் ஏழைகளுடைய முகத்தைக்கண்டு இரங்கி இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுது சுரந்தளித்தலைக்காணும் விருப்பமுடையேன்" என்று சொல்லக்கேட்டு மகிழ்ந்த தீவதிலகை, அவளோடு பின்னுஞ் சில நேரம் அளவளாவிக்கொண்டிருந்து, "இனி இப்பாத்திரத்தோடு உன் ஊருக்குச்செல்வாயாக" என்றுசொல்ல, மணிமேகலை, அவள்பாதத்தைவணங்கிப் புத்தபீடிகையைத்தொழுது வலஞ்செய்து ஆகாயகமனமந்திரத்தை ஜபித்து மேலேயெழுந்து ஆகாயவழியேசென்று, தன்னைக் காணாதுவருந்தித்திகைத்து மயங்கி வழியைநோக்கிக்கொண்டேயிருக்கும் சுதமதியையும் மாதவியையும் பார்த்து, வியப்படையும்வண்ணம் அவர்களுடைய முற்பிறப்பை அவர்களுக்கு அறிவித்து, "மானிடயாக்கையாற் பெறுதற்குரிய தவவழியை அறவணவடிகளிடத்தே இனிப் பெறக்கடவீர்; இஃது ஆபுத்திரனுடையகையிலிருந்த அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரமாகும்; இதனைத் தொழுமின்" என்றுசொல்லி, அதனை அன்புடன் தொழுத அவர்களை அழைத்துக்கொண்டு அறவணவடிகளைத் தரிசித்தற்குச் சென்றாள்.

௧௨.—அறவணர்த்தொழுதகாதை.

சென்றவள், "அறவணவடிகள் எங்கேயுள்ளார்" என்று விசாரித்துக்கொண்டுபோய்,

நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவி
னுரைமூ தாள னுறைவிடங் குறுகி, (௩ - ௪).

அவரைத்தரிசித்து மும்முறைபணிந்து துதித்துத் தான் உவவனஞ்சென்றதும், உதயகுமரன் அங்கேவந்து சொல்லிப்போனதும், பின்பு மணிமேகலாதெய்வம் தன்னையெடுத்துச் சென்று மணிபல்லவத்தில்வைத்ததும், அத்தீவிலுள்ள புத்தபீடிகைக்காட்சியால் தன் பழம்பிறப்பைத் தானறிந்துகொண்டதும், "முற்பிறப்பிற் கணவனாகவிருந்த இராகுலனை உதய

குமரனாக வந்துபிறந்தான்; அப்பிறப்பில் உனக்குத் தமக்கைமார்களாக விருந்த தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியுமாக வந்தனர்; அவர்கள் வரலாற்றை அறவணவடிகள்பால் நீ தெரிந்துகொள்'' என்று மணிமேகலாதெய்வஞ்சொல்லி மூன்றுமந்திரங்களை உபதேசித்துச்சென்றதும், அப்பால் தீவதிலகைவந்ததும், அவளுடன்சென்று கோமுகிப் பொய்கையிலிருந்த அமுதசுரபியைப்பெற்றதும், "ஊருக்குச்சென்று அறவணவடிகள்பால் ஆபுத்திரன்வரலாற்றைக் கேள்'' என்று அத்தீவதிலகைசொல்லத் தான்வந்ததும் ஆகிய இவற்றையெல்லாந்தெரிவிக்க, அம்முனிவர்கேட்டு மகிழ்ந்து, "முன்பு ஒருமுறை நான் பாதபங்கயமலையை வழிபட்டு மீண்டுவருகையில் துச்சயராசனை ஒரு சோலையிற்கண்டேன்; "அரச, நீயும் உன்மனைவியரும் சுகமோ?" என்று யான்வினவ, அவன் மனங்கலங்கி அரற்றிக்கொண்டு, வீரை மதுவின்மயக்கத்தால் ஒரு யானைமுன்சென்று இறந்ததும், அச்செய்தியைக்கேட்டுவருந்திய தாரை ஒருமாடத்தின்மீதேறி வீழ்ந்து மரித்ததுமாகிய பெருந்துன்பத்தைக்கூறி வருந்தினன்; நான், "இது பழவினைப்பயனாகும்; ஆதலால், நீ வருந்தாதே'' என்று சொல்லிப்போந்தேன்; அங்ஙனமிறந்த நீவிர் இப்போது கூத்தனைப் போல வேறுவேடம் பூண்டுவந்தீர்கள்'' என்று மாதவியையும் சுதமதியையும்பார்த்துச் சொல்லிவிட்டு, பின்னும் மணிமேகலையைப்பார்த்து, "இவ்வுலகில் பௌத்ததருமங்கள் குறையப் பாவங்கள் மிகுந்தன; ஆனாலும், சிறிதுசிறிது தருமமுண்டாதலுங்கூடுமென்று எண்ணி நான் தருமத்தை உபதேசித்துவருதலுமுண்டு; அத்தருமத்தை இவ்வுலகத்திலுள்ள மாந்தரறியார்; இவ்வுண்மையையறிந்த இச்சக்கரவாளத்துள்ள தேவர்களுடைய வேண்டுகோளால், ஆயிரத்தறுநூற்றுப் பதினாறுமாண்டில் துஷிதலோகத்திலுள்ள தேவன் இவ்வுலகத்தில் அவதரிப்பான்; அதற்குப்பின்பு யாவருக்கும் அருளறத்தில் மனஞ்செல்லும்;

புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களு ஞாயிறுந் தீங்குறா விளங்கத்

* இங்கே கூறப்பட்டுள்ள ஆண்டு இன்னசகாப்தத்தைச்சார்ந்ததென்று புலப்படவில்லை; ஆண்டு - வருடம்.

தங்கா நாண்மீன் றகைமையி னடக்கும்
வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்
ஊனுடை யுயிர்க ளுறுதுயர் காணா
வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படும்
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம்
கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களும் வெரூஉப்பகை நீங்கும்
கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ
அந்நாட் பிறந்தவ னருளறங் கேட்டோ
ரின்னாப் பிறவி யிகந்தோ ராதலிற்
போதி மூலம் பொருந்திய சிறப்பி
னாதன் பாத நவைகெட வேத்துதல்
பிறவி தோறு மறவேன் மடக்கொடி, (௮௬ - ௧௦௩.).

இதுநிற்க; மணிமேகலை! இந்நகரத்தில் உன்னாலே சிலவிசேடங்கள் நிகழ்வனவாம்; அவை நிகழ்ந்தபின்னன்றி யான்கூறும் தருமமொழி உன்மனத்திற்பொருந்தாது; இவ்விருவரும் முற்பிறப்பிற் பாதபங்கயமலையை வழிபட்ட புண்ணியவிசேடத்தால் பிற்காலத்தில் உன்னோடுகூடிப் புத்ததேவனது திருவடியைத்தொழுது வணங்கி வினைகளினின்றும் நீங்கி முத்தியையடைவார்கள்; உயிர்மருந்தாகிய மிகச்சிறந்த அமுதசுரபியை நீபெற்றனை; எல்லாவுயிர்களுடைய பசியையும் தீர்ப்பாயாக;

மக்கட் டேவ ரெனவிரு சார்க்கு
மொத்த முடிவி னோரற முரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல்" என்றே யவருந்
தவப்பெரு நல்லறஞ் சாற்றினர். (௧௧௬ - ௧௧௯).

மணிமேகலையும் அங்ஙனமே செய்வேனென்றாள்.

௧௩.—ஆபுத்திரன்றிறமறிவித்தகாதை.

பின்பு அறவணவடிகள் மணிமேகலையைநோக்கி, "ஆபுத்திரன் வரலாற்றைக்கூறுவேன்; கேட்பாயாக; வாரணாசியென்னுமூரில் வேதமோதுவிப்பவனாகிய அபஞ்சிகனென்னும் அந்தணன்மனைவி, சாலியென்பாள்; அவள் நியமந்தப்பியொழுகினமையால் உண்டாகிய பாவத்தைத்தீர்த்துக்கொள்ளும்

பொருட்டு, தான் கருப்பிணியாகவிருந்தும் அதைப்பாராமல் கன்னியாகுமரிக்கு நீராடச்சென்றாள்; சென்றவள் சூலால் வருந்தி வழியிடையே ஒரு குழந்தையைப்பெற்று, அக்குழந்தையிடத்திற் சிறிதும் இரக்கமவையாமல் அக்குழந்தையை ஒரு தோட்டத்தில் இட்டு நீங்கினாள்; நீங்கவே அக்குழந்தை உணவுபெறாது பசியால் வருந்தியழுதது; அவ்வழுகையோசையைக்கேட்டு ஒருபசுவானது வந்து அதன் வருத்தந்தீருமபடி நாவால் நக்கிப் பாலூட்டி ஏழுநாள்வரையும் அப்புறஞ்செல்லாது பாதுகாத்துக்கொண்டிருந்தது; அப்படியிருக்கையில், வயனங்கோடென்னும் ஊரிலுள்ளவனாகிய பூதியென்னும் அந்தணனொருவன் தன் மனைவியோடும் அவ்வழியே வருபவன், அக்குழந்தையழுத கூக்குரலைக்கேட்டுச் சென்று தனியேகிடக்கும் அதைக்கண்டு மிக்க துன்பத்தோடு கண்ணீர்பெருக்கி, 'இவன் பசுமகனல்லன்; என்மகனே' என்றுகூறி அக்குழந்தையையெடுத்து ஊர்சென்று வீடடைந்து மகிழ்ச்சியுடன் வளர்த்து உரியகாலத்துத் தனகுலத்துக்குரிய கலைகளை நன்குபயிற்றிவந்தான்; வருகையில், அச்சிறுவன், ஒருநாள் அவ்வூரில் ஓரந்தணன் வீட்டிற்புகுந்து, யாகசாலையில் ஒருபசு மாலையைச்சுற்றிய கொம்புகளையுடையதாய்ப் பின்பு தனக்குண்டாகும் துன்பத்திற்கு அஞ்சி வெய்துயிர்த்துப்புலம்பி வேடர்களுடைய வலையிற்பட்ட மான்போல அஞ்சிக் கதறுவதைக்கண்டு மனநடுங்கிக் கண்ணீருகுத்து, 'இவர்களறியாதவண்ணம் இப்பசுவைக் கவர்ந்துகொண்டு இரவிற்போய்விடுவேன்' என்று தன்னுள் எண்ணிக்கொண்டே ஒருபக்கத்தில் ஒதுங்கியிருந்து அன்றிரவில் அப்பசுவைக் கையிற்பற்றி ஊருக்குவெளியே போய்விட்டான்; பசுவைக்காணாத அந்தணர்கள் பலர் அதனைத்தேடிச்சென்று, வழியில் பசுவையும் அதனைக் கவர்ந்துசென்ற அச்சிறுவனையுங்கண்டு அகப்படுத்திக்கொண்டு, அவன் கருத்தையறியாராய், "புலையா, இப்பசுவை இரவில் ஏன் கவர்ந்துசென்றாய்?" என்றுகேட்டு அவனைக் கோலாலடித்து ஒறுக்கத்தொடங்கினார். அப்பொழுது, பசு, வருத்துகின்ற உபாத்தியாயனைமுட்டி வயிற்றைக்கிழித்துக் குடரைப்புறப்படச்செய்துவிட்டுக் காட்டில் விரைந்தோடிவிட்டது. ஆபுத்திரன் அவர்களைநோக்கி, "வருத்தன்மின்; யான்

சொல்வனவற்றைக்கேண்மின் ; நீங்கள் வருந்தும்படி இப்பசு என்னகுற்றஞ்செய்தது ?

> விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
> நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம
> பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன தீம்பா
> லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டு
> மிதனொடு வந்த செற்ற மென்னை ?" (ருக - ருரு).

என்றுசொல்ல, அவர்கள், "நீ விதியையறியாமல வேள்வியை இகழுகின்றாய் ; ஆதலால், பசுமகனென்பதற்குப பொருத்த முடையை" என்று இகழ்ந்துகூறவும், ஆபுத்திரன்,

> "ஆன்மக னசலன் மான்மகன் சிருங்கி
> புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்று
> நரிமக னல்லனோ கேச கம்பள
> னீங்கிவா நுங்குலத் திருடி கணங்களென்
> றோங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டா
> லாவொடு வந்த வழிகுல முண்டோ" (சுங - சுஅ).

என்று சொல்ல அவர்களுள்ளே ஓரந்தணன், "இவனுடைய பிறப்பின் வரலாற்றை யான் அறிவேன் ; முன்னொருநாள், கன்னியாகுமரியில் விதிப்படி நீராடிவிட்டு வருந்தத்தோடு வந்த சாலியென்னும் ஒரு பார்ப்பனியைக் கண்டு, "உன் ஊர் யாது ? நீ எதற்காக இங்கே வந்தனை ?" என்று நான் கேட்டதற்கு அவள், "யான், வாரணாசியென்னுமூரிலுள்ள ஆரண உவாத்தியாகிய ஓரந்தணன் மனைவி ; யானொழுகிய தீயவொழுக்கத்தால் கணவனைப்பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச் செல்லுகையில், கொற்கைநகரத்துக்கு அப்பாற் காதவழித் தூரத்திலுள்ள இடையர்சேரியில ஆண்குழந்தையொன்றைப் பெற்று இரக்கமின்றி அதனை அங்குள்ள ஒரு தோட்டத்தில இட்டுப்போனேன் ; இப்படிப்பட்ட தீவினையேனாகிய எனக்கு நற்கதியுண்டோ" என்று மிகத் துன்புற்று அழுதாள் ; அங்ஙனமழுதவள்பெற்ற அந்தமகனே இவன் ; இதைச் சொல்லுதலால யாதுபயனென்று இதுகாறும் உங்களுக்குத் தெரிவியாதிருந்தேன் ; அசுத்தனாதலால் இவனைத் தொடாதொழிமின்" என்று சொல்ல, ஆபுத்திரன், "திலோத்தமையின் புத்திரர்கள் பெரியமுனிவர்களாக இருத்தல் கேட்டிலிரோ ; நீங்கள் *சாலிக்

* சாலியென்பதற்கு அருந்ததியென்றும் ஒருபொருள் தோன்றிற்று.

குத் தவறுகூறத் துணிந்தீர்களே" என்றுசொல்லி அவர்களைப் பார்த்து நகைத்தான். வளர்த்த பூதியும் அசுத்தனென்று எண்ணி உடனே அவனை நீக்கிவிட்டான். அப்பால், ஆபுத்திரன் பிச்சையெடுத்து உண்டு பொழுதுகழிக்க எண்ணினான். பசுவைத் திருடின கள்வனென்று இகழ்ந்து அந்தணர்களுடைய கிராமங்களிலெல்லாம் அவனுடைய பிச்சைப்பாத்திரத்திற் கல்லிடத் தொடங்கினார்கள்; அதனால், வேறு புகலின்றித் தென்மதுரையையடைந்து சிந்தாதேவியின்கோயிலாகிய கலைநியமத்தின் முன்னேயுள்ள அம்பலத்தையே யிருப்பிடமாகக்கொண்டு கையிற் பிச்சைப்பாத்திரத்தையேந்தி வீடுகள்தோறும் சென்று சென்று வாங்கிவந்தவுணவை,

காணார் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி, (ககக-ககரு).

அவர்களுண்டொழிந்த மிச்சத்தையே தானுண்டு பிச்சையோடுடைத் தலையணையாகவைத்துக்கொண்டு அவ்வம்பலத்தின் கண்ணே நாள்தோறும் இரவிற் கண்படைபுரிந்து காலங்கழித்துவந்தான.

கசு.—பாத்திரமரபுகூறியகாதை.

அவன், அங்ஙனம் காலங்கழித்துவருங்காலத்தில், அவனுக்கு ஒருநாள் அங்கே நிகழ்ந்தசெய்தியைச்சொல்லுவேன்; கேட்பாயாக; அவன் அவ்வம்பலத்தில் ஓரிரவில் தூங்கும்பொழுது, சிலர்வந்து, "பெரும்பசி எங்களை வருத்தாநின்றது" என்றார்கள்; அதைக்கேட்ட அவன் அத்துன்பத்தைத்தீர்த்தற்கு ஆற்றலில்லாதவனாய் மிக்க வருத்தமடைந்தான்; அச்சமயத்திற் சிந்தாதேவி எழுந்தருளிவந்து, "இதனைக்கொள்வாயாக; நாடெல்லாம் வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமையையடையாது; கொடுக்கக்கொடுக்க இதில் உணவு வளர்ந்துகொண்டேயிருக்கும்" என்றுசொல்லி, தன்கையிலுள்ள அக்ஷயபாத்திரமொன்றை அவன்கையிற்கொடுத்தாள்; உடனே அவன், அளவுகடந்தமகிழ்ச்சியடைந்து,

"சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
யேனோ ருற்ற விடர்களைவாய்" (கஎ - உ௦).

என்று துதித்து அத்தேவியைப்பணிந்து, முன்பு பசித்துவந்திரந்தவர்களை ஊட்டி மகிழ்வித்து, அன்றுமுதல் எல்லாவுயிர்களுக்கும் உணவளிப்பானாயினன்; உண்பதற்காக மனிதர்கள் பலர் அவனைச்சூழ்ந்துகொண்டார்கள்; விலங்குகளும் பறவைகளும் அவனைப் பிரியாவாய் அன்புடன் சுற்றிக்கொண்டன; அப்படியிருக்கையில், ஒருநாள் அவனதுபுண்ணியமிகுதியைத் தனது * பாண்டுகம்பளநடுக்கத்தால் அறிந்த இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்கநினைந்து ஒரு முதியவேதியனது வடிவுகொண்டுவந்து நின்று, "நான் இந்திரன்; வரங்கொடுத்தற்கு வந்தேன்; நீ விரும்பியது யாது? உன்னுடைய பெரிய தானத்தின்பயனைப் பெற்றுக்கொள்வாயாக" என்றுசொல்ல, ஆபுத்திரன் விலாவெலும்பு ஒடியுமவண்ணஞ் சிரித்து,

"அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்
கிறைவ னாகிய பெருவிறல் வேந்தே! (௪௦ - ௪௩).

வருந்திவந்தவர்களுடைய தீர்த்தற்கரியபசியினைத்தீர்த்து அவர்களுடைய இனியமுகத்தை யான் காணும்படி செய்கின்ற எனது தெய்வபாத்திரம் ஒன்றே போதும்; வேறொன்றும் வேண்டற்பாலதன்று" என்று அவனை மதியாதுசொன்னான்; சொல்லவே இந்திரன் கோபித்துப் பசித்துன்பத்தால் வருந்துவோரில்லாமலிருக்கும்படி செய்வேனென்றுநினைந்து எங்கும் மழைபெய்வித்து மிக்க செல்வத்தையுண்டாக்கினன்; அதனால், பசித்துவருவோர் இலராயினர்; அதுகண்டு ஆபுத்திரன் முன்னிருந்த அம்பலத்தைநீங்கி ஊர்கள்தோறும்போய், "உண்போர் யாரேனுமுண்டோ?" என்று வினவத்தொடங்கினன்; அது கேட்டுச் செல்வக்களிப்பால் யாவரும் அவனை யிகழ்ந்தார்கள்; உண்போரைப் பெறாமையால், அவன் பெருஞ்செல்வத்தை யிழந்தோரைப்போல வருந்தித் தனியேசெல்லுகையில், கப்பலில்வந்த சிலர், அவனைக்கண்டு, சாவகநாடு மழையில்லாமையால் மிகுந்த வறுமையுற்றதென்றும் அதிலுள்ளவுயிர்கள்

* பாண்டுகம்பளம் - வெள்ளைக்கம்பளம்; தனது பாண்டுகம்பள நடுக்கத்தைக்கொண்டு உலகிலுள்ள சில நிகழ்ச்சிகளை இந்திரன் அறிந்துகொள்வானென்றுகூறுதல் பௌத்தர்களுடைய வழக்கமென்று தெரிகின்றது.

பெரும்பாலும் பசியால் இறந்தனவென்றும் கூறினர்; அது கேட்டு அவன் அந்நாட்டிற்குச்செல்வேனென்றெண்ணிக் கப்பலேறினன்; அக்கப்பல்சென்று மணிபல்லவத்தினருகே ஒரு நாள் தங்கிற்று; அவன் அத்தீவில் இறங்கினன்; மீகாமன், இறங்கிய ஆபுத்திரன் ஏறிவிட்டானென்று எண்ணி இருளில் அக்கப்பலைச் செலுத்திக்கொண்டுபோயினான். போனதுதெரிந்து ஆபுத்திரன் மிகுந்தவருத்தமடைந்து, "பலர்க்கு உணவளிக்கும் இப்பாத்திரத்தை வைத்துக்கொண்டு யாருமில்லாத இத்தீவில் யான்மட்டும் இரேன்" என்று எண்ணி அப்பாத்திரத்தைத் தொழுது, "வருடத்திற்கு ஒருநாள் நீ தோன்றுவாயாக" என்றுகூறிக் கோமுகிப்பொய்கையில் அதைவிடுபவன், "மிக்ககருணையோடுகூடித் தருமஞ்செய்தலையே மேற்கொண்டு எல்லாவுயிர்களையும் பாதுகாப்போர் யாரேனுமவரின் அவர் கையிற் புகுவாயாக" என்றுசொல்லி அப்பொய்கையில்விட்டு விட்டுத் தான் பட்டினியிருந்து உயிர்துறப்பானாயினான். அப்பொழுது அத்தீவிற்குச்சென்ற யான் அவனைக்கண்டு, "நீ யாது துன்பமடைந்தாய்" என்றுகேட்க, நிகழ்ந்தவற்றைச்சொல்லி மணிபல்லவத்தில் உடம்பைவீழ்த்திவிட்டு எல்லாவுயிர்களையும் பாதுகாக்குமெண்ணத்தோடுசென்று சாவகநாட்டரசனுடைய பசுவயிற்றிலுதித்தான்.

கரு.—பாத்திரங்கொண்டுபிச்சைபுக்ககாதை.

மணிமேகலை! இன்னும் கேட்பாயாக; முன்பு ஆபுத்திரனுக்கு ஏழுநாள்வரையும் பாலூட்டிய பசுவானது, அப்புண்ணியவிசேடத்தால் சாவகநாட்டில் தவளமலையில் தவஞ்செய்துகொண்டிருக்கும் மண்முகமுனிவனிடத்தே, பொன்மயமாகிய கொம்புகளையும் குளம்புகளையும் உடையதாய்ச்சென்று, ஈனுமுன்னமே பால்சுரந்து எல்லாவுயிர்களையும் உண்ணச்செய்துகொண்டிருந்தது; அதனைக்கண்டு, முக்காலவுணர்ச்சியையுமுடைய அம்முனிவன், "இப்பசுவயிற்றில் எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் ஒரு விசேடபுருடன் பொன்மயமான முட்டையினிடம் தோன்றுவன்" என்றுகூறினன். தருமஞ்செய்தற்காகவே மணிபல்லவத்தில் இறந்த ஆபுத்திரன் தன்னைக் குழவிப்பருவத்தே காத்தளித்தபசுவை எப்பொழுதும் நினைந்

தாக்கொண்டிருந்தவனாதலின், மண்முகமுனிவன்கூறியவாறே அப்பசுவயிற்றில் தோன்றினன்; அவன் தோன்றியகாலம் வைசாகசுத்த பூர்ணிமை; அப்பொழுது சில நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. அதுதெரிந்த சக்கரவாளக்கோட்டத்துள்ள முனிவர்கள், "புத்தன் அவதரிக்குங்காலத்தில் தோன்றும் நிமித்தங்கள் இப்பொழுது நிகழ்வதற்குக் காரணம் என்ன?" என்று வியப்புற்று, அதனுண்மையைத் தெரிந்துகொள்ளுதற்குக் கந்திற்பாவையையடைந்து வினவினார்கள்; அது, "மணிபல்லவத்தில் இறந்த ஒரு விசேடபுருடன் உயிர்களைப் பாதுகாத்தற்காகச் சாவகநாட்டிலுதித்தான்; அதனாலேதான் நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. அவன் வரலாற்றை அறவணன்பாற் கேண்மின்" என்றுசொல்லி என்பாலனுப்பி எனது நாவைவருத்தியது; மகப்பேறில்லாமல் வருந்துபவனான அந்நகரத்தரசன் பூமிசந்திரனென்பவன் மண்முகமுனிவனைவணங்கி மேற்கூறிய பசுப்பெற்ற குழந்தையை வாங்கிக்கொண்டுசென்று வளர்த்து வந்தான்; அச்சிறுவன் இப்பொழுது அரசுரிமைபெற்று வாழ்கின்றான்; இதுநிற்க; காவிரிமாநதி மாறாது நீர்பெருகி இந்நாட்டைவளமுறச்செய்தும் யாதுகாரணத்தினாலோ உயிர்கள் வறுமையால்வருந்துகின்றன; ஆதலால்,

"வெண்டிரை தந்த வமுதை வானோ
ருண்டொழி மிச்சிலை யொழித்துவைத் தாங்கு, (௫௧ - ௫௨).

மிகப் பயன்படுகின்ற இவ்வமுதசுரபியை நீ சும்மாவைத்திருத்தல் தகுதியன்று" என்றுகூறினர். அதைக்கேட்ட மணிமேகலை, உடனே அவரை வணங்கித் துதித்துப் பிக்குணிக்கோலம்பூண்டு, அப்பாத்திரத்தைக் கையிலேந்தி வீதியையடைந்தாள்; அடையவே, உச்சயினிநகரத்தரசனாகிய பிரச்சோதனனென்பவன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத்தியபொழுது, அவனைச் சிறைமீட்டற்கு அவன்மந்திரியாகிய யௌகந்தராயணனென்பவன் வேற்றுவடிவங்கொண்டு வீதியையடைந்த காலத்தில், அவனைக்கண்டு துன்புற்று அநேகர் சூழ்ந்தாற்போலப் பிக்குணிக்கோலத்தையுடைய மணிமேகலையைக்கண்டு பலரும், "உதயகுமரனுடைய உள்ளத்தில் ஒளித்திருக்குமிவள் எல்லாருங்காணும்படி பிச்சைப்பாத்திரத்தையேந்தி வீதியையடைந்தது என்ன வியப்பு!" என்றுகூறித் துன்புற்று

அவளைச் சூழ்ந்துகொண்டனர். அப்பொழுது மணிமேகலை, "கற்புடைமாதர் இடும் ஐயத்தையே முதலில் ஏற்றுக்கொள்ளுதல் தகுதி" என்றுசொல்ல, காயசண்டிகை, "மழையைத் தரும கற்புடைமாதர்களுள் மிகமேம்பட்டவளாகிய ஆதிரையென்பவளுடைய வீடு இது; நீ இதிற் புகவேண்டும்" என்று அவளுக்குக் கூறினள்

கசு.—ஆதிரைபிச்சையிட்டகாதை.

அங்ஙனங்கூறிய காயசண்டிகை, மீட்டும் மணிமேகலையை நோக்கி, "இந்த ஆதிரையின் கற்புவிசேடத்தைக் கேட்பாயாக; இவள் கணவன் சாதுவனென்பான்; அவன் ஒரு பரத்தையின் இணக்கத்தால் கைப்பொருளிழந்து வறுமையுற்று வேறுதேயம்போய்ப் பொருள்தேடவெண்ணிச் சிலவணிகரோடு கப்பலேறிச்சென்றான்; செல்லுகையில், கடுங்காற்றால் அக்கப்பல் கவிழ்ந்தது; கவிழவே சாதுவன் அதிலிருந்து ஒடிந்துவிழுந்த பாய்மரத்துண்டமொன்றைத் தெப்பமாகப்பற்றிக்கொண்டு நீந்திச்சென்று, உடையில்லாது சஞ்சரிப்பவர்களாகிய நாகருடைய மலைப்பக்கத்தை அடைந்தான்; அஃது அங்ஙனமாக;

அக்கப்பலினின்றும் நழுவியமரத்தைப் பற்றிக் கடலில் நீந்திப் பிழைத்துக் காவிரிப்பூம்பட்டினம் வந்தோர், "கப்பல் உடைய இறந்தவர்களோடு சாதுவனுமிறந்தான்" என்று ஆதிரைக்குக் கூறினர்; அதுகேட்ட அவள், மிக்க வருத்தமடைந்து இறக்கத் துணிந்து மயானத்திற் குழிதோண்டி அதில் விறகுகளை அடுக்குவித்துத் தீயைமூட்டி, "வினைப்பயனால் என் கணவனடைந்த இடத்தை நானுமடையக்கடவேன்" என்று சொல்லி அதிற்புகுந்தாள்; புகுந்தவளை அத்தீயானது சுடாதொழிந்தது; ஒழியவே, அவள், "தீயுஞ்சுடாதபாவியேன் இனி யாதுசெய்வேன்" என்று ஏங்குகையில், ஆகாயவாணியானது, "ஆதிரை! உன்கணவன் இறக்கவில்லை; அவன் பிழைத்துச்சென்று இப்பொழுது நாகமலையிலிருக்கிறான்; அங்கே பலவருடம்தங்கான்; சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பல்வழியேவந்து உன்னையடைவான்; நீ வருந்தாதே" என்று கூறிற்று; அதைக்கேட்ட ஆதிரை வருத்தமொழிந்து வீட்டையடைந்து கணவன் விரைந்துவருதலைக்

குறித்து அதற்கேற்ற புண்ணியங்களை இடைவிடாது செய்து கொண்டிருந்தாள்.

அங்கே நாகமலையையடைந்த சாதுவன், ஒருமரநிழலைச் சார்ந்து அயர்ச்சியால் துயில்கொள்ள, அம்மலையிலுள்ள நாகர்கள்வந்து இவனுடம்பு நமக்கு நல்லவுணவாகுமென்றெண்ணி அவனை எழுப்பினார்; அவன் அவர்கள்பாஷையை விளங்கக் கற்றவனாதலால், அவர்களோடுபேச, அவர்கள் அவனைவருத்துதலைத் தவிர்ந்து, "எங்களாசிரியன் ஒருவனிருக்கின்றான்; அவனிடம் நீ வரவேண்டும்" என்று அழைத்துச்சென்றார்கள்; சாதுவன், அவர்களோடும்போய்,

கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டொ டிருந்த, (௬௬ - ௬௯).

அவர்களுடைய குருமகனைக்கண்டு அவனோடு அளவளாவி அவனை வயமாக்கிக்கொண்டான்; கொள்ளவே அக்குருமகன், "நீ இங்குவந்தது எதன்பொருட்டு?" என்ன, சாதுவன் நிகழ்ந்ததைக்கூறினன். அவன், "பசியால் வருந்திய இவனுக்கு வேண்டியவளவு கள்ளையும் ஊனையுங்கொடுத்துப் பின் இளையளாகிய நங்கை ஒருத்தியையுங்கொடுமின்" என்று சொன்னான். சாதுவன் அதுகேட்டு அவனுடைய அறியாமைக்குவருந்தி, "எனக்கு அவைவேண்டா" என்றான்; அவன், "பெண்டிரையும் உண்டியையுமன்றி மாந்தர்க்கு இன்பந்தருவது வேறே யாதுளது? இருந்தாற்சொல்வாய்" என்று கோபித்துச்சொல்ல, சாதுவன்,

"மயக்குங் கள்ளு மன்னுயி ரோறலுங்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறஞ் செய்வோ ரருநர கடைதலும்
உண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்" (௮௪ - ௯௦).

என்றுகூறினன்; பின்பு அவன்கேட்ட வினாக்களுக்கெல்லாம் தக்கவாறு விடைகூறி மறுபிறப்பும் புண்ணியபாவங்களும்

அவற்றால்வரும் இன்பதுன்பங்களுமுண்டென்பதை அறிவுறுத்தி இறக்குமவரையும் நடக்கவேண்டியமுறையையும் அவனுக்கு இயையத்தெரிவித்து விடைபெற்று, அவனகொடுத்த சந்தனம் அகில் துகில் முதலியவற்றைக் கைக்கொண்டு, அங்கு வந்த சந்திரதத்தனென்னும் வாணிகனுடைய கப்பலிலேறி இந்நகரையடைந்து இவளோடு வாழ்வானாகிப் பல தானங்களுஞ் செய்தான். அப்படிப்பட்ட மேம்பாட்டையுடையவளாகிய இந்த ஆதிரையினகையால் முதலிற் பிச்சைபெறுக” என்று சொல்ல, மணிமேகலை, அவளுடைய மனையிற்புகுந்து வாய் பேசாமற் சித்திரம்போல நின்றாள், நின்றவுடன்,

> தொழுது வலங்கொண்டு தூயமாறு கிளவியோ
> டமுத சுரபியி னகன்சுரை நிறைதரப்
> பாரக மடங்கலும் பசிப்பிணி யறுகென
> ஆதிரை யிட்டன ளாருயிர் மருந்து. (க௩௨ - க௩௫).

கஎ.—உலகவறவிபுக்ககாதை.

ஆதிரையளித்த பிச்சையை முதலில் மணிமேகலை ஏற்ற பின்பு அமுதசுரபியிலுள்ள சோற்றுத்திரளை,

> அறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
> றிறத்து வழிப்படூஉஞ் செய்கை போல, (௩ - ௪)

எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளர்ச்சியையடைந்து, வந்தோருடைய பசியைப் போக்கி விளங்கிறது. அது கண்ட காயசண்டிகைவியந்து மணிமேகலையை வணங்கி, “அன்னாய்! என்னுடைய தீராப்பசியையும் தீர்த்தருளவேண்டும்” என்று வேண்டினள்; உடனே மணிமேகலை, அமுதசுரபியிலிருந்து ஒருபிடியமுதைப்பெடுத்து அவளது கையிலிட்டாள். அதனையுண்டு அப்பசிநோய்தீர்ந்து மகிழ்ந்த காயசண்டிகை, “வடதிசையில் வித்தியாதரருலகிலுள்ள காஞ்சனபுரமென்பது என்னுடைய ஊர்; தென்றிசைக்கண்ணதாகிய பொதியின்மலையின்வளங்களைக் காண்பதற்குக் கணவனும் யானும் புறப்பட்டுப்போந்து இடையேயுள்ள காட்டாற்றின் கரையிலிருந்தேம். இருக்கையில், விருச்சிகனென்னு முனிவனொருவன் பாரணஞ்செய்தற்குப் பனங்கனிபோன்ற பருமையையுடைய நாவற்கனியொன்றைத் தேக்கிலை யில்வைத்துவிட்டு

நீராடச்சென்றான். அக்கனி அம்முனிக்கு உணவாகுமென்பதனை அறியாதநான் முற்பிறப்பிற்செய்த தீவினையால் அக்கனியைக் காலாற் சிதைத்துக்கெடுத்தேன்; நீராடி மீண்டு வந்த விருச்சிகன் அக்கனி என்னாற் சிதைந்திருத்தலையறிந்து கோபித்து என்னைநோக்கி, தெய்வத்தன்மையுள்ளதும் பன்னிரண்டுவருடத்துக்கு ஒருமுறை ஒருகனியைத்தருவதுமாகிய நாவன்மரத்திலுண்டானது இது; இதையுண்டோர் பன்னிரண்டுவருடம் பசியொழிந்திருப்பார்; நானோ பன்னிரண்டுவருடம் பட்டினியிருந்து ஒருநாளுண்ணும் விரதமுடையேன்; உண்ணுந்தினமும் இன்றுதான்; யான் உண்ணக்கருதிய கனியும் இதுவேகாண்; இதனை நீ அழித்துவிட்டாய்; ஆதலால், ஆகாயவழியேசெல்லுமந்திரத்தை மறந்து யானைத்தீயென்னும் நோயாற் பன்னிரண்டுவருடம் தீராப்பசிகொண்டு வருந்தியபின்பு இங்கு இக்கனியை நான் உண்ணுந்தினத்தில் நீ பசியொழிவாயாக" என்றுகூறிப் பசியால்வருந்திப்போயினன்; உடனே எனக்குப் பெரும்பசியுண்டாயிற்று; அதனால் மிக்க வருத்தமடைந்தேன்; அதுகண்ட என்கணவன் சிறந்த கனிகள் கிழங்குகள் காய்கள்முதலியவற்றை நிரம்பக்கொணர்ந்து என்னையுண்பிக்கவும் அப்பசி தீரவில்லை; அந்தரஞ்செல்லும் மந்திரமும் என்னினைவுக்கு வரவில்லை; அப்பொழுது அது கண்டுவருந்திய என்கணவன், "நீ நடந்துசென்று இத்தமிழ்நாட்டில் அறமுமாக்கட்கு அருந்துணைவர்களாகிய பெருஞ்செல்வர்கள் வாழ்ந்திருக்கும் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து அங்கேயிருப்பாயாக" என்றுசொல்ல, நான் அவ்வண்ணமேவந்து இங்கிருக்கின்றேன்; இங்கு இந்திரவிழாநடக்குங்காலத்தில் ஒவ்வொருவருடத்தும் என்கணவன்வந்து என்வருத்தத்தைப் பார்த்துவிட்டுத் தானும்வருந்திச் செல்வான்.

> தணிவில் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன
> மணிமே கலையென் வான்பசிப் படர்கேன்; (எ௩ - எ௪).

இந்நகரில் முனிவர்கள் பலரிருக்கும் சக்கரவாளக்கோட்டமென்பது ஒன்றுண்டு; அதிற்பலரும்வந்துபுகுதற்காகவே எப்பொழுதும் கதவுதிறந்துள்ள உலகவறவியென்னும்பெயரையுடைய அம்பலம்ஒன்றுண்டு. அதில்,

ஊரு ராங்க ணுறுபசி யுழந்தோ
ராரு மின்மையி னரும்பிணி யுற்றோ
ரிடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலர்; (எக - அக).

ஆதலால் அவ்விடத்திற்குச்செல்வாயாக" என்றுசொல்லி விட்டு, அவள் தன்னூருக்குப்போயினள்; போகவே மணிமேகலை, வீதியின் ஒரு பக்கத்தே ஒதுங்கிச்சென்று உலகவறவியையடைந்து மூன்றுமுறை வலமவந்து பணிந்து அதிலேறிச் சம்பாபதியையும் கந்திற்பாவையையும் வணங்கி,

வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதன மாக்கட்
கமுத சுரபியோ டாயிழை தோன்றி, (கூக - கூச).

"இப்பாத்திரம் ஆபுத்திரன்கையிலிருந்ததாகிய அமுதசுரபி; உண்ணுதற்கு விருப்பமுள்ள யாவரும் வருக" என்றுசொல்ல, பலருமவந்து உண்பாராயினர்; ஆகவே அவ்வம்பலத்தில் உண்ணுமொலிமிகுந்தது.

கஅ.—உதயகுமரன் அம்பலம்புக்ககாதை.

மணிமேகலை பிக்குணிக்கோலங்கொண்டு பாத்திரமேந்தி ஐயமேற்று உலகவறவியிற் சென்றுளென்பதைக் கேட்ட சித்திராபதி, மனங்கொதித்து வெய்துயிர்த்துக் கலங்கி, "மணிமேகலையை இச்செயலினின்றும் நீக்குவேன்" என்று எண்ணிக்கொண்டு நாடகக்கணிகையரெல்லாரையும் பார்த்து, "கோவலன் இறந்ததுகேட்டு மாதவி எல்லாவறத்தையுந்துறந்து முனிவர்களுடைய தவச்சாலையையடைந்து தாபதக்கோலம்பூண்டிருத்தல் நகைக்கத்தக்கதாக இருக்கின்றது; யாம் கணவனுடன் இறக்கும் பதினிப்பெண்டிரல்லேம்; பாணன் இறந்தபொழுது அவனுடன் இறவாத யாழைப்போல்வேம்; பின்னும்,

நறுந்தா துண்டு நயனில காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்; (கக - உ0)

தாபதக்கோலந்தாங்குவது நம்முடையகுலவொழுக்கத்திற்கு ஒத்ததன்று; மாதவிமகள் மணிமேகலையின் பிக்குணிக்கோலத்தைமாற்றி அவள் கையிலேந்திய பிச்சைப்பாத்திரத்தை,

பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி, (௫0).

பலநாளாக விரும்பிக்கொண்டிருக்கும் உதயகுமரனால் அவளை அவனது தேரிலேற்றுவித்தே வருவேன். அங்ஙனஞ்செய்து வாரேனாயின் குடிக்குற்றப்பட்டு ஏழுசெங்கலைத் தலைமேலேற றிக்கொண்டு நாடகவரங்கைச் சுற்றிவந்து பழியோடிருக்கும் நாடகமடந்தையர்போல இனி நான் நாடகக்கணிகையர்வீட்டிற்குச் செல்லேனாகக் கடவேன்" என்று சபதஞ்செய்துவிட்டுத் தன்னைச் சிலர் சூழ்ந்துவரச்சென்று உதயகுமரனுடைய அரண்மனையையடைந்து அவனைக்கண்டு துதித்து, மணிமேகலை உலகவறவியை அடைந்திருக்கின்றாளென்பதை அவனுக்குக்குறிப்பிக்க, அவன் உவவனத்தில் மணிமேகலையைக் கண்டதுமுதல் நிகழ்ந்தவற்றைக்கூறி அவளிடத்துள்ள விசேடத் தன்மையைப் பாராட்டினன்; சித்திராபதி, அவனுடைய மனத்தை வேறுபடுத்துமவார்த்தைகள் பலவற்றைச்சொல்லிமுயல, அவன் உளமகிழ்ந்து தேரேறி உலகவறவியையடைந்து, பலாக்கும உணவளித்துக்கொண்டிருக்கும மணிமேகலையைக்கண்டு அருகிற்சென்று, "நீ தவக்கோலம பூண்டது யாது கருதி" என்று வினவினன்; மணிமேகலை, "பழம்பிறபபிற் கணவனாக இருந்த இவனை வணங்குதல் முறையாகும" என்று எண்ணி வணங்கி,

"பிறத்தலு மூத்தலும பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலு முடைய திடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்" (கஙசு - கஙகூ).

என்றுகூறி, வேற்றுவடிவங்கொள்ள நினைந்து அவனைநீங்கிக் கோயிலினுள்ளேசென்று சம்பாபதியை வணங்கி, முன்பு மணிமேகலாதெய்வமுபதேசித்த மந்திரத்தை ஜபித்துக் காயசண்டிகைவடிவமுற்று அமுதசுரபியையேந்தி வெளியேவந்துநின்றாள்; அவள அவ்வாறுவந்ததையறியாத உதயகுமரன்—சென்றமணிமேகலை சமபாபதிகோயிலுள்ளே ஒளித்துக்கொண்டாள்—என்று நினைந்துசென்று சம்பாபதியைவணங்கி, "பிச்சைப்பாத்திரத்தைக் காயசண்டிகையின் கையிற்கொடுத்துவிட்டு ஒளித்துச்சென்ற மணிமேகலையை இங்கேயுள்ள இவ்வளவு வுபாவைக்கூட்டங்களுள்ளே நான் எவ்வாறு தெரிந்துகொள்ளுவேன்; நீ எனக்கு அவளைக்காட்டாயாயின், இவ்விடத்தி

லேயே பாடுகிடப்பேன். பலநாள்சென்றாலுஞ் செல்லுக. மணிமேகலையை இங்கேவிட்டுவிட்டு நான்மட்டும்போகேன்; உன்னுடைய திருவடியைத்தொட்டேன்" என்று சபதங்கூறினன்.

க௯.—சிறைக்கோட்டமறக்கோட்டமாக்கியகாதை.

உதயகுமரன், சம்பாபதியைவணங்கி இங்ஙனம் சபதங் கூறுகையில், அவன்கேட்கும்படி, "நீ எம்பெருமாட்டியின் முன்னே ஆராய்ந்துபாராமல் வஞ்சினங்கூறினை; இங்ஙனங் கூறியதில் யாதொருபயனுமில்லை" என்று ஆங்குள்ள சித்திரங்களுள் ஒன்றை அதிட்டித்துநிற்கும் தெய்வங்கூறியது; அவ்வார்த்தையைக்கேட்டு அவன் மனங்கலங்கி வருந்தி, "மணிமேகலையை மறப்பாய்" என்று முன்னங்கூறியதெய்வத்தின் வார்த்தையும் வியப்பைத்தருகின்றது; தெய்வத்தன்மையுள்ளதாக இருத்தலின், அவள் ஏந்திய பாத்திரமும் வியப்பைத்தருகின்றது; இச்சித்திரம் பேசியதும் வியப்பை உண்டுபண்ணுகின்றது; இவற்றையெல்லாம் மணிமேகலையின் செய்தியை அறிந்துகொண்டபின்பு அறிவோம்" என்று நிச்சயித்துக் கொண்டு காமபரவசனாய் வெய்துயிர்த்து மீண்டு தன் இருப்பிடத்தை யடைந்தான். மணிமேகலை, "நமவடிவத்தோடு திரிந்தால் உதயகுமரன் விட்டுநீங்கான்; கைப்பற்றிக்கொள்ள முயலுவன்; ஆதலால், நாம் காயசண்டிகைவடிவங்கொள்ளுதலே நன்று" என்றெண்ணி அவ்வடிவுகொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்த அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு எங்கும்போய், பசித்துவந்த யாவருக்கும் உணவளித்துச் செல்லுபவள், ஒருநாள், அந்நகரத்துள்ள சிறைச்சாலையிற்புகுந்து அங்கே தண்டிக்கப்பட்டிருந்து பசியால்வருந்துவோரை அருளுடன்பார்த்து மனமுருகி இனியமொழிகளைக்கூறி உண்பிப்பாளாயினள்; அதனைக்கண்ட காவலாளர், அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கு உணவளித்தலைத் தெரிந்து வியப்புற்று, "இப்பாத்திரத்தின் விசேடத்தையும் இவள் செய்தியையும் அரசனுக்குத் தெரிவிப்போம்" என்றுநினைந்து சென்று, ஒருமண்டபத்தில் மிக்கசிறப்புடன் சீர்த்தியென்னும் இராசமாதேவியோடு வீற்றிருக்கும் அரசனுடைய செவ்வியைப்பார்த்துச் சேய்மையில் வணங்கிநின்று,

"வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
யொளியொடு வாழி யூழிதோ றூழி
வாழி யெனக்கோ மன்னவர் பெருந்தகை
கேளிது மன்னோ கெடுகநின் பகைஞர" (கஉஎ - கங0).

என்றுவாழ்த்தி, "யானைத்தீயென்னும்நோயால் வருந்தி உடல் மெலிந்து இந்நகரில் திரியுமங்கையொருத்தி, சிறைக்கோட்டத் துள்ளேவந்து தேவரீரைவாழ்த்திக் கையின்கண் பிச்சைப்பாத்திரம் ஒன்றையேவைத்துக்கொண்டு அதிலிருந்துண்டாகி வளரும் சோற்றால் அங்கேயுள்ள எல்லாருடைய பசியையுந்தீர்த்து விளங்குகின்றாள். இவ்வற்புதத்தைத் தெரிவிப்பதற்கே வந்தோம்" என்றார். அதைக்கேட்ட அரசன், "அம்மங்கையை இங்கே அழைத்துவருக" என்றான். உடனே காவலாளர்கள்வந்து அதனைச்சொல்ல, அவள்சென்று அரசனைக் கண்டு, "அரச! உனது அருளவாழ்க" என்றாள். அரசன், "மிக்க தவமுடையாய்! நீயார்? கையிலேந்திய பாத்திரம் எங்கேகிடைத்தது?" என்றான். அவள் "அரசே! நெடுங்காலம் வாழ்வாயாக; யான் விஞ்சைமகள்; இந்நகரில் வேறுவடிவங் கொண்டுதிரிந்தேன். இது பிச்சைப்பாத்திரம்; இதனை அம்பலத்தேயுள்ள தெய்வமொன்று எனக்கு அருளியது; இது, தெய்வத்தன்மையோடுகூடியது; யானைத்தீயென்னுந் தீராப் பசியைத் தீர்த்தொழித்தது; பசியால் மெலிந்தவர்களுக்கு மிருதசஞ்சீவினியாகவுள்ளது" என்று சொல்ல, அரசன், "யான் செய்யவேண்டுவது யாது?" என்றுகேட்ப, அவள், "சிறைச்சாலையை அறச்சாலையாகச் செய்யவேண்டும்" என்றாள்; அரசன், அவள் விரும்பியவண்ணமே சிறைச்சாலையை யழித்துத் தூய்மைசெய்து அவ்விடத்தைப் பலவகையான புண்ணியங்களும் நடத்தற்குரிய இடமாகச்செய்வித்தான்.

உ0.—உதயகுமரனை வாளாலெறிந்தகாதை.

அரசனுடைய கட்டளையால், சிறைச்சாலை, பலவகைப் புண்ணியங்களும் நிகழ்தற்குரிய அறச்சாலையாய் விளங்கிற்று; உதயகுமரன் இச்செய்திகளையெல்லாம் கேட்டு, "மணிமேகலை உலகவறவியை நீங்கி வெளியேவந்தபொழுது அவளைக் கைப்பற்றிக்கொணர்ந்து தேரிலேற்றி அவள்கற்ற வித்தைகளையும் அவள்கூறும் இனிய முதுமொழிகளையும் கேட்பேன்" என்று

தன்னுள்ளே எண்ணிக்கொண்டுசென்று அவளிருக்கும் உலகவறவியில் ஏறினன். காஞ்சனனென்னும் வித்தியாதரன், "பெரும்பசியால் வருந்தும்படி காயசண்டிகைக்குப் பொதியினமலையைச்சார்ந்த காட்டாற்றின்கரையில் விருச்சிகமுனிவன் இட்ட சாபத்தை அவள் அநுபவித்தற்குரிய பன்னிரண்டு வருடங்களும் சென்றன, சென்றும் அவள் வாராமைக்குக் காரணம்யாதோ" என்று மிக்க கவலையுற்று, தனது நகரை நீங்கி ஆகாயவழியேவந்து காவிரிப்பூம்பட்டினத்திலிறங்கிப் பூதசதுக்கமும் பல பூஞ்சோலைகளும் முனிவர்களுடைய தவச்சாலைகளும் மன்றங்களும் அம்பலங்களும் ஆகிய இடங்களிலெல்லாம் சென்றுசென்று தேடித்தேடித்திரிந்து, காயசண்டிகைவேடம்பூண்டு உணவளித்து மாந்தர்கள் பலருடைய பசிகளையும் மாற்றிக்கொண்டிருக்கும் மணிமேகலையை மணிமேகலையென்று அறியானாகிக் காயசண்டிகையென்றே நிச்சயித்துக் கொண்டு அருகிற்சென்று அவளைநோக்கி, "நீ ஏந்திய இப் பாத்திரம் ஒன்றாயிருந்தும் இதனால் அளிக்கப்படும் உணவை அருந்துவோர் பலராய் உள்ளார். எனக்கு இது மிக்க வியப்பைத் தருகின்றது; உன்னைவருத்திய யானைத்தீயாகியநோயை ஒழித்தற்குத் தேவர்கள் இதனைக்கொடுத்தார்களோ" என்று சொல்லிப் பின்பு பழையநட்பினைப் புலப்படுத்துமொழிகள் பலவற்றைக்கூறிப் பாராட்டவும் அவள் அவற்றைச் சிறிதும் மதியாமல் அவனை நீங்கி உதயகுமரனையடைந்து அவனருகே நின்று இளமையின் நிலையில்லாமையை அவனுக்கு அறிவுறுத்தநினைந்து, அங்கே இயல்பாகவந்த முதுமைப்பருவத்தாளொருத்தியைக் காட்டி, முன்பு அழகையுடையனவாயிருந்த அவளுடைய உறுப்புக்கள் வலிமைகுறைந்து அழகு கெட்டு வெறுக்கத்தக்கனவாக இருத்தலைப் பலவாற்றானும் அவனுக்குப் புலப்படுத்துவாளாகி,

"தண்ணறல் வண்ணந் .
.
. .
.
பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்துத்
தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனே" (௪௧ - ௬௧.)

என்றுகூறினள். அவள் அவ்வாறுகூறுதலைக்கேட்ட காஞ்சனன், "யான் பாராட்டிக்கூறுகின்ற சொற்களின்பொருளை இவள் கொள்ளுகின்றிலள்; என்னை மதிக்கின்றிலள்; அயலான் பின்னே செல்லுகின்றாள்; என்னை அயலானாகக்கருதுகின்றாள்; காதற்குறிப்பைப் புலப்படுத்திக்கொண்டே நீதிமொழிகளை இவனுக்குக்கூறுகின்றாள்; இவன் ஆசாநாயகனாதலினாலேயே இவள் இவ்விடத்திற்றங்கிவிட்டாள்போலும்" என்று நினைந்து மிக்ககோபங்கொண்டு புற்றிலடங்கும் பாம்பைப்போல அவ்வுலகவறவியினுள்ளேபுகுந்து தீதுகருதி ஒளித்து அடங்கினன். அவன் அங்ஙனம் அடங்கியதை அறியாத உதயகுமரன், மிக்க வேட்கையையுடையவனாகி, "மணிமேகலைதான் காயசண்டிகைவேடம்பூண்டு கையிற் பிச்சைப்பாத்திரத்தை ஏந்திக்கொண்டுவந்துநின்று நம்மை மயக்கினள்; அறிந்தவன்போன்று பழமைகூறிப் பாராட்டிய அயலானொருவன் இங்கே இருத்தலால், இவள் இன்றிரவில் இவ்விடத்தை விட்டு நீங்குவாளல்லள்; இவள்செய்தியை இன்றிரவின் நடுயாமத்தேவந்து தெரிந்துகொள்வோம்" என்று தன்னுள் எண்ணிக்கொண்டேசென்று தன்னிருப்பிட மடைந்தான்; மணிமேகலையும் காயசண்டிகையுருவத்தோடே சம்பாபதிகோயிலை அடைந்து வதிந்தாள். அப்பால், எல்லாரும் தூங்கியபின்பு உதயகுமரன் முன்பு எண்ணியவாறே செல்லத்துணிந்து தனியேயெழுந்து அரண்மனையைநீங்கி உலகவறவியையடைந்து,

வேக வெந்தீ நாகங் கிடந்த
போகுயர் புற்றளை புகுவான் போல (௩௮ - ௩௯).

அதனுள்ளேபுகுந்தான். உடனே, அங்கே முன்னம்புகுந்து இவனவரவை நோக்கிக்கொண்டே கோபத்துடனிருந்த காஞ்சனன், "இவன் இவளிடத்திலேயே வந்தான்" என்று நிச்சயித்து அதிவேகத்தோடெழுந்து, விரைந்துபோய், அவன் தோளைவெட்டிவீழ்த்திவிட்டு, காயசண்டிகையைக் கைப்பற்றிக்கொண்டு ஆகாயவழியேசெல்லுவோமென்று நினைந்து அவளருகேசென்றான்; அப்பொழுது அங்கேயுள்ள கந்திற்பாவையானது, "காஞ்சன! செல்லாதே, செல்லாதே; இவள் உன் மனைவியாகிய காயசண்டிகையல்லள்; இவ்வடிவம் மணிமேகலைகொண்ட வேற்றுவடிவம்; காயசண்டிகை கடும்பசியொழி

ந்து ஆகாயவழியேசெல்லுகையில் அவளுக்குநேர்ந்த துன்பத்தைக்கேட்பாயாக; ஆகாயசாரிகள் தூர்க்கையெழுந்தருளியிருக்கும் விந்தமலைக்குநேராக மேலே செல்லார்; யாரேனும் அங்ஙனம் செல்வாராயின், அம்மலையைக்காக்கும விந்தாகடிகையென்பவள் அவர்களைச் சாயையினாலேயிழுத்துத் தன்வயிற்றில் அடக்கிக்கொள்வாள். இதனையறியாத காயசண்டிகை அம்மலைக்குநேராக மேற்சென்று அவள்வயிற்றில் அடங்கிவிட்டாள். காஞ்சன! இதனையுங்கேட்பாயாக: உதயகுமரன் ஊழ்வினையினால் இறந்தானாயினும் நீ சிறிதும் ஆராயாதுவெட்டினமையால், அறிவில்லாதவனேயாவாய்; மிக்க தீவினையைச் செய்துவிட்டாய்; அவ்வினை விடாதுதொடர்ந்து உன்னைவருத்தும்" என்று சொல்லியது. அதுகேட்டு மனமவருந்திக் காஞ்சனன் தன்னகரத்திற்குச்சென்றான்.

உக.—கந்திற்பாவை வருவதுரைத்தகாதை.

அப்பால், சம்பாபதியின் கோயிலிலிருந்த மணிமேகலை, காஞ்சனன செய்தியையும் உதயகுமரன் வெட்டுண்டுவீழ்ந்து இறந்ததையும காஞ்சனனுக்குக் கந்திற்பாவைகூறிய அற்புத மொழியையுமறிந்து, உடனேயெழுந்து, தான்கொண்ட வேற்று வடிவத்தைத்துறந்து, (உதயகுமரன் உருவத்தைநோக்கி) "முற்பிறப்பில் திட்டிவிடத்தால உன்னுயிர்போனகாலத்தில நின்பிரிவாற்றாது தீயிற்பாய்ந்து நானும உயிர்துறந்தேன்; உவவனத்திற்கண்டபொழுது உன்பாற் கருத்தைச் செலுத்தியதுபற்றி மணிமேகலாதெய்வம என்னையெடுத்துச்சென்று மணிபல்லவத்தில்வைத்துப் புத்தபீடிகைக் காட்சியால் என்பழம்பிறப்பை எனக்குத் தெரிவித்து, உன் முற்பிறப்பையும் கூறிற்று. அதனால், நீ முன்பு கணவனாகவிருந்ததையறிந்து யான் உன்பால் அன்புற்று,

> பிறந்தோ ரிறத்தலு மிறந்தோர் பிறத்தலும
> அறந்தரு சால்பு மறந்தரு துன்பமும
> யானினக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக
> காயசண் டிகைவடி வானேன் காதல, (கக - உஉ).

வித்தியாதரனுடைய வாட்படையால் வெட்டுண்டு வீழ்ந்தனையே; அந்தோ!" என்று புலம்பி வெய்துயிர்த்து வருந்தி, அவ

னுருவின் அருகேசெல்வாளாயினள்; அப்பொழுது, அங்குள்ள கந்திற்பாவைதெய்வம், "நீ இவனிடத்திற் செல்லாதே; செல்லாதே; உனக்கு இவன் கணவனாகவிருந்ததும் இவனுக்கு நீ மனைவியாகவிருந்ததும சென்ற பிறவியிலேமட்டும நிகழ்ந்தனவல்ல; அதற்கு முன்னும் எத்தனையோபிறவிகளில நிகழ்ந்தன:

> நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம்
> மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம
> பண்டும பண்டும பலபிறப் புளவாற்
> கண்ட பிறவியே யல்ல காரிகை. (௨௧ - ௩௨)

இங்ஙனம் தடுமாறும் பிறவித்துன்பத்தை ஒழித்துக்கொள்ளுதற்கு முயலும அறிவினையுடையாய்! இவனிறந்ததுபற்றி நீ துன்பமடையாதே" என்று தனது தெய்வவாக்காற்சொல்லிற்று; அதுகேட்ட மணிமேகலைசென்று, "இவ்வம்பலத்தில யாவருக்கும மெய்மமையைச் சொல்லிக்கொண்டு எழுந்தருளியிருக்குந்தெய்வம ஒன்றுண்டென்பர்; அததெய்வம் நீதானோ? உன் திருவடியை வணங்குகின்றேன்; சென்ற பிறவியில, திட்டிவிடத்தாலும் இப்பிறவியில வித்தியாதரனுடைய வாளாலும் இவன் இறந்ததற்குள்ள காரணத்தை நீ அறிவையோ? அறிந்திருப்பாயாயின், அதனை அடிச்சிக்கு உரைத்தருளல் வேண்டும" என்றாள்; என்றலும், அததெய்வம், "புததேவன் அவதரித்து வருதலைக்கூறி, காயங்கரையென்னும் ஆற்றங்கரையிலிருந்துகொண்டு மனிதருடைய அறிவின்மையைப போக்கும் பிரமதருமமுனிவரை இராகுலனும நீயும் வழிபட்டு அவருக்கு அமுதுசெய்விக்கநினைந்து அக்கருத்தை அவருககு அறிவிதது அவர் உடன்பாடுபெற்று, "விடியற்காலத்திலேயே அடிசில்முதலியவற்றை விரைந்து ஆக்குவாய்" என்று மடையனுக்குக்கூறினீர்; அவன் யாதுகாரணத்தாலோ அக்காலத்தில்வாராமல் சிறிதுபொழுது பாணித்துவந்து, அங்ஙனம் வந்த அச்சத்தால் வழுக்குற்றுக் கால்தளர்ந்து மடைக்கலம் சிதையும்படி வீழ்ந்தான்; வீழ்ந்ததனைக்கண்டும இரங்காமல், "இவன் முனிவர்க்குச் செய்யவேண்டிய காரியத்தை விரைந்து வந்து செய்யாது தாழ்த்தான்" என்று சினந்து தோளும் தலையும் துண்டாகி வேறாகும்படி இராகுலன் அவனை வெட்டி

றான்; வெட்டிய அவ்வல்வினையே அப்பிறப்பில் அவனைத் திட்டிவிடத்தால் இறக்கச்செய்ததன்றி இப்பிறப்பிலும் இங்கு வெட்டுண்டுவீழச்செய்தது. உதயகுமரன் இங்ஙனமிறந்ததற்குக் காரணம் இதுவே; வினை, தன்பயனை ஊட்டாமலொழியாதென்பது திண்ணம்; இன்னும் கேட்பாயாக; உதயகுமரனிறந்ததற்கு மிகவும் வருத்தமுற்ற சக்கரவாளக்கோட்டத்து முனிவரால் அச்செய்தியை யறிந்தஅரசன் உன்னைச் சிறையில்வைப்பான்; அதுதெரிந்த இராசமாதேவி உன்னைச்சிறைமீட்டுத் தன்காவலில் வைத்துக்கொள்வாள்; மாதவியின் வேண்டுகோளால்வந்த அறவணவடிகளுடையசொல்லால் அக்காவலினின்றும் நீங்குவை. அப்பால் நீ சாவகநாடுபோய் ஆபுத்திரனிடஞ்சென்று அவனோடு மணிபல்லவத்தை அடைவை; தன் வரலாற்றைப் புத்தபீடிகைக் காட்சியாலும் தீவதிலகையாலுமறிந்து அவ்வரசன் தன்னாட்டை யடைந்தபின் நீ ஒரு முனிவன்வேடம் பூண்டு வஞ்சிநகரம் புகுவாய்; புகுந்து அந்நகரத்துள்ள சமயவாதிகள் பலருடைய கொள்கைகளையுங் கேட்பை;

> தீவினை யுறுதலுஞ் செத்தோர் பிறத்தலும்
> வாயே யென்று மயக்கொழி மடவாய்! (௧௧௩ - ௧௧௪)

இதுநிற்க; என்வரலாற்றையும் கேட்பாயாக; யான் தெய்வகணங்களைச்சார்ந்த ஒருவன்; என்பெயர் துவதிகனென்பது; இந்தப் பழையதூணில் எனக்கு ஒப்பாக மயனாற்செய்யப்பட்ட இந்தப் படிமத்தைவிட்டு ஒருபொழுதும் நீங்கேன்" என்று தனது தெய்வவாக்காற் சொல்லியது. சொன்னவுடன், மணிமேகலை, "அப்பால் என்னுடைய மரணமிறுதியாக நிகழுஞ் செய்திகளையெல்லாம் உரைத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்; பிரார்த்திக்கவே, "மழையில்லாததுபற்றிக் காஞ்சிநகரத்தில் உயிர்கள் பசியால் வருந்துதலையும், மாதவி சுதமதியென்னும் இருவருடன் அறவணவடிகள் அந்நகரஞ்சென்று உன்னுடைய வரவைப்பார்த்துக்கொண்டு தங்கியிருத்தலையும் வஞ்சிநகரத்தில் நீ அறிந்து உடனே அக்காஞ்சிநகரஞ் சென்று உணவளித்து எல்லாவுயிர்களையும் பாதுகாப்பாய்; அந்நகரத்தே உன்னாலே பற்பல அற்புதங்கள்நிகழும். அப்பால், வஞ்சிநகரிற்கேட்ட சமயவாதிகளுடைய கொள்கைகளையெல்லாம் அறவணவடிகளுக்கு நீ தெரிவிப்பாய்; அப்பொழுது, அவர்,

தவமுந் தருமமுஞ் சார்பிற் றோற்றமும்
பவமறு மார்க்கமும் பான்மையி னுரைத்து
"மறவிரு ளிரிய மன்னுயி ரேமுற
வறவெயில் விரித்தாங் களப்பி லிருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றுங் காறும (கசுங - கசுஎ).

இந்தத் தலத்திலேயே இறந்தும் பிறந்தும் தருமோபதேசஞ் செய்துகொண்டு தங்கியிருப்பேன" என்று சொல்லுவார்; அவர் செய்த உபதேசமொழிகளைப் பிழையாமல் நல்லறங்கள் பலவற்றையும் செய்து இறந்து மேலேவரும் பிறப்புக்களை * உத்தர மகத நாட்டிலேயேபெறுவாய்; அவைகள் யாவும் உனக்கு ஆண்பிறப்பாகவே நிகழும்; அப்பிறப்புக்களுள் ஒவ்வொன்றிலும் அருளறத்தினின்றும் ஒழியாயாகின்று முடிவிற் புத்த தேவனுக்கு முதல் மாணாக்கனாகும் பெரும்பேறுற்றுப் பற்றற்று நிருவாணமடைவாய்; இன்னுங்கேள்; உன்குலத்து முன்னோர்களுள் தானந்தாங்கிச் சீலத்தில் மேம்பட்ட ஒருவனைக் கடலினின்றும் முன்னம் எடுத்தளித்த மணிமேகலா தெய்வம் நீ முற்பிறப்பில் சாதுசக்கரமுனிவனுக்கு உணவளித்த புண்ணியவிசேடமுடையாயென்பதையறிந்து உவவனத்தினின்றும் உன்னையெடுத்து மணிபல்லவத்திற்கொண்டுசென்று புத்தபீடிகையைக் காணச்செய்தது" என்று தனது தெய்வ வாக்கால் அத்தெய்வம் சொல்லிற்று; கேட்ட மணிமேகலை கவலையொழிந்து மயக்கம் நீங்கியிருந்தாள்; அவ்வளவிலே சூரியனுதித்தான்.

உஉ.—சிறைசெய்காதை.

சூரியனுதித்தவுடன், கந்திற்பாவையையும் சம்பாபதியையும் வழிபட்டவர்கள், அங்கே உதயகுமரன் வெட்டுண்டு கிடத்தலைக்கண்டு, அதனைச் சக்கரவாளக்கோட்டத்திலுள்ள முனிவர்களுக்குக் கூறினர். அம்முனிவர்கள், "இவன் வெட்டுண்டதற்குக்காரணம் நீ அறிந்ததுண்டோ?" என்று மணிமேகலையைக்கேட்ப, அவள் நிகழ்ந்தவற்றைச்சொல்ல, அவர்கள் உதயகுமரனுடைய உடம்பையும் மணிமேகலையையும் வே

* புத்ததேவரவதரித்ததும், அவருக்கு ஞானோதயமானதும் மகதநாடாதலால், அது சிறந்த புண்ணியபூமியாகப் பௌத்தரால் மிகப்பாராட்டப்படும்.

றிடத்தில் ஒளித்துவைத்துவிட்டு அரண்மனைசென்று தம்முடையவரவை வாயில்காப்போரால் அரசனுக்குத் தெரிவித்து உள்ளேபோய் அரசனையடைந்து அவனைவாழ்த்தியபின்பு, அவர்களுள் ஒருமுனிவர், “அரசே! இன்றுமட்டுமன்று; இந்நகரில் காமவிகாரத்தால் மயங்கிப் பத்தினிப்பெண்டிரையடுத்து வன்மைசெய்தும் தவமகளிரைவிரும்பியொழுகியும் ஒறுக்கப்பட்டு இறந்தோர் முற்காலத்தும் பலருண்டு; கேட்பாயாக: அரசர்களுடைய பரம்பரையை வேரறுத்த பரசுராமன் போர்செய்தற்குவந்தபொழுது, துர்க்கை, அந்நாளில் இந்நகரையாண்ட காந்தனென்னும் அரசனைப்பார்த்து, ‘நீ இப்பொழுது பரசுராமனோடு போர்செய்தற்குச்செல்லுதல் தகுதியன்று’ என்றுகூறுதலால், வேறிடஞ்செல்லுதற்கு நினைந்த அவ்வரசன் இந்நகரைப் பாதுகாத்தற்குரியோர் யாரென்று ஆராய்ந்து காவற்கணிகையின்புதல்வனும் வீரருள்வீரனுமாகிய ககந்தனென்பவனே இதற்குத் தகுதியுள்ளானென்று நிச்சயித்து, அவனை வருவித்து, ‘அரசாளுங்குலவுரிமை உனக்கின்மையால், அரசபரம்பரையோரைக் கொல்லுதலையே விரதமாகக்கொண்ட பரசுராமன் உன்னோடு போர்செய்யத்தகுவாரால், அகத்தியமுனிவருடைய கட்டளைபெற்று யான் மீண்டுவருமளவும் இந்நகரை நீ பாதுகாக்கக்கடவை; உன்னாற் காக்கப்படுதலின், இந்நகரத்துக்குக் காகந்தியென்று பெயருண்டாகக்கடவது’ என்றுசொல்லிவிட்டு வேற்றுவடிவங்கொண்டு தான் கருதியவிடஞ்சென்றான்.

அவன்சென்றபின்பு ககந்தனென்பவனால் இந்நகரம் பாதுகாக்கப்பட்டுவந்தது; அப்பொழுது ஒருநாள், ககந்தனுடைய பிள்ளைகளுள் இளையவன், காவிரியில் நீராடிவிட்டுத் தனித்து வருபவளாகிய மருதியென்னும் பார்ப்பனியைக் காவிரிவாயிலிற்கண்டு காமபரவசனாய், ‘நீவா’ என்றழைத்தான்; அவள் மனங்கலங்கி, ‘இவ்வுலகில் மழைவளத்தைத்தரும் பத்தினிப் பெண்டிராயுள்ளார் பிறருடைய நெஞ்சிற்புகார்; நானோ இவனுடைய உள்ளத்திற் புகுந்தேன்; ஆதலால், இனி அந்தணனுடைய முத்தீயைப்பேணுந்தகுதி எனக்கு இல்லையே! இதற்குக்காரணம் யாது?’’ என்று துன்பமுற்றுத் தன்னுடைய வீட

டிற்செல்லாமற் பூதசதுக்கம்புகுந்து மயங்கி, 'தெய்வமே! கொண்டவனுக்கு யாதொருகுற்றமுஞ் செய்திலேன்; அப்படியிருந்தும் பிறனுடைய நெஞ்சில் எளிதாகப் புகுந்தேன்; யான் செய்ததவறு இன்னதென்று எனக்கே புலப்படவில்லை; 'தவமறைந்தொழுகுவோர்முதலிய தீயவர்களைப் பாசங்கட்டிவர நீ இங்கே அறைந்துண்மை' என்று ஆன்றோர்கூறக்கேட்டுளேன்; இப்பொழுது என்னை அங்ஙனஞ்செய்யாமையின், நீ ஈண்டிருத்தல் பொய்யாமோ' என்று அவலித்து அரற்றினாள்; அரற்றும்பொழுது சதுக்கப்பூதந்தோன்றி, 'மடக்கொடி! கேட்பாயாக;

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில புலவன் பொருளுரை தேறாய்; (௫௯ - ௬௧)

பொய்க்கதைகளையும் நகையைவிளைவிக்குமொழிகளையும் பிறர்வாய்க்கேட்டு நிருத்தகீதவாத்தியங்களையுடைய விழாக்களைவிரும்பித் தெய்வங்களை வழிபடுநியமத்தை மேற்கொண்டிருந்தனை; ஆதலின், உன் ஏவலால் மேகம் மழையைப்பெய்யாது; உத்தமபத்தினிபெண்டிரைப்போலப் பிறருடைய மனத்தைச் சுடுந்தன்மையும் உனக்கு இல்லாதுபோயிற்று. மேற்கூறிய வெற்றுச்செய்கைகளை விடுவாயாயின், மேகம் உனதுமொழி வழிபட்டு ஒழுகாநிற்கும்; மனம்போனவாறேயொழுகும் பெண்டிரைக்கட்டுவதுபோல உன்னை என்பாசம் கட்டுதல்செய்யாது; குற்றஞ்செய்தோரை ஏழுநாள்வரையில் தண்டித்தல் அரசனுடைய முறைமை; அவன் அக்காலவரையறையுள் அதனைச்செய்யாதொழியின், அப்பால் தண்டிப்பது என்னுடைய முறைமையாகும்; இவ்வேழுதினத்திற்குள்ளேதானே இச்செய்தியைக் கேட்டுக் ககந்தன் உன்னைவிரும்பிய சிறுதொழிலாளனை வெட்டிவிடுவான்' என்று எடுத்துரைத்தது; அப்பூதம் உரைத்த ஏழுநாளைக்குள்ளே அச்சிறுதொழிலாளன் தாதையின்வாளால் தடியப்பட்டனன்; மன்னவரேறே! இன்னுங் கேட்பாயாக:—

இந்நகரில் முன்பிருந்த பேரழகையுடைய தருமதத்தனென்னும வாணிகனும் அவன் மாமனமகளாகிய விசாகையென்

பவனும் ஒருவர்பால் ஒருவர் மிக்க அன்புபாராட்டி உரையாடிக்கொண்டிருந்தமை பற்றி, "இவர் காந்தருவமணத்திற்கு உரியவராயினர்" என்று ஊரிலுள்ளாரெல்லாரும் பழிகூறுவாராயினர். அதுபொறாத விசாகையானவள்சென்று உலகவறவியிலேறி, "கந்திற்பாவாய்! இப்பழியை ஒழிப்பாய்" என்று முறையிட்டாள். உடனே அத்தெய்வம், "நகருள்ளீர்! இவள் யாதொருகுற்றமும் இல்லாதவள்" என்று தனது தெய்வவாக்கால் அவளை உயர்த்திக்கூறியது. அதுகேட்டு ஊரார் அவளை வியந்து புகழ்ந்தார்கள்; விசாகை, "இத்தெய்வம் தெளிவியாதாயின், இவ்வூராருக்கு என்பாலுண்டாகிய ஐயம் நீங்காது; மறுபிறப்பிலேதான் மைத்துனனுக்கு மனைவியாவேன்; இப்பிறப்பில் இவனை மணத்தல்செய்யேன்" என்று தன்னுடைய நற்றாய்க்குச்சொல்லிவிட்டுக் கன்னிமாடம்புகுந்து தவஞ்செய்துகொண்டிருந்தாள். அப்பால், தருமதத்தன் தன்பழியைப் போக்கிய கந்திற்பாவையைத்துதித்துக் காவிரிப்பூம்பட்டினத்தைக்கடந்து தென்மதுரையை யடைந்து, "விசாகையையன்றி வேறுமகளிரை யான்விரும்பேன்; இப்பிறப்பு இங்ஙனம் ஒழிவதாக" என்று தன்னுட்கூறி விரதம்பூண்டவனாகி வாணிகஞ்செய்து அறவழியே பொருளீட்டிப் பெருஞ்செல்வமுற்று அரசனால் எட்டிப்பூப்பெற்று மிக்க சிறப்படைந்து அறுபதுபிராயம்வரையும் அந்நகரிற்றங்குவானாயினன். அப்பொழுது அவனிடத்தில் ஓரந்தணன்சென்று, "நீ விவாகமின்றி இந்நகரத்தே இருந்து என்னகாரியஞ்செய்தனை? மனைவியில்லாதவர்கள் எவ்வளவு தருமஞ்செய்வாராயினும் தெய்வலோகமடையாரென்பதை நீ கேட்டறிந்திலையோ? இனித் தாழ்த்தலின்றி உன்னகரஞ்செல்வாயாக" என்றுகூறலும், தருமதத்தன் அந்நகரைவிட்டு நீங்கிவந்து இந்நகரத்திற் புகுந்தான். அவன்வந்ததுகேட்ட விசாகை சிறிதும் நாணமின்றிக் கன்னிமாடத்திலிருந்து புறத்தேவந்து அவனையடைந்து, "இப்பொழுது நம்முள் ஒருவரையொருவர் நாம் அறிந்திலம்; முன்பு நம்மை மயக்கிய அழகுகள் எங்கே ஒளித்துச்சென்றன? உனக்கு அறுபதுபிராயம் ஆயின; எனக்கும் கூந்தல் நரைத்தது. முன்பிருந்த இளமையும் காமமும் எங்கே ஒளித்துப்போயின?

உரைப்பாயாக. இப்பிறப்பில் யான் நின்னடியை யடையேன். மறுமையில் நின்னை மணப்பது திண்ணம்.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது ; (கஙரு - கஙஅ).

ஆதலால், தானஞ்செய்க" என்றுசொல்ல, அவன் தான் ஈட்டியபொருள்களையெல்லாம் விசாகைக்குக்காட்டி அப்பொருள்களைக்கொண்டு அவளோடுசெய்த நல்லறங்கள் மிகப்பல; இது நிற்க; முன் இந்தவிசாகை கந்திற்பாவைத்தெய்வத்தால் பழி நீங்கிய பலர்நடுவே வீதியில்வருங்கையில், முன்பு மருதியால் மடிந்தவனுடைய மூத்தோன், அவ்விசாகையைக்கண்டு அதிமோகங்கொண்டு, தான் தலையிலணிந்தமாலையைவாங்கி அவள் கழுத்தில் இடுதற்குத்துணிந்து அம்மாலையையிடுதற்காக நினைந்து தன்கையை நமிப்பிடச்செலுத்த அக்கை அதை விட்டு நீங்காததாயிற்று. ஆகவே, "விசாகையின் ஒழுக்கவிசேடத்தால் அவன்கை மீள இறங்கிலது" என்று பலர்கூறக் கேட்ட ககந்தன் மிகுந்த கோபங்கொண்டு தன்மகனென்று பாராமல் உடனே அவனை வெட்டிவீழ்த்தினன்" என்று கூறலும், அரசன், "இன்றுமட்டுமன்று' என்று தொடங்கிய பலவற்றையுங்கூறினீர். முன்புநிகழ்ந்ததாகக்கூறிய அத்தீயவொழுக்கம் இந்நாளிலும் உளதோ? இயம்புமின்" என்றுகேட்ப, ஒருமுனிவர்,

"முடிபொரு ளுணர்ந்தோர் முதுநீ ருலகிற்
கடியப் பட்டன வைந்துள வவற்றிற்
கள்ளும பொய்யுங் களவுங் கொலையுந்
தள்ளா தாகுங் காமந் தம்பா
லாங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோரென
நீங்கின ரன்றே நிறைதவ மாக்க
ணீங்கா ரன்றே நீணில வேந்தே
தாங்கா நரகந் தன்னிடை யுழப்போர் ; (கசுக - கஎசு)

தன் கணவனாகிய கோவலன் கொலையுண்டதுபொறாமல் மாதவி உலகவாழ்வைவெறுத்து முனிவர்களுடைய தவச்சாலையை யடைந்தாள். அவள் பெற்ற மணிமேகலையென்பவள் இளம

பருவத்தேதானே தவஞ்செய்யத்துணிந்து சிற்றிலும் பேரிலுஞ் சென்று ஐயமேற்று அருந்தி ஊரம்பலமடைந்தாள்; அவள் அவ்வியல்பினளாகவும், அவளை விழைந்து நிழல்போல்விட்டு நீங்காமற் காமபரவசனாய் நள்ளிருளில் உதயகுமரன் அவ்வம்பலத்தை யடைந்தான். அதுதெரிந்த மணிமேகலை, அவன் தன்னை நலியாதிருக்கவேண்டிக் காயசண்டிகைவடிவம்பூண்டாள். அங்கே முன்னமிருந்தகாயசண்டிகையை அழைத்துச் செல்லுதற்குவந்த அவள் கணவனாகிய விஞ்சையனான காஞ்சனன் கண்டு, அவள் மணிமேகலையென்பதையறியாமல், அவளைத் தன்மனைவியாகிய காயசண்டிகையென்றும் அங்கேவந்த உதயகுமரனைத் தன்மனைவியைவிரும்பி வந்தவனென்றுங் தானே தன்னுள் சீற்றங்கொண்டு முறுகியகோபமுற்று உடனே அவனை வாளால் வெட்டி வீழ்த்தினன்" என்று சொன்னார். அது கேட்ட அரசன் தன் மகனிறந்ததற்குச் சிறிதும் வருந்தாமல், *சோழிகவேனாதியைப்பார்த்து, "உதயகுமரனுக்கு யான் செய்யவேண்டிய தண்டனையைத் தான் செய்தமையால் விஞ்சையன் தகவிலனாவான்;

மாதவர் நோன்பு மடவார் கற்புங்
காவலன் காவ லின்றெனி னின்றால்; (உ0அ - உ0௯).

தன்மகனைப் பூமியிலே கிடத்தி அவன்மீது தேர்க்காலைச்செலுத்தி முறைசெய்த அரசர்பிரானுடைய பரம்பரையில் ஒருதீவினையாளன் பிறந்தானென்பதை மற்றை அரசர்கள் கேட்குமுன்னம் அவனைப் புறங்காட்டடைவித்துக் கணிகைமகளாகிய மணிமேகலையையுஞ் சிறைப்படுத்துக" என்றனன். சோழிகவேனாதி அவ்வாறுசெய்தான்.

உ௬.—சிறைவிடுகாதை.

பிற்பாடு, அரசன்கட்டளையால், வாசந்தவையென்னு முதியவளொருத்தி, புத்திரசோகத்தாற் கலங்கி வருந்தும் இராசமாதேவியை விரைந்தடைந்து தொழுது முன்னின்று வாழ்த்தி அவளுடைய வருத்தம்நீங்கும்வண்ணம் பலகட்டுரைகள்கூறி ஒருவாறு ஆற்றுவித்துப்போயினள். அவள் போனபின்பு

* சோழிகவேனாதி - மந்திரிகளுளொருவன்.

இராசமாதேவி தன்னுடையவருத்தம் புறத்தேதோன்றாதவண்ணம் அடக்கிக்கொண்டவளாய், "மணிமேகலையை வஞ்சித்து வருத்துவேன்" என்று எண்ணி அரசனைச்சார்ந்து, "செங்கோல்வேந்தே! மணிமேகலையின் பிக்குணிக்கோலத்தைக்கண்டு தன்னறிவுவேறுபட்ட உதயகுமரன் அரசாட்சிக்கு உரியவனல்லன்; அவன் அக்கொடுந்தொழிலால் இறந்தது தக்கதே; தனது இளமையைப் பயனற்றதாகச்செய்த பேரறிவுடையளாகிய மணிமேகலைக்குச் சிறை தகுதியன்று" என்றாள். அரசன், "உன்கருத்து அப்படியாயின் அவளைச் சிறையினின்றும் விடுவி" என்று கூறினன். கேட்ட இராசமாதேவி சிறையினின்றும் விடுவித்து அவளை அழைத்துக்கொண்டு அரண்மனையுட்சென்று, "இவ்வூரிலுள்ளாரெல்லாரும் அடித்துவருத்தும்படி இவளைப் * பித்தியாகச்செய்வேன்" என்றெண்ணி மயக்குமருந்தை அவளுக்கு ஊட்டினள். அவள் மறுபிறப்புணர்ந்தவளாதலால் சிறிதும் அறிவுவேறுபடாதிருந்தாள். அப்பால் இராசமாதேவி அறிவிலியாகிய ஒரிளைஞனை அழைத்து, "இவளுடம்பை எப்படியேனும் வேறுபடுத்தி 'மணிமேகலை என்னைவிரும்பினாள்' என்று பலர்க்கும் சொல்வாயாக" என்று சொல்லிப் பொற்காசுகள் பலவற்றைக் கைநிறைய அவனுக்குக்கொடுப்ப, அவன் அதற்குச்செயற்குடம்பட்டு மணிமேகலையிருந்த இடத்தை அடைந்தான். அடைதலும் அவள், 'இவன்வந்தது இராசமாதேவியின் வஞ்சத்தால்' என்றுநிச்சயித்து வேற்றுருவெய்துவிக்கு மந்திரத்தை ஜபித்து ஆண்வேடம்பூண்டு அங்கேயிருந்தாள். அங்ஙனமிருந்ததனைக்கண்ட அறிவிலி, நடுநடுங்கி, "அரசருடைய அந்தப்புரத்தில் ஆடவர் அணுகார்; இராசமாதேவியின் தீயநினைப்பையானறிந்திலேன்" என்றுபயந்து அவ்விடத்தைவிட்டு விரைந்து புறத்தே ஓடிப்போயினன். அதன்பின் இராசமாதேவி நமது அருமைப்புதல்வனைமயக்கி மாளச்செய்த இவளை இனி உயிரோடுவையேனென்று நினைந்து, "நோய்மிகுதியால் இவளுக்கு உணவுசெல்லவில்லை" என்று அவள்பாற பொய்ந்நோயொன்றைக்காட்டி அவளைப் புழுக்கறையில் அடைப்ப, அவள்

* பித்தி - பைத்தியங்கொண்டவள்.

னொழிமந்திரமுடையவளாதலின் அம்மந்திரத்தை ஜபித்துச் சிறிதும் வாட்டமின்றி அவ்வறையிலேயே இருந்தாள். அதனைக்கண்ட இராசமாதேவி ஆச்சரியமுற்று நடுநடுங்கி அவளைநோக்கி, "மகனையிழந்த பெருந்துன்பம்பொறுக்கலாற்றாது இத்தீங்குகளைச்செய்தேன்; நீ இவற்றைப்பொறுத்தருளவேண்டும்" என்று பலவாறுவேண்டினள். வேண்டவே மணிமேகலை, "சென்றபிறப்பில் நீலபதியின் வயிற்றிற்றோன்றிய இராகுலனைத் திட்டிவிடமென்னும்பாம்பு உயிருண்டபொழுது, அதனைப்பொறேனாகித் தீயிற்பாய்ந்து என்னுடைய உயிரைவிட்ட நாளில்,

யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
யுடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
வுடற்கழு தனையே லுன்மகன் றன்னை
யெடுத்துப் புறங்காட் டிட்டனா யாரே
யுயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னாய்தொடி
யெவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்; (௭௧ - ௭௯)

உன்மகனை வித்தியாதரனொருவன் வெட்டிவீழ்த்தியதற்குக்காரணமான தீவினையை இன்னதென்றுகூறுவேன்; கேட்பாயாக; அது முற்பிறப்பில் மடைக்கலஞ்சிதையவீழ்ந்த மடைத்தொழிலாளனை வெட்டிவீழ்த்தியதாலுண்டாகியதீவினையே; அத்தீவினை அப்பிறப்பிலேயே நஞ்சுவிழியரவால் அவனுடைய நல்லுயிரைவாங்கி இப்பிறப்பிலும் விஞ்சையன்வாளால் வெட்டுண்ணச்செய்தது; 'இச்செய்திகளையெல்லாம் நீ எப்படி அறிந்தாயோ?' என்பையாயின், நடந்தது இவ்வாறாகும்" என்று தான் உவவனஞ்சென்றதுமுதலிய எல்லாவற்றையும் அவளுக்கு விளங்கக்கூறிப் பின்னுங்கூறுவாளாயினள்: "நீ மருந்தால எனக்குப்பித்தேற்றினை; யான் மறுபிறப்புணர்ந்தேனாதலின், சிறிதும் அறிவுபிறழாதிருந்தேன்; உன் ஏவலால் கல்லாக்கயவன் என்பால்வர வேற்றுருவெய்துவிக்கும் மந்திரவலியால் ஆணுருக்கொண்டிருந்தேன். யாதொருநோயுமில்லாத என்னைப் பொய்ந்நோய்காட்டி புழுக்கறையில் அடைத்தாய்;

ஊழொழிமந்திரமுடைமையினாலேயே அத்துன்பத்தினின்றும் தப்பினேன். நீ சென்றபிறப்பில் எனக்குக் கணவனாயிருந்த இராகுலனை ஈன்றதாயாதலின், உனது துக்கத்தைக் களைந்து தீவினையைப்போக்கி உன்னை நல்வழிப்படுத்தற்பொருட்டே ஆகாயவழியேசெல்லுதலையும் வேற்றுருக்கொள்ளுதலையும் யான் நினைந்திலேன்; இது நிற்க; இவ்வுலகத்துள்ளோர்க்குத் துன்பம் தருவனயாவையெனின், காமம், கொலை, கள், பொய், களவென்னும் ஐந்துமாம். இவற்றைத்துறந்தோரே சீலமுடையோராவர்.

செற்றஞ் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போ
ரல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்
திருநம்த மபல லை செல [illegible]
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தோர்
துன்ப மறுக்குந் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லா மனமொழி யாரென
ஞான நன்னீர் நன்கனந் தெளித்துத்
தேனா ரோதி செவிமுதல் வார்த்து
மகன்றுயர் நெருப்பா மனமவிழ் காக
வகஞ்சுடு வெந்தீ யாயிழை யவிப்ப, (௧௩௯ - ௧௪௧)

இராசமாதேவி, மனந்தெளிந்து மணிமேகலையைவணங்கினள்; மணிமேகலை அதனைப்பொறாளாகி, "நீ என்கணவனைப்பெற்ற தாயாக இருத்தலன்றி அரசனுடையமாபெருந்தேவியாக இருந்தும் என்னைவணங்குதல் தகுதியன்று" என்று துதித்து அவளைத்தானும் அன்புடன்வணங்கினள்.

௨௪.—ஆபுத்திரனடைந்தகாதை.

மணிமேகலையை விரும்பிச்சென்ற உதயகுமரன் விஞ்சையனுடைய வாட்படையால் உலகவறவியில் வெட்டுண்டு இறந்ததையும் மணிமேகலை சிறையில் வைக்கப்பட்டிருத்தலையுங் கேட்டு வருந்தி நடுங்கி அவளைச்சிறையினின்றும் நீக்கநினைந்த சித்திராபதி, இராசமாதேவிபாற்சென்று வணங்கி, "மாபெருந்தேவி! கோவலனிறந்தானென்று மாதவி தனது பரத்தைமைத்தொழிலைநீத்துத் தவச்சாலையையடைந்ததும், அவள்மக

ளாகிய * அரங்கக்கூத்தி பாத்திரமேந்தி வீடுகள்தோறுஞ் சென்றுசென்று பிச்சையேற்றதும யாவரும் அவமதித்துச் சிரித்தற்கு இடமாயினவேயன்றி வேறல்ல ; இதுநிற்க ; உதயகுமரனிறந்ததன்றி, மணிமேகலையால் இனி இந்நகரத்திற்கு உண்டாகும் பெருந்துன்பமுமொன்றுண்டு ; கேட்பாயாக :

முன்னொருநாள், அரசன், இந்நகரிற் கடற்கரையைச் சார்ந்த புன்னைமரச்சோலையில் பேரழகினளாகிய ஒரு மங்கையைக்கண்டு விரும்பி அவளோடுஒருமாதம அச்சோலையில் உறைவாறாயினன் ; அம்மங்கை அவனிடஞ்சொல்லாது தன்னிடஞ்சென்றனள் ; செல்லவே, அரசன், இளங்கொடி யாங்கொளித்தனளென்று பலவிடத்தும தேடிக்கொண்டிருக்கும பொழுது, அற்புதசக்தியையுடைய ஒரு சாரணன்வர, அரசன்கண்டு அவனைவணங்கி முன்னின்று, "என்உயிர்போலபவளாகிய ஒருத்தி இங்கே ஒளித்தனள் ; அவளை அடிகள்கண்டதுண்டோ? உண்டாயின, சொல்லுக" என்றுகேட்ப, அந்தச் சாரணன், "அரச! அம்மடந்தையை யான் இப்பொழுது கண்டிலேனாயினும முன்பு அறிந்துளேன் ; கேட்பாயாக ; அவள் நாகநாட்டரசனாகிய வளைவணனென்பவனுடைய தேவியான வாசமயிலையென்பவளின வயிற்றிற்றோன்றிய பீலிவளையென்பாள ; அவள் பிறந்தநாளிற சோதிடங்கூறவந்த கணி, 'இவள் சூரியகுலத்தரசனொருவனைச் சேர்ந்து கருவுற்றுவருவாள்' என்று அரசனுக்குக்கூறினன் ; இது முன்புநடந்தது ; அவளே நீ கூறியமடந்தை ; இனி, அவள்வயிற்றிற்றோன்றுமகனே வருவான் ; அவள் வாராள் ; நீ கவலாதிருக்கக்கடவை ; இன்னும் ஒன்றுகேட்பாயாக ; இந்திரவிழாச்செய்யாதநாளில மணிமேகலாதெய்வத்தின் சொல்லால் உன்னகரத்தைக் கடல் கொள்ளும ; இந்திரசாபமுமிருத்தலால, அதுதப்பாது ; ஆதலால், யான்கூறியதை உண்மையென்றெண்ணி, இந்நகரைக் கடல் கொள்ளாதபடி இந்திரவிழாவை எந்நாளும மறவாது செய்துவருக" என்றுசொல்லிவிட்டுப் போயினன். அவன் போனஅந்நாள்தொடங்கி, நகரத்திற்கு எப்பொழுதுகேடுவந்துவிடுமோவென்று இந்நகரத்தாரெல்லாரும் நடுங்கிக்கொண்டே

* அரங்கக்கூத்தியென்றது மணிமேகலையை.

யிருக்கின்றனர். தன்னுடையபெயரைபெற்றமடந்தை துன்பமுறுவாளாயின், அதனைப் பரிகரித்தற்கு மணிமேகலாதெய்வம் வருதலுங்கூடுமோவென்று யானும் அஞ்சாநின்றேன்" என்று சொல்லித் துதித்து, "நல்லமனமுண்டாகப்பெற்ற நாடகக் கணிகையை என்மனைக்குப்போதரும்படி கட்டளையிடுவாய்" என்றுகேட்ப, இராசமாதேவி,

"கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்
உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை (௭௭ - ௭௮)

மேலானசெய்கையென்றுகொண்ட உனதுபரத்தைமைத்தொழிலை அசுததவழியென்றெண்ணிவந்த இவள் உன்னுடன்வந்து உன்மனையிற் புகுதாள்; என்னோடிதானே இருததற்குரியள" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், மணிமேகலையின் நிலைமையைக்கேட்ட மாதவி, சுதமதிக்குக்கூறி வருந்திச்சென்று அறவணவடிகளைவணங்கி அறிவித்து அவரை முன்னிட்டுக் கொண்டு அவளைச் சிறைமீட்டற்பொருட்டு இராசமாதேவியிடம்வர, இராசமாதேவி, அவரைக்கண்டவுடன் மற்றை இருவரோடுமெழுந்து எதிர்சென்று அவரடியைவணங்கினாள்; அவர், "அறிவுண்டாக" என்று ஆசிகூறினார். அபபால் அவள் அவரைச் சிறந்த ஓராதனத்திலிருததி அடிவிளக்கிச் சிறபபுச் செய்து, "எமதுநல்வினையே மிகபபெரியோராகிய உமமை இங்கே எழுந்தருளச்செய்தது;

நாதொலை வில்லா யாயினுந் தளர்ந்து
மூத்தவிவ் யாக்கை வாழ்கபல லாண்டு" (௯௯ - ௧௦௦)

என்றுகூற, அவர், "யான் இததவவுடம்பிற் பொருந்தியிருந்தும் அததமிக்குஞ் சூரியன்போன்றேன்;

பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தா ரென்கை யியல்பே யிதுகேள்" (௧௦௩ - ௧௦௪)

என்று பன்னிரு *நிதானங்களையும் அவளுக்கு விளங்கஉபதேசிதது, "எபபொழுதும் நல்லறத்தையே பேணிக் கேட்டு அவ்வாறேயொழுகுக" என்றுசொல்லிப பின் மணிமேகலையை நோக்கி, "மற்றைச்சமயதருமங்களையெல்லாம் நீகேட்டபின்பு இவறறையும் இவற்றின்பகுதிகளையும் உனக்குவிளங்க உணர்த்துவேன்" என்றுகூறித் தமமிடஞ்செல்லுதற்கு எழுதலும், மணிமேகலை எழுந்து அவரைவணங்கிப் பின்பு இராசமாதேவி

* நிதானம் - ஆதிகாரணம்; என்றது பேதைமைமுதலியனவற்றை.

முதலியோரைநோக்கி, "அறவணவடிகள்கூறிய உபதேசமொழிகளை மறவன்மின்; அவர்கூறியவாறே ஒழுகுமின்; யான் இந்நகரிலிருப்பேனாயின், 'உதயகுமரனுக்கு இவள் கூற்றாயிருந்தாள்' என்று யாவருநகூறுவர்; ஆதலால் இங்கிரேன்; இனி, ஆபுத்திரனுடனடைந்து பின்பு மணிபல்லவஞ்சார்ந்து புத்தபீடிகையைத் தரிசித்துவிட்டு, அப்பால் வஞ்சிநகரனுசென்று, † பத்தினிக்கடவுளைத்தரிசித்தபின் எங்குமபோய் நல்லறஞ்செய்துகொண்டு ஒழுகாநிற்பேன்; எனக்கு இடருளதாகுமோவென்று நீர் சிறிதும் கவலறக" என்றுசொல்லி அவர்களையும்வணங்கி, சூரியாஸ்தமயத்திற்குபபின் அந்திமாலைபபொழுதிலேசென்று, உலகவறவியையும சம்பாபதியையும கந்திற்பாவையையும வலங்கொண்டுதுதித்து ஆகாயவழியே பறந்துசென்று, இந்திரனுடையவழித்தோன்றலாகிய புண்ணியராசனது நகர்ப்புறத்தேயுள்ள சோலைக்குளளேயிறங்கி அயாவுயிர்த்து, ஆங்குள்ள ஒருமுனிவனைவணங்கி, "இந்நகரின்பெயர் யாது? இதனையாளும அரசன்யார்?" என்றுகேட்டாள்; அம்முனிவன், "இதன்பெயர் நாகபுரமென்பது; இதனையாளபவன் பூமிசந்திரன்மகனாகிய புண்ணியராசனென்பான்; இவன் பிறந்தகாலந்தொடங்கி இந்நாட்டில் மழை பிழைத்ததில்லை; பூமியும் மரங்களும் பிறவும் பலவளங்களையும் மிகத் தாராநிற்கும்; உயிர்களுக்கு ஒருவகையான நோயுமில்லை" என்று அரசனுடைய பெருமையை அவளுக்கு விளங்கக் கூறினான்.

உரு.—ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்தகாதை.

அப்பொழுது, புண்ணியராசன், தன்பெருந்தேவியோடு அச்சோலையிற்புகுந்து ஆங்குள்ள தருமசாவகனென்னும முனிவனைவணங்கி,

அறனு மறனு மநித்தமு நித்தத்
திறனுந் துக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலுஞ்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியு
மாரிய னமைதியு மமைவுறக் கேட்டு, (௩ - ௬.)

பின்பு, "இவள் ஒப்பற்றபேரழகினள்; கையிற்பிச்சைப்பாத்திரமொன்றையுடையவளாய்த் தருமங்கேட்கின்றாள்; யார்?" என்று வினவுகையில், அருகேநின்ற சட்டையிட்டபிரதானி

† பத்தினிக்கடவுள் - கண்ணகி.

அரசனைவணங்கி, "இவளையொப்பவர் யாருமில்லை; முன்னொருகாலத்தில் இளவரசனோடு நட்புக்கொள்ளுதலைவிரும்பிக் காவிரிப்பூம்பட்டினத்திற்சென்றபொழுது, அங்கேயுள்ள அறவணவடிகள் இவள்வரலாறுகளையெல்லாம் விளங்கக்கூறினாரென்று முன்னமே நான் உரைத்ததுண்டு, அம்மடந்தையே இவள்" என்றுகூறினன். கூறலும், மணிமேகலை அரசனைப் பார்த்து, "உன்கையிலிருந்த பாத்திரமே என்கையையடைந்தது; செல்வத்தால் மயங்கினைபோலும்; என்செய்தனை? மணிபல்லவஞ்சென்று புத்தபீடிகையைத் தரிசித்தாலன்றி உனது பழம்பிறப்பின்செய்தியையறியாய்; ஆதலால், அரச! அங்கே வருவாயாக" என்றுசொல்லிவிட்டு, எழுந்து ஆகாயவழியே சென்று சூரியாஸ்தமயத்திற்குமுன்னமே மணிபல்லவத்தில் இறங்கி வலங்கொண்டு புத்தபீடிகையைத் தரிசித்தாள். அது பழம்பிறப்பை அவளுக்குத்தெரிவித்தது. அதனையறிந்து வியந்து அவள் அங்கே இருக்க, புண்ணியராசன், அச்சோலையைநீங்கி நகரிற்புகுந்து, தன்னை வளர்த்த தாயாகிய அமரசுந்தரியைக் கண்டு வினவித் தன்வரலாறுமுழுவதையும் அவள்கூறக்கேட்டு வருந்தி அரசாட்சியில்வெறுப்புற்றுத் துறத்தற்குத்துணிந்து தன்கருத்தைவெளியிட்டான்; அதனைக்கேட்ட சனமித்திரனென்னுமந்திரி, அவனைவணங்கி,

"எங்கோ வாழி யென்சொற் கேண்மதி, (௯௯.)

உன்னை அரசன்பெறுவதன்முன் இந்நாட்டில் பன்னிரண்டு வருடம் மழையில்லாமற்போயிற்று, வறுமைமிக்கது; அதனால் எல்லாவுயிர்களும் வருந்தின, அக்காலத்தில் நீ தோன்றினை, தோன்றியபின் இந்நாட்டில் எல்லாவளங்களும் நிரம்பின, உயிர்கள் துயரம்நீங்கி வாழ்வனவாயின; நீ நீங்குவாயாயின், எல்லாவுயிர்களும் தாயைப்பிரிந்த குழந்தைகள்போலக் கூவாநிற்கும், இந்நிலையையுடைய உலகத்தைக் காவாமல் உனதுபயனையேவிரும்பிச் செல்லுதல் தகுதியன்று,

தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிர் ஓம்பு
மன்னுயிர் முதல்வ னறமுமி தன்றால்" (௧௧௫ - ௧௧௭.)

என்றுகூற, அரசன்கேட்டு, "மணிபல்லவத்தை வலங்கொள்ள வேண்டுமென்று எனக்குண்டாகிய வரம்புகடந்த ஆசை தணித

தற்கு அரியது; ஆதலால், அங்கே போய்வருவேன்; ஒருமாத காலம் இந்நகரைப்பாதுகாத்தல் உனதுகடன்" என்றுகூறிப் புறப்பட்டு வழிக்கொண்டு கடற்கரையைச்சார்ந்து நாவாயேறி மணிபல்லவத்தையடைந்தான்; உடனே மணிமேகலைவந்து அழைத்துச்சென்று அவனோடு அத்தீவைவலம்வந்து, "பழம் பிறப்பையுணர்விக்கும் தருமபீடிகை இது" என்றுகாட்ட, அரசன், அதைத்தரிசித்து வலங்கொண்டு துதித்தான்; துதிக்கவே அப்பீடிகை பழம்பிறப்பின்செய்தியை அவனுக்கு விளங்கத் தெரிவித்தது. அதனையறிந்து வியப்புற்று, தனக்குப் பழம் பிறப்பில் அமுதசுரபியென்னும் அக்ஷயபாத்திரத்தையளித்த சிந்தாதேவியைத்துதித்து மணிமேகலையோடுமெழுந்து தென் மேற்கிற்சென்று கோமுகிக்கரையில் புன்னைமரத்தின் கீழிலேயிருந்தான்; இருக்கையில், ஆபுத்திரனோடு மணிமேகலைவந்திருந்ததைத் தீவதிலகையறிந்துவந்து, 'அமுதசுரபியைக் கையிலேந்தி உயிர்களின்பெருந்துயரத்தைத் தீர்த்த பெரியோனே! அக்காலத்தில், மறந்து உன்னை இத்தீவில் தனியேவிட்டுவிட்டுக் கப்பலேறிச்சென்று பின்பு உன்னைநினைந்து மீண்டுவந்து இங்கே நீ இறந்திருத்தலையறிந்து உடனே தம்முயிரைநீத்த ஒன்பதுசெட்டிகளின் உடலென்புகள் இவை; காண்பாயாக; அச்செட்டிகள் உண்பிக்கவுண்டு உடன்வந்தோர்கள், அவர்கள் இறந்ததுதெரிந்து தாமும் இறந்தார், அவர்களுடைய என்புகள் இவைகள் காண்; அலைகள்தொகுத்த மணலால்மூடப்பட்டுப் புன்னை நிழலின்கீழே உனது பண்டையுடம்பு இருந்ததைப் பார்ப்பாயாக.

நின்னுயிர் கொன்றாய் நின்னுயிர்க் கிரங்கிப்
பின்னுள் வந்த பிறருயிர் கொன்றாய்
கொலைவ னல்லையோ கொற்றவ னாயினை" (௧௭௨ - ௧௭௪.)

என்று அரசனைநோக்கிக்கூறி, பின்பு மணிமேகலையைப்பார்த்து, "காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டது; அதற்குக்காரணங் கேட்பாயாக: நாகநாட்டரசன்மகளாகிய பீலிவளையென்பவள் தான்பெற்ற குழந்தையுடன்வந்து இத்தீவையும் புத்தபீடிகையையும் வலம்வந்து துதிக்கும்பொழுது, கம்பளச்செட்டியின்கப்பல் வந்துதங்க, பீலிவளை அவனிடஞ் சென்று, "இவன் அரசன்புதல்வன்; இவனை அவனிடஞ்

சேர்ப்பாயாக" என்றுசொல்லி, குழந்தையை அவன்கையிற் கொடுக்க, அவன் பெருமகிழ்ச்சியடைந்து வாங்கிக் கப்பலேறிச் செல்லுகையில் கப்பல் உடைந்துபோயிற்று. போகவே கப்பலிலிருந்தோரிற்சிலர் மெல்லப் பிழைத்துச்சென்று காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து புதல்வனைக் கெடுத்தசெய்தியை அரசனுக்குத்தெரிவித்தார். அதுகேட்டு அவன்பொருமல் செயலற்றுக் கடற்கரையையடைந்து மகனைத் தேடிக்கொண்டு அலைந்தமையால், நகரம் இந்திரனுக்கு விழாச்செய்தலை விட்டொழிந்தது; ஒழியவே அதனைப்பொறுக்காமல் மணிமேகலா தெய்வம், "இந்நகரைக் கடல்கொள்ளுக" என்றுசபிக்கக் கடல் நகரை மூடியது; மூடவே அரசன் வேறிடஞ்சென்றான். அறவணவடிகளோடு மாதவியும் சுதமதியும் யாதொருவருத்தமுமின்றிப்போய் வஞ்சிநகரம் புகுந்தார்" என்று சொல்லிப் போயினள்; அவள்போனபின்பு புண்ணியராசன் அவ்விடத்தே மணலைத்தோண்டி, அங்கேதோன்றிய தன்னுடைய பழைய உடம்பின் என்பைக்கண்டு மயக்கமுற்றான். மணிமேகலை தேற்றித் தருமோபதேசஞ்செய்து அவனை நகரத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் வஞ்சிநகரஞ்செல்லநினைந்து ஆகாயத்திலெழுந்தாள்.

௨௬.—வஞ்சிமாநகர்புக்ககாதை.

எழுந்தவள், ஆகாயவழியேசென்று வஞ்சிநகர்ப்புறத்தேயிறங்கி, தாய்கண்ணகியையும் தந்தைகோவலனையும் தரிசிக்க வேண்டுமென்கிற ஆசை தூண்டுதலால் கோயிலிற்புகுந்து கண்ணகியை வணங்கித் துதித்து, "கணவனிறந்ததுதெரிந்து உடனிறவாமலும் கைம்மைநோன்பை நோலாமலும் சினங்கொண்டு மதுரையை அழித்ததற்குக் காரணங்கூறியருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, பத்தினிக்கடவுளாகிய கண்ணகி, "எனது தலைவனுக்குநேர்ந்த மரணத்துன்பத்தைப் பொறுக்க முடியாமையால் மதுரையை எரித்தழிக்கத்தொடங்கினேன்; அப்பொழுது மதுராபதியென்கிற அந்நகரத்தெய்வம் எனக்கு முன்னேதோன்றி, "இத்துன்பத்தை நீங்களனுபவித்தல் முற்பிறப்பிற்செய்த தீவினையினாலேயே. அதனைக்கூறுவேன்:

முன்பு கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசுவென்பவனும் கபிலபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்

முட் பகைமைகொண்டு போர்செய்வாராயினர்; அப்பொழுது மனைவியுடன் சிங்கபுரத்துக் கடைவீதியிற்சென்று பண்டம் விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்னும்வணிகன்பாற் பொருமையுற்று, அந்நகரத்தரசனிடம் வேலைபார்த்துக்கொண்டிருக்கும் பரதனென்பவன், "இவன் பகைவனுடையஒற்றன்" என்று அரசனுக்குச்சொல்லி, யாதொரு குற்றமுமில்லாத அச்சங்கமனை அவ்வரசனைக்கொண்டு கொலைசெய்வித்தான். சங்கமன்மனைவி நீலியெனபவள், அதனைத்தெரிந்து, ஏங்கி அழுது பெரியமலைமீதேறி வீழ்ந்து உடம்பைத் துறக்கநிச்சயித்து, "எமக்குத்துன்பஞ்செய்தோர் மறுபிறப்பில இத்துன்பத்தையே அடைவார்களாக" என்று சபித்துவிட்டு இறந்தாள். அப்பரதனே கோவலனாகப் பிறந்தான்; அவ்வினையால் இத்துன்பமடைந்தீர்கள்; பழம்பிறப்பிற்செய்த வினையின்பயனை யாரும நுகர்ந்தே ஒழிதல்வேண்டும்" என்கிற உண்மைமொழியைக் கூறியது; அத்தெய்வம் கூறியபின்னும் என்கோபம் அடங்காமையால், நகரத்தை எரித்தழித்தேன்; முன்புசெய்த நல்வினையாலே நானும் என்கணவனும் தேவர்களாகிச்சென்றோம். இந்நல்வினையினிறுதியிற் கோவத்தாலுண்டாகிய பாவப்பயனை நுகர்தல்கூடும்; இப்படிப் பிறந்துமிறந்தும் புண்ணியத்தினிறுதியிற் பாவப்பயனையும் பாவத்தினிறுதியிற் புண்ணியப்பயனையும் நுகர்ந்து நுகர்ந்து உழலாநிற்பேம். அப்பால் மகதநாட்டிற் கபிலையம்பதியிற் புத்தஞாயிறு உதித்துப் போதிமரத்தினடியில் எழுந்தருளியிருந்து நால்வகைச்சத்தியங்களையுமறிந்து பன்னிரண்டுசார்புகளின் தோற்றங்களையும் அவற்றின் அழிவையும் விளங்கக்கூறி இச்சக்கரவாளமுழுவதும் தருமவொளியை வீசுங்காலத்தில், யாம் அவ்வுபதேசமொழிகளைக் கேட்டுத் துறந்து நிருவாணமடைவேம்; இப்பயனை யாம் அடைதற்குக்காரணம், முன்பு காவிரிப்பூம்பட்டினத்திற் புத்தசைத்தியத்திலுள்ள இந்திரவிகாரமேழினையும் உன்தந்தையுடன் ஏத்தியபுண்ணியமே; யாம் நிருவாணத்தையடைவது பலநாளைக்குப் பின்பேயாயினும், அதுகாறும் பலவகையாகிய சித்திகளையும் செய்துகொண்டிருப்பேம். இதுநிற்க, நீ இந்நகரிலுள்ள பல சமயவாதிகள்கூறும் கொள்கைகளையெல்லாங்கேட்டு அவற்றுள் ஒன்றும உனக்கு உண்மையென்றுதோன்றாமையால் பின்பு பௌத்த

சமயத்தைப்பற்றியொழுகுவை" என்று சொன்னவுடன், மணிமேகலையணங்கு வேற்றுருவெய்துவிக்கு மந்திரத்தை ஜபித்து ஒருமுனிவனவேடங்கொண்டு,

தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரு
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும (எஉ - எ௫.)

எங்கணும் விளங்கிய வஞ்சியம்பதியில், செங்குட்டுவனென்னும் சேரபெருமானது புகழ் விளங்கும்படி சென்றுபுகுந்தாள்.

உஎ.—சமயக்கணக்கர் தந்திறங்கேட்டகாதை.

புகுந்தமணிமேகலை, சமயவாதிகள்பலருடைய கொள்கைகளையும் அறியவிரும்பி, அவருள்ளே வைதிகவாதியைச்சார்ந்த அளவைவாதியை முதலிலடைந்து, 'உன்கொள்கையை உரை' என்றுவினவி, அவன் தன்கோட்பாட்டைக் கூறக்கேட்டும் அப்பாற் சைவவாதியையும், அப்பாற் பிரமவாதியையும், அப்பால் வைணவவாதியையும், அப்பால் வேதவாதியையும், அப்பால் ஆசீவகவாதியையும், அப்பால் நிகண்டவாதியையும், அப்பாற் சாங்கியவாதியையும், அப்பால் வைசேடிகவாதியையும், அப்பாற் பூதவாதியையும் சார்ந்துசார்ந்து வினவிவினவி, அவரவர் தத்தங்கொள்கைகளைக் கூறக்கேட்டும் அவற்றை அறிந்துகொண்டாள்.

உஅ.—கச்சிமாநகர்புக்ககாதை.

அதன்பின், மாதவியையும் சுதமதியையும் அறவணவடிகளையும் காணவிரும்பிப் புறநகரத்தைக் கடந்துசென்று வஞ்சிநகரத்தினுள்ளேபோய்ப் பலவகைச் சாதியாருமிருத்தற்குரிய வீதிகளையும் வேறுள்ள பலஇடங்களையும் முறையேகண்டு மகிழ்ச்சியுற்றுச்செல்பவள், பௌத்ததருமங்களைச் சொல்லுமுனிவர்கள் தங்கியிருக்கும் தவச்சாலையிற் புகுந்து, அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த மாசாத்துவானைப் பணிந்து, எடுக்க வெடுக்க உணவுவளரும் அமுதசுரபியின் விசேடத்தையும் அப்பாத்திரத்தைக்கொண்டு செய்த தானவிசேடத்தால் ஆபுத்திரன் புண்ணியராசனாகப்பிறந்து சாவகநாட்டை ஆண்டுவரும் பெருமையையும் தான் அவனை மணிபல்லவத்திற்கு அழைத்து

வந்து புத்தபீடிகையைக் காட்டப் பழம்பிறப்புணர்ச்சியை அவன் பெற்றதையும் தீவதிலகை வெளிப்பட்டதையும் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டமையால் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளும் சாதலின்றி இந்நகரில்வந்து புகுந்தார்களென்று தான் தீவதிலகைபாற் கேட்டதையும் புண்ணியராசன் நாகபுரஞ்செல்லத் தான் மணிபல்லவத்தைவிட்டுவந்ததையும் தாயாகியகண்ணகியைத் தரிசித்ததுமுதலியவற்றையும் பின் வேற்றுருக்கொண்டு பலசமயவாதிகளைச்சார்ந்து அவர்களுடையகொள்கைகளைக் கேட்டதையும் அக்கோட்பாடுகளெல்லாம் பொருத்தமில்லாமையால் தான் அவற்றை மனங்கொள்ளாததையும் பௌத்ததருமத்தைக் கேட்கவிரும்பி அறவணவடிகளைத் தேடிக்கொண்டுவந்ததையுஞ்சொன்னாள் இவற்றையெல்லாங்கேட்ட மாசாத்துவான், "உன்னைநான்கண்டது எனது நல்வினையாலேயே; உன் தந்தைகோவலனும் தாய் கண்ணகியுமடைந்த வருத்தங்களும் மதுரையம்பதி அழிவுற்றதும் ஆகிய இவற்றைக்கேள்வியுற்று எல்லாவற்றையுந்துறந்து பௌத்தமதத்தைச்சார்ந்து தவஞ்செய்தலை மேற்கொண்டேன்; கொண்ட யான் இங்கேவந்ததற்குக் காரணங்கேட்பாயாக:—

முற்காலத்தில் இந்நகரையாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்னுமரசன் தன்தேவிமாரோடும்* இச்சோலையைச்சார்ந்து இருந்தபொழுது, இலங்காதீவத்துள்ள சமனொளியென்னு மலையையடைந்து தரிசித்து வலங்கொண்டு ஆகாயவழியேமீள்வோராகிய சாரணர் இச்சோலையிலிறங்கி ஒரு சிலாதலத்திலிருந்தார்; அங்ஙனமிருக்கக்கண்ட அரசன் அவர்களை வணங்கி உபசரித்து அமுதுசெய்வித்துத் துதிக்க, அவர்கள்,

•பிறப்பிற் றுன்பமும் பிறவா வின்பமு
மறத்தகை முதல்வ னருளிய வாய்மை
யின்ப வாரமு திறைவன செவிமுதற்
றுன்ப நீங்கச் சொரியு மந்நாள், (கக௯ - க௨௨)

நின்தந்தைக்கு ஒன்பதுதலைமுறை முன்னோனாகிய கோவலனென்பவன் அவ்வரசனுக்குக் காதற்பாங்கனாதலால், இங்கேவந்திருந்து, அச்சாரணர் அரசனுக்குக்கூறிய அறமொழிகளைக் கேட்டு, தான் ஈட்டிய பலகோடிதனங்களையும் முன்னோர்கள

தருமவழியே தேடியபொருள்கள் பலவற்றையும் ஏழுதினத்துள் இரவலர்களுக்குக்கொடுத்துவிட்டுப் பின்பு தவஞ்செய்வானாயினன்; அவன் அக்காலத்தில் புத்ததேவனுக்குக் கட்டுவித்த சைத்தியத்தைத்தரிசித்தற்காகவே வந்தேன்; காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்விழுங்கிவிடுமென்ற செய்தியை ஈண்டுள்ள முனிவர்கள் துணிந்துகூறக்கேட்டு அந்நகரஞ்செல்லாமல் இவ்விடத்திலேயே இருந்துவிட்டேன்; தீவினையுடைமையாற் கொலையுண்டிறந்த உன்தந்தை, நல்வினையால் தெய்வயாக்கையைப் பெற்றுப் பின்னும் தீவினைப்பயனை அனுபவித்து, அப்பால், புத்ததேவன் அவதரித்துச் செய்யுந் தருமோபதேசத்தைக் கேட்டு வீடடைவானென்று அறிந்தோர்கூறக் கேட்டேன்; நானும் அக்காலத்தில அவ்வறமொழிகளைக் கேட்பேன்; உனது பிற்காலச்செய்திகளை நீ கந்திற்பாவையாலறிந்தாயென்று அறவணவடிகளாலறிந்தேன்; அம்முனிவர், உனக்குத் தருமோபதேசஞ்செய்தற்கு அமைந்தவிடம் காஞ்சிநகரமென்றெண்ணி இங்கிருந்து அங்கேசென்றார்; மாதவியும் சுதமதியும் அவருடன் அந்நகரம் போயினர்; இன்னுங்கேட்பாயாக; மழையில்லாமையாற் காஞ்சிநகரத்தில் மிக்க வறுமையுண்டாயிற்று; பலவுயிர்கள் இறந்தன; அந்நகரில் ஐயமிடுவோர் இல்லாமற்போனமையால், அங்கேயிருந்தமுனிவர்கள் இவ்விடம் வந்துவிட்டார்கள்; ஆதலால், அந்நகரமடைந்து எல்லாவுயிர்களையும் பாதுகாத்தல் உனக்குக் கடனாகும்'' என்றுசொல்ல, மணிமேகலை அவனைவணங்கி, அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு, வஞ்சிநகரத்தின் மேற்றிசையினின்று மேலேயெழுந்து ஆகாயவழியே வடதிசைக்கட்சென்று, மிக்கசெல்வங்குன்றி வறுமையுற்று அழகுகெட்டுப்போயிருக்குங் காஞ்சிநகரத்தைக்கண்டு மனமிரங்கி வலமவந்து அந்நகரினடுவேயிறங்கி, அங்கே தொடுகழற்கிள்ளியின் துணைவனாகிய இளங்கிள்ளியாற் கட்டுவிக்கப்பட்டுள்ள புத்தாலயத்தை வணங்கி அதற்குத் தென்மேற்கிற் சென்று ஒரு சோலையில்தங்கினள்; அதனைத்தெரிந்த ஒருவன், விரைந்துசென்று அரசனைவணங்கி, 'அரச! கோவலன்புதல்வி; சிறந்த தவஞ்செய்தொழுகுபவள்; இச்சம்புத்தீவில் எல்லாருள்ளுஞ்சிறந்தவள்; அவள் கையிலேந்திய அமுதசுரபியென்னும் பாத்திரத்தோடு இந்நகரில்வந்து தருமதவனத்தே

உறைகின்றாள்' என்றான். அதுகேட்ட அரசன் கந்திற்பாவை முன்பு நமக்குக்கூறியது உண்மையேயென்று மதித்து அத்தெய்வத்தைவந்தித்து மந்திரிகளுடன் விரைந்துசென்று மணிமேகலையையடைந்து அவளைநோக்கி,

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய் நன்னா டெல்லா
மலத்தற் காலை யாகிய தறியேன், (௧௮௮ - ௧௯௧).

இனிச்செய்வது யாது?" என்று மயங்கிக்கொண்டிருந்தேன்; இருந்தபொழுது, ஒரு பெரியதெய்வம் எனக்கு முன்னேவந்து, "நீ வருந்தற்க; உனது நலவினையால் ஒருமடந்தை இங்கே தோன்றுவள்; அவளுடைய கையிலுள்ள தெய்வபாத்திரத்திலிருந்து எடுக்க எடுக்கக் குறையாமல் மேன்மேலும் வளருகிற உணவால் இவ்வுலகமெல்லாமுய்யும்; அவளுடைய கருணையால் மேகமும் மிக மழைபொழியும்; அவள் இந்நகரத்திற்குவந்தபின்பு உண்டாகும் விசேடங்கள் பலவாம்; கார்வறங்கூறினும் நீர்வறங் கூராது; அவள் வந்திருத்தற்காகக் கோமுகியென்னும் பொய்கையும் அதனையுடைய மணிபல்லவமென்னுந்தீவும் இங்குவந்தனவென்று சொல்லும்படி, இந்நகரவீதியில் ஒருபொய்கையையும் அதனைச்சூழ ஒரு சோலையையும் உண்டுபண்ணுக" என்று சொல்லிவிட்டுப் போயிற்று; அத்தெய்வம் போனபின்பு அது கட்டளையிட்டபடியே செய்துவைத்த இடம் இஃது" என்று சொல்லி அவ்விடத்தைக் காட்ட, மணிபல்லவம்போன்ற அச்சோலையையடைந்து அதையும் பொய்கையையுங்கண்டு மகிழ்ச்சியுற்ற மணிமேகலை, தனது பழம்பிறப்பை அறிவுறுத்திய புத்தபீடிகையை அச்சோலையில் இயற்றுவித்துத் தீவதிலகையையும் மணிமேகலாதெய்வத்தையும்வழிபடுதற்குரிய கோயிலையும் அங்கே உண்டாக்கி நித்திய பூசையையும் திருவிழாவையும் அரசனைக்கொண்டு செய்வித்துத் தான் வந்திருந்து துதித்து மேற்கூறிய புத்தபீடிகையில் ஆருயிர்மருந்தெனும் அமுதசுரபியை வைத்து, உண்ணுதற்கு எல்லாவுயிர்களும் வருகவென்று அழைத்தனள்; அழைக்கவே,

மொழித்த மூவறு பாடை மாக்களிற்
காணார் கேளார் கான்முட மாவோர்

பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூ றாயிரம் விலங்கின் றொகுதியு
மன்னுயி ரடங்கலும் வந்தொருங் கீண்டி, (உஉக - உஉஎ).

உண்ணவுண்ண அவ்வுணவு மேன்மேலும் பெருகிப் பசிதனின் பதத்தை அகற்றி விளங்கியது; அப்புண்ணிய விசேடத்தால், எங்கும் மழைபெய்தது; வளங்கள் மிகுந்தன. அப்படி நிகழுங்காலத்தில், அறவணவடிகள், அந்நிகழ்ச்சிகளைக் கேட்டு மாதவியோடும் சுதமதியோடும் அறச்சாலையை யடைந்தனர்; கண்ட மணிமேகலை விரைந்துசென்று அன்புடன் வணங்கி அவரடிகளைவிளக்கி ஆதனத்திலிருத்தி அறுசுவைப்போனகம் அமுதுசெய்வித்து, "யான் செய்த புண்ணியம் தப்பாது பலித்திடுக" என்றுசொல்லி மீட்டும் வணங்கினள்.

உ௯.—தவத்திறம்பூண்டு தருமங்கேட்டகாதை.

வணங்கிய மணிமேகலையை வாழ்த்திச்சொல்லும் அறவணவடிகள், "பீலிவளைபெற்ற குழந்தையைக் கம்பளச்செட்டி கடலிற கெடுத்தது தெரிந்த அரசன் வருத்தமுற்று அக்குழந்தையைத் தேடியலைந்தமையாற் காவிரிப்பூம்பட்டினத்தில இந்திரவிழாச் செய்யப்படாது போயிற்று; மணிமேகலா தெய்வம் அதுதெரிந்து, 'நகரைக் கடல்கொள்ளுக' என்று சபித்தது; இந்திரனும் சபித்தான். அதனால், அந்நகரம் கடலால் விழுங்கப்பட்டது. அப்பால் உன் தாயரும் யானுமாக உன்பொருட்டு இந்நகரம் அடைந்தேம்" என்று கூறினர்; கூறவே மணிமேகலை அவருடைய அடியிணையை வணங்கி, "மணிபல்லவத்தில் புத்தபீடிகையைக் காத்துக்கொண்டிருக்கும் தீவதிலகையென்பவளும் இச்செய்தியைச்செப்பினள். நான் வேற்றுருக்கொண்டுசென்று வஞ்சிநகரமடைந்து ஆங்குள்ள பலசமயவாதிகள்கூறிய கொள்கைகள்யாவும் மனத்திற்குப் பொருந்தாமையால் அவற்றையும் முன்புகொண்டிருந்த வேற்றுவடிவத்தையும் துறந்து இந்நகரமடைந்து நும்மைச் சரணபுக்கேன்; தேவரீர் அடிச்சிக்கு உண்மைப்பொருளை யுணர்த்தியருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவர் பிரத்தி

யக்ஷம், அனுமானமென்னும் இரண்டு அளவைகளின் இலக்கணங்களையும் அவற்றின்போலிவகைகளையும் உண்மையறிவுண்டாதற்குக்கருவியாக அவளுக்கு விளங்கக்கூறினர்.

௩௦.—பவத்திறமறுகெனப் பாவைநோற்றகாதை.

தானஞ்செய்தலை மேற்கொண்டு சீலத்தில் முதன்மையாக நின்று பழம்பிறப்பின் உணர்ச்சியையடைந்த மணிமேகலை, அப்பால், 'புத்தம் சரணங்கச்சாமி', 'தர்மம்சரணங்கச்சாமி', 'ஸங்கம்சரணங்கச்சாமி' என்பவற்றை மூன்றுமுறை சொல்லி, மும்மணிகளையும் மூன்றுமுறைவணங்கி அறவணவடிகளைச் சரணாகதியாக அடைந்தாள்; அடையவே பௌத்ததருமத்தை உபதேசிக்கத்தொடங்கிய அவர், "இதனைக்கேட்பாயாக:—உயிர்களெல்லாம் அறிவில்லாமல் இருந்தகாலத்தில் தேவர்கள் பிரார்த்திக்கத் துடிதலோகத்தினின்றும் இவ்வுலகிலவதரித்து அரசமரத்தினடியிலேயிருந்து தத்துவத்தை ஆராய்ந்தறிந்து மாரனைவென்று முக்குற்றங்களையும் அறுத்து விளங்கிய புத்ததேவன் அருளிச்செய்த இன்பமயமாகிய கட்டளையாகும் இது; பண்டைக்காலத்தில் அவதரித்த அளவற்ற புத்தர்கள் கருணைமிகுந்து திருவாய்மலர்ந்தருளியதும் இதுவே" என்று சொல்லி, பேதைமைமுதலிய பன்னிருநிதானங்களின் தோற்றவொடுக்கங்களையும் பிறவற்றையும் முறையே விளங்க உபதேசித்து "உன்மனத்திருள் நீங்குக" என்றுகூறி ஞானதீபத்தை நன்குகாட்டினர்; மணிமேகலை அவ்வுபதேசமொழிகளைக்கேட்டு ஐயந்திரிபறவுணர்ந்து, "பிறவித்துன்பம் ஒழிவதாக" என்று அந்நகரிலேயே நோற்றுக்கொண்டிருந்தாள்.

அரும்பதவுரை.

முதலாம் காதை

1 காவிரிப்பூம்பட்டினமென்பது சோழராசாக்களுடைய பழைய இராசதானி, இது, காவிரிநதி கடலோடு கலக்குமிடத்து இருந்தநகரம், பட்டினம் - கடற்கரையிலுள்ள ஊர்.

3 தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன் - ஒரு சோழன்; இச்சொற்குப்பொருள் தூங்கு எயில - அசைந்துகொண்டிருந்த மதிலை, எறிந்த - அழித்த, தொடி தோள் செம்பியன் - வீரவளையை அணிந்த தோளையுடைய சோழன்; சிபியின்குலத்திற்பிறந்தோர் சைப்பியர், சைப்பியர் பரம்பரையிற்பிறந்தவன் செம்பியன், செம்பியன் - சோழன் அம்மதில் மூன்றென்றும், அவைகள் கொடியவர்களுக்கிடங்களாகி ஆகாயத்தில் அசைந்துகொண்டேசென்று உலகைவருத்தினவென்றும் அவற்றையும் அவற்றிலிருந்தவர்களையும் இச்சோழன் அழித்தானென்றும் பதிற்றுப்பத்து, புறநானூறு, பழமொழி, சிலப்பதிகாரம், மூவருலா முதலியவைகள் தெரிவிக்கின்றன.

8. இந்திரவிழா - இந்திரனுக்குச் செய்யும் உத்ஸவம், இஃது அக்காலத்து நடைபெற்றுவந்ததென்று பதிற்றுப்பத்தாலும் சிலப்பதிகாரத்தாலும் தெரிகின்றது.

10 - 11. முசுகுந்தன் - சூரியகுலத்துப்பிறந்து விளங்கிய ஒரு சக்கரவர்த்தி, இவ்வரசன் தேவர்களுடையவேண்டுகோளாற் சென்று கொடிய அசுரர்களோடு போர்செய்கையில் அவ்வசுரர்கள் பிரயோகித்த தாமஸாஸ்திரத்தாற் கண்ணும் மனமும் இருண்டு துயருற்றபொழுது பூதமொன்று தோன்றி ஒருமந்திரத்தையுபதேசித்து இவனுடைய துயரத்தைநீக்கினமையின், இவன் அப்பூதத்தைக் காவிரிப்பூம்பட்டினத்தில் மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கமென்னுமிரண்டற்கும் நடுவேயுள்ளதாகிய நாளங்காடியிற் பிரதிஷ்டிப்பித்து வழிபடுவானாயினன், இதனால், அப்பூதம் நாளங்காடிப் பூதமென்பெயர்பெற்றது. நாளங்காடி - காலைக்கடைத்தெரு.

11 - 12 பாவிகள் - தம்மைப் பிறர் நம்புவதற்குத் தவவேடத்தில் மறைந்துநின்று அத்தவத்திற்கு ஒவ்வாத் தவற்றில் ஒழுகும் பொய்வேடமுடையார், தம்மைக் கற்புடையவர்கள்போலவே புலப்படுத்தி வியபிசாரஞ்செய்யுமடந்தையர்கள், அரசனுக்கு விரோதமான காரியங்களை அவனறியாமற் செய்யும் மந்திரிகள், பிறருடைய மனைவியரை விரும்புவோர், பொய்ச்சாக்ஷிபகர்வோர், புறங்கூறுவோர் என்னும் அறுவர் சதுக்கப்பூதம் - நாலுதெருக்கள் கூடுமிடத்து உள்ள தெய்வமாகிய பூதம்.

15. வச்சிரக்கோட்டம் - இந்திரனுடைய வச்சிராயுதமிருக்குங்கோயில காவிரிப்பூம்பட்டினத்தில் இக்கோயிலிருந்ததென்று சிலப்பதிகாரம், கனாத்திறமுரைத்தகாதையாலும் தெரிகின்றது.

21. பூரணகும்பம் - நீர்நிறைந்தகுடம்.

22- பாவைவிளக்கு - பிரதிமைகளேந்தும் தீபம்.

26. நாற்றுமின் - தொங்கக்கட்டுங்கள். மன்றம் - ஊர்க்கு நடுவே எல்லாருமிருக்கும்படியமைந்த மரத்தினடி.

32. அம்பலம்-பொதுவாகியசபை.

உ - ம் காதை.

[ஊரலருரைத்த காதையென்பதற்கு ஊரிலுள்ளார்கூறும பழிமொழியை வஸந்தமாலையென்பவள் மாதவிககுச்சொல்லியகாதையென்பது பொருள்.]

6. அவளுக்கு - மாதவிக்கு.

8 மலர்மண்டபம் - பூததொடுத்தற்கு அமைந்தமண்டபம.

12. கணவன் - கோவலன்.

13. கொலையுண்டது - தேவியின் காற்சிலம்பைத் திருடினானென்று எண்ணிய பாணடியன்நெடுஞ்செழியனுடைய ஏவலாளனாற் கொலைசெய்யப்பெற்றது.

14. பத்தினிக்கடவுள்-பதிவிரதையாகிய தெய்வம; தன்கற்பின்மிகுதியால், மதுரையை எரித்தமையின், கண்ணகி பத்தினிகடவுளென்றும் மறகற்புடையளென்றும் கூறப்படுவள்.

14 - 15. மணிமேகலையைக் கண்ணகியின்மகளென்றது உபசாரம்.

16. பரததைமைததொழில - பரத்தையர்க்குரியதொழில.

21 - 24. இவற்றால, பௌத்தசமயத்தாரகூறும துக்கம், துக்கநிவாரணம், துக்கோற்பததி, துக்கநிவாரணமார்க்கமென்னும் ஸத்தியங்கள் நான்கும் கூறப்படுகின்றன; 'பிறந்தோருறுவது பெருகியதுன்பம்' என்றது, துக்கத்தை. 'பிறவாருறுவது பெரும்பேரின்பம்' என்றது, துககநிவாரணத்தை. 'பற்றின்வருவது முன்னது' என்றது, துக்கோற்பத்தியை. 'பின்னது அற்றோருறுவது' என்றது, துக்கநிவாரணமார்க்கத்தை. பற்று-ஆசை. முன்னது - துக்கம். பின்னது - துக்கநிவாரணம். அற்றோர் - பற்றற்றோர்.

25. வாய்மை - ஸத்தியம்.

25 - 26. பஞ்சசீலம் - ஐந்துசீலங்கள்; அவைகளாவன: காமம், கொலை, கள், பொய், களவு என்னும் இந் நஐந்தையும் முற்றத்துறத்தல். கடைப்பிடி - உறுதியாகப்பற்றுவாய்.

ங - ம் காதை.

3. நற்காலநிகழ்ச்சியை எதுநிகழ்ச்சியென்பது பௌத்த ஸமபிரதாயம்.

14-15. காமன் நடுங்குவது, தனது ஆஞ்ஞை இனி எங்கும் செல்லாதென்பதுபற்றி. பாவை-பிரதிமைபோல்வாள்.

18. பேடியர் - நபும்ஸகர்.

25. வித்தியாதரசாதியென்பது தேவகணங்கள் பதினெட்டுவகையினுள் ஒன்று.

31. இலவந்திகை - யந்திரங்களையுடைய குளம்.இலவந்திகைச்சோலை-அரசன் உரிமைகளோடு விளையாடும காவற்சோலை.

32. உய்யானம்=உதயானம் - அரசன்விளையாடும காவற்சோலை.

36. தூக்குதலால் - தொஙகச்செய்தலால். பாசம் - கயிறு.

38. சம்பாதி - கழுகுகளுக்குத்தலைவனுனபக்ஷி. மேலேபறந்துசெல்பவர்யாரோ அவரே வலியில்மிக்கவரென்று சகோதரர்களாகிய சமபாதியும் சடாயுவும தஙகளுட் சபதங்கூறிக கொணடு மேன்மேலேபறந்துசெல்லுகையில, சூரியமண்டலத்தைச் சமீபிதத சமபாதியின்சிறகுகள் அம்மண்டலவெப்பத்தால் எரிந்துபோயின வென்பது இராமாயணம் ஆரணிய காண்டத்திலுள்ள வரலாறு.

43. ஓம்பும் - பாதுகாக்கும்.

44. பூட்கை - கொள்கை.

45. பகவன்-புத்ததேவன். ஆணை-கட்டளை.

46. உவவனம்=உபவனம் - பூஞ்சோலை.

48. பளிக்குமண்டபம் - பளிங்குமண்டபம்.

50. பதுமபீடம்-புத்ததேவருடைய பாதவடிவங்கள்வைத்து பூசிக்கப்படும ஆஸனம.

52. இதுகாறும் - இதுவரையும்.

68. உணஞேனோன்பி-கள்ளையுண்ணுதவிரதமுடையவன்.

74. களிமகன் - கட்குடியன்.

77. பேடு-புறக்கூத்துப் பதினொன்றனுள் ஒன்று; இஃது, உஷைகாரணமாக வாணாசுரனாற் சிறைவைக்கப்பட்ட தன்மகன் அநிருத்தனைச் சிறைமீட்டுப் பேடிவடிவங்கொண்டு, காமன் சோநகரத்தில் ஆடிய ஆடல்; உஷை - வாணாசுரன்மகள்.

86. தாய் - மாதவி.

௪ - ம் காதை.

[பளிக்கு அறை - பளிங்காலாகிய அறை.]

2. பொய்கை - தடாகம்.

6. நாடகக்கணிகையர் - நாடகப்பரத்தையர்.

7. யாழ் - வீணை.

8. கோடு - வீணையின் உறுப்புக்களுள் ஒன்று; இது, 'வீணாதண்டம்' என்றும் கூறப்படும். பாவை-பிரதிமை.

9. 'எட்டி' என்பது, வைசியர்களுள் மிக்க கௌரவமுடையவர்க்கு அரசனாற்கொடுக்கப்படும் பட்டப்பெயர். எட்டியாகிய குமரன், சாளரம்-பல்கணிவாயில்.

15. கொடுந்துன்பம் - வெட்டுண்டிறந்தது.

16. நரம்பு - தந்தி; பகை நரம்பு - பகையாகியதந்தி.

29. தாழக்கோல்-தாழாகியகோல; [தாழ் - தாழ்ப்பாள்.]

31. ஐந்துவிற்கிடை-ஐந்துவிற்கள் ஒன்றன்பின் ஒன்றாகக்கிடக்கும் அளவு.

34. முதுக்குறைவு - பேரறிவு.

36. வேட்கை - ஆசை,

37. பௌத்தசங்கத்தார்-பௌத்த மதத்தினராகிய கூட்டத்தார்.

41 - 44. தம்முட் பகைமைகொண்டோர்களாகிய முதியவர்களிருவர், தம்முடைய வழக்கைச்சொலலித் தீர்த்துக்கொள்ளநினைந்து கரிகாற்சோழன்பால்வந்து கண்டு, 'இவன் மிகவும் இளையவனாக இருக்கிறான்; நம்முடையவழக்கை எங்ஙனம் தீர்த்திடுவான்' என்றுகூறக்கேட்டு நாணமுற்ற அவன், உடனே முதியவனாக வேடம்பூண்டுவந்து வீற்றிருந்து அவர்கள் வழக்கைக்கேட்டு ஆராய்ந்து தீர்த்து விடுத்தனனென்பது பழமொழி, பொருநராற்றுப்படை முதலிய நூல்களிற்கண்ட வரலாறு. இளமையில் தன்னுடைய கால் நெருப்பாற் கரிந்துபோனமையின், அவன் இப்பெயர்பெற்றான். வழித்தோனறலே-பரம்பரையிற் பிறந்தவனே. ஆண்டு-வருஷம்.

47 - 55. இவற்றால், மணிமேகலையை உதயகுமரன் விரும்பாதிருத்தற்பொருட்டு, உடம்பின் அசுத்தத்தைச் சுதமதிகூறுகின்றாள்.

47. வினையின்வந்தது - (மக்களின் உடம்பு) கன்மத்தால் வந்தது. வினைக்கு விளைவு ஆயது - கன்மத்துக்கு விளைநிலமாகவுள்ளது.

48. புனைவன - சந்தனம் மலர் முதலியன.

49. மூத்து விளிவு உடையது - முதுமையுற்று இறத்தலையுடையது. இருக்கை - இருப்பிடம்.

50. பற்று - ஆசை.

51. அரவு அடங்கு புற்றின் செற்றம் சேக்கை - பாமபு அடங்கப்பெற்ற புற்றுப்போலச் செற்றத்திற்குத் தங்குமிடமாகவுள்ளது; செறறம - நெடுங்காலம் நிகழும கோபம.

52. அவலம் - வருத்தம் தோன்றியவிடத்தே உண்டாகும் சோாவு. கவலை - யாது செய்வேமென்றல். கையாறு - மூர்ச்சித்தல். அழுஙகல - வாய்விட்டழுதல.

53. தவலா உள்ளம் - மேற்கூறிய அவலமுதலியநான்கும கெடாத உள்ளத்தை.

55. இதனை - இவ்வுடம்பை. புறமறிப்பாராய் - புறமறியாகப்பார்ப்பாயாக; பார்த்தால், இதன் தூய்தன்மை விளங்குமென்றபடி; புறமறி - உடம்பின்வெளிப்பக்கததை உட்பக்கமாகவும் உட்பக்கத்தை வெளிப்பககமாகவும் பார்த்தல்; "பைமறியாப் பார்க்கப்படும்"என்பது, நாலடியார்.

ரு - ம் காதை.

4. அஃது - அவ்வாயில்.

7. எத்திறத்தினள் - எத்தன்மையையுடையவள்.

13 - 17. சமணமதமும் பௌத்தமதமும் தம்முள் நிரம்ப விரோதமுடையவை.

23. தன்வயம் - தன்வசம்.

27. சங்கமுகத்துறை - காவிரிநதி கடலொடுகலக்குமிடத்துள்ள துறை.

30. தன்னை ஒரு வித்தியாதரன் கைபபற்றிக்கொண்டு போனமையின், 'தருமியில்லேன்' என்றாள்.

37 - 38. சமணபபள்ளி - சமணருறைவிடம்.

44. ஐயம - பிச்சை.

46. சீவர ஆடையென்பது பௌத்தமுனிவர்களுடுக்கும் ஆடைக்கு வழங்குவதோர் பெயர்; அது, மருதந்துவரில் தோய்க்கப்பட்டு மஞ்சள்நிறமுள்ளதாக இருப்பது.

37 - 50. சைனாகளைக்காட்டிலும் பௌத்தர்களுக்கு ஜீவகாருணியம அதிகமுண்டென்பதைப் புலப்படுத்தியிருக்கின்றனர்.

56. இயல் குணன் - இயல்பாகவே தோன்றிய குணங்களையுடையவர்.

57. உலகநோன்பு - உலகசீலத்தை, பல கதி உணர்ந்து - பலபிறப்புக்களிலும் பிறந்து பிறந்து அறிந்து; புத்தன் பல சனனங்களையும் எடுத்து எல்லாவுயிரிடத்தும் கருணையைச் செலுத்திவந்தானென்பது வரலாறு.

58. தனக்கென வாழா - தான் சீவித்திருத்தல் தனக்கேயென்று நினையாத, பிறர்க்கு உரியாளன் - பிறர்க்கே உரிமைபூண்டு ஒழுகுபவன்; வாழாமை, புத்தருக்கு அடை; "தனக்கென், றொன்றுனுமுள்ளான் பிறர்க்கேயுறுதிசூழ்ந்தான்" என்பது குண்டலகேசி.

59 இன்பச்செவ்வி - முத்தியடைதற்குரிய பருவத்தை. மன்பதை எய்த - உயிரப்பன்மைகள் அடைய.

60. அருளறம் - தயாதர்மத்தை. இது காருண்யமெனவும் வழங்கும். பூட்கை - மேற்கோள்.

59 - 60. எய்தப் பூண்டவென்க.

61. அறக்கதிர் ஆழி - தருமசக்கரத்தை; தருமத்தைச் சக்கரமாகக் கூறுதல் பௌத்தமத ஸம்பிரதாயம்; புத்தனுக்குத் தருமசக்கரப் பிரவர்த்தனாசாரியனென்று ஒரு பெயருண்டு.

62. காமற் கடந்த - மாரனைவென்ற; மாரன் - தர்ம விரோதிகளான இச்சைகளை மனதிலுண்டாக்கும் ஒரு தேவன்; [இங்ஙனம் கூறுவது பௌத்தமதக்கொள்கை]. வாமனென்பது புத்தனபெயர்.

64-65. அதுமுதல் - சங்கதருமன் உபதேசித்ததுமுதல்.

73. வருணக்காப்பு - வருணங்களுக்கு ஏற்ற காவல்; வருணமாகிய காவலெனலுமாம்.

82. புலவன், தீர்த்தன் முதலியவை புத்தனுடைய பெயர்கள. தீர்த்தன் - தேவன். புராணன் - பழையவன்.

83. என்கோ - என்பேனோ.

84. குற்றம - காமவெகுளி மயக்கங்கள். செற்றம் செறுதநோய் - தணியாதகோபததை அடக்கியவரே.

85. புத்தனுக்கு ஸர்வஞ்ஞனென்று ஒரு பெயருளதாதலின், 'முற்றவுணர்ந்த முதல்வா' என்றாள்.

86. ஏமம - பாதுகாப்பு.

87. தீநெறி - கெட்டவழி.

88. ஆயிரஆரத்து ஆழியன் - பாதத்தில் ஸஹஸ்ராரசக்கரரேகையையுடையவன்.

89. எவன் - யாது.

சு - ம் காதை.

3. அறவாழி - தருமசக்கரம்.

5. 'நீங்கள்' என்றது மணிமேகலையையும் சுதமதியையும்.

26. நன்சாடு - சுடுகாடு.

28. காளிகோட்டம - காளிகோயில்.

36. காவற்காரர் - மயானத்தைக் காப்போர்.

38. பிணங்களைச்சுமமாபோகட்டு விடுதல் சிலஜாதியாருடைய வழக்கம்.
39. தாழி - நவபாண்ட விசேடம்; பண்டைக்காலததிற் பிணங்களைக்கவி த்ததாழிகள் இக்காலத்தில முதுமக் கட்டாழியென வழங்கும்.
41. சாப்பறை - பிணப்பறை.
44. பேராந்தைகளின் ஒலி சுட்டுக் குவியென்னும் வடிவமாகத்தோற்று மென்பர் பழையதமிழறுாலார்; புற நானூறு, 240-ம செய்யுளைப்பார்க்க.
45. ஆண்டலைப்பறவை - ஆண்மக னது தலைபோன்ற வடிவமுள்ள ஒரு வகைப்பறவை.
49. மன்றம - பொதுவானஇடம்.
51. காபாலிகஸமயததோர் சுடலை யிலிருந்தே தவஞ்செய்தல மரபு.
56. மணடை - பாணடவிசேடம்; அஃது இக்காலத்து, 'வாணாய்' என் றுவழங்கும.
63. கொடுந்தொழிலாளன் - ய மன்.
65. கழிபெருஞ்செல்வக்கள் - மிக ப்பெரியசெலவமாகிய கள்.
66. நல்லறம் - தயையோடுகூடிய தருமம.
75. பார்ப்பானென்றது கணவனை.
77. அணங்கு - காமநெறியால் உ யிர்கொள்ளுந்தெய்வமகள்.
92. இழவூழ் - நாசத்துக்கு ஏதுவா கிய ஊழ்வினை.
103. ரமப்புறங்காடு - பிணஞ்சுடு தற்கு அடுக்கும விறகடுக்குக்களையு டைய சுடுகாடு.
104. ஆயிரம் கோட்டம் அமைந் தன.
105. நிரயக்கொடுமொழி - நரகத் தைத்தரும் கொடுமையான வார்த் தை.
110 - 111. எல்லாவுலகத்தையும் தன்னுளடக்கியகோளத்தைச் சக்கர வாளமென்பது பௌத்த நூற்கொள் கை.
114. நான்குவகை அருவப்பிரமக ணங்கள் - நான்குவிதமாகவுள்ள அரு பத்தையுடைய பிரஹ்மஜாதி கணங் கள்; இவர்கள், உலகம முப்பத்தொ ன்றனுள் இருபதெட்டாவதாகிய ஆ காசாநந்தியாயதனலோக முதலிய நா ன்கு உலகங்களிலுமுள்ளவர்களென் பர். [மணிமேகலையுரைப்புததகம, 3 - ம் பக்கமபார்க்க].
114 - 115 பதினாறுவகை உரு வப்பிரம ஜாதிகணங்களாவார்; இவ ர்கள், மேறகூறிய உலகம் முப்பத்தொ ன்றனுள் பன்னிரண்டாவதாகிய பிர ஹமகாயிகலோகமுதலிய பதினாறிலு மிருப்பவாகள்; [மணிமேகலையுரைப புததகம 3 - ம பக்கமபார்க்க.]
115 - 116. அறுவகைதெய்வசா திகணஙகளாவார் - உலகம் முப்பத் தொன்றனுள் முதலாவதாகிய மகா ராஜிகலோகமுதலிய தெயவலோகம ஆறிலு முள்ளவர்கள; [மணிமேகலை உரைபுத்தகம் 3 - ம் பக்கம்பார்க்க].
117. எணவகைநரகர் - மஹாநிர யம, ரௌரவம், காலஸூத்திரம, ஸஞ்சீவனம, மகாவீசி, தபனம, ஸம் பிரதாபனம, ஸமஹாதம் என்னும அ - நரகலோகங்களிலுமுள்ளவர்கள.
123. சமபாபதிகூறியது இறந்தவு யிரை மீட்டல் இயலாததென்பது.
142. யோசனை - பத்துநாழிகை வழித்தூரம்.

ஏ - ம் காதை.

6 கோல் - செங்கோல். கோள் - நவக்கிரகங்கள்.
7. மாரி வறம் கூரும் - மழை இல் லையாகும.
11. தவத்திறம்பூண்டோள் - மணி மேகலை.
12. அவத்திறம் - தீயசெய்கை.
23. அற்புதங்கள் - ஆச்சரியச் செ யல்கள்.
30. கனவு - விழிப்புக்காலம்.
36. உலக அறவி - ஊரமபலம், எல்லாச்சாதியாரும வந்து தங்குதற் குரிய தருமசாலை.
38. அதிட்டித்திருக்கும - சேர்ந் திருக்கும.

40 - 47 இவ்வடிகளாற்கூறியவை சுதமதியின் பூர்வபிறப்பின்வரலாறு. [கக - ம் காதையைப்பார்க்க].

அ - ம் காதை

11. மனம் நடுங்குறூஉம் - மனம் நடுங்கும். மாற்றம் - சொல.

12. மயங்குவம் - மயங்குவாள்.

13. மெல்வினை - மெல்லியவினைகளை யுடையாய்.

19. தந்தை - கோவலன்.

21. மாதா - கண்ணகி வேறு நாடு - பாண்டிநாடு.

22. வைவாளெழுந்த - கூரியவாளால் வெட்டுண்டிறந்த. அகலம் - மார்பு.

25. பீடிகை - பீடம்.

கூ - ம் காதை.

1. விம்மிதம் - ஆச்சரியம்.

6. 'மாதவ' என்றது - பிரமதரும முனிவனை.

21. பாடிவீடு - சேனைகளோடுதங்கும் கூடாரம்

33. திட்டிவிடம் - கண்ணில் விடத்தையுடையதாகிய ஒருவகைப் பாம்பு.

36. நள்ளிரவு - நடு இராத்திரி.

42. கேள்வன் - கணவன்.

கம - ம் காதை.

5 - 13. இவ்வடிகள் புத்தபாதபீடிகையின் துதிகள்.

6. பொருள் - தருமம்.

7. வறம் தலை உலகத்து - வறுமையைத் தன்னிடத்தேயுடைய உலகத்து, அறம் பாடு சிறக்க - தருமத்தின் தோற்றம் அதிகரிக்கும்படி.

8. சுடர் - சூரியன். வழக்கு - வழங்குதல்.

9. இளவளஞாயிறு - பாலசூரியன்.

20. ஊடி - பிணங்கி.

23. பிரதக்ஷிணஞ்செய்து - பரவச்செய்து.

24. சாரணமுனிவன் - ஆகாய கமனமுதலிய சித்திபெற்றமுனிவன்.

25. பௌத்தமுனிவர் உச்சிப்பொழுதிற பிச்சைக்குச்செல்லுதல் மரபு.

34. அமுது - அன்னம்.

41. நின்னுங்கு ஒழியாது - நின்னை ஒழியாது; ஆங்கு, அசை

69. வேற்றுவடிவம்-வேறுவடிவம்.

70. இன்றியமையாதது - ஆவசியகமாகவுள்ளது.

73. நனுகுதல் ஒழிதலை - அடைதல் நிச்சயம்

78. மக்கள்யாக்கை - மனிதருடம்பு.

கக - ம் காதை.

15. பயன் - பிரயோசனம்.

20. படிமைகள - வடிவங்கள்.

29. தருமபதம் - தருமங்களைப் புலப்படுத்துஞ் சொற்கள்.

30. பெரியை - பெருமையையுடையாய்.

31. மயங்கிய - கலந்த

32. இலஞ்சி - தடாகம்

33. அக்ஷயம் - குறைவில்லாதது.

35. வைசாகசுத்தபூர்ணிமை - வைகாசிமாஸத்தில் விசாக நக்ஷத்திரத் தோடுகூடிய பௌர்ணிமைத்திதி

47 - 58. இவ்வடிகளாற் புத்தஸ்துதி கூறப்பெற்றுள்ளது.

48. தீநெறிக்கடும்பகை - காமமுதலிய ஆறுகுற்றங்கள். இவை அரிஷட்வர்க்கமென்று கூறப்படும்.

49. பிறர்க்கு அறம முயலும் - மற்றையோர்க்கு அறமுண்டாதற்கு முயற்சிசெய்கின்ற.

50. துறக்கம் - தேவலோகம்.

51. எண் பிறக்கு ஒழிய இறந்தோய் - மனிதர்களுடைய எண்ணங்களை எட்டாமற் பின்னேகிடக்கும்படி மேற்பட்டநிலையிற் சென்றோனே.

52. கண் - அறிவு; லோகோபகாரத்திற்காகப் புத்தனெடுத்த அநேக மபிறவிகளுள் ஒருபிறப்பில், அவன் கொடையைப் பரிசோதிக்கநினைந்த இந்திரன்வந்து இரண்டுகண்களையுங் கேட்டபொழுது அவன் அவற்றைக்கொடுத்தானென்பது புத்தஜாதகக் கதைகளுள் ஒன்றாதலின், 'கண்பிறர்க்களிக்குங்கண்ணோய' என்பதற்கு இந்திரனுக்குக் கண்கொடுத்தோயே

ன்று பொருளாகக்கூறினும் பொருந்தும்; ''[illegible] நாயகனை வேண்டக், கண் [illegible] புண்ணியனிரு[illegible]போ[illegible], நன்றிட[illegible] நோயகலியா யே'' எ[illegible] செய்யுளாலுமுணர்க.

53. [illegible]மொழிக்கு - தீயசொற்களைக் கேளா[illegible]தற்கு, அம்மொழிகளாவன பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்பன.

54. வாய்மொழி - உண்மைமொழி.

55. நரகர்களிற் சிலர்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டு மனமிரங்கி ஒரு பிறப்பில் நரகலோகத்திற்குச் சென்றனனென்பது வரலாறு, ''அருவினை சிலர்கெ - வொரு பெருநரகிடை, யெரிசுடர் மணிமலை ரெம் விடுமடியினை'' என்பதனாலுணர்க

56. உரகர் - நாகர்கள்; நாகர்களுக்குக் கருடனாலுண்டாகும் துன்பம் நீங்கும்பொருட்டு அவனுக்குத் தயா தருமத்தை உபதேசஞ்செய்து அவனால் அவர்களுக்கு அமுதம் கிடைக்கும்படி செய்தானென்பது புத்தஜாதகக் கதைகளுளொன்று; ''மீதியல் கருடனை விடவர வொடுபகை விதிமுறை கெடவறம வெளியுற வருளினை'' எனவும், ''ஆரமிர்த மணிநாகர் குலமுய்ய வருளினையே, வார்சிறைப்புள் ளரயறத்து வாய்மைநெறி பகர்ந்தனையே'' எனவும் வருவனவற்றாலுணர்க.

62 - 67. இவற்றாற் பசியாலுண்டாகும் துன்பமும் அதனைத் தீர்ப்போருடைய புகழின்பெருமையும் கூறப்பெற்றன. பசிப்பிணியென்னும் பாவியானது அழிக்கும், கொல்லும், விடேஉம், களையும், சிதைக்கும், நிறுத்துமென்க.

62. (பசியானது) குடிப்பிறப்பின் பெருமையையழிக்கும் விழுப்பங்கொல்லும் - சிறப்பினைவருத்தும்.

63. கல்விப் பெரும்புணைவிடேஉம் - கல்வியாகிய பெரியதெப்பத்தைநீக்கும்.

64. நாண் அணி களையும் - நாணாகிய ஆபரணத்தை நீக்கும்.

67. இசை - கீர்த்தி.

69. கௌசிகமுனிவர் - விசுவாமித்திரர்.

69 - 75. விசுவாமித்திரமுனிவர் பசியின்கொடுமையால் நாயூனுண்ட தற்கு முயன்றனரென்பதை மனுஸ்மிருதி, க0-ம் அத்தியாயம், கஅ-ம் சுலோகத்திற்காண்க.

76. ஆற்றுநர் - செல்வர்.

77. ஆற்றுமாக்கள் - வறியவர்.

78. மேற்று - மேலது.

79. ஞாலம் - பூமி.

96. அளவளாவிக்கொண்டு - மனங்கலந்துபேசிக்கொண்டு.

106. அமுதசுரபி - அமுதம்போன்ற வாஸனையையுடையது.

கஉ - ம் காதை.

4. உரைமூதாளன் - முதிய உரைகளை அளப்பவர், அறவணவடிகள்.

15. மூன்றுமந்திரங்கள் - வேற்றுருவடைவிப்பது, அகாயத்தில் திரியச்செய்வது, பசியை நீக்குவது.

38. துஷிதலோகம் - தெய்வலோகம் ஆறினுள் நான்காவது.

41. புத்தஞாயிறு - புத்தனாகிய சூரியன்.

இனிவருவன, புத்தன் அவதரிக்குங்காலத்து உளவாகும் நற்குறிகள்.

42. தீங்குஉறு விளங்க - விரோதமில்லாமல் விளங்க.

46 வளி வலம் கொட்கும் - காற்று வலமாகச்சுழலும்.

47. நளி-செறிவு. நலம்-வளங்கள்.

48. கறவை - கறத்தலையுடைய பசுக்கள், கன்று ஆர்த்தல் - கன்றை உண்ணச்செய்து, கலம் நிறை பொழியும் - கறவைக்கலமும் அதனினின்றும் பாலைச்சொரியும் சாலும் வழியும்படி பாலைப்பொழியும்.

49. துய்த்து - அனுபவித்து.

50. வெரூஉப் பகை - அஞ்சுதற்குக்காரணமாகிய பகை.

51. அரா - துன்பம். நரகச்சாதியும் பேய்ச்சாதியும் அருளைக்கைவிட்டொழியும்.

52 - 53. கூன் - வளைந்தவடிவம். குறள் - குறுகியவடிவம். ஊமம் - ஊமை. மா - விலங்குவடிவம் மருள் - அறிவின்றிமயங்கியிருப்பது. கூனமுதலிய வடிவங்களை உயிர்கள் பெறமாட்டா. [இவை எண்மெய்யெச்சத்தைச்சார்ந்தவை]

55. இன்னு - துன்பம்.

56. போதிமூலம் - அரசமரத்தின் அடி.

57. நாதன் - புத்தன்.

61. இருவர் - மாதவி, சுதமதி.

68 - 69. ஓரறம் பசிப்பிணிதீர்த்தலே. அவர் - அறவணவடிகள்.

க௩ - ம் காதை.

2. வாரணாசி - காசி.

6 கருப்பிணி-கருப்பமுடையவள்.

7. சூல் - கருப்பம்.

12. அகன் - அக்குழந்தையின்.

25. வெய்துயிர்த்து - வெம்மையானமூச்சைவிட்டு.

36. ஓறுக்க - தண்டிக்க.

42. விடுநிலம் - மேய்தற்கு அரசனால்விடப்பட்ட நிலம்; அது கோசருசாரபூமியென்று கூறப்படும். படுபுல்-தானே உண்டாகும் புல்லை.

46. செற்றம் - கோபம்.

50 அசலனென்பவர் பசுவின்குமாரர் சிருங்கி, மானின்புதல்வர்; சிருங்கம் - கொம்பு; அதனையுடையவர் சிருங்கி; இவர் கலைக்கோட்டுமுனிவர்.

55 ஆவொடு - பசுவால்

72. திலோத்தமையின்புத்திரர்கள் வசிட்டரும் அகத்தியருமென்பது ஜைனநூல்வரலாறு.

80. சிந்தாதேவி - ஸரஸ்வதிதேவி. கலைநியமம் - அந்தத்தேவியின் கோயில்.

85. பேணுநரில்லோர்-கதியற்றவர்.

க௪ - ம் காதை.

6. ஆற்றல் - வன்மை.

8 இவ்வோடு - இந்த ஓடு.

14. நந்தாவிளக்கே - கெடாத தீபம்போல்வாய்

16. ஏனோர் - மற்றையோர்.

50. மீகாமன் - மாலுமி.

க௫ - ம் காதை.

12. குழவிப்பருவம் - குழந்தைப் பருவம்.

19 - 20. கந்திற்பாவை - தூணிலுள்ளபிரதிமையை அதிட்டித்துநிற்கும் தெய்வம்.

33. மிசைசில - மிசைதி. ஒழித்ததனை தத்தாங்கு - பயன்படுத்தாமல்வைத்ததைப்போல

36. பிக்குணி - பிக்ஷுணி; துறந்தோர்களில் ஆண்பாலாரைப் பிக்ஷுக்களென்றும், பெண்பாலாரைப் பிக்ஷுணிகளென்றும் கூறுதல் பௌத்தசம்பிரதாயம்

49 - 50 கற்பு மழையைத்தருமென்பதை, "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" என்னும் திருக்குறளானுணர்க.

க௬ - ம் காதை.

13. உடைய - உடைந்துபோக.

20. ஆகாயவாணி - ஆகாயவாக்கு; அசரீரி.

30. அயாசம் - சோர்வு.

37. குழிசி-பானை. முடைநாற்றம்-புலால்நாற்றம்.

38. உணங்கல் - உலர்ந்தது.

39. எண்கு - கரடி; தன்பிணவு - பெண்கரடி.

40. பெண்டு - மனைவி.

42. வயம் - வசம்.

52. கோறல் - கொல்லல்.

53. கயக்கு - கசங்குதல்.

57. அல்லறம் - பாவம்; அறமல்லாததென்றபடி.

64. துகில் - ஆடை.

70 பிச்சைவாங்கும்பொழுது மௌனமாக நிற்கவேண்டுமென்பது பௌத்தநூல்விதி. அது, வாய்வாளாமையெனக் கூறப்படும்.

72 சுனா - பன்றி, நட்டுணோ.

73. பசியாகியவியாதி

74. ஆருயிர்மருந்து - அரியசோறனை

கஎ - ம் காதை.

3. அறத்தினீட்டிய - நலவழியே சம்பாதித்த.

3 - 4. அறவோன் திறத்து - புண்ணியமுடையவனிடத்தே, வழிபடூஉம் - பெரு[illegible]றும்.

8. அன்னாய் - அன்னையே.

18. பாரணம் - உணவு; விரதத்தாற் பட்டினியிருந்து உண்ணும் உணவு.

21. சிதைத்தது - அழித்தது.

30. யானைத்தீயென்னும் நோய் பஸ்மகவியாதியென்று கூறப்படும்.

37. அந்தரம் - ஆகாயம்.

40. ஆற்றாமாக்கள் - ஏழைகள்.

47. மணிமேகலை, விளி. படர்கேன் - செல்வேன்.

52. உழந்தோர் - வருந்தினோர்.

53 அரும்பிணி - தீர்த்தற்கரிய வியாதி.

54. இடுவோர் - கொடுப்போர்.

60. வேய்கரிகானம் - மூங்கில்கரிந்தகாடு.

61. கருவி - தொகுதி; மின்னல், இடிமுதலியன.

62. பைதல் - துன்பம்.

கஅ - ம் காதை.

7. தாபதக்கோலம் - தவமுடையவர்களின் வேடம்.

9 பாணன் - பாணச்சாதியிற்பிறந்தவன்; யாழ்வாசித்தல் அச்சாதித்தொழில்.

11. நறுந்தாது - நல்லதேன். நயன் - செல்வம்.

16. பிச்சைமாக்களாகிய பிறருடைய.

19 - 21. பரத்தையரிற் குடிகழற்றப்பட்டார்தலையில் எழுசெங்கலைச் சுமத்தி அரங்கைச்சூழவித்துப் புறத்தே விடுத்தல் மரபு.

24. அரண்மனை - காவலையுடைய வீடு.

37 இடும்பை கொள்களம் - (மணி[illegible]) துன்பத்திற்குப்பாத்திரமாகவுள்ளது.

51. பாடுகிடப்பேன் - வரங்கிடப்பேன்.

53. 'திருவடிதொட்டேன்' என்றது, சூளுறவு.

ககூ - ம் காதை.

[சிறைக்கோட்டம் - சிறைச்சாலை; அறக்கோட்டம் - தருமசாலை.]

3 வஞ்சினம் - சபதம்.

28. இராசமாதேவி - மாவண்கிள்ளியின் பட்டமகிஷி.

30. மாவண்கிள்ளி - அக்காலத்திருந்தசோழராஜன்.

31. ஒளி - உறங்காநிற்கவும் உலகங்காக்கின்ற அரசரிடத்துள்ள கடவுட்டன்மை.

35. சிறைக்கோட்டம் - சிறைச்சாலை.

46. விஞ்சைமகள் - வித்தையையுடையபெண், வித்தியாதரசாதிமங்கை; சிலேடை.

51. மிருதசஞ்சீவினி - மரித்த உயிரை மீட்டும் உடம்பிற்சேர்க்கும் பச்சிலை.

53. அறச்சாலை - தருமசாலை.

உ௦ - ம் காதை.

6. முதுமொழி-பழையவார்த்தை.

15 பூதசதுக்கம் - பூதம்தங்கிய நாற்சந்தி. இப்பூதந்தான் சதுக்கப்பூதமென்று கூறப்படும்.

39. சாந்து - சந்தனக்குழம்பு. மறைத்து யாத்து - மறைத்துக்கட்டி.

40. தூசு - ஆடை. மணி இரத்தினம்; அணியெனக்கொண்டால், ஆபரணமெனக்கொள்க.

41. வஞ்சம் - வஞ்சனை.

46 காதற்குறிப்பு-ஆசைக்குறிப்பு. புலப்படுத்தி - வெளிப்படுத்தி.

50 தீது - கொலை.

52. வேட்கை - ஆசை.

57 - 58. நடுயாமம்-பாதிராத்திரி.

64. வேகவெந்தீ - விஷம்.

65 போகுயர் - மிக்குயர்ந்த. புற்றளை - புற்றின் துவாரம்.

77. ஆகாயசாரிகள் - ஆகாயத்திற் சஞ்சரிக்கும் தேவகணங்கள்.

உக - ம். காதை.

7. ஆற்றாது - ஸகியாமல்.

15. சால்பு - அமைதி. மறம - பாவம

16 இடர்வினை - துன்பத்தைத்தவினை விக்கும் பாவத்தை.

26. மகளு - கணவனுக.

27. மகளாயதூஉம - மனைவியாகியதூஉம்.

29 காரிகை, விளி.

39. அடிசரிகரு - அடியவளாகிய எனக்கு.

46. அடிசில் - அன்னம. மடையன் - சமையற்காரன்.

48. பாணித்தது - தாமதித்து.

49. வழுக்குற்று - வழுக்கி. மடைக்கலம்- அன்னம்வைத்திருக்கும பாத்திரம.

52. தாழ்த்தான் - தாமதித்தான்.

62. வேண்டுகோள்-பிரார்த்தனை.

68. வஞ்சி - சேரராசனுடைய இராசதானி.

71. வாயே - உண்மையே. மயக்கு ஒழி - மயக்கத்தை ஒழிவாயாக.

75. படிமம் - பூசித்தற்குரிய தெய்வவடிவம.

88. சார்பிறகோற்றம - துவாதச நிதானம்; உகூ-ம காதை, 37 - 38-ம அடிகளின் குறிப்பைப்பார்க்க.

89. பவம அறு மார்க்கம - பிறவியொழிதற்கு ஏதுவாகிய நல்வழி.

90. மற இருள் - பாவமாகிய இருட்டு. எம உறு - இன்பமுற.

91. அறவெயில - புண்ணியமாகிய வெயிலை. இருத்தி - ஸித்தி.

95. பிழையாமல - தப்பாமல.

101. நிருவாணம் - முத்தி.

உஉ - ம் காதை.

12. விகாரம - வேறுபாடு.

13. வன்மை - பலாத்காரம. ஒறுக்கப்பட்டு - தண்டிக்கப்பட்டு.

21. காவற்கணிகை-காவலையுடைய பரத்தை.

28. *காவிரிப்பூம்பட்டினத்திறகுக் காகந்தியென்றும பெயருண்டென்பது கைலாயநிகண்டாலும தெரிகின்றது.

34. காவிரிவாயில் - காவிரிக்குச்செல்லும்வழி.

38. அந்தணனுடைய - கணவனுடைய; கணவனுடையபெயரைச் சொல்லலாகாதென்பதுவிதி.

39. முத்தீ - ஆகவனீயம, காருகபத்தியம், தக்ஷிணாக்கினி.

41. சதுக்கப்பூதம அறவகையாகிய குற்றஞ்செய்தவர்களைக் கொல்லும இயல்புடையதாகலின், இவள் பூதசதுக்கமடைசென்றாள்.

48. அவலித்து - சோர்வுற்று.

35 - 48. மருதி தன் குற்றத்தைத் தான நினைந்துவருந்திய அருமை மிக ஆராயத்தற்பாலது.

51 - 52. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்,பெய்யெனப் பெய்யு மழை" என்பது, திருக்குறள், 55.

53. பொய்யில்புலவன் - திருவள்ளுவர் பொருளுரை - தருமவார்த்தை.

55. நிருத்தம - நடனம. கீதம - இசைப்பாட்டு.

60. வெற்றுச்செய்கை - வீண்செய்கை.

75. காந்தருவமணம - கந்தருவ விவாகம்; அது தலைவன் தலைவிகள் தமமுள மனமொத்துச்சேர்வது.

84. மைத்துனனென்றது தருமதத்தனை.

92. ஈட்டி - சமபாதித்து.

93. எட்டிப்பூ - எட்டிப்பட்டத்திற்குரிய பொற்பூ.

98. தாழ்த்தல-தாமதித்தல். [கம்.

111. புத்தேளுலகம - தெய்வலோ

112 விழுத்துணை - சிறந்த துணை; "தெரியி னறமே துணை" என்பது அறநெறிச்சாரம்.

130. முடிபொருள் - முடிந்தபொருள்; பரமார்த்தம.

133. காமமானது, மேற்கூறிய கட்டுடைத்தல் முதலியவற்றைத் தள்ளாததாகும்.

137. உழப்போர் - வருந்துவோர்.
141. சிற்றில் - சிறுவீடு. பேரில் - பெருவீடு.
152. முறுகிய - மிகுந்த.
161 அரசாபிரான் - மனுநீதிச் சோழர். இவர் மகன்மீது தேரையூர்ந்த வரலாற்றைப் பெரியபுராணம் திருவாரூர்ச்சிறப்பாலுணர்க.
163. பறங்காடு - சுடுகாடு.

உ௩-ம் காதை

4 கடுமொழி - பொருள்போகிந்த சொல்.
25 தீச்செயற்கு - கொடுஞ்செய்கைக்கு.
28. வேற்றுரு - வேறுவடிவம்.
30. அறிவிலி - அறிவில்லாதவன்
37 பழுக்கறை - புழுங்குதற்குக் காரணமாகிய அறை; வாயிலில்லாத அறை
48. இளங்கோன் - இளவரசன்; உதயகுமாரன்
53. புக்கில் - புகுந்தவீடு
54 செய்பாட்டுவினை செய்யப்படுங்கொலையுடைய வினை.
68 - 69 கல்லாக்கயவன் - படியாத கீழ்மகன்
81. செற்றம் செறுத்தோர் - தணியாத கோபத்தை அடக்கினவர்கள்
83 அல்லல் மாக்கள் - வறுமைத் துன்பமுள்ள மனிதர்.
88 நன்கனம் - நன்றாக

உ௪-ம் காதை

21 அடிகள் - ஸ்வாமியாகியவீர்
26 பீலிவளையென்பவளின்சரிதை, சேறைக்கவிராஜபிள்ளை இயற்றிய செய்யுநலாவிலுமவந்துள்ளது.
31. கவலாது - கவலையடையாமல்.
40 தன்னுடைய பெயரைப்பெற்ற மடந்தை - மணிமேகலை
47 உரவோர் துறந்தவை - அறிவுடையோரால் நீக்கப்பட்ட குற்றங்கள்.
61. நாத்தொலைவு-நாவின்மெலிவு
82. கவற்க - கவலையடையாதொழிக.

உ௫-ம் காதை

4 மறம் - பாவம். அந்தம் - அந்தப்பொருளின்வகை.
4, 5. சிந்தைத்திறம் - சிந்தைப்பொருளின்வகை. துக்கம் - பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, விரும்பியன்பெறாமை, வேண்டாதன்பெறுதலென்பன ஆறும்
6 சார்பிற்றோற்றம் - பேதைமை முதலியவற்றின் உற்பத்தி. உய்தி - பிழைத்தல்
7 அரியன் - ஆசிரியன்; என்றது புத்ததேவனை
10 பிரசாளி - இராஜகாரியத்தில் முதன்மைபெற்றவன்
41. மன்னுயிர்முதல்வன் - புத்ததேவன். அறம் - அவன்கூறிய தயாதருமம்
46 நாவாய் - கப்பல். [ன்
70 கொலைவன் - கொலைசெய்பவ
68 - 70 இவற்றிற்கூறியவை வஞ்சப்புகழ்ச்சியணி.
75 - 76 கம்மாளச்செட்டி - கம்மாளவாணிகஞ்செய்யும் வியாபாரி.

உ௬-ம் காதை

2 வஞ்சிநகரப்புறத்தில், சேரன்செங்குட்டுவன் கண்ணகிக்குக்கோயில் கட்டுவித்து வருடந்தோறும் திருவிழா நடப்பித்தானென்பது சிலப்பதிகாரத்துள்ளவரலாறு
5 கைம்மைநோன்பு - வைதவ்ய விரதம்
18 வேலை - உத்தியோகம்
19 ஓற்றன் - ஒற்றியொற்றி, நடப்பவைகளை அறிபவன், வேவுகாரன்
28 நுகர்ந்து - அனுபவித்து
36 கபிலையம்பதி - கபிலவாஸ்து; கபிலரென்பவர் தவஞ்செய்தற்கிடமாகஇருந்ததென்பது பொருள்
37. நால்வகைச்சத்தியம் துக்கம், துக்கோதயம், துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கம்
37 - 38 பன்னிரண்டுசார்புகளாவன:- பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட

கை, பற்று, பவம், தோற்றம், வினைப் பயனென்பன; இப்பன்னிரண்டின் இலக்கணமுதலியவற்றை, இதன்முதனூலாகிய மணிமேகலையின், ௩௰ - ம காதை, ௬௪-ம அடிமுதலியவற்றாலும அவற்றின் உரையாலும் உணர்க.

42. புத்தசைத்தியம் - புத்தாலயம்.

42 - 43. இந்திரவிகாரம் ஏழு - காவிரிப்பூம்பட்டினத்தில், இந்திரனால் நிருமிக்கப்பட்ட ஏழரங்குகள்; இவற்றைக் கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குச்செல்லும்பொழுது வணங்கினார்கள்; [சிலப். நாடுகாண். ௧௪-௧௫-ம அடிகளைப்பார்க்க].

52. தேவகுலம் - தேவாலயம். தெற்றி - திண்ணை. பள்ளி - சாலை.

55. காணிய - கண்ட.

௨௭ - ம் காதை.

3. அளவைவாதி - பிரமாணவாதி; பிரமாணம் - காட்சிமுதலியன.

7. நிகண்டவாதம் - சைனஸமயத்தைச்சார்ந்த ஒருவகைவாதம், இது நிகண்டவாதமென்றும் திகம்பரவாதமென்றும் கூறப்படும்.

௨௮ - ம் காதை

7. மாசாத்துவான் - கோவலனுடைய தந்தை.

38. அறத்தகைமுதல்வன் - புத்ததேவன்.

39. இறைவன் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்னுமரசன்.

42. பாங்கன் - தோழன்.

48. சைத்தியம் - புத்தாலயம்.

52. உன்தந்தையென்றது, கோவலனை.

83. கோடியோ-கோணுதலுறுமோ.

86. அலத்தற்காலை - வறுமைக்காலம்; அலத்தல் - வாடுதல்.

94. வறம் - வறுமை.

111. மூவறுபாஷை - பதினெட்டுப்பாஷை.

113. பேணுமாக்கள் - பாதுகாக்கப்படாதவர்கள்; கதியற்றவர்.

114. படிவநோன்பியா - தவவேடத்தையும் நோன்பையுமுடையவர்கள்.

115. மடி - ஆடை, சோம்பல்.

124. போனகம் - உணவு.

௨௯ - ம் காதை.

17. சரண - அடைக்கலம்.

19. அளவைகள் - பிரமாணங்கள்.

௩௰ - ம் காதை.

3, 4. 'புத்தம் சரணங்கச்சாமி' என்பது முதலியமூன்றும் பௌத்தர்களுள் மூன்றுமந்திரங்களாக வழங்கும். இவற்றிற்குப்பொருள் முறையே, புத்தனைச் சரணமாக அடைகிறேன், தாமத்தைச் சரணமாக அடைகிறேன், ஸங்கத்தைச் சரணமாக அடைகிறேனென்பன.

5. மும்மணி - புத்தன், தாமம், சங்கம்.

9. துடிதலோகம் - துஷிதலோகம்.

13-14. கௌதமபுத்தருக்கு முன்பு அளவிறந்த புத்தர்கள் பிறந்து பௌத்ததருமங்களை ஸ்தாபனஞ்செய்தாராகவென்பது புத்தஜாதககதைகளிற்கண்ட வரலாறு.

19. திரிபு - ஒன்றைமற்றொன்றாகக்கருதுவது

19 - 20. அந்நகரில் - காஞ்சியில்.

அபிதானவிளக்கம்.

[அபிதானம் - பெயர்.]

அகத்தியன் : ஒரு தெய்வமுனிவர்.

அங்கநாடு : துச்சயனென்னும் அரசனுடையது.

அசலன் : பசுவயிற்றிற்பிறந்த ஒரு முனிவன்.

அசோதரம் : இரவிவன்மனென்னும் அரசனுடைய நகரம்.

அத்திபதி : நீலபதிகணவன், இராகுலனுடைய தந்தை. இவனுடைய இராசதானி இடவயமென்பது.

அபஞ்சிகன் : காசியிலுள்ள ஓரந்தணன்; சாலியென்பவளுடைய கணவன்.

அமரசுந்தரி : பூமிசந்திரனுடைய மனைவி; புண்ணியராசனை வளர்த்தவள்.

அமுதசுரபி : தென்மதுரையிற் கலைநியமத்துள்ள சிந்தாதேவியால் ஆபுத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வத்தன்மையுள்ள ஒரு பாத்திரம்; இது, தன்னுட்பெய்த அன்னத்தை எடுக்க எடுக்கக் குறையாது மேன்மேலும் வளரச்செய்வது.

அமுதபதி : இரவிவன்மனென்னும் அரசன்மனைவி; இவள், தாரை, வீரை, இலக்குமி என்பவரைப்பெற்றவள்.

அறவணவடிகள் : காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த புத்தசங்கத்துள்ள ஒரு முனிவர்; கோவலன் கொலையுண்டது கேட்டுவருந்தியடைந்த மாதவிக்குத் தருமோபதேசஞ்செய்து துன்பகற்றித் துறவுபூணச்செய்தவர்; பாதபங்கயமலையைத் தாம்தரிசித்ததன்றித் துச்சயனென்னும் அரசனையும் மனைவியரோடுசென்று அதனைத்தரிசிக்கும்படி செய்தவர்; மணிமேகலைக்கு ஆபுத்திரன்வரலாற்றையும், அமுதசுரபியின் பெருமையையும், உணவளித்தலின் விசேடத்தையும் கூறிப் பலருடைய பசித்துன்பங்களையும் போக்கும்படிசெய்ததன்றி, தருமோபதேசஞ்செய்து, அவளை நல்வழிப்படுத்திய ஆசிரியர் இவரே; தீவதிலகையாலும் கந்திற்பாவைத்தெய்வத்தாலும் நிரம்பப்புகழப்பெற்றவர்; காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டபின்பு வஞ்சிநகரையடைந்து அங்கே துறவுபூண்டிருந்த கோவலன்றந்தையோடு அளவளாவி அப்பாற் காஞ்சிநகரஞ்சென்று அங்கே தவம்புரிந்திருந்தார். இவர், மிக்க மூப்புற்றும் சிறிதும் சொல்வன்மை குன்றாதிருந்தவர்.

ஆதிரை : சாதுவன்மனைவி; இவள், ஒப்புயர்வில்லாதகற்பினள்.

ஆபுத்திரன் : சாலியின்புதல்வன்; பிறந்தநாள் தொடங்கி எழுநாளளவும் ஒருபசு பாலூட்டிவளர்க்க வளர்ந்தமையால், இவன் இப்பெயர்பெற்றான்; அன்பும் அருளுமுடையவன்.

இடவயம் - அத்திபதியென்னும் அரசனுடைய நகரம்.

இரத்தினதீவம் : மணிபல்லவத்தின் அயலிலுள்ள ஒரு சிறுதீவு; இலங்காதீவமென்றுங் கூறப்படும்; இதில், புத்தரது பாதப்படிமையமைக்கப்பெற்ற உச்சியையுடையமலையொன்று உண்டு.

இரவிவன்மன் : அசோதர நகரத்து அரசன்; அமுதபதியின் கணவன்; இலக்குமியின் தந்தை.

இராகுலன் : அத்திபதியென்னும் அரசனுக்கு நீலபதிவயிற்றிற் பிறந்தவன்; இலக்குமியின் கணவன்; திட்டிவிடமென்னும் பாம்பாலிறந்து பின்பு

உதயகுமாரனாகப் பிறந்தவன் இவனே.

இலக்குமி: இரவிவன்மனுக்கு அமுதபதிவயிற்றிற் பிறந்தவள்; தாரை, வீரை என்பவர்களின் தங்கை; இராகுலனுடைய மனைவி; திட்டிவிடத்தாற் கணவனிறந்தவுடன் தீப்பாய்ந்து உயிரை நீத்தவள்; சாதுசக்கரனென்னும் முனிவனுக்கு உணவளித்த புண்ணியத்தால் மணிமேகலையாகவந்து பிறந்து பௌத்ததருமங்கேட்டவள் இவளே.

இலங்காதீவம்: இரத்தினதீவமென்னும் பெயரைப்பார்க்க

உதயகுமரன்: காவிரிப்பூம்பட்டினத்தரசனாகிய நெடுமுடிக் கிள்ளியின் புதல்வன்; மணிமேகலைபால் விருப்புற்றுப் பலமுறை அவளிடஞ்சென்று இரந்து பின்னின்றவன். இவன் பெயர் இளங்கோனெனவும் வழங்கும்.

உலகவறவி: காவிரிப்பூம் பட்டினத்திற் சக்கரவாளக்கோட்டத்துள்ள சம்பாபதி கோயிலின்முன்பமைந்த ஊரம்பலம்.

எட்டிகுமரன்: காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஒருவணிகன்.

ககந்தன்: காந்தனென்னும் சோழராசனுடையகாவற்கணிகையின் புதல்வன்.

கச்சயம: துச்சயராசனுடைய இராசதானி.

கண்ணகி: கோவலன்மனைவி; இவளது கற்புமுதலியவற்றை வெளிப்படுத்தற் பொருட்டே சிலப்பதிகாரம் செய்யப்பட்டது.

கந்திற்பாவை: சக்கரவாளக் கோட்டத்திற் சம்பாபதிகோயிலின்கிழக்கேயுள்ள தூணில் மயனால் நிருமிக்கப்பட்ட ஒருபிரதிமை; துவதிகனென்னுந் தேவனுடைய வடிவமாகவுள்ளது.

கபிலை: இப்பெயருள்ள நகரம் இரண்டு. க - கலிங்கநாட்டிலுள்ளது; குமாரனென்னும் அரசனுடைய இராசதானி. உ - மகதநாட்டிலுள்ளது; கபிலவாஸ்துவென்றுகூறப்படுவது இதுவே; இந்நகரிலேதான் கௌதமபுத்தர் அவதரித்தனர்.

கம்பளச்செட்டி: ஒரு வணிகன்; கம்பளவியாபாரஞ்செய்பவன்.

கரிகால்வளவன்: காவிரிப்பூம்பட்டினத்தை ஆண்ட ஒரு சோழன்.

கலிங்கநாடு: தாயமன்னவராகிய வசு, குமரனென்னும் இருவர்க்குரியது.

கலைநியமம்: தென்மதுரையிலுள்ள சிந்தாதேவியின் கோயில்; கலை- வித்தை.

கவேரவனம் - காவேரியின் தந்தையாகிய கவேரரெனபவர் தவஞ்செய்து கொண்டிருந்தவனம்.

கவேரன்: ஓர் இராசருஷி.

காகந்தி: காவிரிப்பூம்பட்டினம்.

காஞ்சனபுரம்: வித்தியாதர நகரங்களுள் ஒன்று.

காஞ்சனன்: ஒருவித்தியாதரன்; காயசண்டிகையின் கணவன்; உதயகுமரனைக் காயசண்டிகையின் சோரநாயகனென்று நினைந்து அவனை வாளால் வெட்டிவீழ்த்தினவன்.

காஞ்சி: ஒருநகரம். இதில், கந்திற்பாவைத்தெய்வமும் துணையிளங்கிள்ளியென்பவனாற் கட்டப்பட்டுள்ள புத்தாலயமொன்றும் தென்மேற்கில் தருமதவனமென்று பெயருள்ள ஒரு சோலையுமிருந்தன.

காந்தன்: ஒருசோழன்; அகத்திய முனிவர்பால்மிக்க பக்தியையுடையவன்; இவன் வேண்டுகோளாலேதான் காவிரியை அவர் பெருகச்செய்தனர்.

காந்தாரம்: பெரியதொருநாடு.

காயங்கரை: ஒருநதி.

காயசண்டிகை: ஒரு வித்தியாதர மங்கை; காஞ்சனனமனைவி.

காலவேகம்: ஒருயானை.

காவிரிப்பூம்பட்டினம்: சோழர்களுடைய பழைய இராசதானி.

கிள்ளிவளவன்: ஒருசோழன்.

குமரன்: கலிங்கநாட்டுள்ள கபிலை நகரத்தரசன்.

*குமரி: கன்னியாகுமரியென்னும் நதி.

கேசகம்பளர்: நரியுயிற்றிற்பிறந்த ஒருமுனிவர்.

கொற்கை: பாண்டியர்களின் பழய இராசதானி.

கோதமை: ஒரு பார்ப்பனி; சார்ங்கலன் என்பவனுடைய தாய்.

கோமுகி: மணிபல்லவத்துள்ள தோர்பொய்கை.

கோவலன்: இப்பெயரையுடையவர் இருவர்; அவருள், ஒருவன், மணிமேகலையின் தந்தை; கண்ணகியின் கணவன்; சிலப்பதிகாரக்கதாநாயகன்; மற்றொருவன், மேற்கூறியகோவலனுக்கு ஒன்பதுதலைமுறை முன்னோன்.

கௌசிகன்: சண்பை நகரத்துள்ள ஓரந்தணன்.

சக்கரவாளக் கோட்டம்: புத்திரசோகத்தால்வருந்திய கோதமையின் துன்பத்தைப்போக்குதற்காக இவ்வுலகத்திலுள்ள எல்லாத தேவர்களையும் சம்பாபதிவரவழைத்துக் காட்டியவிடத்து அக்காட்சியை எக்காலத்தும யாவரும் காணுமவண்ணம மயனால் நிருமிக்கப்பட்டது; இது காவிரிப்பூம்பட்டினத்துள்ளது; இதில முனிவர் பலரிருந்து தவஞ்செய்தனர.

சங்கதருமன்: ஒரு பௌத்தமுனிவர்; சுதமதிக்கும, அவள் தந்தைக்கும் தருமோபதேசஞ்செய்தவர்.

சங்கமன்: ஒருவணிகன்; நீலியின் கணவன.

சண்பை: கடலோரத்துள்ள ஒரு நகரம்.

சந்திரதத்தன்: கப்பலிற்சென்று வாணிகஞ்செய்யும ஒருவணிகன்.

சம்பாதி: ஒருபறவை.

சம்பாதிவனம் - காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஒருசோலை.

சம்பாபதி: சம்புத்தீவின் அதிதேவதை; சிவந்தநிறமும சடையும் உடையவள்.

சமந்தம்: சமந்தகூடமென்னுமலை; இலங்கையிலுள்ளது. இதன் உச்சியில் புத்தனுடைய பாதப்படிமைப்பீடமுண்டு.

சமனொளி: சமந்தகூடம்.

சனமித்திரன்: புண்ணியராசனுடைய மந்திரிகளுள் ஒருவன்.

சாதுசக்கரன்: ஒ முனிவன்; ஆகாயகமனமுடையவன்; தன்முற்பிறப்பில இவனை ஒருபொழுது உணபித்த புண்ணியமே மணிமேகலை நலவழிப்படுதற்கு ஏதுவாயிற்று.

சாதுவன்: ஆதிரையின்கணவன்; நாகர்க்கும், அவர்கள் குருமகனுக்கும், சிலநீதிகள்கூறி அவர்களை நல்வழிப்படுத்தியவன்.

சாரங்கலன்: கோதமையின்புதல்வன்; இவன், மயானத்திற் பேய்மகளாடியதைக்கண்டு அஞ்சி உயிரை இழந்தவன்.

சாலி - ஒருபார்ப்பனி; அபஞ்சிகன் மனைவி; ஆபுத்திரனுடையதாய்.

சாவகம்: ஆபுத்திரனுடைய நாடு; இதன் தலைநகர் நாகபுரம; இதில் தவளமலையென்று பெயர்பெற்ற ஒருமலையுண்டு.

சிங்கபுரம் கலிங்கநாட்டிலுள்ள ஒருநகரம்.

சித்திபுரம்: சீதரராசனுடையநகர்.

சித்திராபதி: மாதவியினற்றாய்; மணிமேகலையை உதயகுமரனோடு கூட்டுதற்குப் பலவகையாக முயன்றவள்; மிக்கவிரகுள்ளவள்.

சிந்தாதேவி: ஸரஸ்வதிதேவி; தென்மதுரையில் இவளுக்குக் கலாநியமமென்று பெயர்பெற்ற ஆலயமொன்றிருந்தது.

சிருங்கி: மான்வயிற்றிற்பிறந்த ஒருமுனிவர்.

சீதரன்: சித்திபுரத்து அரசன்; நீலபதிதந்தை.

சீர்த்தி: மாவலிமரபனாயினுதித்த ஓரரசன்புத்திரி; நெடுமுடிக்கிள்ளியின்மனைவி; உதயகுமரனுடையதாய்.

சுதமதி: கௌசிகனென்னும அந்தணனுடையபுத்திரி; மாதவியின் உயிர்த்தோழி; மணிமேகலைபால் மிக்க அன்புடையவள்.

செங்குட்டுவன்: சேரலாதன் புத்திரன்; இளங்கோவடிகளின் தமையன்.

சோழன்கரிகாற் பெருவளத்தான் காவிரிப்பூம்பட்டினத்து அரசன்.

தருமசாவகன்: ஒரு பௌத்தமுனிவன்; புண்ணியராசனுக்குத் தருமோபதேசஞ்செய்தவன்.

தருமதத்தன்: காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஒருவணிகன்; மரிக்கும்வரையிற் கலியாணமின்றியிருந்தவன்.

தருமதவனம்: காஞ்சிநகரத்திலுள்ள ஒருசோலை.

தவளமலை: சாவகநாட்டிலுள்ளது.

தாரை: இரவிவன்மன்புத்திரி; துச்சயராசன்மனைவி; வீரை, இலக்குமியென்பவரின் தமக்கை.

திட்டிவிடம்: கண்ணில்விடமுடையதோர்பாம்பு; இஃது அழற்கணுகம், நஞ்சுவிழியரவெனவும் வழங்கும்.

தீவதிலகை: மணிபல்லவத்துள்ள புத்தபீடிகையை இந்திரன்கட்டளைப்படி பாதுகாக்கும் ஒரு தெய்வமங்கை; புண்ணியராசனுடைய பூர்வஜனமசரீரம் மணலிற்புதைந்துகிடந்ததை அவனுக்குக்காட்டியவள்.

துச்சயன்: கச்சயநகரத்து அரசன்; தாரை, வீரை என்பவர்களின் கணவன்.

துடிதலோகம்: துஷிதலோகமெனவழங்கும்; உலகம் முப்பத்தொன்றனுள் ஒன்பதாவது; மஹாராஜிகலோகமுதலிய தெய்வலோகம் ஆறனுள் நான்காவது. இதிலுள்ள பிரபாபாலனென்னுந் தேவனே புத்தனாக அவதரித்தானென்பர்.

துணையிளங்கிள்ளி: காஞ்சிநகரத்திருந்த ஒருசோழன்.

துவதிகன்: ஒருதேவன்; சித்திரசேனனுக்கு நண்பன்; காவிரிப்பூம்பட்டினத்திருந்த கந்திற்பாவையை அதிட்டித்திருந்து முக்காலச்செய்திகளையும் கூறிவந்தவன்.

தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன்: காவிரிப்பூம்பட்டினத்தில் அகத்தியமுனிவருடைய கட்டளையின்படி முதலில் இந்திரவிழா எடுப்பித்த ஒருசோழன்.

தொடுகழற்கிள்ளி: காஞ்சிநகரத்திருந்த ஒருசோழன்; துணையிளங்கிள்ளியின் தமையன்.

நாகபுரம்: புண்ணியராசனுடைய இராஜதானி.

நாகர்: ஒருவகைமனிதர்.

நீலபதி: சீதரனென்னும் அரசன் புத்திரி; அத்திபதியின் மனைவி; இராகுலனுடைய தாய்.

நெடுஞ்செழியன்: ஒருபாண்டியன்; சிலம்புகாரணமாகக் கோவலனைக்கொல்வித்தவன்.

நெடுமுடிக்கிள்ளி: ஒருசோழன்.

பரசுராமன்: திருமாலின் அவதாரமூர்த்திகளுள் ஒருவர்.

பாதன்: சிங்கபுரத்து அரசனாகிய வசு என்பவனுடைய வேலைக்காரன்.

பாதபங்கயமலை: மகததேசத்தின் இராசதானியாயிருந்த இராசக்ருகநகரத்தின்சமீபத்திலுள்ள ஒருமலை. புத்ததேவன் எல்லாவுயிர்களுக்கும் தருமசிந்தையை யுண்டாக்கநினைந்து அவைகளெல்லாம் தன்னைக்கண்டு கேட்கும்படி இதன்மேல்நின்று தருமோபதேசஞ்செய்தபொழுது அவன் பாதச்சுவடுதங்கப்பெற்றமையின், இஃது இப்பெயர்பெற்றது; இது கிருத்திரகூடமென்றும் கூறப்படும்.

பிரமதருமன்: ஒருபௌத்தமுனிவன்; அத்திபதியின் மைத்துனன்.

பீலிவளை: வளைவணனென்னும் அரசனுடையமகள்.

புண்ணியராசன்: நாகபுரத்தரசன்.

பூதசதுக்கம்: தவவேடத்தில்மறைந்து தீமைபுரிந்தொழுகுவோர்முதலிய அறுவகைப்பாவிகளைப் புடைத்துண்ணும் பூதம்நிற்றலையுடைய நாற்சந்தி.

பூதி: ஆபுத்திரனைவளர்த்தவன்.

பூமிசந்திரன்: நாகபுரத்துஅரசன்; அமரசுந்தரியின் கணவன்; புண்ணியராசனை வளர்த்தவன்.

பூருவதேசம்: அத்திபதியின்நாடு;

பொதியில்: பாண்டியநாட்டிலுள்ள மகத்தம் ஒருநாடு. [ஒருமலை.

மண்முகன்: தவளமலையிலிருந்து தவஞ்செய்த ஒருமுனிவன். இம்முனிவனிடத்திருந்த பசுவயிற்றிலேதான் புண்ணியராசன் பிறந்தான்.

மணிபல்லவம்: காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பதுயோசனையளவிலுள்ள ஒருசிறுதீவு.

மணிமேகலாதெய்வம: சிலதீவிலுள்ளவரை, அரக்கர் வாதைபண்ணாதபடி இந்திரனேவலாற் பாதுகாத்துக்கொண்டிருத்தலையுடைய ஒரு தெய்வம். கோவலன் தன்குலத்தோனொருவனை இத்தெய்வம், கடலிற்பாதுகாத்த நன்றிபாராட்டியே தன் காதற்பரத்தையின் புதல்விக்கு மணிமேகலையென்று பெயரிட்டான்.

மணிமேகலை: கோவலனுக்கு மாதவிபாற்பிறந்தவள்; இக்கதைத்தலைவி.

மதுராபதி: தென்மதுரையின் அதிதேவதை.

மருதி: காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஒருபார்ப்பனி.

மாசாத்துவான்-கோவலன்தந்தை.

மாதவி: ஒருநாடகக்கணிகை; கோவலனுடைய காதற்பரத்தையாயிருந்து மணிமேகலையைப்பெறறவள்; கோவலன் கொலையுண்டதுகேட்டுத் துறந்து அறவணவடிகள்பால் தருமங்கேட்டு அவருடன் காஞ்சிசென்று நோற்றிருந்தவள்.

மாரன் தருமவிரோதிகளான இச்சைகளை மனத்திலுண்டாக்கும் ஒருதேவன்.

மாருதவேகன்:ஒருவித்தியாதரன்.

மாவணகிள்ளி : ஒருசோழன்.

முசுகுந்தன் : சூரியகுலத்திற்பிறந்த ஒருசக்கரவர்த்தி. இவன் முன்பு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசாணடவன்.

வச்சிரக்கோட்டம் : வச்சிராயுதம் நிற்கும்கோயில்; இது காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தது.

வசு : சிங்கபுரத்தரசன்.

வஞ்சி : சேரராசதானி.

வயந்தமாலை: மாதவியின்தோழி.

வயனங்கோடு : பாணடிநாட்டிள்ள ஓரூர்.

வளைவணன்: நாகநாட்டரசன்; வாசமயிலையின்கணவன்; பீலிவளையின் தந்தை.

வாசந்தவை: ஒருமுதியவள்; இவள், சோழன்மனைவி முதலியவர்க்குப் பலநீதிமொழிகள் கூறியவள்.

வாசமயிலை: வளைவணன்மனைவி; பீலிவளையின்தாய்.

வாரணாசி : காசி.

விசாகை: ஒருவணிகமாது; மரணபரியந்தம் விவாகமின்றிக் கன்னிமாடத்தேயிருந்து காலங்கழித்தவள்.

விந்தம : ஒருமலை.

விந்தாகடிகை: ஒருதெய்வப்பெண்; விந்தமலையில் துர்க்கைகோயிலைக்காப்பவள்.

விரிஞ்சி : புலிவயிற்றிற்பிறந்த ஒருமுனிவன்.

விருச்சிகன்: பொதியின்மலைச்சாரலில் தவஞ்செய்துகொண்டிருந்த ஒருமுனிவர்; கஉ - வருடத்திற்கு ஒருமுறையுண்ணும் பட்டினி விரதி.

வீரை: இரவிவன்மன்புத்திரி; இலக்குமி, தாரையென்பவரின் ஸகோதரி; துச்சயராசன்மனைவி.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1